விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

பக்கங்கள்: 32

★ விளம்பரங்கள்

★ வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 44 ஞாயிற்றுக்கிழமை 29.09.2019 Sunday 29th September 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



# தமிழர்கள் தீர்மானிக்கப் போகும் ஜனாதிபதி?



விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் கூட தமிழர்கள்தான் ஜனாதிபதியினைத் தீர்மானித்து வந்தார்கள். திரைமறைவில் சந்திரிக்கா, பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க கூட விடுதலைப்புலிகளின் மறைமுக ஒத்தாசையையும், ஆதரவினையும் பெற்றுத்தான் அதிகாரங்களைத் தெற்கிலே கைப்பற்றி வந்தார்கள். இதற்கு மகிந்த ராஜபக்ஷ கூட விதிவிலக்கல்ல.

மகிந்த ராஜபக்ஷகூட விடுதலைப்புலிகளின் உடன்பாட்டுடன்தான் ஜனாதிபதியாக வந்தார். வட,கிழக்கு மக்களை வாக்களிக்க வேண்டாம் என்று விடுதலைப்புலிகள் அவரை ஜனாதிபதியாக்கினார்கள். தற்பொழுது கதைகள் கசிந்து வருகின்றன. அதாவது ரணில் விக்கிமசிங்கவிடம் இடைக்கால நிர்வாகத்தை தருவீர்களாயின் உங்களை ஜனாதிபதியாக்குவோம் என்று. அதற்கு அவர் உடன்பட்டும் எழுத்துமூலம் தராத காரணத்தால் அவர்கள் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினார்கள் என்று.

தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் தீவிரமாக இந்தப் பிரச்சாரத்தை எடுத்து வருகின்றார்கள். அண்மையில் மொனராகலையில் நடந்த கூட்டத்தில் கூட சுஜீவ சேனசிங்க, விடுதலைப்புலிகளின் தலைவரை திட்டித் தீர்த்தார். சிங்களத்தில் இழிவார்த்தைகளாலும், சொல்லத்தகாத வார்த்தைகளாலும் பிரபாகரன் ரணிலின் பதவியைப் பறித்தார் என்று திட்டினார்.

அண்மையில் வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒருபக்கம் கோத்தபாய ராஜபக்ஷவும் மறுபுறம் சஜித் பிரேமதாசவும் போட்டியிடுகின்றன. சிங்கள மக்களின் அதிகூடிய வாக்குகளைப் பெறப் போகின்றவர் கோத்தாபய ராஜபக்ஷ என்பதுதான் தெரிய வருகின்ற கருத்தாகும். மறுபக்கம் முஸ்லிம்கள் கோத்தாபய ராஜபக்ஷ வருவதை பெரும்பாலும் விரும்பவில்லை. கோத்தபாய ராஜபக்ஷவும் முஸ்லிம்களின் பிரதான கட்சியான முஸ்லிம் காங்கிரஸூடனும், ரிசாரட் பதியுதீனின் கட்சியுடனும் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்கவில்லை. அநேகமாக தேர்தலுக்கு வருகின்ற பொழுது முஸ்லிம் தலைமைகளுடன் கலந்தாலோசித்துத்தான் தேர்தலுக்கு வருவார்கள்.

ஆனால் தற்பொழுது இந்தமுறை சஹ்ரானின் தாக்குதலுக்குப் பின்பு முஸ்லிம் தலைவர்களையும், முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டால் தமக்கு சிங்கள வாக்குகள்

02 ஆம் பக்கம் பார்க்க

## சஜித் ஏன் யானைச் சின்னத்தை இழந்தார்?



பயங்கரவாதிகளின் ஆதரவுடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசிய கட்சியின் அதிகாரபூர்வ சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம் பார்க்க

## சஜித் பிரேமதாச வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்புகள்



பல குற்றச்சாட்டுக்களுடன் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரை காட்டிலும் சஜித் பிரேமதாச இம்முறை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிப் பெறுவதற்கான அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் மேயர் ரோஷி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

வத்தளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்படும் வரையில் தான் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாக அவர் இதன்போது தெரிவித்தார்.

போட்டியின்றி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை வெற்றிப் பெறும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்த அவர், பல வருடங்களின் பின்னர் பிரேமதாச ஜனாதிபதியின் கீழ் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஒன்று உருவாகவுள்ளதாக ரோஷி சேனாநாயக்க மேலும் தெரிவித்தார்.



## பொருளாதாரத்தை சீரழிக்கவே ஐ.தே.க. தலைவர்களை அழித்தான் கொடுங்கோலன் பிரபாரன்!




எமது ஐக்கிய தேசிய கட்சி, டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர். ஜயவர்த்தன, லலித் அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்க, பிரேமதாச போன்ற பல தலைவர்களைக் கொண்டது. ஆனால் அவ்வளவு நல்ல தலைவர்களையும் கொன்றது யார்? இந்த கொடுங்கோலன், பயங்கரவாதி, ஈவிரக்கமற்ற பிரபாகரனால்தான் இந்தக் கொலை நடத்தப்பட்டது.

அந்தக் கொலையை அவர் செய்ததன் ஊடாக ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்குக்

02 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு நீராவியடி சம்பவம் தற்செயலானது அல்ல



முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்குப் பிரத்தியேக செவ்வி

எழுக தமிழ் நடந்தபொழுது எங்களுக்குத் தேவையான பல விடயங்களை அதில் குறிபிட்டிருந்தோம். ஆறு அம்சக் கோரிக்கைகளும் அத்துடன் அரசியல் யாப்பு ரீதியான எங்களின் முன்மொழிவு சம்பந்தமாகவும் அங்கு குறிப்பிட்டிருந்தோம். அதில் முக்கியமாக ஒரு கருத்து கூறப்பட்டது, வட,கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றமும் பௌத்த மயமாக்கலும் நிறுத்தப்பட வேண்டுமென்று. நாங்கள் கூறி முடியவில்லை அந்தக் கிழமைக்குள்ளேயே அதற்கு உதாரணமாக முல்லைத்தீவு நீராவியஐ பிள்ளையார் ஆலய சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

இவ்வாறு முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்கு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அதாவது மத்திய அரசாங்கம் தான் நினைத்தமாதிரி வட,கிழக்கில் நடக்க எத்தனித்துள்ளது. இராணுவத்தினருடன் அனுசரணையுடன் சில நடவடிக்கைகளும் அதாவது தமிழ் இந்து மக்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். அரசாங்கத்தின் அனுசரணையுடன் என்று நான் கூறுவதற்குக் காரணம், கடந்த பாதீட்டில் வடக்கு, கிழக்கில்

02 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் சமர் ஆரம்பம்

### சஜித் கொழும்பில்

### கோத்தா அனுராதபுரத்தில்

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களான ஐ.தே.க.வின் உபதலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாச கொழும்பிலும் பொ.ஜ.பெ.இன் வேட்பாளரான முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் அனுராதபுரத்திலும் தமது தேர்தல் சமரினை ஆரம்பிக்க உள்ளனர்.

அதற்கிணங்க கோத்தபாய ராஜபக்ஷ அவர்களின் மக்கள் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி அனுராதபுரத்திலுள்ள சல்தாது மைதானத்திலும், சஜித் பிரேமதாச அவர்களின் மக்கள் கூட்டம் 10ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடலிலும் இடம்பெறுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷ அவர்களின் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சியின் தலைவர்கள் அனைவரும் பங்கு கொள்ள இருப்பதாகவும் சஜித் பிரேமதாச அவர்களின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும்

02 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கட்சி பிரதிநிதிகள் - தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இடையில் விசேட கலந்துரையாடல்

அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இடையில் எதிர்வரும் புதன்கிழமை (02) விசேட கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள வேட்பு மனு தாக்கல் தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.

கட்டுப்பணம் செலுத்தியுள்ள அரசியல் கட்சி பிரதிநிதிகள், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## த.தே.கூட்டமைப்பின் தீர்மானம் வேட்பு மனுத்தாக்கலின் பின்னர்

அனைத்து வேட்பாளர்களும் வேட்புமனுதாக்கல் செய்த பின்னர் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமது தீர்மானத்தை மேற்கொள்ள இருப்பதாக த.தே.கூ. தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக ஊடகம் ஒன்று வினவியபோது த.தே.கூ தலைவர்

02 ஆம் பக்கம் பார்க்க

## வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பின்னர் கட்சி மாறுதல்கள்

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களின் பெயர் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பிரதான கட்சிகள் இரண்டிற்கும் இடையில் பல கட்சி மாற்றங்கள் இடம்பெற உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

02 ஆம் பக்கம் பார்க்க

## 100 மி.மீ. மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு உயர் சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும்

02 ஆம் பக்கம் பார்க்க

## நடுக்கடலில் படகு கவிழ்ந்து பலர் பலி!

### கிரீஸ் கடற்பகுதியில் சம்பவம்

கிரீஸ் கடற்பகுதியில் புகலிடக்கோரிக்கையாளர்கள் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கோப்புப்படம்

அத்துடன், குறித்த படகில் பயணித்தவர்கள் எந்த நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்ற விபரம் இது வரையில் கண்டறிப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்த படகு விபத்து கிரீஸில் உள்ள ஏஜியன் கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் குழந்தைகளும் உள்ளடங்குவதாக கிரீஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த படகு விபத்தின் போது பலர் மாயமாகியுள்ளதாகவும், இதன் காரணமாக படகு விபத்து

02 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களின் கருத்துக்கள்

ஐ.தே.கட்சி ஐ.தே.வேற்பாளர் சஜித் பிரேமதாச அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்காக விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இராஜாங்க நீதி அமைச்சர் இரான் விக்கிரம குழு உருவாக்கப்பட்டுள்ளதாக முன்னாள் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

இந்த விஞ்ஞாபனம் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்படும் என்றும் அதற்காக பல்வேறு மட்டங்களிலும் உள்ளவர்களினதும் கருத்துக்கள் பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி



மருதமுனை நிருபர்
றாசிக் நபாயிஸ்

மருதமுனை எலைற் விளையாட்டுக் கழகத்தின் 27வது வருட பூர்த்தியினை முன்னிட்டு மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் மிகவும் சிறப்பான முறையில் ஆரம்ப விழாவோடு ஆரம்பித்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது (27) மாலை 7:00 மணியோடு கோலாகலமான முறையில் சிறப்பாக நடந்தேறியது.

இச் சுற்றுத் தொடரின் சம்பியன் பட்டத்தினை மருதமுனை கல்பனா விளையாட்டுக் கழகத்தினரும், Runner up அணியாக மருதமுனை எலைற் விளையாட்டுக் கழகத்தினரும், Thi-rd place பட்டத்தினை மருதமுனை கிறிஸ்டல் விளையாட்டுக் கழகத்தினரும், Fourth Place பட்டத்தினை மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகத்தினரும் தன் வசமாக்கிக் கொண்டார்கள்.

## அபிவிருத்தி லொத்தர் சபையின் DLB யின் பராமரிப்பு வைத்திய முகாம் தொடரின் ஐந்தாம் முகாம் கண்டியில்









அபிவிருத்தி லொத்தர் சபையின் DLB யின் பராமரிப்பு என்ற தொனிப் பொருளின் கீழ் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களின் நலன்களை கருத்திற் கொண்டு நடாத்தப்படும் வைத்திய முகாம் தொடரின் ஐந்தாம் வைத்திய முகாம் கண்டி மாவட்டத்தில் கடந்த செப்டம்பர் 13 ஆந் திகதியன்று நடாத்தப்பட்டது.

இவ் வைத்திய முகாமில் இரத்த பரிசோதனை மற்றும் அதூடாக இனங்காணப்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகள் வழங்குதல், கண் பரிசோதனைகள் மற்றும் குறைபாடு உடையவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல் மற்றும் ஏனைய நோய்கள் பரீட்சிக்கப்பட்டு வைத்திய ஆலோசனைகளுடன் மருந்துகளும் வழங்கி வைக்கும் நடவடிக்கை அங்கு இடம்பெற்றது.

இவ் வைத்திய முகாமிற்கு கண்டி மாவட்டத்தின் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். அத்தோடு இவ்வாறான சமூகப் பணியினை மேற்கொள்வது தொடர்பாக அவர்களிடமிருந்து தொடர்ச்சியாக பாராட்டுக்களும் நன்றிகளும் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு குவிந்த வண்ணமிருக்கின்றது.

இவ் வைத்திய முகாமிற்கு அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவர் திரு. சேன சூரியப்பெரும அவர்கள், பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) செல்வி. விஜிதா சோமரத்ன அவர்கள், பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை) திரு. ஷானக தொடங் கொட அவர்கள் மற்றும் கண்டி மாவட்டத்தின் வலய முகாமையாளர் சுனில் ரத்நாயக அவர்கள் உள்ளிட்ட பணியாட்தொகுதியினர்கள் அந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

### நடுக்கடலில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இடம்பெற்ற பகுதியில் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் கிரீஸ் கடற்பகுதியில் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

சில உள்நாட்டுப் போர் காரணமாக சிரியா, ஏமன் போன்ற நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் உயிரை பணயம் வைத்து கிரீஸ் கடற்பகுதி ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர் என்பதையும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

### த.தே.கூட்டமை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பா.உ.ஆர்.சம்பந்தன் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.தே .க வேட்பாளர் சஜித் பிரேமதாச அவர்களிற்கு தமது ஆதரவை வழங்குவது பற்றி இதுவரை தீர்மானிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி த.தே.க. சஜித்தை பிரதிநிதித்துவபடுத்தும் அனைத்து கட்சிகளினதும் உடன்பாட்டின் அடிப்படையில் தமது தீர்மானத்தை மேற்கொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### இலங்கையின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கொண்டு வர முடியாமல் அவருக்கு கொடுங்கோலன் பிரபாகரனுக்குத் தெரியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தப் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்று. அதனால்தான் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வரமுடியாததால்தான் இவ்வளவு கடன்சுமையை நாடு கொண்டிருக்கின்றது என்றார் சுஜீவ சேனசிங்க.

மொனராகலையில் நடந்த சஜித் பிரேமதாசவின் ஆதரவுக் கூட்டத்திலே பிரபாகரன் எமது தலைவர்களைக் கொல்லாவிட்டால் இந்த நாட்டிலே ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்திருக்கும். இந்த 25 வருடங்களாக நாங்கள் ஆட்சியில் இல்லையென்றால் அதற்குக் காரணம் பயங்கரவாதி கொடுங்கோலன் பிரபாகரன்தான். அந்த கொடுங்கோலனும், பயங்கரவாதியும், ஈவிரக்கமற்ற செய்த காரணத்தினால்தான் எமது கட்சி ஆட்சிக்கு வரமுடியவில்லை.

பிரபாகரன் கொடியவனுக்குத் தெரியும் இந்த நாட்டில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி நடத்தினால் இந்த நாட்டில் பொருளாதாரம் முன்னேறிவிடும் என்று. இந்த நாட்டில் பொருளதாரம் முன்னேறக் கூடாது, ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்றுதான் ஐக்கிய தேசிய கட்சியின் சிறந்த தலைவர்களை கொன்றொழித்தான். அவன் கொன்றதால்தான் நாட்டை வழிநடத்த முடியாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்து 25 வருடங்களாக ஆண்டது. 25 வருடங்களாக அவர்கள் ஆண்டு இந்த நாடு கடன்சுமையில் இருக்கின்றது. இதற்குக் காரணம் வேறொருவமில்லை கொடுங்கோலன் பிரபாகரன்தான் என்று கூறினார் சுஜீவ சேனசிங்க.

பிரபாகரனின் கொலைகள் பட்டியலில் தம் தலைவர்களைக் கொலை செய்தார் பிரபாகரன் என்று கூறுவதற்கு பல கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது. இவை எல்லாம் திட்டமிடபடி இல்லாமல் சும்மா கூறப்படுவதில்லை, சிங்கள மக்களின் வாக்கு வங்கி பெரும்பாலும் சரிந்துள்ளது. கோத்தாபய ராஜபக்ஷ அவர்களுக்கு சிங்கள மக்களின் ஆதரவு, 60 வீத்திற்கு மேலாகக் காணப்படுவதால், அதைப் பெற்றுக் கொள்வதற்காக 10 வருடங்களுக்கு முன்பு அரசாங்கத்தினால் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டது, அரசாங்கத்தினால் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று கூறியபின்பும் பிரபாகரனைத் திட்டி தமது செல்வாக்கை அதிகரிக்கலாம் என்பதுதான் ஐக்கிய தேசிய கட்சியின் தற்போது பிரதான குறிக்கோளாக உள்ளது.

பிரபாகரனைத் திட்டித் தீர்ப்பதன் ஊடாகவும் அவர்களால் தான் தாங்கள் அழிந்தோம் என்று கூறுவதனாலும் தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் பதவிக்கு வரலாம் என்று எண்ணியுள்ளது. இதை தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சி சிறுதலைவர்களிலிருந்து பெரிய தலைவர்கள் வரை கூக்குரலிட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் பிரதான நோக்கமே பிரபாகரனை பயங்கரவாதியாக சித்தரிப்பது. தமது கட்சி அழிந்தது அவரால் என்று கூறுவதனூடாக சிங்கள மக்களிடம் செல்வாக்கைப் பெறலாம் என்பதுதான் அவர்களின் பிரதான நோக்கமாகவுள்ளது.

தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 25 வருடமாக இருக்கின்ற பொழுது அவரைப் பதவியிலிருந்து விலக்கி சுயாதீனமாக அவர் இன்று எடுக்கும் முடிவை அன்றே எடுத்திருந்தால் அந்தக் கட்சி பதவிக்கு வந்திருக்கும். தமது கையாலாகாத எண்ணத்தை வைத்துக் கொண்டு ஏன் இவர்கள் விடுதலைப் புலிகளை திட்டுகின்றார்கள் என்பதுதான் தமிழ் மக்களின் ஏக்கமாக இருக்கின்றது.

### சஜித்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

பல நிபந்தனைகளுக்கு இணங்கி மற்றும் பாரிய பிளவுகளுக்கு மத்தியில் சஜித் பிரேமதாச ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன இதன்போது தெரிவித்தார்.

### 100 மி.மீற்றர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கம்பஹா, கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஒரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசந்துறையில் இருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 10-30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

### வேட்பாளர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இது தொடர்பாக இரண்டு கட்சிகளிலும் இருந்து பலர் தற்பொழுது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஐ.தே.க. மற்றும் ஸ்ரீல.சு.க. இன் பா.உக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கட்சி மாறுவார்கள் எனத் தெரிய வருகின்றது.

### தேர்தல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பங்கு கொள்ளவுள்ளனர். அதேநேரம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க அவர்களின் மக்கள் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் 20 வரையிலான வேட்பாளர்கள் போட்டியிட இருப்பதுடன் அதில் 8 வேட்பாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தமது கட்டுப்பணத்தைச் செலுத்தி உள்ளனர்.

அவர்களுள் முன்னாளர் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, பிரபல வியாபாரியான றொகான் பள்ளேவத்த, வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சட்டத்தரணி நாகனந்த கொடித்துவக்கு போன்றோரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### முல்லைத்தீவு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஆயிரம் பௌத்த கோவில்கள் அல்லது வணக்கஸ்தலங்கள் கட்டவேண்டுமென்று பாரிய தொகையொன்று இதற்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆகவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று ஏற்கனவே நினைத்து அதற்குரிய பணத்தை ஒதுக்கி வைத்துத்தான் இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றது என்று எனக்குத் தோன்றுகின்றது. இது நேற்று, முந்த நாள் ஒரு பௌத்த பிக்கு வந்து காணியை எடுத்து அதில் புத்தர் சிலையை வைத்ததாக நான் கூறமாட்டேன்.

ஏனென்றால் பக்கத்திலேயே ஒரு இராணுவ முகாம் இருக்கின்றது. அத்துடன் கோவிலுக்குப் பக்கத்தில் இருக்கும் காணியை எடுத்து அடுத்த நாளிலோ அல்லது அதற்கு அடுத்த நாளிலோ அதைச் சுத்தப்படுத்தி அந்த இடத்தில் முழுமையாகச் செய்யப்பட்ட புத்தர் சிலையை அங்கு வைத்திருக்கின்றார். ஆகவே இது எல்லாம் ஏற்கனவே இது சம்பந்தமாகப் பேசி முடிவுகள் எடுத்துத்தான் இவை நடைபெறுவதாகத் தெரிகின்றது.

ஆகவே சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் என்பன தற்செயலாக நடைபெறுவன அல்ல என்று நான் கூறவருகின்றேன். அதைத்தான் எழுக தமிழிலில் கூறிவைத்திருக்கின்றோம். வட,கிழக்கு மாகாணங்களில் சிங்களமயமாக்கல், பௌத்தமயமாக்கல், காணிகளைப் பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் நடக்கக்கூடாது என்று.

இதனோடு நான் இன்னொரு விடயத்தைக் கூற வேண்டும், அதாவது மகாவலி அபிவிருத்தி சபை நான் நினைக்கின்றேன், 1979ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. 1987ஆம் ஆண்டு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதாகக் கூறினார்கள். உண்மையாக முற்றும் முழுதுமாகப் பகிர்ந்து கொடுக்கவில்லை. ஏதோ ஒரு விதத்திலே சில அதிகாரங்கள் பகிர்ந்து தரப்பட்டன. இந்த முழு நாட்டுக்கும் உரிய மகாவலி அபிவிருத்திச் சட்டம் இந்த மாகாணங்களுக்கு சில உரித்துக்கள் தரப்பட்ட பொழுது மாற்றப்பட்டிருக்க வேண்டும். அதாவது, அதனுடைய செயற்பாடுகள் புதிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாற்றப்படவில்லை.

அப்பொழுது என்ன நடக்கின்றது, எங்களுக்கென சில உரித்துகள் தரப்பட்டிருக்க, பழைய மாதிரி மத்திய அரசாங்கம் தன்னுடைய உரித்துக்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றது. முக்கியமாக மகாவலி அபிவிருத்தி சபையின் ஊடாக.

இந்த மகாவலி அபிவிருத்தி சபை முல்லைத்தீவு நகரம் வரையில் தமக்குரிய காணிகளாக அடையாளப்படுத்தி வர்த்தமானியிலும் வந்துவிட்டது. ஆகவே இது தற்செயலாக ஒரு பௌத்த பிக்கு வந்து செய்த செயலாகவோ அல்லது பொதுபல சேனா வந்து இவற்றை நடைமுறைப்படுத்துவதாகவோ நாங்கள் யோசிக்கக்கூடாது.

இது திட்டமிட்ட அரசாங்க செயல். வட,கிழக்கு மாகாணங்களை மற்றைய மாகாணங்களோடு இணைத்து முற்றும் முழுதுமாக சிங்கள பரிபாலனம், சிங்கள ஆதிக்கம், சிங்கள கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் இது நடைபெற்று வருகின்றது. இல்லையென்றால் பத்து வருடங்களுக்குப் பிறகு இராணுவத்தினரை வட, கிழக்கு மாகாணங்களில் வைத்திருப்பதற்கு என்ன காரணம். தேவையற்ற விடயம். எந்தவிதமான காரணங்களும் இல்லாமல் அவர்களைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அறுபதினாயிரம் ஏக்கருக்கும் மேலான காணிகளை அவர்கள் பிடித்து வைத்துள்ளார்கள். வடமாகாணக் காணிகள். அதனை அரச காணிகள் என்று அடையாளப்படுத்தி, அவற்றை எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே இவை எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது, இதனை நான் கட்சியினுடைய நன்மைக்காகவோ, அல்லது பேரவையினுடைய நன்மைக்காகவோ கூறவில்லை. தமிழ் மக்களின் வருங்காலம் எவ்வாறு அமையப்போகின்றது என்று எமக்கிருக்கும் ஈடுபாட்டின் நிமித்தம், அந்தப் பயத்தின் நிமித்தம் நாங்கள் இவற்றை வெளிக்கொணர வேண்டியிருக்கின்றது. இதற்கு சகல தமிழ் மக்களும் இது சம்பந்தமாக ஒரு கருத்து முரண்பாடில்லாமல் எவ்வாறு நாங்கள் முன்னோக்கி நகர வேண்டும் என்பதில் சில வலுவான தீர்மானங்களை எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்று நான் நம்புகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### தமிழர்கள்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கிடைத்துவிடாது என்ற அச்சத்தினால் இரு தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களை இணைத்துக் கொள்வதில் தயக்கத்தைக் காட்டி வருகின்றார்கள். கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு மீண்டும் ஆபத்து என்ற கருத்துக்கள் தற்பொழுது சமூக வலைத்தளங்களில் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைப்பாட்டில் மீண்டும் கோத்தாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்பதற்கு முஸ்லிம் கட்சிகளும் தயக்கம் தெரிவிப்பதுடன் அவர்களை எடுக்கக்கூடாது என்று கோத்தாபய ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களான விமல் வீரவன்ச போன்றவர்கள் பிரச்சாரத்தை முடுக்கி விட்டிருக்கின்றார்கள்.

இதனால் முஸ்லிம் தரப்புத் தலைவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ சஜித் பிரேமதாசவின் மேடையில் ஏற வேண்டிய நிலைமைக்குத் தளப்பட்டிருக்கின்றார்கள். காரணம், கோத்தாபய ராஜபக்ஷ அவர்களின் பிரச்சாரத்தில் இவர்களுக்கு வரவேற்பு பெரிதும் அரிதாகவே காணப்படுகின்றது.

மறுபக்கம் சிங்களவர்களின் அதிகூடிய வாக்குகளைக் கொண்டு ஜனாதிபதியை தீர்மானிக்க முடியாது அல்லது வெற்றி பெறுவதும் கடினம். சந்திரிக்கா அம்மையாராக இருக்கலாம், பிரேமதாசவாக இருக்கலாம், மகிந்த ராஜபக்ஷவாக இருக்கலாம் அண்மையில் வந்த மைத்திரிபால சிறிசேனவின் தேர்தலாகக் கூட இருக்கலாம் அனைத்துத் தேர்தல்களும் இதனை உணர்த்தி நிற்கின்றன. இந்த வகையிலே தமிழர்கள்தான் தற்பொழுது யாருக்கு வாக்களித்தாலும் பரவாயில்லை என்று இருக்கின்றார்கள். ஏனெனில் 2015ஆம் ஆண்டு மைத்திரி-ரணில் அரசைக் கொண்டு வந்ததினால், தமிழ் மக்கள் எதனையும் பெறவில்லை. சம்பந்தனும், அடைக்கலநாதனும் பல பதவிகளையும், சொத்துக்களையும், பல பங்களாக்களையும் பெற்றார்கள். ஆனால் தமிழ் மக்கள் எதனையும் பெறவில்லை. இதனால் தமிழ் மக்கள் இந்த அரசிலும் விரக்தியில் இருக்கின்றார்கள். மறுபக்கம் கோத்தாபய ராஜபக்ஷ வருவதனூடாக சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து இந்தியா வேறுவழியில்லாமல் தமிழர் பக்கம் திரும்பும் என்று புலம்பெயர்ந்தவர்களின் கருத்தாக தற்பொழுது இருக்கின்றது.

பிரித்தானியாவில் வசிக்கின்ற புத்திஜீவிகளும், புலம்பெயர் தமிழர்களும் தற்பொழுது கோத்தாபய ராஜபக்ஷ பதவிக்கு வருவதூடாக தமிழர்களின் தரப்பு கைஓங்குவதற்கு சாதகமாக இருக்கின்றது என்ற கருத்து காணப்படுகின்றது.

காரணம், சீனாவுடன் நெருங்கிய உடன்பாட்டைக் கொண்டுள்ள கோத்தாபய ராஜபக்ஷ அண்மையில் தனது ஊடக பேட்டியில் கூட சீனாவின் முதலீடுதான் இலங்கையை முன்னேற்றும் என்று கூறியிருக்கின்றார். இது இந்தியாவிற்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்பதனால் இந்தியா வேறுவழியில்லாமல், என்றும் தமிழர்களைக் கண்டு கொள்ளாத இந்தியா, மீண்டும் கண்டுகொள்ளும் நிலை ஒன்று ஏற்படும்.

1977இல் பதவிக் வந்த ஜே.ஆர். அரசாங்கத்தின் திறந்த பொருளாதரக் கொள்கையின் காரணமாகத்தான் இந்திய அரசாங்கம் புளொட், ரெலோ, விடுதலைப்புலிகள் உட்பட தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதங்களை வழங்கி இலங்கைப் பொருளாதாரத்தைச் சிதைத்தார்கள். அதேபோல் மீண்டும் சீனாவுடன் சென்று இலங்கைப் பொருளாதாரம் முன்னேறுமாக இருந்தால் அந்தப் பொருளாதாரத்தைச் சிதைப்பதற்கும் இங்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்துவதற்கும் இந்தியா என்றும் பின்னிற்கப்போவதில்லை.

இப்படியான ஒரு பூகோள மாற்றம் ஏற்படுகின்ற பொழுது இந்தியா தமிழரின் பக்கம் தாவுவதைத் தவிர வேறுவழியில்லை என்ற கருத்தினை தமிழ் புத்திஜீவிகள் வைத்து வருகின்றார்கள்.

மறுபக்கம் சிங்கள மக்களின் பெரும்பாலான வாக்குகளைப் பெறதா சஜித் பிரேமதாச அவர்கள் தமிழர்களுக்கு வெளிப்படையாக எதையாவது தருவாரா என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. அவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தவுடனேயே சஜித் பிரேமதாச தெரிவித்த விடயம் தனது தந்தையை வீதியில் கொன்றார்கள் என்று. எனவே சஜித் அவர்கள் தனது தந்தையைக் கொன்றது விடுதலைப் புலிகள் என்ற குற்றச்சாட்டை இன்றும் தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றார்.

மொனராகலையில் நடந்த கூட்டத்தில் தமது தலைவர்களை அழித்த கொடுங்கோலன், ஈவிரக்கமற்ற அரக்கன் என்ற கருத்துக்களை சுஜீவ சேனசிங்க முன்வைத்திருக்கின்றார். தமிழ் தரப்பு கோத்தாபய ராஜபக்ஷவுடனும், சஜித் பிரேமதாசவுடனும் பேரம் பேசி அவர்கள் என்ன தமிழர்களுக்கு தருகின்றார்கள் என்பதனை தெட்டத் தெளிவாகக் கூறி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட பின்புதான் தமிழர்கள் வாக்களிக்க வேண்டும். தமிழ்த் தலைமைகள் நிச்சயமாக இப்படியான ஒரு பேரம் பேசலுக்குப் போகாது. தமிழ் தேசிய கூட்டமைப்பு தமக்கான பங்களாக்களையும், டக்ளஸ் தேவானந்தா தமக்கான அமைச்சர் பதவியையும் பேரம் பேசுவார்களே ஒழிய, தமிழர்களின் எந்தப் பிரச்சினைக்காகவும் இவர்கள் பேரம்பேசப்போவதில்லை. எனவே தமிழ் மக்கள் இந்தமுறை யார் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன கூறுகின்றார்களோ, அதைப்பார்த்துத்தான் வாக்களிக்க வேண்டும்.

ராமர் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன என்றிருக்காமல் எமக்கு என்ன கிடைக்கும் என்பதைப்பார்த்துத் தான் வாக்களிக்க வேண்டும் என்பதே தமிழ் புத்திஜீவிகளின் கருத்து.

# உடல் உள நலத்தினை மேம்படுத்தல் கருத்தரங்கு





**துறைநீலாவணை நிருபர்**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் கீழ் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு உடல் உள நலத்தினை மேம்படுத்துவதற்காக கருத்தரங்கு, களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் (27) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம் தலைமையிலான நிகழ்வில்,

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை உளவள மருத்துவர் திருமதி டாக்டர் சகாயதர்ஷினி ஜெயக்குமார், உளவள சமூக உத்தியோகத்தர் நா.நித்தியானந்தன், விளையாட்டு உத்தியோகத்தர் வி.அனுஷன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே பரவுகின்ற தொற்றா நோய் நிலைகளை கட்டுப்படுத்தல், வன்முறை சச்சரவுகள், வீட்டு வன்முறைகள், உளவியல் அழுத்தங்கள், அதிருப்தி, தனிமைப்படுத்தல், தற்கொலை போன்ற விடயங்கள் தொடர்பாக செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

சமுர்த்தி தலைமை முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் க.உதயகுமார், சமூக அபிவிருத்தி உதவியாளர் தே.உதயகுதன், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் இஸ்லாமியரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான பொல்லடியும் கலைஞர்களின் அறிமுக நிகழ்வும்



**மருதமுனை நிருபர் ராசிக் நபாயிஸ்**

கல்முனை பிரதேச செயலகத்தின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பொல்லடி குழுவினரின் கலை நிகழ்ச்சியும் கலைஞர்கள் அறிமுக நிகழ்வும் (27) பிரதேச செயலாளர் எம்.எம்.முகம்மட் நஸீர் தலைமையில் கல்முனை முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் வீதியில் நடைபெற்றது.

இஸ்லாமிய சமூகத்தவர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான பொல்லடி கோலாட்டம் தற்போது அழிந்து வரும் நிலையில் இந்தக் கலையையும் கலைஞர்களையும் உயிர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சாய்ந்தமருது முகம் மதியா கலை இலக்கிய மன்றம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் பொல்லடி கலைஞர்கள் வரவேற்கப்பட்டதுடன் புதிய பொல்லடி கலைஞர்களின் கலை நிகழ்ச்சியும் அரங்கேற்றப்பட்டன.

இதில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி கிபானா ஜிப்ரி, கலாசார அதிகார சபையின் செயலாளர் எஸ்.எல்.அஸீஸ் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா அல் அதான் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள்

**கந்தளாய் நிருபர்**

கிண்ணியா அல் அதான் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

பாடசாலையின் அதிபர் அப்துல் அஸீஸ் தலைமையில் (27)பாடசாலை வளாகத்தில் இடம் பெற்ற இவ் நிகழ்வில் பாடசாலை மைதானத்துக்கான நுழைவாயில்,கிரவிடல் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன புனரமைக்கப்பட்டு கம்பெரலிய திட்டத்தின் கீழ் 20 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது

பாடசாலை மாணவ மாணவிகளால் பிரதியமைச்சரை இசைவாத்தியத்துடன் உற்சாக வரவேற்பளித்தார்கள்.

இதன் போது பாடசாலைக்கான போட்டோ கொப்பி இயந்திரமும் அதிபர் முன்னிலையில் பிரதியமைச்சரால் கையளிக்கப்பட்டது. நினைவுச் சின்னமும் அதிபரால் பிரதியமைச்சருக்கு வழங்கப்பட்டதுடன் பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது. இதில் மாணவ மாணவி தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் அரங்கேறியது.



கலை கலாசார நிகழ்வுகளும் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும் கௌரவிக்கப்பட்டார்கள்.

குறித்த நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் இசட். எம்.எம்.முனவ்வரா நளீம்,பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ஈறுா.ஹில்மி முகைதீன் பாவா, கிண்ணியா நகர சபை உறுப்பினர்களான எம்.எம்.மஹ்தி,நிஸார்தீன் முஹம்மட்,கலீபத்துள்ளா,அல்ஹிஜ்மா பவுண்டேசனின் தலைவர் இபாதுல்லா மௌலவி உட்பட கிண்ணியா வலய அதிபர் சங்க தலைவர் முஸம்மில் ,பிரதியமைச்சரின் இணைப்பாளர் இ.எல். அனீஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

# உடவலவ மகா வித்தியாளயத்தில் 480 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கு திறந்து வைப்பு!

**இரத்தினபுரி நிருபர்**

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலை திட்டத்தின் கீழ் எம்பிலிபிட்டிய உடவலவ மகா வித்தியாளயத்தில் 480 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கு நேற்று(26) திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலை திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் நான்கு பாடசாலைகளில் சகல வளங்களையும் கொண்ட உள்ளக விளையாட்டரங்கு அமைக்கப்பட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் பணி பகிஸ்கரிப்பு இடம் பெற்றபோதிலும் மேற்படி பாடசாலையின் சகல ஆசிரியர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ ஆளுநர் தம்ம திசாநாயக்க, மாகாண செயலாளர் டி.எம்.மாலனி, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பாடசாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி பெற்றோர்கள், மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட ஹோல்புறுக் கோட்டம் 03 நுஃ ஆகுரோவா தமிழ் வித்தியாலத்தின் காணப்படும் குறைப்பாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கோரி 26.09.2019 காலை 9 மணிமுதல் 11 மணிவரை 500 இற்கு மேற்பட்ட பெற்றோர்கள் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இப்பாடசாலை 110 வருடங்கள் பலமைவாய்ந்தாகும் இக்கட்டிடம் 40 அடி நீளமும் 35 அகலம் கொண்ட கட்டிடத்தில் 98 மாணவர்கள் எவ்வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் கல்வி கற்றுவருகின்றனர்

மலசல கூடம் வசதி மாணவர்கள் விளையாடுவதற்கான மைதானம் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட மின்சாரம் போன்ற வசதிகள் இல்லை.

தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்புகள் சிறிய இடத்தில் நடைபெறுவதுடன் ஆசிரியரின் காரியாலயம் இதே கட்டிடத்தில் இயங்குகின்றன.

இப்பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைத்து தருமாறு அரசியல் வாதிகளான அமைச்சர் பழனி திகாம்பரம் முன்னாள் கல்வி ராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அத்துடன் பாடசாலை கட்டிடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கியுள்ளதாக கூறினாலும் தொடர்ந்து தங்களை அரசியல் வாதிகள் ஏமாற்றி வருவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய கட்டிடம் நிர்மாணிக்க தோட்ட நிர்வாகம் இரண்டு ஏக்கர் காணி வழங்கி நான்கு வருடம் கடந்துள்ளது.

மாணவர்களின் கல்வி தொடர்பாக அதிகாரிகள் இதனை கண்டுகொள்ளவில்லை.

இதனை கண்டித்தும் உடனடியாக சகல வசதிகளை கொண்ட கட்டிடம் அமைக்கவும் மின்சாரத்தினை பெற்றுதருமாறும் கோரி ஆர்ப்பாட் ம் முன்னெடுக்கப்பட்டது.

காலை 8 மணிக்கு பாடசாலை முன்னாள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி கோசங்களை எழுப்பி அக்கரப்பத்தனை டயகம பிரதான வீதியை மறித்து மூன்று மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் நல்ல தீர்வு கிடைக்காவிட்டால் ஆர்பாட்டத்தினை தொடர போவதாக இவர்கள் தெரிவித்தனர்.

# கனகராயன்குளத்தில் மோட்டர் சைக்கிள் தீக்கிரை!



**வவுனியா நிருபர்**

கனகராயன் குளம் தெற்கில் உள்ள வீடொன்றில் இனந்தெரியாத விசமிகளால் மோட்டார் வண்டி ஒன்று நேற்று இரவு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் விடப்பட்ட வவுனியா வடக்கு தொழினுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் டிஸ்கவரி ரக மோட்டார் வண்டியே எரித்து அழிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டு உரிமையாளருடன் ஏற்பட்ட முரண்பாடுகளே மோட்டார் வண்டி எரிக்கப்பட்டதற்கு காரணமாக இருக்கலாம் எனச்சந்தேகிக்கப்படுகிறது.

வீட்டு உரிமையாளரால் கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கனகராயன்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வித்துவான் வேந்தனார் நூற்றாண்டு விழா நூல்கள் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது

**அஸ்ரப் ஏ சமத்**



வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழவும் நூல்கள் வெளியீட்டு விழாவும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 22 ஆம் திகதி வேந்தனார் இளஞ்சேய் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு அபிநய சேத்திரா நடனப் பள்ளி மாணவர்கள் வேந்தனாரின் பாடல்களை பாடினார்கள். வேந்தனாரின் உடன் பிறவாச் சகோதரர் திரு செல்த்துரை சற்குருநாதன' வாழ்த்துரை வழங்கினார். வேந்தனாரின் மாணவன் ஒய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் லங்க திலக்க பட்டம் பெற்ற பேரின்பநாயகம் கௌரவிக்கப்பட்டார். மற்றும் த. ணநாதலிங்கம் பேராசிரியர் சி. தில்லைநாதன், கொழும்பு தமிழ் சங்கத்தின் தலைவர் இராஜகுலேந்திரா, சைவ மங்கையர் கழகத்தின் உபதலைவர் மாலா சபாரட்ணம், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் காலாநிதி க.இரகுபரன் ஆகியோர் வேந்தனார் பற்றியும் அவரது நூல்கள் பற்றியும் உரையாற்றினார்கள்.

இங்கு வேந்தனாரின்நினைவுரையின் போது

வித்துவான் அவர்கள் தமிழ் மொழி பண்பாடு , தமிழ்க் கலைகள் இலக்கியம் தமிழர்தன்மான வாழ்வுக்கான தன்னாட்சி என்பவற்றை உயிரினும் மேலாக மதித்து அவற்றிற்காகவே ஒல்லும் வழியெல்லாம் ஓடியுழைத்த வேந்தனார். சமயச் சீர்திருத்தக் கோவில்களில் உயிரினங்களைப் பலியிடும் கொடுமையாக சமூக சீர்திருத்தமாக தமிழர்களுள் சாதிப் பிரிவினைகளையும் தீவிரமாக எதிர்த்து எழுதிய பேசியும் வந்தவர்.

வேலனை வேந்தர் மறைந்தும் மறையாத மா கவிஞர் என்றும் தமிழ் வல்லுநர், சபையோரை மயக்கும் தனித் தமிழ் பேச்சாளர் திறமை மிக்க தமிழாசிரியர் உரையாசிரியர் மனித நேயம் மானிடப் பண்பு மக்களுள் சமத்துவம் மரியாதை எனும் இயல்புகள் பேண்பட வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர் 30க்கும் மேற்பட்ட கவிதைகள், பாடசாலை நூல்கள் குழந்தைப் பாடல்கள் யாதாத்தவர், மக்கள் இலக்கியம் படைத்த எழுத்தாளர் வேந்தனாரின் பங்களிப்பானது தமிழ் இலக்கியம் பற்றிய அவரது கட்டுரைகள் கவிதைகள் குழந்தை இலக்கியங்கள் என்றென்றும் நினைவு கூறப்படுகின்றன. புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ் பிள்ளைகள் அதனை இன்றும் கற்று வருகின்றனர். யாழ் பல்கலைக்கழகத்தினை யாழ்ப்பாணத்தில் நிறுவ பெரிதும் பாடுபட்டவர்.

# ஜப்பான்,கொரியா மொழிகளை கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை

ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளுக்கு அதிகளவிலான வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதால் அந்தந் திட்டத்துக்கு அமைய எமது இளைஞர்,யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் இறங்கியுள்ளார்.

இந்த நாடுகளில் பணிபுரிவதற்கு இந்த நாடுகளின் மொழியைக் கற்றிருப்பது அவசியமாகும்.ஆகவே,வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதி உடையவர்களுக்கு மொழியைக் கற்பிப்பதற்கு பைசல் காசிம் அவர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்.

ஆகவே,ஜப்பான் மற்றும் கொரிய மொழிகளை தமிழ் மொழி மூலம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.தகுதி உடையவர்கள் கீழ் காணும் ஈமெயில் முகவரிக்கு உங்களின் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.மேலதிக தகவலுக்கு கீழுள்ள இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

Ema-il : media.moh777@gmail.com, Tel : 0777884883

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி கலத்துர ஸ்ரீ வள்ளுவர் தமிழ் வித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

**எம்.எல்.எஸ்.முஹம்மத்**
**இரத்தினபுரி**

மிக நீண்ட காலமாக நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி கிரியல்ல கலத்துர ஸ்ரீ வள்ளுவர் தமிழ் வித்தியாலய மாணவர்களும் பெற்றோர்களும் ஒன்றிணைந்து (25) சபரகமுவ மாகாண சபை கட்டிடத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிவித்திகல கல்வி வலயத்திற்குரிய மேற்படி தமிழ் மொழி மூலப் பாடசாலையில் 180 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தரம் 1 முதல் 11 வரையுள்ள வகுப்புக்களில் கல்வி கற்று வருகின்றனர்.

எனினும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் உட்பட 16 ஆசிரியர்கள் தேவைப்படும் இப்பாடசாலைக்கு வெறுமனே 6 ஆசிரியர்களை மாத்திரமே சபரகமுவ மாகாண கல்வி அமைச்சு நியமித்திருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்ட இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் இரத்தினபுரி புதுநகர் நகரசபை வீதியிலிருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாகி சபரகமுவ மாகாண சபை பிரதான நுழைவாயில் முன்னால் ஒரு மணித்தியாலம் வரை நின்று பல்வேறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும் பெற்றோர்களும் வேண்டும் வேண்டும் ஆசிரியர்கள் வேண்டுமெனவும், வேண்டாம் வேண்டாம் அதிபர் வேண்டாம் எனவும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தமது கோரிக்கைகளை தாங்கிய பதாகைகளை ஏந்திக் கொண்டு கோசங்களை எழுப்பியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அர்ப்பாட்டக்கார்களிடம் வருகை தந்த சபரகமுவ மாகாண சபை அதிகாரிகள் தமது கோரிக்கைகள் தொடர்பாக மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்கவுடன் நேரடியாக கதைப்பதற்கு 4 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆளுநருடன் சந்திப்பில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது பாடசாலைக்கு அவசரமாக போதிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் நீண்டகால கல்விப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட ஆளுநர் தம்ம திசாநாயக்க ஒரு வாரத்திற்குள் மேற்படி பாடசாலைக்கு இரண்டு ஆசிரியர்களை நியமிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் என ஆளுநருடனான சந்திப்பில் கலந்து கொண்ட பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தை பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கம் பெற்றோர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இரத்தினபுரி மாவட்ட சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை வெறும் 5 சதவீதமாகக் காணப்பட தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் மாத்திரம் ஆசிரியர் பற்றாக்குறை 22 சதவீதமாக உயர்ந்துள்ளதாக மாகாண கல்வித் திணைக்களத்தின் அண்மைக் கால புள்ளிவிபர அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

# HUBEI கலாச்சார சுற்றுலா வாரத்தின் நிகழ்வுகள் கிளிநொச்சியில்



HUBEI கலாச்சார சுற்றுலா வாரத்தின் நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள லெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றது.

சீனாவின் கலை கலாச்சார விழுமியங்களை பறைசாற்றும் வகையிலும், சீன இலங்கை நட்புறவினை மேம்படுத்தும் வகையிலும் குறித்த நிகழ்வு இலங்கையின் பல பகுதிகளிலும் இடம் பெற்று வருகின்றது. நேற்று இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சீன கலாச்சாரத்தை எடுத்து இயம்பும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வை பார்வையிட பெருமளவான மக்களும் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட படை உயரதிகாரிகள், கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன் போது நினைவு சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# சிறிய நட்சத்திரத்தை சுற்றும் மிகப் பெரிய கோள் கண்டுபிடிப்பு



தற்போதைய வானியல் கோட்பாடுகளின்படி, இருக்கக் கூடாது என்று கருதப்படும் ஒரு பெரிய கோளை வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சூரிய குடும்பத்திலுள்ள ஜூபிடர் கோளை ஒத்த இது, தன்னை விட மிகவும் சிறிய நட்சத்திரத்தை சுற்றி வருவது, ஒரு கோள் எப்படி உருவாகிறது என்ற கோட்பாட்டிற்கு எதிராக அமைந்துள்ளதால் அது விஞ்ஞானிகளிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 284 ட்ரில்லியன் கிலோமீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள இந்த கோள், சூரிய குடும்பத்தில் அமைந்துள்ள கோள்களின் அமைப்பை ஒத்துள்ளது.

இதுகுறித்த ஆய்வு முடிவுகள் சயின்ஸ் எனும் சஞ்சிகையில் சர்வதேச விஞ்ஞானிகள் குழுவினால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஸ்பெயினில் உள்ள தொலைநோக்கிகளை பயன்படுத்தி இந்த கோள் கண்டறியப்பட்டுள்ளது.

# அமெரிக்க அதிபர் டிரம்பின் அரசியல் எதிரியை வீழ்த்த வெளிநாட்டு உதவி - விவரங்களை வெளியிட்ட வெள்ளை மாளிகை



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும், உக்ரைன் அதிபரும் பேசிய தொலைபேசி உரையின் விவரங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது. டிரம்பை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கையை அமெரிக்க நாடாளுமன்றம் தொடங்க இந்த விவரங்கள் காரணமாகியுள்ளன.

ஜனநாயக கட்சியின் உறுப்பினரும், முன்னாள் துணை அதிபரமான ஜோ பைடனின் செயல்பாடுகளை விசாரிக்க உக்ரைன் அதிபர் வாலடிமீர் ஸெலன்ஸ்கியிடம் ஜூலை 25ம் தேதி அதிபர் டிரம்ப் கேட்டுக்கொண்டதாக வெள்ளை மாளிகை வெளியிட்ட விவரங்கள் காட்டுகின்றன. ஜோ பைடனின் மகன் உக்ரைன் எரிவாயு நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார்.

தனது அரசியல் எதிரியான ஜோ பைடனை களங்கப்படுத்தும் நோக்கில் உக்ரைனுக்கு வழங்கும் ராணுவ உதவியை நிறுத்தி வைத்தாக கூறப்படுவதை டிரம்ப் மறுத்து வருகிறார்.

டிரம்ப் - வாலடிமீர் தொலைபேசி அழைப்பு, இந்த ஊழலை முதன் முதலில் வெளிப்படுத்திய குற்றச்சாட்டின் ஒரு பகுதியாகும்

புதன்கிழமை காலை நியூயார்க் நகரின் ஐநா பொது பேரவையில் இந்த சர்ச்சை பற்றி கருத்து தெரிவிக்கையில், அமெரிக்க வரலாற்றில் மிக பெரியதொரு பழிவாங்கல் நடவடிக்கை, என்று அதிபர் டிரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

அதிபரின் செயல்பாடுகளில் பதவி நீக்கத்திற்கு வகை செய்கின்ற அதிகாரபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவையில் ஜனநாயக கட்சி தலைவரும், அவைத் தலைவருமான நான்சி பலோசி செவ்வாய்கிழமை தொடங்கினார்.

ஜூலை 25ம் தேதி தொலைபேசியின் முழுமையான, முற்றிலும் அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்ட மற்றும் மாற்றியமைக்கப்படாத பதிப்பு வெளியிடப்படும் என்று டிரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார்.

ஆனால், புதன்கிழமை காலை வெள்ளை மாளிகை வெளியிட்ட விவரங்கள் இந்த தொலைபேசி உரையாடலை கேட்டு குறிப்பு எடுக்கப்பட்டவைகளாகும்.

உக்ரைனுக்கு வழங்கப்படும் ராணுவ உதவியான 391 மில்லியன் டாலரை நிறுத்தி வைக்க அமெரிக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்ட நாட்களில்தான் இந்த ஜூலை மாத தொலைபேசி உரையாடல் நடைபெற்றது.

வெள்ளை மாளிகை வெளியிட்ட குறிப்பாணையில் பணம் பற்றிய எந்த உரையாடலும் இடம்பெறவில்லை.

வெளியாகியுள்ள குறிப்புகளின்படி, அமெரிக்காவின் துணை அதிபராக ஜோ பைடன் 2016ம் ஆண்டு உக்ரைனின் அரசு தலைமை வழக்கறிஞர் விக்டோர் ஷோகினை பதவியில் இருந்து அகற்ற முயற்சி மேற்கொண்டார் என ஸெலன்ஸ்கியிடம் டிரம்ப் தெரிவிப்பதாக உள்ளது.

ஹண்டர் பைடன் குழும உறுப்பினராக இருக்கின்ற புரிஸ்மா எரிவாயு நிறுவனத்தில் ஷோகினின் அலுவலகம் புலனாய்வு ஒன்றை தொடங்கியுள்ளது.

ஊழலை மிக மென்மையாக கையாண்ட காரணத்தால் ஷோகின் பதவியில் இருந்து அகற்றப்பட வேண்டுமென பிற மேற்குலக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

உக்ரைன் அதிபரோடு நடத்திய தொலைபேசி உரையாடலில் ஜோ பைடன் பற்றியும், அவரது மகன் பற்றியும் டிரம்ப் பேசியதாக தெரிவிக்கப்படுகிறது. ஜோ பைடனின் செயல்பாட்டை சுட்டிக்காட்டி, உக்ரைன் அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென டிரம்ப் கூறியுள்ள தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அதனை நாங்கள் பார்த்துகொள்வோம். இந்த வழக்கு பற்றிய புலனாய்வை நாங்கள் செய்வோம், என்று ஸெலன்ஸ்கி தெரிவித்துள்ளதும் வெளிவந்துள்ளது.

# அரசியல்வாதிகள் பதிவுகளை உண்மை சரிபார்ப்பு செய்யமாட்டோம்



அரசியல்வாதிகளால் பதிவிடப்படும் அனைத்து இடுகைகளையும் 'செய்திக்குரிய உள்ளடக்கம்' என்று கருதுவதாக ஃபேஸ்புக் கூறுகிறது.

போலிச் செய்திகளின் பரவலை தடுப்பதற்காக தாங்கள் முன்னெடுத்துள்ள செய்தியின் உண்மைத்தன்மையை கண்டறியும் திட்டத்தில் அரசியல்வாதிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதாவது, அரசியல் சார்ந்த விவாதங்களில் நடுவராகவும் மற்றும் அரசியல்வாதிகள் தங்களது விருப்பத்திற்கேற்றவர்களை தங்களது பதிவுகளின் மூலம் சென்றவடைவதை தடுக்கும் வகையிலும் தாங்கள் இருக்க விரும்பவில்லை என்று ஃபேஸ்புக் மேலும் தெரிவித்துள்ளது.

இருப்பினும், அரசியவாதிகள் என்னும் பட்டியலுக்குள் யாரெல்லாம் வருகிறார்கள் என்பது குறித்த தெளிவான விளக்கத்தை ஃபேஸ்புக் வெளியிடவில்லை.

# அமேசான் காடு உலகின் நுரையீரல் இல்லை: பிரேசில் அதிபர் சயீர் பொல்சனாரு ஐ.நாவில் உரை

அமேசான் காடு உலகின் நுரையீரல் இல்லை எனப் பிரேசில் அதிபர் சயீர் பொல்சனாரு ஐ.நாவில் தெரிவித்தார்.

ஐ.நா சபையில் நடந்த வருடாந்திர கூட்டத்தில் பேசும் போது அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர், அமேசான் ஒன்றும் தீக்கிரையாக்கப்படவில்லை. சர்வதேச சமூகம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம் என்றார்.

அமேசான் குறித்து உலக சமூகத்திடம் தவறான புரிதல் உள்ளது. இதன் காரணமாக அவர்கள் குதர்க்க வாதம் செய்கிறார்கள் என்றார் பிரேசில் அதிபர்.

அமேசான் மனிதக்குலத்தின் பொக்கிஷம் என்ற தவறான புரிதல் மக்களிடம் உள்ளது. அது போல அமேசான் காடு இவ்வுலகத்தின் நுரையீரல் என்ற தவறான கருத்தும் நிலவுகிறது என்று கூறினார் பொல்சனாரு.

பொல்சனாரு அரசு அமேசான் காட்டை பாதுகாக்கத் தவறிவிட்டது. காட்டழிப்பை



ஊக்குவிக்கிறது என சூழலியலாளர்கள் குற்றஞ்சாட்டி வரும் சூழலில் அவர் இவ்வாறாக உரையாற்றி உள்ளார்.

பரபரப்பான செய்தி தருவதற்காகப் பொய்யான செய்திகளைச் சர்வதேச ஊடகங்கள் தந்துவிட்டன. எங்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, ஊடகங்களின் இந்த புரட்டுகளை எடுத்துக் கொண்டு காலனித்துவ மனநிலையில் சில நாடுகள் நடந்து கொண்டன என்று கூறினார்.

பூர்வுகுடிகளை தம் அரசு சரியாக நடத்துவதாக சயீர் பொல்சனாரு குறிப்பிட்டார்.

பிரேசில் உள்ளேயும், வெளியேயும் உள்ள சிலர், பிரேசலிய இந்தியர்களைக் குகை மனிதர்களாகவே கருதுகிறார்கள். அந்த நிலையிலேயே வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்றார்.

சில அந்நிய சக்திகள் தங்கள் சொந்த நலனுக்காக பூர்வகுடி தலைவர்களைத் தவறாக வழிநடத்துகிறது என்றார்.

பருவநிலை மாற்றம் குறித்து கிரேட்டா தன்பெர்க் உரையாற்றிய சில மணி நேரங்களுக்கு பின்புதான் பொல்சனாரு இவ்வாறாகப் பேசி உள்ளார்.

கிரேட்டா தனது உரையில், அழிவின் தொடக்கத்தில் நாம் இருக்கிறோம்.ஆனால், பணம் குறித்து... நித்தியமான பொருளாதார வளர்ச்சி குறித்த கற்பனை கதைகளைப் பேசி கொண்டிருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டு இருந்தார்.

# ஆப்பிரிக்காவில் தங்க சுரங்கம் இடிந்து விழுந்து 30 பேர் பலி

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சாத் நாட்டின் மத்திய பகுதியில் லிபியாவின் எல்லையையொட்டி அமைந்துள்ளது டிபெஸ்டி பிராந்தியம். இங்கு தங்கம் மிகுதியாக கிடைப்பதால் பல்வேறு குழுக்கள் சட்ட விரோதமாக சுரங்கம் அமைத்து தங்கத்தை எடுத்து வெளிசந்தைகளில் விற்றுவருகின்றனர்.

குறிப்பாக அண்டை நாடான சூடானை சேர்ந்த மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்ல எளிதில் பணம் பெறவும், கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிராக போரிட ஆயுதங்களை வாங்கவும் டிபெஸ்டி பிராந்தியத்தில் சட்டவிரோத சுரங்க பணியில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில், அங்குள்ள கொவ்ரி பவ்டி நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த தங்க சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் தங்கத்தை வெட்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக சுரங்கத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது.

இதில் சுரங்கத்துக்குள் இருந்த தொழிலாளர்கள் அனைவரும் சிக்கிக்கொண்டனர். தகவல் அறிந்து சென்ற மீட்பு குழுவினர் தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டனர். எனினும் 30 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என தெரிகிறது. எனவே பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# பாகிஸ்தான் நடிகை கொலை வழக்கில் சகோதரருக்கு ஆயுள் தண்டனை

பாகிஸ்தான் நாட்டு மாடல் அழகியும் டிவி நடிகையான குவான்டீல் பலூச் என்பவர் அடிக்கடி அதிரடியாக ஏதாவது செய்து, தலைப்புச் செய்திகளில் தனது பெயர் தலைகாட்ட வேண்டும் என்பதில் அதிக விருப்பம் கொண்டவராக விளங்கினார்.

பவுசியா அசிம் என்னும் இயற்பெயரை கொண்ட இவர், ஆசிய கோப்பை போட்டியில் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்றதால் பாகிஸ்தான் அணியின் கேப்டன் சாஹித் அப்ரிடியை பைத்தியம் என்று முன்னர் திட்டி இருந்தார்.

கடந்த 2016-ம் ஆண்டில் குவான்டீல் பலூச் தனது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் ஒரு வீடியோ செய்தியை வெளியிட்டிருந்தார்.

டி20 உலக கோப்பை போட்டிகளில் இந்தியாவுடன் பாகிஸ்தான் 2 முறை மோதுகிறது. இதில் இந்தியாவை பாகிஸ்தான் தோற்கடித்தால் நிர்வாண நடனம் ஆடத்தயாராக இருப்பதாக அந்த வீடியோ செய்தியில் அவர் கூறியிருந்தார்.

மேலும், பாகிஸ்தான் கிரிக்கெட் கேப்டன் அப்ரிடிக்கு சிறப்பு சலுகை ஒன்றையும் அறிவித்தார். போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றால் அவர் என்ன சொன்னாலும் அதை நான் செய்வேன் என அந்த வீடியோவில் குவான்டீல் பலூச் அறிவித்திருந்தார்.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற டி20 உலக கோப்பை போட்டியில் பாகிஸ்தான் மண்ணைக் கவ்வியது. ஆறு விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி வாகை சூடியது. இந்தியாவின் இந்த அபார வெற்றி, பாகிஸ்தான் ரசிகர்களுக்கு எத்தகைய வெறியை ஏற்படுத்தியுள்ளது? என்பதை விளக்கும் விதமாக சர்ச்சை நடிகை குவான்டீல் பலூச் ஒரு வீடியோவை வெளியிட்டார்.

பாகிஸ்தான் வெற்றிபெற முடியாமல் போனது பற்றியும், தனக்கு நிர்வாணமாக நடனம் ஆடும் வாய்ப்பு கிடைக்காமல் போனது குறித்தும் தனது வயிற்றெரிச்சலை ஆற்றும் வகையில் பாகிஸ்தான் கேப்டன் ஷாஹித் அப்ரிடியை அந்த வீடியோவில் திட்டித் தீர்த்திருந்தார்.

இப்படி பல்வேறு சர்ச்சைகளுக்கு பேர்போன குவான்டீல் பலூச்(26) பஞ்சாப் மாகாணத்துக்குட்பட்ட முல்தான் நகரில் உள்ள வீட்டில் 15-7-2016 அன்று பிணமாக கிடந்தார்.

சமூக வலைத்தளங்களில் சர்ச்சைக்குரிய கருத்துகளையும் வீடியோக்களையும் வெளியிட்டு குடும்ப கவுரவத்தை சீர்குலைத்ததால் கழுத்தை நெறித்து, அவரை கொன்று விட்டதாக குவான்டீல் பலூச்சின் சகோதரர் முஹம்மது வாசிம் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்தார்.

முல்தான் கோர்ட்டில் நடைபெற்றுவந்த இந்த கொலை வழக்கில் 35 சாட்சிகளிடம் விசாரணை முடிந்து இன்று தீர்ப்பளிக்கப்பட்டது.

குவான்டீல் பலூச்சின் சகோதரர் முஹம்மது வாசிமுக்கு ஆயுள் தண்டனை விதித்து உத்தரவிட்ட நீதிபதி இம்ரான் ஷபி, இதே வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த குவான்டீல் பலூச்சின் மற்றொரு சகோதரர் மற்றும் சிலரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

# வெளிநாட்டினருக்கு சுற்றுலா விசா வழங்க சவுதி அரேபியா முடிவு



சவுதி அரேபியா சமீபகாலமாக பெண்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. தனது கச்சா எண்ணெய் கிடங்குகள் தாக்கப்பட்டதையடுத்து, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மற்ற துறைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற நிலைக்கு சவுதி தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் விதமாக வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு சவுதி அரேபியா முதல் முறையாக சுற்றுலா விசா வழங்க திட்டமிட்டுள்ளது. உலகில் உள்ள அனைத்து சுற்றுலா பயணிகளுக்கும் சவுதி அரேபியா வர விசா வழங்குவதன் மூலம் நாம் வரலாற்றை உருவாக்கியுள்ளோம் என அந்நாட்டு சுற்றுலாத்துறை மந்திரி அகமது அல் ஹடேப் தெரிவித்துள்ளார்.

இந்த சுற்றுலா விசாவை அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்பட 49 நாடுகளை சேர்தவர்கள் இணையதளம் மூலமாக பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டினருக்கு சுற்றுலா விசா வழங்குவதால் சுற்றுலாத் துறையில் வரும் ஆண்டுகளில் வளர்ச்சி ஏற்பட்டு சுமார் 5 லட்சம் ஹோட்டல் அறைகளை உருவாக்குதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அவசியம் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சீனாவில் இலவச வீட்டுக்காக 23 முறை திருமணம்

சீனாவின் ஷெஜியாங் மாகாணம் லிஷூய் நகரில் உள்ள ஒரு கிராமத்தில் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அந்நாட்டு அரசு மக்களுக்கு இலவசமாக வீடு கட்டி தருகிறது.

அதாவது, தற்போது அந்த மக்கள் இருக்கும் இடத்தை அரசு எடுத்துக் கொண்டு அதற்கு பதிலாக அதே கிராமத்தில் வேறொரு இடத்தில் 430 சதுர அடி அளவிலான வீடுகளை இலவசமாக வழங்கி வருகிறது. இந்த திட்டத்தின் படி கிராமத்தில் உள்ள மக்களுக்கு சொந்தமாக நிலம் இருந்தாலும், இல்லையென்றாலும் அரசு தரும் இலவச வீடுகளை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. அதாவது, அந்த கிராமத்தில் வசிக்கும் அனைவருமே இலவச வீடு பெற தகுதியானவர்கள் ஆவார்கள்.

இந்த நிலையில் அரசின் இந்த திட்டத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு லிஷூய் நகரை சேர்ந்த பான் என்பவரின் குடும்பத்தினர் தங்கள் உறவினர்களையே மீண்டும் மீண்டும் திருமணம் செய்து 11 வீடுகளை முறைகேடாக பெற்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. அரசு இலவச வீடுகள் வழங்கும் கிராமத்தை சேர்ந்த ஷி என்ற பெண் திருமணமாகி கணவருடன் வசித்து வந்தார்.

இந்த நிலையில் கருத்து வேறுபாடு காரணமாக கணவன்-மனைவி இருவரும் பிரிந்து விவாகரத்து பெற்றனர். அதனை தொடர்ந்து ஷி தனது கிராமத்துக்கு திரும்பினார். இருவரும் விவாகரத்து பெற்ற 6 நாட்களுக்கு பிறகு அரசு இலவச வீடு திட்டத்தை அறிவித்தது. அதனை அறிந்த பான், விவாகரத்து செய்த தன் மனைவி ஷியை மீண்டும் திருமணம் செய்து கொண்டு அந்த சான்றிதழை அரசிடம் காட்டி, தானும் இலவச வீட்டில் வாழ தகுதியை பெற்றார். அதன்படி பான்-ஷி தம்பதிக்கு அரசின் இலவச வீடு கிடைத்தது.

அதனை தொடர்ந்து பான் தனது மனைவி ஷியை மீண்டும் விவாகரத்து செய்துவிட்டு தனது அண்ணியை திருமணம் செய்துகொண்டு மற்றொரு வீட்டை பெற்றார். அதன் பின்னர் அவரையும் விவாகரத்து செய்துவிட்டு அண்ணியின் தங்கையை திருமணம் செய்து 3-வது இலவச வீட்டை வாங்கினார்.

அதேபோல் பானின் தந்தையும் குடும்ப உறுப்பினர்களையே பல முறை திருமணம் செய்து இலவச வீடுகளை பெற்றார். அதிலும், அவர் ஒரு படி மேலே சென்று இலவச வீட்டுக்காக தன்னுடைய தாயையே திருமணம் செய்து கொண்டார். இப்படி பானின் குடும்பத்தில் உள்ள 11 பேர், தங்களுக்குள்ளேயே 23 முறை திருமணம் செய்துகொண்டு விவாகரத்து பெற்றுள்ளனர்.

அதன் மூலம் இந்த குடும்பத்துக்கு 11 இலவச வீடுகள் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. இதை கண்டுபிடித்த கிராம மேம்பாட்டு அதிகாரிகள், பான் குடும்பத்தினரின் மோசடி தொடர்பாக போலீசில் புகார் அளித்துள்ளனர். போலீஸ் விசாரணையில் பான் குடும்பத்தினர் மோசடியில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து பான், அவரது மனைவி மற்றும் தந்தை உள்பட 11 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதையடுத்து இந்த மோசடிக்கு முக்கிய காரணமாக இருந்த 4 பேரைத் தவிர, மற்ற 7 பேரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

தமிழ்த்தந்தி
உண்மையாய், உரிமையாய், உணர்வாய்...
ஞாயிற்றுக்கிழமை 29.09.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி:0114369412பக்ஸ்:0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# வேலை நிறுத்தங்களும் பொருளாதார சிக்கல்களும்

இன்று பல்வேறு பட்ட வேலை நிறுத்தங்கள் இடம்பெறுவதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவ்வேலை நிறுத்தங்கள் பெரும்பாலும் சம்பள முரண்பாடுகளை மையமாகக் கொண்டதாகவே காணப்படுகின்றது. இலங்கைப் புகையிரத சேவை என்பது தனி உரிமை நிறுவனமாகும். இதற்குப் போட்டியாக எந்தவொரு நிறுவனமும் இலங்கையில் புகையிரத சேவையினை மேற்கொள்வதில்லை. தனிஉரிமை பெற்ற இப் புகையிரதத் திணைக்களம் பாரிய நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது மறுப்பதிற்கில்லை. இதற்குக் காரணம் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் முகாமைத்துவம் சிறந்ததாகக் காணப்படாமையாகும். இதனால் தொடர்ச்சியாக இந்நிறுவனம் நட்டத்தில் இயங்கி வருகின்றது. போக்குவரத்துப் பிரதியமைச்சரின் கருத்துப்படி புகையிரத சாரதிகள் மாதாந்தம் மூன்று இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாகவும் புகையிரத நிலைய அதிபர்கள் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கும் அதிகமாகவும் மாதாந்த ஊதியமாக பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிடுகின்றார்.

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தைப் பொறுத்தமட்டில் அங்கு பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளி கூட, மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் மேலாகத்தான் ஊதியம் பெறுகின்றார்கள் என்பது மறுக்க முடியாததாகும். இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் இவ்வளவு வருமானத்தைப் பெற்றுக் கொண்டு தமது நிறுவனத்தை நட்டமடையச் செய்யாமல் சிறந்த சேவையினை வழங்க வேண்டியது புகையிரத ஊழியர்களின் கடமையாகும். அத்துடன் வினைத்திறனை மேம்படுத்தி, வருமானத்தை அதிகரிப்பதுடன் புகையிரத சேவையை திறைசேரிக்கு சுமையற்ற சேவையாகவும், மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கக்கூடிய நிறுவனமாகவும் மாற்றியமைக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

புகையிரதத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்துடன் இலங்கையில் ஆசிரியர்களின் வேலைநிறுத்தமும் இடம்பெற்றது. இலங்கையில் மொத்தமாக மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் வரையிலான ஆசிரியர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. இன்று அரசு பெருமளவான நிதியினை கல்விக்காக செலவு செய்கின்றது. ஆசிரியர் சமுதாயம் மாத்திரம் நினைத்தால் இந்தத் தேசத்தினை நற்பிரஜைகளைக் கொண்ட தேசமாக மாற்றியமைத்து விடலாம். இன்று பாடசாலைகளின் கற்பித்தல் திறன் வீழ்ச்சி மட்டத்தை அடைந்துள்ளதாகவும் அதனால்தான் மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடிச் செல்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அரச உயர் அதிகாரி ஒருவர் எம்மிடம் இன்று கூறுகையில், ஒரு மாவட்டத்தைச் சுட்டிக்காட்டி அந்த மாவட்டத்தில் நான்கு பிரதான பாடசாலைகள் இருப்பதாகவும் அந்த நான்கையும் மூடிவிட்டு மாணவர்களை பரீட்சை தோற்றச் சொன்னால் பெறுபேறுகளில் மாற்றம் இருக்காது என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அவர் குறிப்பிடக் காரணம், மாணவர்கள் தனியார் கல்வியில் நம்பியிருப்பதாகும். ஆசிரியர்கள் இவ்வாறு பாடசாலைகளில் அசட்டையாக இருப்பதற்கு சம்பள மட்டம் போதாது என்பது ஆசிரியர்களின் கருத்தாகும். எனவே அரசாங்கம் ஆசிரியர்களை மேலதிகமாக வேலை செய்யப் பணித்து அவர்களுக்கு அதிகமான கொடுப்பனவை வழங்கினால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுடன் கல்வி நடவடிக்கைகளிலும் ஊக்கமாக ஈடுபடுவார்கள் என்பது இன்னொரு சாராரின் கருத்தாகும்.

புகையிரதத் திணைக்களத்தில் துப்பரவுத் தொழிலாளி ஒருவர் ஒருஇலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுகின்ற பொழுது, பல பட்டங்களைப் பெற்ற ஆசிரியர்கள் சிறுபிரிவினரேனும் ஒருஇலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமை துரதிர்ஷ்டவசமானதே.

# நிராகரிக்கப்பட்டுவரும் கோரிக்கைகளும் உரிமைகளும்

இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நான்கு வருடங்கள் கடந்து விட்டது: நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்காக உருவானது: தேசிய நல்லிணக்கம் உருவாகியுள்ளது என பல சந்தர்ப்பங்களில் முழங்கிவருகின்ற போதும் இலவு காத்த கிளியின் நிலையில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகள் காணப்படுகின்றன.



நல்லாட்சி ஆரம்பமானது முதல் தமிழர்கள் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பல்வேறு இடங்களில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இத்ததகைய போராட்டங்களும் மக்கள் அழுத்தம் இன்றி வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை.இந்த நிலையில் தமிழ் மக்களும் வீதியில் இறங்குவதன் மூலமே தமக்கான உரிமைகளை பெறமுடியும் என தீர்மானித்துள்ளனர்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்தும் ஐ.நா மனித உரிமைகள் தீர்மானத்தில் கூறிய விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது கால இழுத்தடிப்புக்களையே செய்து வருகின்றது. தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை சந்தர்ப்பம் பார்த்து நழுவவிடுகின்றார் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தமிழ் மக்களின் ஆணையின் மூலம் இந்த அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், பாராளுமன்ற பிரதிநித்துவ வாய்ப்பையும் வைத்து இந்த அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து மக்களுடைய அபிலாசைகள் மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைக்க கடுமையாக உழைக்கவில்லை என்ற பல குற்றச்சாட்டுக்கள் எழுந்தவண்ணமே உள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில் காணப்பட்டதற்கு அதிகமாகவே திட்டமிட்ட நிலஅபகரிப்புக்களும், பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் நல்லாட்சியில் இடம்பெற்று வருகின்றன. காணி விடுவிப்பு என்னும் பெயரில் ஆங்காங்கே சிறு சிறு காணிகள் விடுவிக்கப்பட்ட போதும், 20 வருடங்களுக்கு மேலாக இன்றும் வடபகுதியில் முகாம் வாழ்க்கை தொடர்கிறது என்றே கூறலாம்.

இதுதவிர, நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிரச்சனை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை என பல பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாத நிலையிலேயே இன்றும் மக்கள் அவர்களுக்காக வீதிகளில் இறங்கி போராடிவருகின்றனர். இந்த நிலையில் வட கிழக்குத் தமிழ் மக்கள் செய்வதறியதாத நிலையில் மனவுளைச்சலுக்கு உள்ளாகிவருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசு தனது ஐ.நா அங்கத்துவம் பெற்று கொண்ட 1955ம் ஆண்டிலிருந்து, பலவிதப்பட்ட சர்வதேச தண்டனைகளிலிருந்து தொடர்ந்து தப்பி வருவது உங்களுக்கு ஆச்சரியம் தரமாட்டாது என்பது யாவரும் அறிந்த விடயமே.

இலங்கை அரசு தனது பௌத்தமயம், சிங்களமயம், சிங்கள குடியேற்றம், இராணுவமயம் ஆகியவற்றை தமிழர்களது தாயக பூமியான வடக்கு கிழக்கில் வெற்றிகரமாக முற்று முழுதாக நிறைவேற்றி முடிக்கும் வரை, சர்வதேசத்தின் வேண்டுகோள்கள் எவற்றையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதனை அவர்களது செயற்பாடுகள் மூலமாக நிரூபித்துவருகின்றார்கள்.

ஐ.நா மனித உரிமை சபையின் 30வது கூட்டத் தொடர், 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற வேளையில், மனித உரிமை சபை அங்கத்தவர்களினால் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட கண்டனப் பிரேரணையை, சிறிலங்கா மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது. ஆனால் இதனது உண்மை தன்மையை, 2016ஆம் ஆண்டு நவம்பர் 27ம் திகதியே யாவரும் உணர கூடியதாக விருந்தது! காரணம், அமெரிக்க ஜனதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவானதும், இலங்கையில் நல்லாட்சி என கூறப்படும் அரசாங்கத்தின் ஜனதிபதியான சிறிசேன, ஐ.நா மனித உரிமை சபையினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திலிருந்து தப்புவதற்காக அமெரிக்க ஜனதிபதியின் உதவியை நாடியுள்ளார் என பலதரப்பட்ட விமர்சனங்கள் அரசியல் ஆய்வாளர்களாலும் புத்திஜீவிகளாலும் முன்வைக்கப்பட்டுவந்தன. இதன் உண்மைத் தன்மையே இதனைத் தொடர்ந்துவந்த காலப்பகுதிகளிலும் தெளிவாகியது.

> **கடந்த மூன்று தசாப்தங்களிற்கு மேலாக இலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் பிரச்சினைகள் இன்று உலகின் கண்களைக் கவர்ந்துள்ள அதே சமயம் யாரும் எதிர்த்து தீர்வு காண விழையவில்லை. ஆனால் இலங்கையில் நடைபெறுபவையை விட உலகில் மிகக் குறைந்தளவு அழிவுகள், துன்பங்களை அனுபவித்த வேறு சில இனப்பிரச்சினைகள் இதே ஐ.நா.வினால் தீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது**

இது ஒருபுறமிருக்க, இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல், இன்று வரை ஈழத்தமிழர்களை மட்டுமல்லாது, தற்பொழுது சர்வதேசத்தையும் இலங்கை அரசாங்கம் ஏமாற்ற தொடங்கியுள்ளது என அரசியல் வட்டாரங்கள் கூறிவருகின்றனர். இவர்கள் கூறுவதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் அதனை அலசி ஆராய்ந்து இவ்வரசாங்கத்திற்கு எதிராக நின்று தமிழர்களின் உரிமைகளை வென்று தரக்கூடிய அதிகாரத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு பின்வாங்குவதே இன்று ஆங்காங்கு போராட்டங்கள் வெடிக்கக் காரணமாயுள்ளன.

இந்நிலையில் வடக்கு, கிழக்கின் நிலைமை இராணுவமயம், பௌத்தமயம், இனநல்லுறவை சீர்குலைக்கும் குடியேற்றம் போன்றவற்றினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றமையை சமகால நடப்புக்கள் புடம் போட்டுக்காட்டுகின்றன.

1950ம் ஆண்டு முதல், தமிழ் மக்கள் நாடு முழுவதிலும் பல தடவைகள் தாக்கப்பட்டனர். இதேவேளை, தெற்கில் வாழும் சிங்கள இளைஞர்கள் புரட்சி மூலம் அரசை கைப்பற்றுவதற்கு பல தடவைகள் முயற்சித்தனர். இவ்வேளைகளில், ஆயிரக்கணக்கனோர் காணாமல் போயும், படுகொலை செய்யப்பட்டும், கைது, சித்தரவதை, இடப்பெயர்வு, தமிழ் பெண்கள் மீதான வன்முறைகள் என பல கொடூர சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்றன, இன்றும் இடம் பெறுகின்றன. இவைபற்றிய விபரங்கள் யாவும், ஐ.நாவின் மனித உரிமை பிரிவுகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். இவ்வாறான பிரச்சினைகளுக்கும் மக்கள் மத்தியில் தீர்வு கிடைக்க வழி செய்தல் வேண்டும்.

இலங்கையின் வேறுபட்ட அரசாங்கங்கள் ஒன்று மாறி ஒன்றாக, தமிழ் மக்களிற்கு வெறும் வெற்று வார்த்தைகளை அதாவது போலி வாக்குறுதிகளை கொடுத்து, தமது திட்டங்களை நாசுக்காக நிறைவேற்றி வந்துள்ளனர். இவ்வேளையில் இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்த காரணத்தினால், சர்வதேசத்திற்கு தமது போலி முகத்தின் மூலம் காலங்களை கடத்தி, வடக்கு கிழக்கில், தமது திட்டங்களை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுகின்றனர்.

இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்கான எந்தவிதமான ஆக்கபூர்வமான எந்த அரசியல் தீர்வையும், ஆட்சியிலிருந்த எந்த அரசும் ஒருபொழுதும் முன்வைத்தது கிடையாது. முன்வைக்க முயற்சிக்கவும் இல்லை என்பது தமிழர்கள் இலங்கையில் எவ்வகையில் நடத்தப்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது.

இந்நிலையில் ஆரம்பகாலத்தில் இனப்பிரச்சினையை தீர்க்கும் நோக்குடன், 1957ம் ஆண்டும், 1965ம் ஆண்டும் இலங்கையின் வேறுபட்ட இரு பிரதமர்களினால், அவ்வேளையில் தமிழ்த் தலைமையுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் யாவும், தெற்கில் உள்ள சிங்கள அரசியல் கட்சிகள், மக்கள், பௌத்த மதகுருமாரின் கடுமையான எதிர்ப்பு காரணமாக, இரு உடன்படிக்கைகளும் கிழித்து எறியப்பட்டன என்பது பல தடவை கூறப்பட்டதுடன் சரித்திரமும் இதுவேயாகும். அன்றிலிருந்து இன்றுவரை வடக்கு கிழக்கில் சிங்களமயமான குடியேற்றங்கள், இராணுவமயம் ஆகியவற்றினால் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை வெளிப்டையாகவே எல்லோரும் காணக்கூடியதாகவுள்ளது.

**நக்கீரர்**

அதுமட்டுமின்றி இன்று வடக்கு கிழக்கு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள், சிங்கள மாணவர்களினால் தாக்கப்படுகின்றனர். இவற்றுக்கு அண்மையில் நடந்தேறிய யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் சிங்கள மாணவர்களுக்கிடையேயான மோதல் மற்றும் இரு மாணவர்களின் துப்பாக்கிச் சூட்டு மரணங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற 1948ம் ஆண்டு முதல் இன்று வரை, தமிழ் மக்கள் அரச படைகளினதும், சிங்கள கூலிப்படைகளினதும் வன்முறைகளையே தொடர்ந்து சந்தித்து வருகின்றனர் என்பதே உண்மையாகும். மறுபக்கம், இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்புகளையும், ஐ.நா செயலாளர் நாயகம், ஐ.நா மனித உரிமை ஆணையாளர், ஐ.நா வின் முக்கிய புள்ளிகளினால் முன்மொழியப்பட்ட விதிமுறைகள், செயல்முறைகள், ஆலோசனைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்தாது, அலட்சியம் செய்து காலம் கடத்தி வருகின்றனர். இதன் மூலம் பாதிக்கபடுவதும் தமிழ் மக்களாகவே உள்ளனர்.

அதன் பொருட்டு மிக நீண்டகாலமாக, அதாவது கடந்த இரு தசாப்தங்களிற்கு மேலாக ஐ.நா வுடனும், வேறு சர்வதேச நிறுவனங்களுடன் மிக நெருக்கமாக வேலை திட்டங்களை முன்னெடுக்கும் தமிழர் மனித உரிமைகள் மையம் ஆகிய, மிக தாழ்மையுடன் மனித உரிமைகளை மதிக்கும் ஒவ்வொரு நாட்டின் தலைவர்களையும், ஐ.நா மனித உரிமை சபையின் அங்கத்துவ நாடுகளையும், இலங்கை மீதான ஐ.நா மனித உரிமை சபையின் கண்காணிப்பிலிருந்து நழுவ விடாது, பாதிக்கப்பட்ட மக்களிற்கு நீதியை பெற்று கொடுக்குமாறு வேண்டுகின்றோம் எனவும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதே.

இவ்வாறான விடயங்களை உற்றுக் கவனிக்குமிடத்து, மாறுபட்ட இலங்கை அரசாங்கங்கள், ஆசைவார்த்தைகளிற்கும், வெற்று வாக்குறுதிகளை வழங்குவதிலும் மிகவும் பிரபல்யமானவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி என கூறும் தற்போதைய இலங்கை அரசாங்கம், சர்வதேசத்தை திருப்திபடுத்துவதற்காக, சில முக்கிய மனித உரிமை ஆர்வலர்களது படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட சிலரை, கைது செய்து பல கபட நாடகங்களை ஆடி வருகின்றனர் இது நெடுநாளல்லாது. வெளிச்சத்திற்கு வரும் என ஆதங்கப்பட்டு வரும் அரசியற் தரப்புக்களும் இல்லாமல் இல்லை.

அதுமட்டுமின்றி, இன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெறும் கண்துடைப்பு காரணங்களிற்காக கைது செய்யப்பட்ட பலர், சிறையில் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதுடன், சிலர் கண்துடைப்பு நீதி விசாரணை மூலம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மனித உரிமை மீறல், போர் குற்றம், மனிதாபிமானம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள், ஐ.நா மனித உரிமை பிரிவிடமிருந்து நீதி பெற்றுகொள்ள முடியாவிடில், அவர்கள் வேறு எங்கு நீதியை தேடுவது? இலங்கையில் வடக்கு கிழக்கில் இலங்கையினால் மேற்கொள்ளப்படுபவை யாவும், இன அழிப்பை அடிப்படையாக கொண்டவையே என்பது பல தடவை சர்வதேச சட்டவாளர்களினால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தசாப்பதங்களிற்கு மேலாக இலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் பிரச்சினைகள் இன்று உலகின் கண்களை கவர்ந்துள்ள அதே சமயம் யாரும் எதிர்த்து தீர்வு காண விழையவில்லை. ஆனால் இலங்கையில் நடைபெறுபவையை விட உலகில் மிக குறைந்தளவு அழிவுகள் துன்பங்களை அனுபவித்த வேறு சில இனப்பிரச்சினைகள், இதே ஐ.நா வினால் தீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

14 ஆம் பக்கம் பார்க்க....



# கிளிநொச்சி நகர பொறியியல் பீடத்தில்

# பிரம்மாண்ட விகாரை

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து



# ஓலைக்குடிசையில் பிள்ளையார்!

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட வளாகத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கு தேவைக்கு அதிகமான நிலம் ஒதுக்கப்பட்டு பெரும் பணச்செலவில் பிரமாண்டமான வகையில் விகாரையும் பௌத்த பிக்குகள் தங்குவதற்கான விடுதிகளும் அமைக்கப்பட்டு வரும் அதேவேளை அவ்வளாகத்தில் பிள்ளையார் ஆலயம் ஒரு மரத்தின் கீழ் சிறிய குடிசை ஒன்றிலேயே இயங்கி வருகிறது.

விகாரை அமைப்பதற்கு நிலமும் அனுமதியும் வழங்கி நிதி மூலங்களையும் பெற்றுக்கொடுத்த யாழ். பல்கலைக்கழக பேரவை பிள்ளையார் ஆலயம் அமைப்பதற்கு உரிய அனுமதியை வழங்காது அசமந்த போக்கில் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு பந்தம் பிடிக்கும் நோக்கிலும் சில தனிப்பட்ட சலுகைகளை பெறும் நோக்கிலும் விகாரை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் பிள்ளையார் ஆலயம் அமைப்பதற்கு எந்தவித ஆதரவையும் வழங்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் வருவதால் பெரும் சர்ச்சைகளும் தமிழ் சிங்கள மக்களிடையே மோதல்களும் அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே தமிழர் தாயகங்கள் யாவுமே சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் கிளிநொச்சி நிலப்பரப்பில் இவ்வளவு பெரிய விகாரை அமைக்கப்படுவது நாளைடைவில் ஆழமாகவும் அகலமாகவும் கூர்ப்படைந்து வருகின்ற பௌத்த மயமாக்கலுக்கு மேலும் வழியை ஏற்படுத்தும்.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் மாணவர்களின் இந்த ஆதங்கங்களுக்கு அவர்கள் வாய்ப்பூட்டு போட்டுள்ளனர் என யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவு மாணவர் ஒன்றியம் கவலை தெரிவித்திருக்கிறது.

யாழ். பெயரை குறிப்பிட விரும்பாத கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள பொறியியல் பீட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

காலப்போக்கில் கிளிநொச்சி அறிவியல் நகரம் முழுவதும் பௌத்த மயமாக்கப்பட்டு தமிழர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய அவல நிலை ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள







உள்ள யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட வளாகத்தில் மிகப்பெரிய விஸ்தீரணத்தை கொண்ட நிலத்தை ஒதுக்கி பெரிய விகாரை ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியும் எழுகிறது.

வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைக்கப்போவதாக ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தது. அதனை தொடர்ந்து வடக்கு கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் புதிதாக விகாரைகளும் அமைக்கப்பட்டு வருகிறது.

கன்னியா சிவன் கோவில், செம்மலை பிள்ளையார் கோவில் உட்பட சைவ ஆலயங்களை ஆக்கிரமித்து பௌத்த விகாரைகள் கட்டடப்பட்டு

பல்கலைக்கழக பேரவையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தமிழர்களாக இருந்த போதிலும் அவர்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணைபோபவர்களாவே உள்ளனர் என மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரமாண்டமான வகையில் விகாரை அமைக்கப்பட்டு வரும் நிலையில் பிக்குகள் தங்குவதற்கான விடுதிகளும் அங்கு அமைக்கப்பட உள்ளதாகவும் அங்கு பௌத்த நிலையமும் பௌத்த யாத்திரிகர்கள் தங்கும் விடுதிகளும் அமைக்கப்பட உள்ளதாகவும் காலப்போக்கில் அறிவியல் நகரை சூழ பௌத்த குடியிருப்புக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தன்

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையே அதிகம். அதேபோல பொறியியல் பீட விரிவுரையாளர்களில்



சிங்களவர்களே அதிகமாக உள்ளனர்.

இதன் காரணமாக கிளிநொச்சி அறிவியல் நகரை சூழ உள்ள காணிகளில் அவர்களுக்கான குடியிருப்புக்கள் அமைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

விகாரை அமைப்பை தொடர்ந்து பௌத்த மயமாக்கலும் விஸ்தரிப்பும் தொடருமாக இருந்தால் மாணவர் போராட்டமாக மட்டுமன்றி சமுதாயமயப்படுத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கலைப்பிரிவு மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நூறு வீதம் தமிழர்கள் வாழும் கிளிநொச்சி மண்ணில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதை தடுக்க இந்து கலாச்சார அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்தது? மரத்தின் கீழ் சிறிய பிள்ளையார் படம் ஒன்றை வைத்து வழிபாடு செய்யும் சைவ மாணவர்களுக்கு பிள்ளையார் ஆலயத்தை அமைக்க

இந்து கலாசார அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்தது என்ற கேள்வியும் எழுகிறது.

ஐரோப்பா, கனடா அவுஸ்ரேலியா என பல நாடுகளில் ஈழத்தமிழர்களால் ஆலயங்கள் அமைக்கப்பட்டு பெரும் பணவசதி கொண்டதாக இயங்கி வருகின்றன. நிலங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இராசகோபுரங்களுடன் ஆலயங்களும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழர்களின் தேசிய நலன்களில் அக்கறையோடு செயற்படுகிறோம் என கூறிக்கொள்ளும் சைவ ஆலயங்களின் நிர்வாகத்தினர் தமிழர் நிலங்களில் குறிப்பாக கிளிநொச்சி அறிவியல் நகரில் பௌத்தம் மேலோங்கி வரும் நிலையில் பிள்ளையார் ஆலயம் ஒன்றை அமைத்து மாணவர்களின் வழிபாட்டிற்கு உதவ முன்வர வேண்டும் என்றும் மாணவர்களும் அப்பிரதேச மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடக்கில் பார்க்கும் இடமெல்லாம் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகிறது. சைவ ஆலயங்களை ஆக்கிரமித்தும் விகாரைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

அதற்கு உதாரணமாக முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தை குறிப்பிடலாம்.

முல்லைத்தீவு, நீராவியடிப்பிள்ளையார் கோவில் வளாகத்தில் குருகந்த ராஜமஹா விகாரை என்ற பெயரில் அண்மையில் விகாரை ஒன்றை அமைத்ததுடன் பிள்ளையார் ஆலயத்திற்கு வழிபாட்டிற்கு சென்ற மக்களையும் தடுத்து நிறுத்தினர்.

தமிழர் நிலத்தில் இந்த ஆக்கிரமிப்பை செய்தவர் மேதாலங்கார கீர்த்திதேரர் என்ற பிக்கு ஆகும். இவர் இராணுவத்திலிருந்து விலகி பிக்குவாக மாறியவராகும்.

பிள்ளையார் கோவிலை ஆக்கிரமித்து பௌத்த விகாரை அமைத்த முன்னாள் இராணுவ சிப்பாயான இந்த பிக்கு அண்மையில் மகரகம வைத்தியசாலையில் புற்றுநோய் காரணமாக மரணமடைந்தார்.

இந்த பிக்குவின் உடலை ஞானசார தேரர் தலைமையிலான பிக்குகள் முல்லைத்தீவுக்கு எடுத்து வந்து நீதிமன்ற உத்தரவையும் மீறி நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணிக்கு அருகில் தகனம் செய்தனர்.

இறந்த ஒருவரின் உடலை ஆலயத்திற்கு அருகிலோ அதன் புனித தன்மை பேணப்படும் தீர்த்தக் கேணிக்கு அருகிலோ அடக்கம் செய்வதையோ அல்லது தகனம் செய்வதையோ சைவ சமயம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆலயத்தின் புனிததன்மையை கெடுக்கும் இச்செயலை தடுக்குமாறு ஆலய நிர்வாகம் நீதிமன்றத்தை நாடியிருந்தது.

நீராவியடிப்பிள்ளையார் கோவில் அண்டிய பகுதிகளில் தகனம் செய்வதற்கு, தடை விதித்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி லெனின் குமார் பிக்குவின் உடலை இராணுவ முகாம் அமைந்துள்ள கடற்கரைப்பகுதியில் தகனம் செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்ற தீர்ப்பிற்கு தாம் கட்டுப்படப்போவதில்லை என எச்சரித்த ஞானசார தேரர் தலைமையிலான பிக்குகள் ஆலயத்தின் புனித தன்மையை கெடுக்கும் வகையில் தமிழ் மக்களை வேதனைக்குள்ளாக்கும் வகையில் ஆலய தீர்த்த கேணிக்கு அருகிலேயே பிக்குவின் உடலை தகனம் செய்தனர்.

வடக்கில் பௌத்த ஆதிக்கம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில் வடக்கில் பௌத்தத்தை மேலோங்க செய்வதற்காகவும் பௌத்த சொத்துக்களை காப்பாதற்காகவும் முல்லைத்தீவில் தானும் தனது சகாக்களும் நிரந்தரமாக குடியேறப்போவதாக சர்ச்சைக்குரிய ஞானசார தேரர் அறிவித்திருக்கிறார்.

இந்நிலையிலேயே கிளிநொச்சி அறிவியல் நகரில் பிரமாண்டமான வகையில் அமைக்கப்பட்டு வரும் விகாரை பற்றிய அச்சம் தமிழ் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# இலஞ்ச ஊழல்கள் அதிகரித்துள்ள வடமாகாணம்
## ஆளுநர் நடவடிக்கை எடுப்பாரா?

**அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்**



வடக்கில் ஒரு காலத்தில் சிறந்த நிர்வாகிகள்,அதிகாரிகளின் சேவைகளை பலரும் பாராட்டினார்கள்.யுத்த காலத்துக்கு முன்னர் மட்டுமல்ல யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பதியிலும் இதே நிலைமையே காணப்பட்டது.குறிப்பாக யுத்த காலம் தமிழ்ப்போராளிகளை பிடிப்பதற்கு தமது உயிரையும் பொருட்படுத்தாது,தன்னலம் கருதாது இலஞ்சம் ஊழல் இன்றி நேர்மையுடன் பணியாற்றிய தமிழ் பொலிஸ் அதிகாரிகளை இங்கு குறிப்படலாம்.குற்றப்புலனாய்வு இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையை இன்றும் மறக்கமுடியாது.இதேபோல இன்ஸ்பெக்டர் குமார்,பத்மநாதன்,ஜெயரட்னம் மற்றும் சில தமிழ் பொலிசாரை பொலிஸ் திணைக்களம் மட்டுமல்ல இலங்கை அரசே பாராட்டியுள்ளது. அதேபோல சிவில் அதிகாரிகள் பலரும் நேர்மையானவர்கள் என பாராட்டப்பட்டனர்.யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக பணியாற்றிய நெவில் ஜெயவீர,விமல் அமரசேகரா,நிசங்க விஜரட்னா,மற்றும் சுங்க அதிகாரி சேனரட்னா போன்ற பெரும்பான்மை இனத்தவர்கள்,யாழ்.தமிழ் அதிகாரிகள்,ஊழியர்கள் நேர்மை,கடமை உணர்வு,மனிதநேயம் உள்ளவர்கள் என்றே தெற்கில் இடமாற்றலாகிச்சென்ற பின் கூறினார்கள்.ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது.

**யுத்தத்தின் பின்னரே இலஞ்சம், ஊழல்கள் அதிகரிப்பு**

2015 யுத்தம் முடிந்து சிவில் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டதும் இலஞ்சம்,ஊழல்,மோசடிகள் வடக்கே வளர்ச்சியடைந்துள்ளதை பல சம்பவங்களினூடாக காணமுடிகிறது. அவற்றுள் பாலியல் இலஞ்சம் என்று ஒன்று முக்கிமானது.இவற்றை தட்டிக்கேட்பவர்கள் யார்? வேலியே பயிரை மேய்கிறதா? என இந்த மக்கள் வினவுகின்றனர். பல்வேறு புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.ஊடகங்களில் தினமும் இது தொடர்பான செய்திகள் வருகின்றன. பாராளுமன்றத் திலும் இந்த இலஞ்ச ஊழல்கள் குறித்து குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன.ஆனால்,எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இன்று யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் இலஞ்சம் வாங்கிய சம்பவத்தை சிலர் பெரிதுபடுத்துகின்றனர். யுத்த பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு அரசு வழங்கும் இலவசமான நிவாரணக் கொடுப்பனவை அக்குடும்பத்தினர் பெறுவதற்கு சகல தகுதிகள் இருந்தும், அவர்களிடமே இலஞ்சம் கேட்கின்றனர். இதற்காக மக்கள் அரச அலுவலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர். அரச நிவாரணத்தை வழங்குவதற்கு ஒரு கிராம சேவையாளர் 10 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றுள்ளார். கிளிநொச்சியில் நிவாரண உதவி வழங்க ஒரு பெண் அதிகாரி 25 ரூபா இலஞ்சம் பெற்றார். வெளிச்சத்துக்கு வராமல் பல அதிகாரிகள் லஞ்சம் பெற்றே மக்களுக்கு உதவிகளை செய்கின்றனர் என பலதரப்பினரும் கூறிவருகின்றனர்.

**பெண்களிடம் பாலியல் லஞ்சம்**

யுத்தத்தினால் கணவனை இழந்துள்ள குடும்பத்தலைவிகளுக்கு அரசின் நிவாரணக்கொடுப்பனவு, அல்லது வீட்டுத்திட்ட கொடுப்பனவுக்கு ‘பாலியல் இலஞ்சம்’ கேட்கும் அதிகாரிகள். இதனை ஒரு குறும் திரைப்படத்திலும் பாலியல் இலஞ்சம் காரணமாக வன்னியில் விதவைப்பெண் தறகொலை செய்வதை காண்பித்துள்ளனர். அரச அதிகாரிகள் மட்டுமல்ல நிவாரண உதவி வழங்கும் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளின் அதிகாரிகளும் இந்த பாலியல் இலஞ்சம் கேட்டதும் கண்டறியப்பட்டது.அதைவிட நுண் கடன் பெற்ற பெண்களிடமும் பாலியல் லஞ்சமே கேட்கின்றனர். வடமராட்சி-கரவெட்டிப்பகுதியில் நுண்கடன் பிரச்சினை காரணமாக 14 பெண்கள் விவாகரத்து பெற்றுள்ளனர் என கரவெட்டி பிரதேச செயலக அதிகாரி தெரிவித்துள்ளார்.சில பெண்கள் தற்கொலை செய்துள்ளனர்.

**சட்டவிரோத மணல், மரம் கடத்தல்**

சட்டவிரோத மணல் ஏற்றும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.இந்தளவுக்கு பொலிசார்,இராணுவத்தினர் இருந்தும் இவை எப்படி இடம்பெறுகின்றன. சில இடங்களில் சட்டவிரோத மணல் கடத்தல்காரர் மீது பொலிசார் சுட்ட சம்பவங்கள் இடம்பெறுகின்றன.இதேபோல வன்னிப்பிரதேசத்தில் கள்ள மரம்வெட்டுவோர், கடத்துவோர் ஒருபுறம். வனபரிபாலன திணைக்கள அதிகாரிகளும் உள்ளனர். வீதிச்சோதனைகள் கடுமை. எப்படி இந்த சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்கின்றன. சில இடங்களில் அதிகாரிகளின் ஆதரவுடனே இவை மேற்கொள்ளப்படுகின்றன, 2015 க்கு முன் மணல் ஏற்றும் பணிகளை ஈ.பி.டி.பி மேற்கொண்டிருந்தபோது ஊழல்,மோசடி என்று சில தமிழ் அரசியல்வாதிகள் விமர்சித்தனர். அன்று ஆளுநரும் ஒரு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பணியாற்றினார். ஆனால், அபோது இவ்வாறான சட்டவிரோத மண்,மரம் கடத்தல்கள், இலஞ்சம் இடம்பெறவில்லை என தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் ஒரு பிரதேச செயலருக்கு எதிராக பொது மக்கள் ஆர்ப்பாட்டமும் செய்தனர். சில இடங்களில் காணி விநியோகத்தில் மோசடி இடம்பெற் றுள்ளது. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் இதில் தொடர்பு என பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதற்கு லஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டும்.வடமாகாணத்தில் லஞ்சம்,ஊழலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்

லஞ்ச ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள்,தமது செல்வாக்கினால் தப்பிக்கும் அதேவேளை சாதாரண ஊழியர்கள் இந்த குற்றச்சாட்டில் தண்டிக்கப்படும் நிலைமையே உள்ளதாக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் யாழ்.கச்சேரியில் இடம்பெற்ற லஞ்ச ஊழல் தொடர்பான கருத்தரங்கில் கூறியுள்ளார்.

வடமாகாண ஆளுநராக ஒரு தமிழரை நியமிக்கும்படி ஜனாதிபதியிடம் பலரும் விடுத்த கோரிக்கையினை அடுத்து இவர் நியமிக்கப்பட்டார். இவர் பதவிஏற்றதும் பல நல்ல காரியங்களை செய்துவருகிறார். ஆனால்,இந்த லஞ்சம் தொடர்பாக பலராலும் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் அமைதிப்போக்கை கொண்டுள்ளார். வடமாகாணத்தின் சில பாடசாலைகள் வடமேல் மாகாண புத்தளத்தில் இயங்குகின்றன. அப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான சம்பளக்கொடுப்பனவை வடமாகாண கல்வி அமைச்சே வழங்குவதாக ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.அதாவது யுத்த சூழலால் இடம்பெயர்ந்து புத்தளத்தில் இயங்குகின்ற மன்னார் பாடசாலைகளையே இங்கு குறிப்பட்டிருந்தனர். பாராளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.இப்பிரச்சினையை

14 ஆம் பக்கம் பார்க்க....



# ஜனநாயக அரசியலும் பொறுப்புக்கூறலும்

ஆட்சியதிகாரங்கள் கடந்து வந்த பாதையில் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்த காலமாக கடந்த ஆட்சிக் காலம் நோக்கப்படுகின்றது. அவ்வகையில் கடந்த 2009 இல் யுத்தம் இறுதிக்கட்ட நிலை என்ற பெயரில் பல இலட்சக் கணக்கான அப்பாவி தமிழ் மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அதுமட்டுமின்றி கடந்தகால ஆட்சியில்தான் 34 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். இவர்களில் 31 பேர் தமிழர்கள். ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கா, பிரதீப் ஏக்னெலிகொட, விளையாட்டு வீரர் வசிம் தாஜூதீன் போன்றவர்களைக் கொன்றது யார்? குற்றவாளிகளை ஏன் பிடிக்கவில்லை? கடந்த ஆட்சி காலங்களில்தான் வெள்ளைவானில் ஆட்கடத்தல், வலிந்து காணாமல் போதல், கொலைகள், மிரட்டி கப்பம் வாங்குதல் போன்ற அட்டூழியங்கள் நிறைவேறியிருந்தன. அன்றைய ஆட்சியில்தான் கிறீஸ் பூதங்கள் மக்களைக் கலக்கத்திலும் அச்சத்திலும் ஆழ்த்தின. இவற்றை கடந்த ஆட்சியாளர்கள் மறந்தாலும் தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள்.

**சரணியா சுப்ரமணியம்**

இந்நிலையில் யுத்தம் நிறைவுக்கு வந்த நாள் தொடக்கம் தமிழ் மக்கள் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தமிழ்த் தரப்புக்களின் தலைமைகள் பலரும் சர்வதேசமும், ஐ.நா சபையும் தீர்வினைப் பெற்றுத்தரும் என்று அங்கலாய்க்கிறார்கள். ஒரு விடயத்தை விளங்கிக்கொண்டு ஏமாற்று அரசியல் செய்கின்ற அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளிலிருந்து தமிழ் மக்கள் விலகிச் செல்ல வேண்டும் என்பதுடன் தாங்களே ஐ.நா வரை செல்லவேண்டிய நிலைக்கும் ஆளாகியுள்ளனர். ஈழப்போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தினை 03 பகுதிகளாகப் பிரிக்கலாம். அதாவது, 1990 காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்குப் பொறுப்புக்கூறவேண்டியது ஆயுதக்கட்சிகளும், இந்திய இராணுவமும், இலங்கை இராணுவமும் தான்.

1990 - 2000 வரையும் இலங்கை இராணுவத்தினரும் இராணுவத்தின் ஒட்டுக்குழுக்களும் இதற்குக் காரணமாகவிருக்கின்றார்கள்.

2000-2009 வரையும் கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் அரசுடன் இணைந்து செயற்பட்ட ஒட்டுக்குழுக்களானவர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரு இலட்சத்திற்கு நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயரின் கருத்து. இப்போரில் 05 இலட்சம் வரையான மக்கள் முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்குள் ஒடுக்கப்பட்டதாக ஒரு சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆகக்குறைந்தது 03 இலட்சம் மக்களாவது அங்கு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பது நிரூபணமாகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவதற்குச் சம்மதித்த விவகாரம் ஒருபுறமிருக்க, ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் அல்லது கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றால் இவர்கள் தொடர்பான விபரங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரிடமாவது இருக்கின்றதா? குறிப்பாக இவ்வளவு தொகையான மக்களுக்குள் வெறுமனே 2000-3000 மக்களது விபரங்களைக் காண்பிப்பது மற்றும் டடசஉ அறிக்கையினை சமர்ப்பிப்பது என்பதும் இவர்கள் மக்கள் மீது எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளனர் என்பதனைக் காட்டுகின்றது.

ஒரு பொது மகன் ஆவணங்களைச் சமர்ப்பிக்க போதிய பாதுகாப்புக்களை திரட்டிக்கொள்ள வேண்டும். ஆனால் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை சொகுசு வாழ்க்கையினை வாழும் நீங்கள் யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சனல் 4 வெளியிட்ட ஆவணங்களைத் தவிர வேறு ஏதாவது புதிய ஆவணங்கள் அல்லது வலிந்து கடத்தப்பட்டுக் காணாமல் போனோரது முழுமையான விபரங்களை ஏன் நீங்கள் வெளியிடவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி கேட்கின்றனர். வெறுமனே அறிக்கைகள் மாத்திரம் ஒரு நாட்டில் இனப்படுகொலை நடந்தது என்பதனை தீர்மானிக்க முடியாது. அதற்கான ஆதாரங்களை சர்வதேச நீதிமன்றில் சமர்ப்பிப்பதன் ஊடாக, அச்சர்வதேச நாடுகள் அதன் உறுப்புரிமை கொண்ட நாடுகள் பெரும்பான்மையாக வாக்களிப்பதன் ஊடாகவே இது இனப்படுகொலை என்பதனை நிரூபித்து பலஸ்தீன் நாட்டிற்கு விடுதலை கிடைத்தது போன்று எமது இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. வெறுமனே வாக்குப்பெருக்கும் அரசியலையே தொன்றுதொட்டு இந்த அரசியல்வாதிகள் செய்து வருகின்றனர். இந்த நிலைமைகள் ஏன் இன்னமும் மாற்றப்படவில்லை. கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நடந்தது என்ன? என்பது பற்றி அரசு வெளிப்படையாக கூறுவதற்கும் இவர்களே தடையாக இருக்கிறார்கள்.

இனப்படுகொலையின் வரைவிலக்கணம் என்றால் என்ன என்பது பற்றி ஐ.நா என்ன கூறுகின்றது என்றால்,

ஒரு இனமாகவோ, குழுவாகவே அழிக்கப்பட்டால் அது இனப்படுகொலை. விஷவாயு, கட்டாயக் கருத்தடை, மதமாற்றம் செய்தல் இதில் பல்வேறு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவற்றின் சூழ்நிலை எவ்வாறு அமைகின்றது என்பதற்கு ஏற்ப இனப்படுகொலை தான் நடந்தது என்பது வரையறுக்கப்படும். இதன் அடிப்படையில் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. பலஸ்தீன விடுதலைப் போராளிகள் அவர்களுடைய ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் எவ்வாறு தமக்கான ஒரு நாட்டை சுவீகரித்துக்கொண்டார்கள் என்பது பற்றி குறித்த அரசியல்வாதிகள் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழினத்தை ஏமாற்றி அரசியல் செய்வது தொடர்ந்தும் அரசாங்கத்தை காப்பாற்றும் ஒரு செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது. தமிழினத்தின் பாதுகாப்பு தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்படாத நிலை இந்நாட்டில் தொடர்கின்றது. அரசியல்வாதிகளின் குறித்த செயற்பாடுகளானது தமிழினத்தின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதில் கேள்விக்குறியைத் தான் உருவாக்கியுள்ளது. கண்ணீரோடு கதறி அழுகின்ற எம் தமிழின மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது. இதைத் தவிர யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகளைக் கடந்தும் இந்நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. வடகிழக்கு இணைப்பு ஏற்படுத்தப்படவில்லை. தேசியம், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகள் வழங்கப்படவில்லை. இச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் கால தாமதம் நீடித்தால் எவ்வித பயனும் இல்லை. தமிழ் அரசியல் தலைமைகளே! இலங்கையில் தற்போது சட்டம் பேணப்படுகிறது. பாதுகாக்கப்படுகிறது என்று கூறுகின்ற நீங்கள் கடத்தப்பட்டு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியையும் பெற்றுக்கொடுக்க முன்வாருங்கள். ஏமாற்று அரசியல் இனியும் வேண்டாம்.

> **தமிழினத்தை ஏமாற்றி அரசியல் செய்வது தொடர்ந்தும் அரசாங்கத்தைக் காப்பாற்றும் ஒரு செயற்பாடகவே பார்க்கப்படுகின்றது. தமிழினத்தின் பாதுகாப்பு தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்படாத நிலை இந்நாட்டில் தொடர்கின்றது. அரசியல்வாதிகளின் குறித்த செயற்பாடுகளானது தமிழினத்தின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதில் கேள்விக்குறியைத் தான் உருவாக்கியுள்ளது. கண்ணீரோடுற கதறி அழுகின்ற எம் தமிழின மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது**

# நாட்டு மக்களை நட்டாற்றில் தள்ளும் வேலை நிறுத்தங்கள் நிறுத்தப்படுமா?

இன்று நாட்டில் நாள் தவறினாலும் வேலை நிறத்தங்கள் மட்டும் தவறாமல் நடைபெற்று வருகின்றது. மக்கள் இன்று தங்கள் குடும்ப பொருளாதார நிலமையை சீர் செய்ய முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அரச நிறுவனங்களுக்கு அலைந்து ஏதாவது பெற்றுக் கொள்ளலாமா என திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு பக்கம் வெயிலின் கொடுமையால் வெந்து கொண்டிருக்கின்றார்கள். இன்னொரு பக்கம் வெள்ளத்தின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அரசோ நிதியை உருவாக்கிக் கொள்வதில் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கின்றது. சாண் ஏற முழம் சறுக்கிக் கொண்டிருக்கின்றது. அரச இயந்திரத்தை இயக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தங்கள் சட்டைப் பைகளை நிரப்பிவிட வேண்டும் என்ற முனைப்புடன் வலிந்து தொழிற் சங்கப் போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

**பெரியகல்லாறு நிருபர்**

தொழிற்சங்கவாதிகள் அச்சுறுத்தலக்குள்ளான காலம் போய், தற்போது அரசை தொழிற் சங்கங்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. போராட்டங்களின் நியாயத் தன்மைகள் பற்றி நடுநிலையானவர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனா.; இந்த போராட்டங்கள் அரசியல் பின்னணியுடன் அரங்கேற்றம் காண்பதாக ஆருடம் கூறுகின்றனர்.

நாடு நாட்டின் புதிய தலைவரை தெரிவு செய்ய வேண்டிய பரபரப்பான சூழலில,; மக்களைப் பற்றிக் கிஞ்சித்தும் யோசிக்காத, ஓரிரு நாட்களில் ஓய்வுக்கு வராத நீண்டகால தொழிற் சங்க போராட்டங்கள், ரெயில், தரை போக்குவரத்து, வைத்தியதுறை , பல்கலைக்கழகம், பொது நிர்வாகம் என நீண்டு கொண்டே போகின்றது.

உண்மையில் இவை பொதுமக்களைப் பொறுத்தவரையில் அத்தியாவசிய சேவைகள், இவற்றால் பாதிப்பிற்குள்ளாவது அன்றாட தொழில் செய்வோரம் நடுத்தர மக்களுமே ஆவர். மேல் வர்க்கத்தினருக்கோ அல்லது அரசுக்கோ அமைச்சுக்கோ எவ்வித பாதிப்பும் எற்படப் போவதில்லை. இதை தொழிற் சங்கங்கள் மனதில் கொள்ள வேண்டும்.

ஓரிரு நாள் அடையாள வேலை நிறத்தங்கள் என்றால் மக்கள் ஓரளவு சமாளித்துக் கொள்வார்கள். ஆனால் தற்போதைய வேலை நிறுத்தங்கள் நீண்ட நாட்களுக்கு நடைபெறவதுதான் மக்களுக்குள்ள பெரும் கஸ்டமாகும்.

பொதுச் சேவைகள் அனைத்தும் இந்நாட்டு மக்களின் வரிப்பணத்திலேயே நடைபெற்று வருகின்றது. எனவே சம்பளமும் நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்தே வழங்கப்படுகின்றது. எனவே பொதுமக்களைப் பாதிக்காதவாறு தொழிற்சங்க நடவடிக்கைள் வடிவமைக்கப்பட வேண்டும்.

வழக்கமாக தொழிற் சங்க நடவடிக்கைகள் பேச்சு வார்த்தை தோல்வியடைந்தால் மட்டுமே மேற்கொள்வது உலகளாவிய ரீதியில் வழக்கமான நடைமுறையாக இருந்து வருகின்றது. ஆனால் இங்கு தடீர் வேலை நிறுத்தங்களும் நடைபெறவே செய்கின்றன.

சில தொழிற் சங்க நடவடிக்கைகள் பேசித் தீர்க்கப்பட்டபின்னரும் நடைபெறுவதாக. அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் கூட நடைபெறுவதாக அமைச்சர்கள் சுட்டிக் காட்டுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில்தான் வேலை நிறுத்தங்கள் பற்றிய பின்னணி குறித்து சந்தேகம் எழுப்பப்படுகின்றது. பிரச்சனையை சமாளிப்பதற்காக உரிய தரப்பினர் வாக்குறுதி அளித்துவிட்டு, அதைக் கிடப்பில் போடுவதாலேயே அதிகளவு வேலை நிறுத்தங்கள் முனைப்பு பெறுகின்றன.

எனவே வாக்குறுதி அளிக்கும் தரப்பினர் செய்யக் கூடியதற்கு மட்டுமே வாக்குறுதி அளிக்க வேண்டும். செய்ய முடியாத கொரிக்கைகளுக்கம் வாக்குறுதி அளிப்பதும் அதைப் பின் கைவிடுவதும் முற்றிலும் தவறான ஏமாற்று நடவடிக்கையாகவே அமையும். இலங்கை அரசியல் பண்பென்பது அவ்வாறு அமைவதனால்தான் நாட்டில் பிரச்சனைகளுக்கு மட்டும் பஞ்சமில்லாமல் இருக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழிற் சங்கங்களை குற்றம் சாட்டவும் முடியாது. எனினும் தொழிற்சங்க கோரிக்கைகளும் நியாயமானதாக இருக்க வேண்டியதும் அவசியமாகும். அதற்கு மாறாக இருக்கும்போதுதான தீர்வு கிடைப்பது சாத்தியமற்றதாகின்றது.

வேலை நிறுத்தங்களால் தொழிற் சங்கங்கள் இலக்குகளை அடைகின்றார்களோ இல்லையோ, ஏழை மக்கள்தான் அதனால் முற்று முழுதாகப் பாதிக்கப்படுகின்றார்கள். அரசு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பாரிய சிந்தனையில் இருந்து விடுபட்டு இத்தகைய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படுகின்றது.

டாக்டர்கள் வேலை நிறுத்தம் என்றால் தனவந்தர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவிடுவார்கள். ஆனால் ஏழை மக்கள் இலவச சிகிச்சை பெறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது, கடவுளிடம்தான் அவர்கள் கையேந்த வேண்டியிருக்கின்றது.

மக்கள் வைத்தியர்களை கடவுள்களாகவே கருதுகின்றார்கள். ஆனால் டாக்டர்களோ காசேதான் கடவுளப்பா என்ற நிலைப்பாட்டுடன், தனியார் சிகிச்சை நிலையங்களிலேயே தஞ்சம் அடைவதாக பொது மக்கள் பொருமுகின்றனர்..


கோப்புப்படம்

எனவே அவர்கள் சம்பள அதிகரிப்பிற்காக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு நோயாளிகளை நிர்க்கதியாக்குவது மனிதாபினாச் செயல் அல்லவே எனத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தங்கள் கடமை நேரத்தில் தனிப்பட்ட வைத்தய சேவை செய்வதற்கான வாய்ப்புக்களையம் ஏற்படுத்திக் கொள்வதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேபோல் போக்குவரத்துச் சேவை செய்பவர்களும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, பாதிக்கப்படுபவர்களும் எழைகளாகவும் அன்றாட தொழில்களுக்காக பிரயாணங்கள் மேற்கொள்பவர்களுமாகவே இருக்கின்றார்கள்.

வசதி படைத்தவர்கள் தங்கள் சொந்த வாகனங்களிலோ அல்லது வாடகை வாகனங்கள் மூலமாகவோ தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும். ஆனால் நடுத்தர வர்க்கத்தினராலும் ஏழைகளாலும் அது முடியாத காரியம்.

எனவே போக்குவரத்து வசதிகள் இல்லாதிருக்கம்போது அவர்களின் அன்றாட ஜீபனோபாயம் இல்லாது போகின்றது. அத்தகையோரிடம் சேமிப்பும் இருப்பதில்லை. எனவே அவர்கள் படடினியோடு பொழுதைக கழிக்க வேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது.

எனவே தொழிற்சங்க நடவடிக்கைகள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கட்டும் என்ற நிலைப்பாட்டுடன் தொழிற் சங்கங்கள் மெற்கொள்ளும் நடவடிக்கைகள் உண்மையில் ஏழை மக்களையும், நடுத்தர வகுப்பினரையும் நெருக்கடிக்குள்ளாக்கின்றது என்பதே உண்மையாகும்.

தற்போது கல்விசார ஊழியர்களின் வாரக் கணக்கான வேலை நிறுத்தம் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கையை முற்றாக பாதித்துள்ளது. பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு போதிய சம்பளமும் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனினும் அதில் திருப்தியற்றவர்களாக இருப்பது தங்களுக்கு அதிருப்தி அளிப்பதாக பல்;கலைக்கழக மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் தாமதமாகி பட்டப் படிப்பை முடிப்பதற்கு நீண்டகாலம் எடுப்பதால,; தாங்கள் பல்வேறு சிரமங்களுக்கும் பொருளாதார ரீதியில் முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வசதி படைத்தவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் தங்கள் பிள்ளைகளை சேர்த்து உரிய காலத்துள் அவர்களை பட்டதாரிகள் ஆக்கிவிடுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளால் தங்கள் பிள்ளைகள் பட்டம் பெறுவதற்கான காலம் நீடித்துச் செல்வதால், அவர்கள் தொழிற் சந்தை போட்டியிலும் பின்னடைவைச் சந்திக்க நேரிடுகின்றது. பட்டம் முடித்து வந்து தொழிலுக்காக வீதியில் நின்று போராட வேண்டிய நிலையைத் தோற்றுவிக்கின்றது என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே இது நடுத்தர மற்றும் வசதி குறைந்த பெற்றோர்களை பொருளாதார ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கவே செய்கின்றது. எனவே தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தரப்பினர் தங்கள் சுயநலனை மட்டும் முன்னிறுத்தி நடவடிக்கையில் இறங்காமல் அதன் மறுதரப்பான மக்கள் பாதிப்பு பற்றியும் சிந்தித்து, தொழிற்சங்க நடவடிக்கைகளை சுருக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று ஆசிரியர்களும் களத்தில் குதித்துள்ளதை தற்போது காணக் கூடியதாக இருக்கின்றது. அரசு, ஆசிரிய சேவையை விசேடமாக மதித்து செயற்படுவது நடைமுறையாக இருக்கின்றது. எனினும் ஆசிரியர்களும் அதில் திருப்தி காணாது தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சுகயீன லீவு போராட்டம் நடாத்துகின்றார்கள்.

ஆசிரிய சேவையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு லீவுகள் தாராளம். எனவே சுகயீன லீவினால் அவர்களுக்கு எந்தப்பாதிப்பும் இல்லை.

13 ஆம் பக்கம் பார்க்க....

இலங்கை நாட்டில் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய தேசிய கட்சியும் தமது வேட்பாளரினை அறிவித்திருக்கின்றது. நீண்ட நாட்களாக யாரை? ஐக்கிய தேசிய கட்சி அறிவிக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் சஜித் பிரமதாஸவை அறிவித்திருக்கின்றது. தேர்தல் களம் சூடுபிடிக்கவுள்ள இத்தருணத்தில், அரச உத்தியோகத்தர்களின் போராட்டங்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன. அதிபர், ஆசிரியர்களின் சம்பளமுரண்பாடு தொடர்பான போராட்டங்கள், புகையிரத ஊழியர்களின் போராட்டங்கள், பல்கலைகழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டங்கள், நிருவாகசேவை உத்தியோகத்தர்களின் போராட்டங்கள் என பல தரப்பினரின் போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதனால் நாடே போராட்டச் செய்திகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது. ஒவ்வொரு துறையினரின் போராட்டங்களினாலும் பாதிக்கப்பட்டவர்களாக சாதாரண மக்களே உள்ளனர். அரசசேவையில் உள்ளவர்கள் தமக்கான சம்பள உயர்வுகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், தமக்கான சேவையையே இந்நாட்டில் வாழும் குடிமக்கள் வேண்டிக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு தரப்பினரும் தமது கோரிக்கைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் இந்த நாட்டிலே உள்ளமையினை இப்போராட்டங்கள் நடைபெறும் சூழல் உணர்த்தி நிற்கின்றது. போராட்டங்கள் நடாத்துவதற்கான சுதந்திரம் இருந்தமையினால்தான் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என ஒருசாரார் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

# போராட்டங்களால் பாதிக்கப்படும் சாதாரண மக்கள்

போராட்டங்கள் நடாத்துவதன் மூலமாக இந்த நாட்டிலே உள்ள அரச உத்தியோகத்தர்கள் தமக்கான சம்பளமுரண்பாடுகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என எதிர்பார்த்து செய்கின்றமை அவர்கள் பக்க நியாயமாக இருக்கலாம். தற்போதைய விலைவாசியின் அடிப்படையிலும், நியாயமான முறையிலான சம்பள அளவுத்திட்டங்கள் இல்லாமையும் பிரச்சினையாக இருக்கலாம். இதைத் தீர்ப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் சிபார்சிக்கு அமைய எதிர்வரும் தை மாதத்தில் இருந்து சம்பள முரண்பாடு தீர்;க்கப்படும் என அமைச்சரவை தீர்மானத்தின் பின்னர் அண்மையில் அறிவித்திருக்கின்றனர். இந்நிலையிலும் கூட போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.


கோப்புப்படம்

அரச உத்தியோகத்தர்களை மனரீதியாகவும், பணரீதியாகவும் திருப்திப்படுத்த வேண்டியதும் அரசினது கடமைதான். ஏன்னெனில் அரசாங்கம் கொடுக்கின்ற ஊதியத்தினை நம்பியே குடும்பத்தினை வழிநடத்துகின்றவர்களாக இருக்கின்றனர். அதேவேளை தனியார் நிறுவனங்கள் சில அதிகபடியான சம்பளங்களை வழங்குகின்றன. ஆனால் அரச உத்தியோகத்தர்கள் அதற்கு குறைவான சம்பளங்களையே பெறுகின்றனர். வாழ்க்கையும் சுமையாகி உள்ளமையினால் வாழ்க்கை சுமையை ஈடுசெய்வதிலும் தொடர்ந்தும் சிரமங்கள் உள்ளதாக அரச உத்தியோகத்தர்கள் பேசிக்கொள்கின்றனர். அது அவர்கள் பக்க நியாயமாகவிருந்தாலும், சம்பளங்களை அதிகரிக்கச் செய்கின்ற போது இன்னும் அதிகபடியான பணம் தேவைப்படுவதாகவும் அவற்றினை ஈடுசெய்வதில் தமக்கு சிரமங்கள் இருப்பதாகவும் அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கின்றது. அதேவேளை மற்றொரு பக்கமாக பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கோரி போராட்டங்களத்திலே நின்று கொண்டிருக்கின்றனனர். அவர்களையும் திருப்திப்படுத்தி வேலை வழங்கவேண்டியதும் அரசினதும் கடமைதான். அவ்வாறு வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம்தான் ஒவ்வொரு குடும்பத்தினது வாழ்க்கைத்தரத்தினையும் உயர்த்தி செல்ல முடியும். இந்த அரசாங்கத்தினால் மூன்று கட்டங்களாக பட்டதாரி பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் இன்னமும் ஒருகட்ட பயிலுனரைக்கூட நிரந்தர சேவையில் அரசாங்கம் இணைக்கவில்லை. இவ்வாதங்கத்தினை பட்டதாரிபயிலுனர்கள் கூறியும் கவலை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர். பட்டதாரி பயிலுனர்களுக்கான காலப்பகுதி நிறைவுபெற்றுள்ள நிலையிலும் கூட நிரந்தர நியமனத்தினை வழங்காமை அரசினது இழுபறித்தன்மையினையே காட்டி நிற்கின்றது.

அரச உத்தியோகத்தர்கள் தம்பக்க நியாயத்தினை கூறினாலும், அரசாங்கம் தமது பக்க நியாயதன்மையினை குறிப்பிட்டு நின்றாலும், எல்லாவகையிலும் பாதிப்பினை அடைபவர்கள் சாதாரண மக்களே. போக்குவரத்து சேவை ஸ்தம்பியம் அடைந்தாலோ, வைத்தியசேவை நடைபெறாது இருந்தாலோ, பாடசாலைகள் நடைபெறாதிருந்தாலோ பணம் படைத்தவர்களும், அரசஉத்தியோகத்தர்களும், அரசியல்வாதிகளும் பெரிதும் பாதிப்படைவதில்லை. ஏன்னெனில் இவ்வாறானவர்கள் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தால் தம்மிடம் இருக்கின்ற வசதி வாய்ப்புக்களை கொண்டு போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொள்வர். ஆனால் பொதுப்போக்குவரத்தினையே நம்பிவாழும் மக்கள் அன்றைய தினம் போக்குவரத்து செய்யாமலேயே பாதிக்கப்படுவர். வைத்தியசேவை ஸ்தம்பிதம் அடைந்தால் மேற்சொன்ன நபர்கள் தனியார் வைத்தியசாலைகளை நாடுவர், பாடசாலைகள் திறக்கப்படாவிட்டால் தனியார் கல்வி நிலையைகளை நாடுவர். அரச வைத்தியசாலையினையே நம்பி

**அரச உத்தியோகத்தர்கள் தம்பக்க நியாயத்தினை கூறினாலும், அரசாங்கம் தம்பக்க நியாயத்தன்மையினைக் குறிப்பிட்ட நின்றாலும், எல்லாவகையிலும் பாதிப்பினை அடைபவர்கள் சாதாரண மக்களே. போக்குவரத்து சேவை ஸ்தம்பித்தும், பாடசாலைகள், வைத்தியசேவைகள் நடைபெறாது இருந்தாலோ பணம் படைத்தவர்களும், அரசியல்வாதிகளும், அரச உத்தியோகத்தர்களும் பெரிதும் பாதிப்படைவதில்லை. ஏனெனில் இவ்வாறானவர்கள் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தால் தம்மிடம் இருக்கின்ற வசதி வாய்ப்புக்களைக் கொண்டு போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொள்வர். ஆனால் பொதுப்போக்குவரத்தினையே நம்பிவாழும் மக்கள் அன்றைய தினம் போக்குவரத்து செய்யாமலேயே பாதிக்கப்படுவர்**

**முனையூரான்**

வாழுகின்ற சாதாரண மக்கள் வைத்தியசேவை இன்றி மரணத்தினைக்கூட எதிர்கொள்ளலாம். பாடசாலை கல்வியை மாத்திரம் நம்பி வாழ்கின்ற சாதாரணமக்கள் கல்வியைப் பெற்றுக் கொள்ளாது பின்நிலையை அடைவர்.


நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால் சகலமட்டத்திலான மக்களின் வாழ்வாதாரங்களும் உயர்வடைய வேண்டும். அப்போதுதான் நாடு அபிவிருத்தியினை அடையும். இல்லாதுவிடின் இலங்கை நாடு அபிவிருத்தியை காணாது இருந்து கொண்டே இருக்கும். இலங்கை நாட்டின் வருமானத்தின் முதுகெலும்பாக இருப்பவர்கள் சாதாரண மக்களே. இன்று தமக்குரிய நியாயமான சம்பளத்தினைக்கோரிக்கூட பல போராட்டங்களை இலங்கை மண்ணிலே மலையக மக்கள் நடாத்தியிருக்கின்றனர். ஆனாலும் அவர்களுக்கான சம்பள உயர்வென்பது தொடர்ந்தும் கேள்விக் குறியாவே உள்ளது. இதனால் நாள்தோறும் குடும்பத்தினை வழிநடத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்களால் நாட்டுக்கு கிடைக்ககூடிய வருமானம் என்பது அதிகமானது, அதேபோல ஏனைய விவசாய செய்கைகளினாலும், தொழிற்சாலைகளினாலும் அரசுக்கு கிடைக்ககூடிய வருமானமென்பதும் அதிகமானதே.

இலங்கை நாட்டிலே தொழில்வாய்ப்பின்றியும், உரிய சம்பளங்கள் வழங்கப்படாமையினாலும் தமது உறவுகளைப்பிரிந்து, நாட்டிலே, சமுகத்திலே, குடும்பத்திலே நடைபெறுகின்ற இன்ப,துன்ப விடயங்களில் ஈடுபட்டுக்கொள்ளாமல் பல இளைஞர், யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளிலே தொழில் புரிந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்களினால் நாட்டிக்கு வருமானம் கிடைத்துக்கொண்டுதான் இருக்கின்றன. நாட்டிற்கு வருமானத்தினைப் பெற்றுக்கொடுக்கின்ற சாதாரண மக்களை மதிப்பதும் இல்லை, அவர்களை முறையாக வழிநடத்துவதும் இல்லை. இதனால் தவில் போன்று இருபக்கங்களும் அடிபடுகின்றவர்களாக சாதாரண மக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். போராட்டங்களை அரச உத்தியோகத்தர்கள் மேற்கொண்டால், சேவையின்றியும், அன்றைய வருமானம் இன்றியும் பாதிப்புறுகின்ற சமுகமாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

அரசசேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அனைவரும் மக்களுக்காவே சேவை செய்கின்றோம். மக்கள் வழங்குகின்ற ஊதியத்தினையே சம்பளமாக பெறுகின்றோம் என எண்ணி சேவைசெய்வதில்லை. ஒருசிலரே சேவை செய்கின்றனர். கதிரைகளில் ஏறி அமர்ந்துவிட்டால் தாம்தான் ராசாக்கள் சாதாரணமக்கள் அடிமைகள் என எண்ணுகின்றனர் இவ்வாறான நிலைகள் இந்த நாட்டிலே இல்லாமல் செய்ய வேண்டும். மக்களுக்கு முறையான, விரைவான சேவையை கௌரவப்படுத்தி வழங்க வேண்டும். சம்பள உயர்வுகளை கோருவதால் மாத்திரம் நன்மையடைந்துவிட முடியாது. பெறும் பணத்திற்கு உரிய சேவையை வழங்குகின்ற போதே அக்குடும்பமும் சிறக்கும்.

பொருட்களுக்கான விலைகள் என்பதும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒருவிலையும், சாதாரண மக்களுக்கு ஒரு விலையும் அல்ல. எல்லோருக்கும் ஒரே விலையே. அதேவேளை ஒவ்வொரு பொருட்களுக்கும் சாதாரணமக்களும் வரியைச் செலுத்தித்தான் ஆகுகின்றனர். அரசஉத்தியோகத்தர்களை விட பல்மடங்கான மக்கள் நாட்டிலே வாழ்கின்றனர். இதனை அரசு சிந்திக்க வேண்டும்.

13 ஆம் பக்கம் பார்க்க....




## நாட்டு...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் இத்தகைய போராட்டத்தினால் முற்றுமுழுதாகப் பாதிக்கப் போவது எமது மாணவச் செல்வங்கள் தான். வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் கடந்த 30வருடகாலத்தில் மாணவர்கள் பல பாதிப்புக்களைச் சந்தித்தவர்கள். கல்வியை முற்றுமுழுதாக இழந்தவர்களும் இருக்கின்றார்கள். தற்போதுதான் கற்பதற்கான சூழல் உருவாகியுள்ள நிலையில் ஆசிரியர்களின் போராட்டம் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

ஏனைய சமூகங்களுடன் போட்டிபோட்டு; கற்க வேண்டிய கால கட்டத்தில் உள்ளவர்களை கைவிட்டது போன்ற ஒரு நிலையையே இது காட்டுகின்றது. சமூக ரீதியாக கல்விச் சவால்கள் மலிந்துள்ள இவ்வேளையில் இது மாணவர்களைச் சோர்வடையவே செய்யும்.

தொழிற்சங்க நடவடிக்கை என்பது அவர்களின் உரிமை. அதைத் தடுப்பது பொதுமக்களின் நோக்மல்ல . ஆனால் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது.

உண்மையில் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும் கோரிக்கைகளும் நியாயமானவை. உடலை வருத்தி பல்வேறு அசௌகரிகங்களுக்கு முகம் கொடுத்து மலையேறி, குளவிக் கொட்டு, அட்டைகடி, பாம்புக்கடி போன்ற உயிர் அச்சுறுத்தல் மத்தியில் நீண்ட நேரம் பணிபுரியும் நிலையில் அவர்களுக்கான நியாயமான ஊதிபம் இன்னும்தான் கிடைக்கவில்லை.

காரணம் அவர்கள் தனிப்பட்ட கம்பனிகளின் கீழ் வேலை செய்வதேயாகும். அரச ஊழியர்கள் போன்று அவர்களுக்கு எந்த மேலதிக வசதிகளும் இல்லை. வயிற்றுக்காக பொறுமை காத்து பணிபுரிவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழிகளும் தெரியவில்லை.

அவர்களும் மனிதர்கள் தானே என்ற சிந்தனை முதலாளி வர்ககத்திடமிருந்து இன்னமும்தான் உருவாகவில்லை. பாவப்பட்ட ஜீவன்களாக பரிதாபமாகவே அவர்கள் நிற்கின்றார்கள். அரசு கூட 50ரூபா ஆசைகாட்டி மோசம் செய்துள்ளது. உண்மையில் மூர்க்கத்தகமாக தொழிற்சங்க போராட்டத்தை கால வரையறையின்றி முன்னெடுக்க வேண்டியர்கள் அவர்கள். அதற்கான தகுதி அவர்களுக்கே உரியதாக இருக்கின்றத.

எமது இளைஞர் யுவதிகள் மேற்கத்திய நாடுகளுக்கோ அல்லது மத்திய கிழக்கு நாடகளுக்கோ சென்று வேலை செய்கின்றார்கள். எட்டு மணித்தியால வேலை என்றால் ஒரு செக்கண் கூட விரயம் செய்யாமல் வேலை செய்கின்றார்கள் அவ்வாறு வேலை செய்யாவிட்டால், உடனடியாக நாட்டுக்கு திருப்பி அனுப்பிவிடுவார்கள். இதுதான் நிலை.

ஆனால் எமது நாட்டில் அரச தொழில் புரிவோர் போக்குவரத்து மற்றும் வங்கி, தாதியர்கள் சேவைகள் தவிர்த்து தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்ல முடியுமா? எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்கிறோம் என்று.; விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்டுப்பற்றும் தொழில் விசுவாசமும் கொண்ட ஒரு சிலரைத் தவிர ஏனையோர் எட்டு மணித்தியாலயத்தில் நான்கு மணித்தியாலங்கள் கூட வேலை செய்வதில்லை என்கிறது கணிப்பு.

சொந்த வீட்டுவேலை, அரட்டை. தூக்கம், விளையாட்டு என கடமை நேரம் விரயமாக்கப்படுகின்றது. அதற்கும் சேர்த்து மேலதிக வேலை நேரம் பதியப்படுகின்றது.

எனவே அரச இயந்திரத்தை தடையேதுமின்றி இயக்க வேண்டிய அரச உத்தியோகத்தர்கள் நாட்டின் பொருளாதார நிலை உணர்ந்தும் அதன் வளர்ச்சிக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாததுபோல் வலிந்து நாட்டுக்கு நட்டத்தையே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நாட்டடின் ஒவ்வொரு பிரஜைக்கும் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. அதுவம் அரச சம்பளத்தில் வாழ்பவர்களுக்க இயல்பாகவே அந்த கடப்பாடு இரட்டிப்பாக இருக்க வேண்டும். அத்தகைய மனநிலை உருவாக வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் என்ற தேரை இழுப்பதற்கான வடமாக நாம் செயற்படவேண்டும். வடம் அறுந்த நிலையில் காணப்படுகின்றது. அதை ஒற்றுமை என்ற அறாத முடிச்சா போட்டு, மூச்சுப் பிடித்தேனும் இழுத்து அதன் அசைவில் ஆத்மதிருப்தி கொள்ளும் மனநிலையை நாம் உருவாக்கினால்தான் இந்த நாடு உருப்பெறும்.

# வேலை நிறுத்தப் போராட்டங்களால் சாதிக்கப்போவது என்ன?

நாட்டில் தேர்தல் ஒன்று அதுவும் அதிமேதகு பதவிக்குரிய ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நாட்டின் அபிவிருத்திக்கு பக்கபலமாக இருந்து செயற்படுகின்ற அரச ஊழியர்களிடையே பல்வேறு பிரச்சினைகளும், முரண்பாடுகளும் ஏற்பட்டிருப்பதை நாம் அவதானிக்கின்றோம். குறிப்பாக யுஎன்பியின் வெற்றி வேட்பாளரைத் தெரிவு செய்யும் போட்டியில் அக்கட்சி நடந்து கொண்ட விதம் கட்சிக்குள் முரண்பாடுகளை தோற்றுவித்திருக்கின்றன. எதிர்க் கட்சிகள், ஆளுங்கட்சிகள், இணைந்து தொழிற்படுகின்ற கட்சிகள் என்று அனைத்தினரிடமும் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதே அடுத்த இலக்காக சிந்திக்கின்றனவே தவிர நாட்டுமக்களோ, அரசியல்வாதிகளோ நாட்டைப் பற்றியும், நாட்டின் கல்வி நிலைமை, நாட்டின் சுகாதார நிலைமை, பொருளாதார நிலைமை போன்றவற்றின் அடிப்படையில் நாட்டு மக்கள் படுகின்ற துன்பத்தைப் பற்றிய எண்ணமின்றிக் காணப்படுவதுதான் வேதனையான விடயமாகும்.

இவற்றுக்கெல்லாம் காரணம் அடிமட்டத்திலிருந்த பலர் உயர்வான பதவியாக அரசியலைப் பயன்படுத்தி அவர்கள் குபேரர்களாக மாறுகின்ற நிலைமை நமது நாட்டு அரசியலில் கலந்து விட்ட ஒருவிடயமாக அனைவராலும் பார்க்கப்படுகின்றது. இது மக்களின் குறைகளைப் பற்றியோ, நிறைவான வாழ்க்கை முறை ஒன்றை கொண்டு வந்து மக்களின் வயிற்றில் அடிப்பதை நிறுத்தியதாகவோ தெரியவில்லை. இன்னும் பார்க்கப்போனால் அரசியல்வாதிகளிக் கருத்தை நம்புவதும், பின்னர் ஏமாறுவதும் இந்நாட்டில் புழிச்சுப்போன ஒரு சம்பிரதாயமாகும். ஜனநாயகத்தை முழுமையாக நம்புகின்ற இந்நாட்டு மக்கள் மீண்டும் ஏமாறுவதும், அதுதான் ஜனாநாயக மரபாகும் என்கிற கருத்துக்களை நம்பி நம்பி நாடு படுபாதாளத்திற்கே சென்றுவிட்டதை எந்த உண்மைத்தன்மையுடன், மனச்சாட்;சியுடன் தன் கடமையை நேசிக்கின்ற அரசியல்வாதிகள் உருவாகும் வரை இந்நாட்டு அரசியல் பயணம் தொடர்ந்து செல்லும். மக்கள் நாட்டினை உண்மையான நோக்குடன் நேசி;;ப்பவர்களை இனங்காணும் வரை இந்நாடு இவ்வாறுதான் காணப்படும் என்பதைத்தான் நாம் தலைப்பிட்டுள் பணிப்பகிஷ்ரிப்பு விடயங்கள் சுட்டிக்காண்பிப்பதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

வேதன் போதாது, பொருள்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணிகளால் அரச ஊழியராக இருக்கட்டும், சாதாரண தினக்கூலியாக இருக்கட்டும் தினமொன்றுக்கு ஆககக் குறைந்த செலவாக இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் தேவைப்படுகின்றது. இருவேளை உணவு, இருவேளை தேநீர், காலை உணவு போன்றவற்றை ஓரளவு சுவையுடன் உண்பதற்கு மாத்திரம் சுமார் இரண்டாயிரம் ரூபாய் போதாமல் இருக்கின்ற இன்றை நாட்களில் ஒரு குடும்பத்தை வைத்துக் கொண்டு மணைவி, இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பத்திற்கு சுமார் நான்காயிரம் ரூபாய்க்கு மேல் தேவைப்படுகின்றது. இதற்கிடையில் சுகாதாரம், கல்வி, குடும்ப உறவினர்களுடைய விசேடங்கள், பண்டிகைகள், பொருளீட்டல், சேமிப்பு போன்றவற்றுக்காக குறைந்தது மாதமொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் தேவைப்படுகின்றன. ஆனால் கிடைப்பதோ வெறும் 35 அல்லது 45க்கு உட்பட்டதாக காணப்படும் நிலையில் (பயிலுநர், தற்காலிகம் நீங்கலாக) அந்தக் குடும்பம், அந்தக் குடும்பத்தின் அரச ஊழியனாக இருக்கின்ற நிலையில் அவன் மேலதிகமாக உழைப்பதற்குரிய வேறு வழிகளைத் தேடுவான். அது பிழையான வழியாகவும் இருக்கலாம், நேரான வழியாகவும் இருக்கலாம். இப்படியே நாடு சென்றால் சாதாரண



கோப்புப்படம்

மக்களின் நிலை, கௌரவமான தொழிலாக ஏற்றுக் கொண்டு அரச தொழில் புரிகின்ற ஒருவனின் நிலை என்னாகும்.

**தந்திமகன்**

ஆகையினால்தான் அந்த ஊழியர்கள் ஒன்றிணைந்து உயர்வான சம்பளத்தை தா? என அரசிடம் கோரிக்கை முன்வைத்து வேலை நிறுத்தம் மேற்கொள்கின்றனர். ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் தனது பிரதானமான கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் சேதம் விளைவிக்காத அணுகுமுறையில் தனது தொழில் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிமை உள்ளது. அதனைத்தான் இன்று நாட்டில் அரச ஊழியர்கள் பல அமைப்புக்கள் இணைந்து தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர். ஆனால் அரசு பெரிதாக காதில் போட்டுக் கொண்டதாககத் தெரியவில்லை. சம்பளத்தை ஏன் அதிகரிக்கக் கோருகின்றனர் என்று பார்த்தால் ஒரு வகையில் நாம் மேலே கூறியுள்ளவாறு பொருள்களின் விலையேற்றமே முக்கியமான ஒன்றாகும்.

அது மட்டும் ஏற்றமில்லாமல் இருக்குமாக இருந்தால் போதிய சம்பளம், சேமிப்பு போன்றவற்றில் மக்கள் அதிக ஆர்வம் காண்பிப்பார்கள். இப்போது இருக்கிற நிலையில் வங்கிகளில் கடன் பெற்றவர்களோ அரச ஊழியர்களில் 99 வீதமானோர் காணப்படுகின்றனர். இதனை அடைப்பதற்கு இன்னு இன்னும் கடன் பெற வேண்டிய நிலைமைகள்தான் இந்த நாட்டு அரச ஊழியர்களின் மன அழுத்தத்திற்கும், வேலை பகிஷ்கரிப்புக்கும் காரணமாக அமைந்திருக்கலாம் என்பது எனது நடுநிலையான கருத்தாகும். இதனைத் தீர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசினுடையதாகும். வேலை நிறுத்தங்களால் நாட்டில் ஏற்படுகின்ற நஷ்டத்தைப் பற்றிய சிந்தனை இல்லாத ஒரு சமூகமாகவே நாம் இன்றைய நாட்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை அரச நிர்வாக சேவைகள் சங்கம் அறிவித்துள்ளது. இந்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக குடிவரவு மற்றும் குடிவரவுத் திணைக்களம், ஓய்வூதியத் துறை, வாகனப் போக்குவரத்துத் துறை மற்றும் பிரதேச செயலகங்களின் நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெற மாட்டாது என இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் இன்று கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாக பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரான காலப்பகுதிகளிலும் இது போன்ற சட்டப்படி வேலை செய்வோம் என்கிற போராட்டங்களையும் இவர்கள் நடாத்தியிருக்கிறார்கள். அதாவது, அடிப்படை சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகளை சேர்த்து உடனடியாக சம்பள பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும், தற்போது காணப்படும் ஓய்வூதிய கொடுப்பனவிற்கான கொள்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அரச சேவையாளர்களுக்கான ஏனைய கொடுப்பனவுக்கு கீழ் வழங்கப்படும் பிரதிலாபங்களை இரத்து செய்யக்கூடாது ஆகிய மூன்று அம்ச கோரிக்கையை முன்வைத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. வரலாற்றில் முதல் தடவையாக அரச நிர்வாக சேவை சங்கத்தினர் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் அன்று ஈடுபட்;டிருந்தனர். வேலை நாட்களில் காலை எட்டு முப்பது தொடக்கம் மாலை நான்கு மணி வரை சாதாரண முறையில் பணி புரிவதுடன், மேலதிக சேவையை தவிர்த்தும் செயற்பட அரச நிர்வாக சேவையாளர்கள் தீர்மானித்திருந்து, கூட்டங்களை பகிஷ்கரிப்பதுடன் விசேட சேவைகளும் முன்னெடுக்கப்படாது ஈடுபடுமாறு அப்போதும் கூறப்பட்டிருந்தது.

இவ்வாறு உயர்வானவர்களாக நாட்டின் முக்கி;ய முதுகெலும்பாக காணப்படுகின்ற மக்களுக்காக சேவையாற்றுகின்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதிஉச்ச வசதீயீனங்களையும் தாண்டி அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் குதிக்கிறார்கள் என்றால் இந்த நாட்டில் அதி உச்சநிலையில் காணப்படுகின்ற பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகம் என்பதனால்தான் என்னவோ இவர்களும் இப்போது பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றார்கள். ஆகவே இதனை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் சம்பளம் உயரவேண்டும். இல்லையேல் பொருட்களின் விலை கனிசமான அளவு குறைக்கப்பட வேண்டும். இதன் சாத்தியப்பாடுகள் எந்தளவுக்கு காணப்படும் என்பதைத் தவிர்த்து சம்பளத்தை அதிகரிப்பினை வழங்குவதே சாத்தியப்பாடான ஒருவிடயமாகும்.

கடந்த வாரத்தில் ஒரே நேரத்தில் பணிபகிஷ்கரிப்பில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியியலாளர்கள், சுகாதாரத்துறையினர், பல்கலைக்கழக ஊழியர்கள், போக்குவரத்துத் துறையினர் என்று பலரும் பலவிதமான கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் குதித்திருக்கின்றனர். இதன் பின்னணியில் யார் இருந்தாலும் நியாயமாக கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். சம்பள அதிகரிப்புக்கள் ஒவ்வொரு காலகட்டங்களிலும் நியாயமற்ற விதத்தில் வழங்கப்பட்டமையினால்தான் முரண்பாடுகள் அரச ஊழியரிடையே தோன்றியிருக்கிறது. சாதாரணமான வேலையாள் ஒருவருக்கு மாதம் ஒன்று வழங்கப்படுகின்ற சம்பளத்தை விட குறைவான வேதனத்தையே ஆசிரியர் ஒருவர் பெறுணீன்றார். முகாமைத்துவ அதிகாரிகள், பட்டதாரிகள் போன்றோர்கள் பெறுகின்றனர். இதன் காரணமாக சேவைக்குள்ளாக்கப்படுகின்ற அரச ஊழியர்களின் முரண்பாடற்ற நிலை ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே இவர்கள் அனைரினதும் கோரிக்கைகளாகும்.

இந்த கோரிக்கைகளுக்கு அரசு கொஞ்சம் ஆடியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காண்பிக்கவும் வேண்டியிருக்கிறது. இரவோடு இரவாக நிதியமைச்சர் அனைத்து சகல அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் 2020 ஜனவரி 01முதல் தீர்மானிக்கப்பட்டபடி ஐம்பது வீதம் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று போடு போட்டுள்ளார். 2020ல் புதிய ஜனாதிபதி, புதிய அரசு நாட்டைப் பொறுப்பேற்கின்றவர்கள் யார் என்பது இன்னும் தெரியாத நிலையில் எதிர்காலத்தில் வழங்கப்படும் என மார்தட்டிப்பேசுவது நடைபெறாத ஒன்றை நடைபெறுவதாக கற்பனைக் கதை என்றே இதனை அரச ஊழியர்கள் எடுத்துக்கொள்வார்கள். ஆகையினால்தான் உடனடியான நிவாரணத்தை அரச ஊழியர்களுக்கு இந்தத் தேர்தலுக்கு முன்னமாக வழங்கப்படுமாக இருந்தால் மாத்திரமே இந்தப் பணிபகிஷ்கரிப்புக்கு சுவையாக இருக்கும். ஆறுதலாக இருக்கும். இதனைவிட்டுவிட்டு எதிர்காலத்தில் இந்தக் கருத்தினை கூறுகின்றவர்களின் ஆட்சி இடம்பெறுமா? என்கிற சந்தேகம் காண்படுகின்ற நிலையில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டுமாக இருந்தால் அதனை உடனடியா அமுலுக்கு கொண்டுவருவதே சாலச்சிறந்த தீர்வாக இருக்கும். இப்போது அனைத்திலும் முக்கியமானது கல்வி. ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளால் தடைபட்டுப்போன கல்வியின் நிலை இன்னும் மோசமாகலாம். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் கல்வி நிலை கடும் பாதிப்பினை ஏற்படுத்தும். அரசியல்வாதிகள் இந்த விடங்களை கவனத்திற்கொண்டு சமூகத்தின் எழுச்சிக்கு கால்கோளாக இருக்க வேண்டும் என்பதே நமது அவா.

# சிறுபான்மையினரை அடக்க நினைக்கும் பௌத்த மேலாதிக்கம்

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் இலங்கையர் என்ற நாமத்துடனேயே வாழ்கின்றனர். இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரினதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் இலங்கையர் என்ற வாசகமே எழுதப்பட்டுள்ளது. இதுவே ஒருவர் இலங்கையர் என்ற அடையாத்திற்கான அதாரமாகும். இதற்கு மாறாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் வேறு நாட்டை எழுத முடியாதல்லவா? அவ்வாறாயின் இந்த நாட்டில் பிறந்த சிறுபான்மை மக்களை ஏன் சிங்கள பௌத்த இனவாத சக்திகள் கழுகுக்கண் கொண்டு பார்க்கின்றனர் என்று தெரிய வில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

ஒரு நாடு என்பதனுல் அனைவரும் ஒரு தாய்ப்பிள்ளைகள் போலவே வாழ வேண்டும். ஆனால் மேற்படி வாசகத்தை கூறுபோட நினைக்கும் சிங்கள இனவாத மற்றும் கடும்போக்குவாத சக்திகள் முனைகின்றனர். சிறுபான்மையாக வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அடக்கி ஒடுக்க நினைக்கும் விடயம் இன்று வெளிப்படையாகவே நடந்தேறி வருகின்றன. ஜனநாயக சம்பிரதாயங்களை அடிப்படையாக வைத்து ஆட்சி நடக்கும் இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதன் மற்றும், சமுகத்தின் பாதுகாப்பையும், அவர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்கள் அரசாங்கத்திற்குரியதாகும்.

ஆனால் இந்த விடயத்தில் அரசாங்கம் தொடர்ச்சியாக தவறுகளை இளைத்தே வருகின்றன. சிறுபான்மை மக்களையும், அவர்களின் சமயங்களையும் பாதுகாக்கத் தவறும் அரசு இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களை இனவாத சக்திகளின் பிடிக்குள் தள்ளி வருவதாக சிறுபான்மை மக்கள் தெரிவிக்கின்றனர்.

பௌத்த மேலாதிக்கம் கொண்ட ஒருசில பௌத்த துறவிகளும், ஒருசில இனவாத அரசியல் வாதிகளும் சிறுபான்மை மக்களின் சமய, சம்பிரதாய விடயங்களை மனித நேயமற்ற வகையில் சட்ட விரோதமாக மீறுகின்றமை இந்த நாட்டின் சமுக ஒற்றுமைக்கும், சிறுபான்மைச் சமுகங்களின் சமய விழுமியங்களுக்கும் ஆபத்தானதொரு விடயமாகும். இவர்களின் மனித நேயமற்ற காட்டுமிறாண்டித் தனங்கள் நாட்டிற்கு பாரிய கேடான விடயம் என்றே கூறலாம்.

இதுவரை காலமும் சிறுபான்மை என்ற வகையில் முஸ்லிம் சமுகத்தின் பல நூற்றுக் கணக்கான சமயத் தளங்களை உடைத்தும், எரித்தும் நாசம் செய்து விட்டு அடுத்த கட்டமாக இந்து மக்களின் சமயத் தளங்களில் கைவைத்துள்ளனர். இந்த விடயத்தில் பொதுபல சேனாவும், அதன் செயலாளர் ஞானசார தேரர், மற்றும் சிங்கள கடும் போக்குவாத சக்திகளும் சிறுபான்மை மக்களைத் தாக்கும் கேவலமான பௌத்த போதனைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் இந்த காடைத்தனங்கள் இந்த நாட்டில் வாழும் சகல சமாதான விரும்பிகளையும், இனவாத்தை எதிர்ப்பவர்களையும் மனமுடைய வைத்துள்ளது.

**சத்தார் எம் ஜாவித்**

கடந்த சில மாதங்களுக்கு முன் திருகோணமலை வெண்ணீரூற்று பகுதியில் அமைந்துள்ள இந்து ஆலயத்தை அடித்து நொறிக்கி விட்டு புதிய விஹாரையை சண்டித்தனமாக சட்டத்தை மீறி மேற்கொண்டனர். இதன் காரணமாக பாரிய இனமுறுகல் நிலைமைகள் காணப்பட்டன. அந்தச் சம்பவத்தின்போது நீதி கேட்டுச் சென்ற இந்து மக்கள் மீது சுடுதேனீர் வீசிய அந்த மக்களை விரட்டியக்க முற்பட்ட சம்பவங்களும் பௌத்த மதத்தின் போதனைகள் இவ்வாறுதான் எதிர்காலத்தில் இருக்கும் என்பதனை வெளிப்படையாக காண்பிக்கப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இதேபோல் மலை நாட்டிலும் இந்து ஆலயங்களை ஆக்கிரமித்த சமபவங்கள் மக்களை பெரிதும் கவலைக்குள் ஆக்கியுள்ள நிலையில் இன்று முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவில் விடயத்திலும் ஞானசார தேரர் சண்டித்தனம் காட்டியுள்ளமை இந்த நாட்டில் மிகமோசமான இனப்பிரச்சினைக்கு வித்திட தீ வைக்கும் ஒரு நடவடிக்கையாகும் என சமுக அர்வளர்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு நீராடிப்பிட்டி என்பது முற்றிலும் தமிழ் மக்கள் வாழும் ஒரு பிரதேசமாகும். இந்தப்பிரதேசத்தில் உள்ள அந்த ஆலயத்தில் தேரர் ஒருவரின் உடலை நீதிமன்ற உத்தரவை மீறி நீதித்துறைக்கு சாவல் விட்டு தமிழ் பிரதேசத்தில் சென்று ஞானசார தேரர் மேற்கொண்ட சண்டித்தனம் முற்றுமுழுதாக நீதித்துறையை கொச்சைப்படுத்தியமை இந்த நாட்டில் ஏனையவர்களையும் நீதித்தறையை கொச்சைப்படுத்தும் அல்லது நீதித்துறையின் உத்தரவுளை மீறலாம் என்ற செய்தியை அவர் மக்கள் மத்தியில் காட்டிக் கொண்டு வருகின்றார் என்பதனையெ காட்டி நிற்கின்றது.

நீதிமன்றத்தின் உத்தரவு இருக்கின்ற நிலையில் தீர்ப்பு வருவதற்கு முன்னர் தீர்ப்பு வரவில்லை என்று கூறி கொழும்பு மேதாலங்கார கீர்த்தி தேரரின் உடலை தகனம் செய்து விட்டு இன்று அந்த இடமும் விஹாரைக்குச் சொந்தமானது என கூறியிருக்கின்றமை ஞானசார தேரர் தமிழ் மக்களை கொதித்தெழ வைத்துள்ளதுடன் இவரின் இந்தச் செயற்பாடுகள் மீண்டும் தமிழ் இளைஞர்களை ஆயுதம் தூக்கும் செயற்பாட்டிற்கு வழி சமைக்கின்றார் என்பதனை வெளிப்படுத்தியிருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

அமைதியாக இருக்கும் மக்களை இவ்வாறு சமய ரீதியாக நிந்தித்து மீண்டும் ஒரு இரத்தக் கலரியை ஏற்படுத்த ஞானசார தேரர் தமிழ் பிரதேசங்களில் அத்துமீறி காலடியெடுத்து வைத்து மேற்கொள்ளும் செயற்பாடுகள் அவ்வளவு ஆக்கபூர்வமான விடயங்களாக அமையாது. இதற்கு பாதுகாப்புத் தரப்பும், பொலிஸாரும் உடந்தையாக இருப்பது மேலும் தமிழ் மக்களை வன்முறைகளுக்கு தூண்டும் கைங்கரியங்களாகும் எனலாம்.

ஞானசார தேரரின் மேற்படித் தான்றோன்றித்தனமான நடவடிக்கைகளை அரசியல் வாதிகள், சமயத் தலைவர்கள், சமுக அமைப்புக்கள், பொது மக்கள் என பலர் தொடர்ச்சியாக தமது கடுமையான கண்டனங்களையும், விஷனங்களையும் தெரிவித்து வருகின்றனர். தமது சமுகத்தை சமய ரீதியாக வழி நடத்த வேண்டிய தேரர்கள் அவர்களின் பௌத்த தரமங்களையும், பௌத்த சித்தாந்தங்களையும் தூக்கி எறிந்து விட:ட இன்று சிறுபான்மை மக்களை அடித்து நொருக்கி இந்த நாட்டை இனவாத இரதத்க் கறைக்குள் இட்டுச் செல்கின்ற நடவடிக்கைளை மேற்கொண்டு வருவது அரசாங்கம் மீது மக்கள் வைத்துள்ள நம்பிகைகயையும், நன்மதிப்டிபுக்களையும் இழக்கும் நிலைமைகளுக்கு உள்ளாக்கியிருக்கின்றனர்.

ஏப்ரல் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமுகத்திற்கு எதிராக சிங்கள பௌத்த கடும்போக்குவாத சக்திகளும், இனவாத கும்பல்களும் கடுமையான தாக்குதல்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தியிருந்தார்கள். சட்டத்திற்கும், நீதிக்கும் மாற்றமான முறையில் இவர்கள் நடந்து கொள்ளும் முறைமைகள் ஏனையவர்களும் சட்டத்தையும், நீதியையும் மீறி செயற்பட துண்டும் நடவடிக்கையாக கண்டு கொள்ள முடிகின்றது. முஸ்லிம் சமுகம் இந்த நாட்டின் அரசிலமைப்பு சட்டம், நீதி, பாதுகாப்பு விடயங்களுக்கு மதிப்பளிப்பவர்கள் என்ற விடயத்தில் உறுதியாக

14 ஆம் பக்கம் பார்க்க....

# சிறந்த அறிவுடனும் திறமையுடனும் உருவாகும் குழந்தைகளால் உலகின் எதிர்காலம் பிரகாசமிக்கதாக மாறும்

ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படும் சிறுவர் தினமானது சிறுவர் உரிமையை எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்று வளர்ந்தோருக்கு கற்றுகொடுக்கும் தினமாக காணப்படுகிறது என்றால் மிகையாகாது. ஆம் இன்று இலங்கை உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் இடம்பெறும் சிறுவர் உரிமை மீறல்களும் துஷ்பிரயோகங்களும் இதனையே எமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

சி.திவியா

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற வாசகத்திற்கமைவாக உலகின் அனைத்து குழந்தையும் சிறந்த அறிவுடனும் திறமையுடனும் உருவாகுவார்களாயின் உலகின் எதிர்காலம் பிரகாசமிக்கதாக மாறும் என்பதில் ஐயமில்லை. இதனை உணர்த்தவே உலக சிறுவர் தினம்!. சிறுவர்களை பாதுகாப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த சமூகச் சூழலையும் உலகச்சூழலையும் உருவாக்க முடியுமென்பது நம்பிக்கை. இக்குறிக்கோளுக்கமைவாக ஜெனீவாவில் அமைக்கப்பட்ட சிறுவர் நலனுக்கான சர்வதேச சங்கம் உலகெங்கும் சிறுவர் நலன்களுக்கான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1953 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிறுவர் தினத்தினை உலகளாவிய ரீதியில் முதன் முதலில் அனுஷ்டித்தது.

அவ்வகையில் இலங்கையிலும் உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு சிறுவர்களை மையமாக கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் திறன் விருத்தி செயலமர்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுவருகின்றது.

வவுனியா மாவட்ட செயலக மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இச் செயலமர்வு இடம்பெறுகின்றது.

சர்வதேச சிறுவர் தினமானது இம்முறை பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு என்னும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது. அதன் ஒரு கட்டமாக மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யும் முகமாக இச் செயலமர்வு இடம்பெறுகின்றது

இதில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கிறேட் மிசன் அமைப்பைச் சேர்ந்த சமூக பணியாளர்கள் வளவாளராக கலந்து கொண்டு தமது நாட்டின் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்துரைகளை வழங்கினர்.



இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவிப் பிரதேச செயலாளர் கமலதாசன், சிங்கப்பூர் கிறேட் மிசன் சமூக பணியாளர்கள், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி, செட்டிகுளம் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் இளஞ்சிங்கம், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், செட்டிகுளம் மகாவித்தியாலயம் மற்றும் அல் இக்பால் மகாவித்தியால மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

நாளைய நம் சிறுவர்களை வன்முறையற்ற உலகில் வாழ வழியமைப்போம்.

இன்றைய உலகில் பொதுவாக 18 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சிறுவர்கள் என கருதப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தில் காணப்படும் சிறுவர் உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்கக்கூடிய உரிமைகளுடையவர்கள்.

ஆனால் ஒவ்வொரு நாளும் உலகில் எண்ணிலடங்கா சிறுவர்கள் தமது வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான தடைகளையும் ஆபத்துகளையும் எதிர்நோக்குகின்றனர். இவர்கள் போரினாலும் வன்முறையினாலும் நேரடியாக பாதிக்கப்படுவது மட்டுமன்றி இனப்பாகுபாடு காட்டுதல், அக்கறை காட்டாமை, ஆக்கிரமிப்பு, பிறரது தலையீடு, தமது நாட்டுக்குள்ளே இடப்பெயர்வுக்குள்ளாதல் அல்லது அகதிகளாக்கப்படுதல், இல்லங்கள் அல்லது இருப்பிடங்களை கைவிட்டுச் செல்வதற்கு நிர்பந்திக்கப்படுதல், அங்கவீனமடைதல் மற்றும் புறக்கணிப்பு, சுரண்டல், கொடுமைப்படுத்தல், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படல் போன்ற பல காரணங்களினால் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர்.

பிள்ளையின் சுகாதாரத்திற்கும் உயிர் வாழ்க்கைக்கும் அல்லது பொறுப்பு, நம்பிக்கை அல்லது அதிகாரம் தொடர்பான விடயத்தில் உள்ள கௌரவத்திற்கு உண்மையான அல்லது முழுமையான சேதத்தை ஏற்படுத்துகின்ற எல்லா வகையான உடல் ரீதியான மற்றும் உளரீதியான மோசமான நடத்தை பாலியல் துஷ்பிரயோகம், அலட்சியம் அல்லது அலட்சியப்படுத்தல் அல்லது வர்த்தக ரீதியான அல்லது ஏனைய சுரண்டல்கள் என்பவை சிறுவர் துஷ்பிர யோகத்தின் அல்லது முறைகேடான நடத்தைகளின் பொதுவான வரைவிலக் கணமாகும்.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒரு பிள்ளை அதற்கு முழுமை யாக விளங்காத சம்மதம் தெரிவிக்க முடியாத அல்லது அதற்கு முழுமையாக வளர்ச்சியடையாத சம்மதம் தெரிவிப்பது பற்றி தெரியாத நிலையில் இருக்கின்ற போது அப்பிள்ளையொன்றைப் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகும். அல்லது சட்டத்தை மீறுவது அல்லது சமுதாயத்தில் தடை செய்யப்பட்ட செயலைச் செய்வதாகும்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒரு பிள்ளைக்கும் வயது வந்தவர் ஒருவருக்குமிடையில் அல்லது வயதில் மூத்த பிள்ளைக்குமிடையில் ஒரு நபருடைய தேவையை அல்லது விருப்பத்தை திருப்திப்படுத்துவதற்காக நிகழ்வதாகும். சிறுவர் துஷ்பிரயோகம் என்பது ‘தவிர்க்கக் கூடிய சாதாரண விருத்திப் போக்கு நிலைகுலைதல்’ எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படு கின்றது. அதில் பின்வருன சேர்கின்றன.

01. சட்டவிரோதமான எந்தவொரு பாலியல் நடவடிக்கையிலும் ஈடுபட பிள்ளையைத் தூண்டுதல் அல்லது பலவந்தப்படுத்தல்.

02. பிள்ளையை விபச்சாரத்தில் அல்லது ஏனைய சட்டவிரோதமான பாலியல் நடவடிக்கைகளில் சுரண்டும் வகையில் பயன்படுத்தல்.

03. துஷ்பிரயோக ஆபாச செயல்களில் அல்லது பொருட்களில் பிள்ளைகளை சுயநலம்பெறும் வகையில் பயன்படுத்தல்.

சிறுவர் துஷ்பிரயோகம் பெற்றோரால், பாதுகாப்பாளரால், பராமரிப்பாளரால், அவர்களுடன் நாளுக்கு நாள் வாழ்வில் ஈடுபாடு கொள்ளும் ஏனையோரால், பாதுகாப்பில்லாதவிடத்து அந்தப் பிள்ளை தீமையை அனுபவிக்கின்றது.

இது பொதுவாக நான்கு முக்கிய பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. உடல் ரீதியானது. பாலியல் ரீதியானது, உணர்வு ரீதியானது அத்துடன் கவனிப்பின்மை. இவை அனைத்தும் ஒரு பிள்ளையின் மேம்பாட்டுக்கும், நல்வாழ்வுக்கும் பாதகமாக அமைந்து அந்தப் பாதிப்பை அவர்கள் வாழ்நாள் முழுவதும் சுமக்க வேண்டியுள்ளது..

கடந்த இரண்டு வருடத்துக்குள் வவுனியா மாவட்டச்செயலகத்துப்புள்ளி விபரவியலுக் கமைய சிறுவர் பாலியல் வன்புனர்ச்சி உட்பட சிறுவர் துஸ்பிரயோகம் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது, அதாவது கடந்ந இரண்டுவருடத்துக்குள் இது பற்றிய 2017 ஆண்டு தொடக்கம் 2018 ஆண்டு பங்குனிமாதம்வரையிலான காலப்பகுதியில் 889 முறைபாடுகள் பதியப்பட்டுள்ளது. இதில் வன்புனர்ச்சி தவிர்ந்த துஸ்பிரயோகங்கள் என பதிவுகள் தெரிவிக்கின்றன.

13 ஆம் பக்கம் பார்க்க....



# கிழக்கில் 18

## சிந்திய இரத்தங்கள்

## இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட

### பாண்டிருப்பு கிராமத்தில் நடந்த இனஅழிப்புகள்

சிரேஷ்ட ஊடகவியலாளரும்
முன்னாள் தமிழ்ப்பத்திரிகை
ஒன்றியத் தலைவருமான
**இரா.துரைரத்தினம்**



கிழக்கிலங்கையில் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட கிராமமாக விளங்குவது பாண்டிருப்பு கிராமமாகும்.

இது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை அண்டியுள்ள ஒரு கரையோர கிராமமாகும்.

வடக்கே மருதமுனையையும், கிழக்கே இந்து சமுத்திரத்தையும் தெற்கே கல்முனை நகரத்தையும் எல்லையாகக் கொண்டது.

நூறு வீதம் தமிழர்கள் வாழும் இக்கிராமத்தில் அநேக மக்கள் சைவ சமயத்தைப் பின்பற்றுகின்றனர்.

மீன்பிடி, வேளாண்மை, நகைக் கைத்தொழில் போன்ற பல்வேறு தொழில்களை இங்குள்ள மக்கள் செய்து வருகின்றனர். கடற்கரையை அண்டிய கிராமம் என்பதால் 2004 சுனாமி தாக்குதலில் மிகவும் பாதிப்புக்குள்ளான கிழக்கு மாகாண கிராமங்களில் இதுவும் ஒன்றாக காணப்படுகிறது.

பல கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் அறிஞர்களையும் பெற்றெடுத்த இக்கிராமம் விடுதலைப்போராட்டத்திற்கும் பெரும் பங்களிப்பை செய்திருக்கிறது.

இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட பல அறிஞர்கள் வாழ்ந்த மண் என்பதாலும், போராளிகளை விடுதலைப்போராட்டத்திற்கு கொடுத்த கிராமம் என்பதாலும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதியிலும் இக்கிராமத்தில் சிறிலங்கா படைகளாலும் முஸ்லீம் ஊர்காவல் படைகளாலும் திட்டமிட்ட படுகொலைகள் நிகழ்த்தப்பட்டது.

கவிஞர் பாண்டியூரான் (கு.கணபதிப்பிள்ளை, ஆசிரியர்) கவிஞர் சண்முகம் சிவலிங்கம், எழுத்தாளர் உமா வரதராஜன், உட்பட பல கவிஞர்கள் எழுத்தாளர்கள் பிறந்த மண் பாண்டிருப்பு ஆகும்.

பாண்டிருப்பு என்றதும் அங்குள்ள திரோபதை அம்மன் கோயிலும் அக்கோவிலில் நடக்கும் தீப்பள்ளயமுமே நினைவுக்கு வரும். கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்மன் ஆலங்களில் தீமித்து சடங்கு நடைபெறுகிற போதிலும் பாண்டிருப்பு திரோபதை அம்மன் ஆலயத்தில் நடைபெறும் தீபள்ளயமே பிரசித்தி வாய்ந்ததாக கிழக்கு மாகாண மக்களின் கவனத்தை ஈர்ந்ததாக காணப்படுகிறது.

ஆகமம் சாராத முறையிலான பூசைகளைக் கொண்ட இவ்வாலயம் பாண்டவர்களையும் அவர்தம் பத்தினி பாஞ்சாலியையும் பக்திபரவசத்துடன் வழிபடும் மரபைக் கொண்டது.

இந்த ஆலயத்தின் வரலாறு தொன்மை மிக்கதாகும். 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட இந்தியாவின் கொங்கு நகரில் இருந்து வைணவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் தாதன் எனும் முனி இலங்கைக்கு வந்தார். இவர் மகாபாரத இதிகாசத்தை மக்கள் மத்தியில் முக்கியப்படுத்தி அதன் நிகழ்வுகளை சடங்காக நடித்துக் காட்டி வந்தார்.

இவர் மட்டக்களப்பின் தென்கோடியில் இருந்த நாகர்முனைக் கோவிலில் தங்கியிருந்து சமயபோதனை செய்வதை அறிந்துகொண்ட அந்நாளைய மட்டக்களப்பு சிற்றரசராக இருந்த எதிர்மன்னசிங்கன் (கி.பி 1539 - கி.பி-1583) அவரைச் சந்தித்து வரவேற்றான். தாதனின் வேண்டுகோளின்படி பாண்டிருப்புக் கிராமத்தின் ஆலவிருட்சங்களும் கொக்கட்டி மரங்களும் நிறைந்த இடத்தை விட்ணு பாண்டவர் ஆகியோருக்கு ஆலயம் அமைக்க வழிசெய்தான்.

புரட்டாதி மாதத்தில் இந்த ஆலயத்தில் உற்சவம் நடைபெறும். 18 நாட்கள் நடைபெற்ற பாரதப்போரைக் குறிக்கும் வகையில் 18 நாட்கள் திருவிழா நடைபெறும். பாரதப் போரினதும் மகாபாரதத்தினதும் பல்வேறு நிகழ்வுகள் நிகழ்த்திக்காட்டப்படுவதுடனான சடங்குடன் கூடிய வணக்கமுறை நடைபெறும். இறுதி மூன்று தினங்களும் முறையே அருச்சுனன் பாசுபதம் பெறுதல் (தவநிலை) மற்றும் தீமிதிப்பு என்பன நடைபெறும்.

கல்யாணக்கால் வெட்டுந்திருவிழா, வனவாசத் திருவிழா தவ நிலை தீமிதிப்பு பாற்பள்ளயம் என்பன இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வுகள் ஒவ்வொன்றும் மகா பாரதக் கதையின் ஒவ்வொரு விடயங்களையும் பக்த அடியாருக்கு வெளிக்காட்டுகின்றன.

இக்கிராமம் முன்னர் ஆலஞ்சோலை என அழைக்கப்பட்டதாகவும் இந்த ஆலயம் அமைக்கப்பட்ட பின்னர் பாண்டிருப்பு என அழைக்கப்படலாகிற்கு என வரலாற்று தகவல்கள் கூறுகின்றன.

பாண்டவர் இருப்புக் கொண்ட இடம் பாண்டிருப்பாயிற்று என இக்கிராமத்தின் வரலாறுத்தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாலயத்தின் மகோற்சவம் பக்திச் சிறப்பு மிக்கது. கிழக்கு நோக்கிய சந்நிதானம். அம்மனை நோக்கிய வண்ணம் வீரபத்திரர் ஆலயம் உண்டு. சுற்றுப் பிரகாரங்களில் காடேறி கோயில் கமல கன்னிக் கோயில், பட்டாணி கோயில், வைரவர் கோயில் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. வீரபத்திரர் கோயிலுக்குப் பின்புறமாக வெளி வீதியில் திக்குளிப்பு ஸ்தானம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலய வருட உற்சவம் தாதன் வகுத்த படி புரட்டாதி மாதம் அமாவாசை முன் பின்னாக வரும் செவ்வாய்க்கிழமை கொடியேற்றமும் 18ம் நாள் வெள்ளிக்கிழமை தீமிதிப்பும் இடம்பெறும்.

பூசை முறை ஆகமமுறை சார்ந்ததல்ல. பூசை செய்பவர் பூசாரி என அழைக்கப்படுகின்றார். காலைப்பூசையும் மாலைப் பூசையுமே இடம்பெறுகின்றன. பஞ்சபாண்டவர், கிருஷ்ணன், திரௌபதை, காளி, வீரபத்திரர் எனப் பலர் கொலுவிருப்பர், விரதம் அனுட்டித்தே கொலுவிருக்கின்றனர். 18 நாட்களும் இவர்கள் முழு நேரமும் கோயிலிலே தங்கியிருப்பர். எனவே இவர்களைக் கோயிலார் என்பர்.

18 நாள் உற்சவத்தில் 7ம் நாள், 12ம் நாள், 16ம், 17ம், 18ம் நாள் திருவிழாக்களே பக்த அடியார்களைப் பரவசப்படுத்துவனவாக உள்ளன.

16ம் நாள் மகாபாரதத்தின் உச்சக்கட்டம். இது வனவாசம் எனப்படும். அன்றைய தினம் 3-4 மணியளவில் கோயிலார் உணவு, உடை எடுத்துச் செல்வது போல் பூசை முடிந்ததும் எல்லோரும் பஞ்சபாண்டவர் போல் அலங்கரித்து வெற்றிலை, பழம், பாக்கு முதலியவற்றையும், வில், வாள் சக்கரம் என்பவற்றையும் எடுத்து காடு செல்வது போல் கோயிலுக்கு மேற்கே செல்வர். பல்லாயிரக் கணக்கான பக்தர்களும், நூற்றுக்கணக்கான காவடிகளும், கற்பூரச் சட்டி எடுப்போரும், புடைசூழ இவ்வைபவம் நடைபெறும்.

இது வனவாசம் எனப்படும். இவ்வனவாசம் மணற் சேனையூடாகச் சென்று நற்பிட்டிமுனை சிவன் கோயிலை அடைந்து அங்கு சிறிது நேரம் பஞ்சபாண்டவர் அமர்ந்து பின் சேனைக்குடியிருப்புப் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில்களைத் தரிசித்து சேனைக்குடியிருப்புக் காளி கோயிலை வந்தடைவர். அக்கோயிலுடன் 11 வருட வனவாசம் முடிவடைவதாகவும் ஒரு வருட அஞ்ஞாத வாதம் தொடர்வதாகவும் அங்கிருந்து மேட்டு வட்டையூடாக நிசப்தமாகச் சென்று பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை அடைவர். அங்கிருந்து திரோபதை அம்மன் ஆலயத்துக்கு செல்வர்.

17ம் நாள் வியாழக்கிழமை தவ நிலைப்பூசை நடைபெறும். இவ்வைபவம் நள்ளிரவு 1.30 மணியளவில் இடம்பெறும். இது அருச்சுனன் பாசுபத அஸ்திரம் பெறும் பொருட்டுச் சிவனை நோக்கிச் செய்யும் தவத்தைக் குறிப்பதாகும்.



18ம் நாள் வெள்ளிக்கிழமை தீக்குளிப்பு வைபவம் இடம்பெறும். இதுவே 18 நாள் திருவிழாவில் மிக உச்சக் கட்டமான நிகழ்ச்சி. பார்ப்பவர் உள்ளங்களை உடலை உருக்கும் காட்சி. அன்றைய தினம் கொலுவிருந்த அனைவரும் சமுத்திரம் சென்று நீராடிப் பூசை வாழிபாடு செய்த பின் உடல் முழுவதும் மஞ்சள் பூசி வேப்பம் இலை கொத்தாக ஏந்திக் கொண்டு வருவர்.

இங்கே ஏற்கனவே தீமூட்டப்பட்டு சமப்படுத்தப்பட்ட தீக்குழியினுள் வெற்றிலை, பழம், பாக்கு, அரிசி என்பவற்றைத் தீக்குழியில் இட்டு ஒருவர் பின் ஒருவராக தீக்குழியினுள் இறங்கி நடந்து செல்வர். இத்தீக்குளிப்பு வைபவம் பக்திப் பரவச மூட்டுவதாக அமைந்திருக்கும்.

அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை பாற்பள்ளயம் இடம்பெறும். இதனுடன் அம்மன் உற்சவம் நிறைவு பெறும்.

இத்தகைய மதப்பற்றும் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட பாண்டிருப்பு கிராமத்தில் 1990 யூன் மாதத்தின் பின் அக்கிராம மக்களை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் படுகொலைகள் நடத்தப்பட்டது.

1990ஆம் ஆண்டு யூன் மாதத்தின் பின் பாண்டிருப்பு கிராமத்தில் அரச படைகளாலும் ஊர்காவல் படைகளாலும் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்கள் கைதுகளின் போது பலர் காணாமல் போனதாகவும் பலர் படுகொலை செய்யப்பட்டதாகவும் நீதியரசர் கே.பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் 49ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் சீருடைகளுடன் கைது செய்யப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்டனர் என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பபடுகிறது.

இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும், இந்த சுற்றிவளைப்புக்களை நடத்தி பலரை கைது செய்தனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு யூன் 27ஆம் திகதிக்கும் டிசம்பர் மாதம் 4ஆம் திகதிக்கும் உட்பட 6 மாத காலத்தில் இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர், முஸ்லீம் ஊர்காவல் படையினர், மற்றும் கொலக்கொட்டியா என அழைக்கப்படும் பச்சைப்புலிகள் என்ற சிறிலங்கா படையினரால் 144 தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் பெயர் விபரங்களும் அவர்கள் யாரால் படுகொலை செய்யப்பட்டனர் என்ற விபரங்களும் ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையின் 132, 133, 134, 135ஆம் பக்கங்களில் காணப்படுகின்றன.

இதில் 95தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் 30 தமிழர்கள் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் 17 தமிழர்கள் முஸ்லீம் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் தான் பிரபல கவிஞரான பாண்டியூரான் என அழைக்கப்படும் கு.கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களும் அவரின் இரு புதல்வர்களும் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இவர் சிறந்த தமிழ் உணர்வாளர். 1990 காலப்பகுதியில் கல்முனை நகரத்தில் நடந்த கூட்டங்களில் தமிழ்த் தேசியத்தை ஆதரித்து உணர்ச்சிகரமாக உரையாற்றியவர்.

1990 காலப்பகுதியில் கொளக்கொட்டியா எனும் இராணுவப்பிரிவு , அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல தமிழ் கிராமங்களில் தமிழ் உணர்வாளர்களை கைது செய்து படுகொலை செய்தனர். பல தமிழர்கள் உயிருடன் ரயர்களில் போட்டு எரிக்கப்பட்டனர்.

கவிஞர் பாண்டியூரன் அவர்களும் அவரது இரு புதல்வர்களும் அவரின் வீட்டில் இருந்து கொலக்கொட்டிய என அழைக்கப்படும் படையினரால் கொண்டு செல்லப்பட்டனர்.

இவரது உடல் தமிழ் முஸ்லிம் எல்லையில் கண்டெடுக்கப்பட்டிருந்தது. பாண்டியூரன் அவர்களுடன் அவரின் புதல்வர்களும் சுட்டுக்கொல்ப்பட்டிருந்தார்கள்.

கவிஞர் பாண்டியூரன் உரைகள் முஸ்லிங்களால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இராணுவத்திற்கு போட்டுக்காட்டப்பட்டதாகவும் அதன் பின்னரே சிறிலங்கா படையினரும், முஸ்லீம் ஊர்காவல் படையினரும் அவரையும் அவரது புதல்வர்களையும் வீட்டிலிருந்து கொண்டு சென்று படுகொலை செய்தனர் என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான பத்திரிகை ஒன்றில் பாண்டிருப்பு கல்முனைப்பகுதியில் நடந்த படுகொலைகள் பற்றி விபரிக்கப்பட்டிருந்தது.

அப்பத்திரிகையில் வெளிவந்த செய்தியை கீழே மீள்பதிவு செய்கின்றேன்:

கல்முனையில் இராணுவப் பயங்கரவாதத்திலிருந்து தப்பி ஓடிக் கொண்டிருந்த 14 வயதுத் தமிழ் யுவதி ஒருத்தி சிங்களப் படைகளிடம் சிக்கிப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாள். பின்னர் இவள் முஸ்லிம் ஊர்காவற் படையிடம் கொடுக்கப்பட்டாள். ஒரு கல்லை நட்டு, நிர்வாணமாக அதை மூன்று முறை சுற்றும்படி பணிக்கப்பட்டாள். அவ்விதமே சுற்றி வந்ததும், 'இஸ்லாமிய மார்க்கத்தில் விபச்சாரிக்குரிய தண்டனை இதுதான்' எனக் கூறிக்கொண்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட அந்தத் தமிழ் யுவதியைக் கல்லால் எறிந்து முஸ்லீம்கள் படுகொலை செய்தனர் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**தொடரும்**

# சுகவீன போராட்டமும் ஆசிரியர்கள் எதிர்நோக்கிய சிக்கல்களும்

**சுஜீவன்**

அதிபர் ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் கடந்த இரு தினங்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக பாடசாலை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு முழுமையான பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இரு தினங்களிலும் பாடசாலைகளுக்கான மாணவர்களின் வருகை மிகக் குறைந்த அளவிலேயே இருந்ததோடு அதிபர் ஆசிரியர்களின் வருகையும் மிக மோசமான நிலையிலேயே காணப்பட்டது. நாடளாவிய ரீதியில் 30க்கும் மேற்பட்ட அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்து இப் போராட்டமானது மீண்டும் தொடரும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. ஏனெனில் இரு தினங்களாக எடுக்கப்பட்ட போராட்டங்களின் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து எவ்வித வறுதிமொழிகளும் வழங்கப்படவில்லை என்ற காரணத்தினாலேயே போராட்டம் ஒக்டோபர் 7 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை நுவரெலியா மாவட்டத்தில் 95 % மான பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் . இருப்பினும் இம்மாவட்டத்தில் இயங்கும் ஒரே ஒரு ஆசிரியர் தொழிற்சங்கம் மாத்திரம் இப்போராட்டத்திற்கு தமது எதிர்ப்பினை காட்டியதோடு அச்சங்கத்தின் ஒருசில அங்கத்தவர்கள் மட்டுமே வழமைபோல் பாடசாலைக்கு சென்று கையொப்பமிட்டு குறித்த தினங்களில் வருகை தந்த மாணவர்களுக்கு ஓரளவு கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது . அண்மையில் உருவாகிய ஒரு தொழிற்சங்கமே இவ்வாறான பணிகளை முன்னெடுத்து. இருப்பினும் நாடளாவிய ரீதியில் சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து முன்னெடுத்த இல் வேலைத்திட்டமானது இலங்கையில் பணியாற்றும் சகல அதிபர் ஆசிரியர்களின் பிரச்சனைகளை தீர்க்கும் முகமாக 6 அம்ச கோரிக்கைகளை முன்வைத்தே இப்பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு நுவரெலியா மாவட்டத்தை பொறுத்த வரையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஊடகங்கள் வாயிலாக பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் ஏற்கனவே கேள்வியுற்றிருந்ததையடுத்து மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர்கள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். அதேபோல் இப்போராட்டத்தில் ஆசிரியர் உதவியாளர்களின் பிரச்சினை தொடர்பில் எவ்வித கோரிக்கைகளை முன் வைக்கப்படவில்லை எனக் கூறி ஒரு சில ஆசிரியர் உதவியாளர்கள் பாடசாலைகளுக்குச் சென்று பணிகளை முன்னெடுத்த பையும் குறிப்பிடத்தக்கது..

இதேவேளை சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தமது விடுமுறைகளை பாடசாலையின் அதிபர் மற்றும் வலயக்கல்வி காரியங்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவையும் எழுந்திருந்தது. அந்த வகையில் காலை வேளையிலேயே அருகில் உள்ள தபால் நிலையங்களுக்கு சென்று கூனுடூனுட்ச்டிடூ மூலம் அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர் . இருப்பினும் தலவாக்கலை நகரிலுள்ள தபால் நிலையத்தில் Telema-il அனுப்புவதற்கான விண்ணப்பப்படிவங்கள் போதுமானளவு இல்லை என அங்கு கடமையில் இருந்த அதிகாரி ஒருவர் ஆசிரியர்களுக்கு கூறியதாகவும் அதற்கு பதிலாக தபால் நிலையத்தில் இருந்து ஒரு விண்ணப்பத்தை எடுத்துச் சென்று போட்டோ பிரதி செய்து அதனை பூரணப்படுத்தி தருமாறும் குறித்த அதிகாரி ஆசிரியர்களை பணித்ததாகவும் கூறப்படுகிறது. அதற்கமைய ஆசிரியர்கள் ஒரு விண்ணப்பத்தை எடுத்துச்சென்று நகரிலுள்ள தொலைத்தொடர்பு வர்த்தக நிலையத்தில் (Communication) 10 ரூபா செலுத்தி குறித்த விண்ணப்பத்தை போட்டோ பிரதி செய்து தபாலகத்தில் ஒப்படைத்தனர். முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டிய கூனுடூனுட்ச்டிடூ விண்ணப்பத்தை அன்றைய தினம் ஆசிரியர்கள் மேலதிகமாக 10 ரூபா செலவழிக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இதுகுறித்து குறித்த தபால் நிலைய பொறுப்பதிகாரியிடம் வினவ முற்பட்ட போதிலும் அவர் அத்தருணத்தில் கடமையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நவீன வசதிகளுடன் இயங்கும் தபால் நிலையங்களில் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் தலவாக்கலை தபால் நிலையத்தில் போட்டோ பிரதி இயந்திரம் இருக்குமாயின் அதனூடாக அச்சேவையை ஆசிரியர்களுக்கு பெற்றுக் கொடுத்து இருக்கலாம் . ஆனாலும் குறித்து அதிகாரி ஒருவர் மாத்திரம் ஆசிரியர்களை இவ்வாறு அலைய வைத்த நோக்கம் என்ன? அவரும் ஒரு அரசு ஊழியர் என்பதை மறந்து ஆசிரியர்களிடம் அவ்வாறு நடந்து கொண்டது பொறுத்தமற்ற செய்லாகும்.. இது இலவச சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு அவரால் தடை விதிக்கப்பட்டதையே இது காட்டுகிறது . நாடளாவிய ரீதியில் சமகாலத்தில் இடம் பெற்றுவரும் பல்வேறு போராட்டங்களின் போது அவரவர் தமது நிறுவனத்திற்கு விடுமுறையை அறிவிப்பதற்காக குறித்த கூனுடூனுட்ச்டிடூ விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்வது வழமையான மற்றும் கட்டாயமானதொன்றாகும். இவ்வாறான நிலையில் தலவாக்கலை தபால் நிலையத்தில் தேவையான அளவு விண்ணப்பப்படிவங்கள் இல்லாமை கண்டிக்கத்தக்கது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் தபால் நிலைய பொறுப்பதிகாரி உயரதிகாரிகளுடன் உரிய முறையில் தொடர்பு கொள்ளவில்லை என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது என்றும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் குற்றம் சுமத்தினர்.

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்



**அரீஷ் ஹரன்**

இன்று அதிகமாக உலகில் கஷ்டப்படுபவர்கள் சிறுவர்கள் தான். பல சிறுவர்கள் பட்டினியால் வாடுகிறார்கள். தாய், தந்தையை இழந்து அனாதைகளாக நிற்கும் சிறுவர்கள் ஏராளம் . அன்றாடம் உணவுண்ண பிச்சை ஏந்தி பிழைக்கும் நிலைமை. அடியாட்கள் சொல்லும் வேலைகளை செய்து அவர்கள் கொடுப்பதை உண்ணும் நிலைமை இப்படி நீண்டு கொண்டே செல்கிறது சிறுவர்களின்இன்றைய நிலைமை .

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். நாளைய எதிர்காலம் நன்றாக அமைய இன்றையசிறுவர்களை நல்ல ஒரு பிரஜையாக உருவாக்க வேண்டும் .ஒவ்வொரு ஆண்டும் ஒக் டோ பர் மாதம் 01 ஆம் திகதி உலக சிறுவர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

நாளைய தலைவர்கள் தான் இன்றைய சிறுவர்கள் அவர்களுக்கு போதிய கல்வியறிவை புகட்டுவதன் மூலம் தான் எதிர்காலத்தில் அவர்கள் நல்ல பிரயைகளாக வாழ முடியும் . எல்லா பிள்ளைகளும் நல்லவர்கள் ஆவதும், தீயவர்கள்ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்று சொல்கிறார்கள். அதை தீர்மானிப்பது அவர்களின் குடும்ப சூழ்நிலையும் , வீட்டு சூழ்நிலையும் தான். பெற்றோர்கள் தமது பிள்லைகளை நல்ல பண்புள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

சிறுவர்கள் துன்புறும் சம்பவங்கள் எல்லா நாடுகளிலும் நடக்கிறது தான் . ஆனால், சில வெளிச்சத்துக்கு வருகின்றன. சில வருவதில்லை . சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவன் கொண்டு வரும் பணத்தை தந்தை பறித்து மது அருந்த கொண்டு போவதும், சிறுவர்களை கடத்தி பெற்றோர்களிடம் கப்பம் பெறுவதும் இப்போதெல்லாம் நடக்கிறது .

அறியா வயது, அவனுக்கு ஒன்றுமே தெரியாது. அவன் என்னதான் செய்ய முடியும் . பெற்றோர்சிறுவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை பழக்க வேண்டும் . சிறு வயதிலே அவனை கண்டித்து வளர்க்க வேண்டும். பாடசாலையில் ஆசிரியர்களும் பிள்ளைகளை அன்புடனும், கண்டிப்புடனும் பாடங்களை சொல்லி கொடுத்து நல்ல விடயங்களை கற்பித்து கொடுக்க வேண்டும் .

நாளைய தலைவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் தான் உண்டு. நீங்கள் மாணவர்களுக்கு கற்பித்து கொடுக்கும் விதத்தில் உள்ளது. அதே போல் பெற்றோர்களின் கையிலும் உள்ளது. ஒருவன் நல்லவனாவதும், கெட்டவனாவதும் அவன் இருக்கும் சூழல், குடும்ப நிலைமை , அவனுடைய நண்பர்கள் போன்ற காரணங்கள் ஆகும் .

இன்று சர்வதேச ரீதியாக பல்வேறு வகைகளில் சிறுவர்கள் பாதிப்பை அடைந்து வருகிறார்கள். பாடசாலை இடைவிலகல், வறுமை, போஷாக்கின்மை, பாலியல் வன்முறைகள், தொழிலுக்குச் செல்லும் இடத்தில் கொடுமைகள், எனச் சிறுவர்களின் பாதிப்பு நீண்டு கொண்டே செல்கிறது . மாமனால் கொடுமை , தந்தையால் கொடுமை , உற்றார் உறவினர்களால் கொடுமை

இன்று வறுமையின் காரணமாக தாய்மார்கள் வெளியூர் வேலைக்குச் செல்வதால் சிறுவர்கள் அந்நியரால் பல்வேறு கொடுமைகளை அனுபவிக்கின்றனர். போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் விற்பனை அல்லது அந் நடவடிக்கைகளில் ஈடு படுவதில் இருந்து விலகியிருப்பதற்கான உரிமை சிறுவர்களுக்கு உண்டு. பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுதல், அல்லது பாலியல் ரீதியாகத் தவறான பயன்களைப் பெறுதல், மற்றும் சட்டவிரோத பாலியல் நடவடிக் கைகளுக்காக தூண்டப்படுதல் ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

15 ஆம் பக்கம் பார்க்க....

## சிறந்த...

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாளாந்தம் 16 வயதிற்கு குறைந்த 4 சிறுமிகள் பாலியல் வன்புனர்ச்சிக்குட்படுத்தப்படுகிறார்கள்

இதேவேளை 2017,2018 ஆம் ஆண்டில், 1089 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்புனர்ச்சிமுறைபாடுகளும் 2017 ,2018ஆம் ஆண்டில் 598 சிறுவர்களு;கெதிரான பாலியல் வன்புனர்ச்சி மற்றும் 281 முறைபாடுகளும் மாவட்டச்செளலகப்புள்ளி விபரங்களில் பதியப்பட்டுள்ளன. இதில் 90 சதவீதமான வன்புனர்ச்சிகள் நியதிச் சட்ட வன்புனர்ச்சிக் குற்றங்களாகும். அதாவது 16 வயதுக்கு குறைவான ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அந்நப் பெண்ணின் சம்மதத்துடன் பாலுறவு கொண்டாலும் அது நியத்ச்சட்ட வன்புனர்ச்சிக் குற்றமாகும். 16 வயத்திற்கு மேற்பட்ட ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அப்பெண்ணின் சம்மததுடன் பாலுறவு கொண்டால் அது வன்புனர்ச்சி ஆகாது என்பது சட்ட வரைவிலக்கணமாகும்

இலங்கையில் கடந்த ஆண்டில் இத்தகைய சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு மாத்திரம் சுமார் 20,000 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அனைத்து துஷ்பிரயோகங்களும் சிறுவருடைய மேம்பாட்டில் உளவியல் ரீதியான தாக்கத்தைத் தருகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தின் தாக்கமானது, குறிப்பாக நீண்டகால விளைவுகள், மரணம் உட்பட, துஷ்பிரயோகம் மீண்டும் தொடரல் உடல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் நிரந்தரமான ஒரு பலவீனம், அறிவும் உணர்வும் குறைபடுதல், கடும் குற்றங்களையோ, சிறிய தீங்குகளையோ புரியும் மனப்பாங்கு, அத்துடன் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர் துஷ்பிரயோகியாகவே மாறும் சாத்தியம் போன்றன ஏற்படலாம்.

முக்கிய பிரச்சினையாக துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டவரின் மன உளைச்சல் சிறுவர்கள் அங்கலாய்ப்புடன், மற்றவர்களுடனான தொடர்பைத் தவிர்க்கின்றார்கள். சிறுவனின் உளவியல் ரீதியான பலவீனம், துஷ்பிரயோக அனுபவமானது சுயமதிப்பைக் குறைத்து சில வளர்ந்தவர்களுடன் கெட்ட தொடர்புக்கு வழிவகுக்கலாம்.

குற்ற உணர்வைக் கொடுத்து பிரச்சினைக்கான பாலியல் ரீதியான ஒரு ஆவேச மனப்பாங்கை உருவாக்குகின்றது. சிறுவர் அந்த விரக்தியையும் தாக்கத்தையும் மாறுபாடான துஷ்பிரயோகத்தினூடாக ஈடுபாடு கொள்ளலாம். தனக்குத்தானே தீமை விளைவித்தோ, அல்லது வேறுவிதமாக தீமை விளைவிக்கும் நடத்தையை நாடுவர்.

சிறுவர் துஷ்பிரயோகமானது சமூக மனப்பாங்குகள், பொருளாதாரக் கஷ்டங்கள் குறைந்து வரும் மூலவளங்களுக்கான போட்டிகள், கொடூர பிள்ளை வளர்ப்பு முறைகள், குடும்ப வன்முறை, தனிப்பட்டோரின் வினோதமான சுபாவ இயல்புகள் எனப் பல்வேறு காரணிகளினால் இடம்பெறுகின்றது.

குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் பணிபுரிய பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்புவது அல்லது விபச்சாரத்திற்கு அவர்களைப் பயன்படுத்துவதை அறிந்தும் கவனியாது இருத்தல், குடும்பம் அந்தரங்கத்தை காக்கும் புனிதமான ஓர் அமைப்பு என சமூகம் கருதுவதனால் தகாப்புணர்ச்சி போன்ற துஷ்பிரயோகங்களை மறைக்க குடும்பத்தால் முடிதல் போன்ற நிலைமைகளைத் தடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் சட்டவாக்கம், அரசியலமைப்பில் பாதுகாப்பு நிபந்தனைகள் இடம்பெறுதல், கட்டுப்படுத்தும் ஒழுங்கு முறைகள், பராமரிப்பு நிலைய வசதிகள், வேறு பரிகார முறைகள், கல்வித் திட்டங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனாலும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பது முற்றாக ஒழிந்தபாடில்லை.

நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. அதனை முற்றாக ஒழிக்க அல்லது ஓரளவாவது கட்டுப்படுத்த வேண்டுமாயின் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான காரணிகளை அறிந்து அவற்றை முதலில் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு செய்தால் ஓரளவாவது சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்க முடியும்.

எனவே சிறுவர் உரிமைகள் பேணப்பட வேண்டியவை. எதிர்காலச் சந்ததியினரின் சிறப்பான, முன்னேற்றமான நல்ல சந்ததியினராக உருவாக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் ஒழிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்பட வேண்டுமானால் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சிறுவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஊடகத் துறையினர் போன்றோர் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது தலையாய கடமையாகும் இன்று அதிகமாக உலகில் கஷ்டப்படுபவர்கள் சிறுவர்கள் தான். பல சிறுவர்கள் பட்டினியால் வாடுகிறார்கள். தாய், தந்தையை இழந்து அனாதைகளாக நிற்கும் சிறுவர்கள் ஏராளம் . அன்றாடம் உணவுண்ண பிச்சை ஏந்தி பிழைக்கும் நிலைமை . அடியாட்கள் சொல்லும் வேலைகளை செய்து அவர்கள் கொடுப்பதை உண்ணும் நிலைமை இப்படி நீண்டு கொண்டே செல்கிறது சிறுவர்களின் இன்றைய துரதிர்ஷ்ட வாழ்க்கை. சிறுவர்கள் துன்புறும் சம்பவங்கள் எல்லா நாடுகளிலும் நடக்கிறது தான் . ஆனால், சில வெளிச்சத்துக்கு வருகின்றன. சில வருவதில்லை . சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவன் கொண்டு வரும் பணத்தை தந்தை பறித்து மது அருந்த கொண்டு போவதும் , சிறுவர்களை கடத்தி பெற்றோர்களிடம் கப்பம் பெறுவதும் இப்போதெல்லாம் அன்றாடம் நாம் கேள்விப்படும் சாமான்யமான விடயங்கள்.

அறியா வயது , அவனுக்கு ஒன்றுமே தெரியாது . அவன் என்னதான் செய்ய முடியும் . என்று முடியாத வார்த்தைகளை கூறி பிள்ளைகளை ஒன்றும் அறியாதவர்களாக வளர்க்காது , அவர்களுக்கும் இவ்வுலகில் என்ன நடக்கிறது? எவ்வாறு உயிர் வாழ வேண்டும், சுற்றுப்புறச்சூழல் பற்றிய அவதானிப்புக்கள் என்று யதார்த்தத்தினை புகட்டி வளர்க்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். பெற்றோர் சிறுவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை பழக்க வேண்டும் . சிறு வயதிலே அவனை கண்டித்து வளர்க்க வேண்டும் . பாடசாலையில் ஆசிரியர்களும் பிள்ளைகளை அன்புடனும், கண்டிப்புடனும் பாடங்களை சொல்லி கொடுத்து நல்ல விடயங்களை கற்பித்து கொடுக்க வேண்டும்.

மேற்படி சிறுவர் துஷ்பிரயோக வடிவங்களை நீக்குவதற்காக உலகின் பல அரசுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்கள் போன்றவற்றால் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மேற்படி அனைத்து நிறுவனங்களினதும் சேவைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவது அத்தியாவசியமாகும். இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு உலக சிறுவர் தினத்தை சிறப்பாக திட்டமிட்டுப் பயன்படுத்தலாம். மேலும் சிறுவர் தினம் சம்பந்தமாக குறிப்பிட்ட தினத்தில் மாத்திரம் மும்முரமாக செயற்படுவதில் எந்தப் பயனும் இல்லை. வருடத்தில் ஏனைய நாட்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அனைத்து தரப்பினரதும் கவனத்திற்கு உட்பட வேண்டியது அவசியமாகும்.

நாளைய தலைவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் தான் உண்டு. நீங்கள் மாணவர்களுக்கு கற்பித்து கொடுக்கும் விதத்தில் உள்ளது . அதே போல் பெற்றோர்களின் கையிலும் உள்ளது . ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவன் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அன்னை வளர்ப்பினிலே... என்ற பாடலுக்கிணங்க ஒருவன் நல்லவனாவதும் , கெட்டவனாவதும் அவன் இருக்கும் சூழல் , குடும்ப நிலைமை , அவனுடைய நண்பர்கள் போன்ற காரணங்கள் ஆகும்.

இன்று சர்வதேச ரீதியாக பல்வேறு வகைகளில் சிறுவர்கள் பாதிப்பை அடைந்து வருகிறார்கள். பாடசாலை இடைவிலகல், வறுமை, போஷாக்கின்மை, பாலியல் வன்முறைகள், தொழிலுக்குச் செல்லும் இடத்தில் கொடுமைகள், எனச் சிறுவர்களின் பாதிப்பு நீண்டு கொண்டே செல்கிறது . மாமனால் கொடுமை, தந்தையால் கொடுமை, உற்றார் உறவினர்களால் கொடுமை. இன்று வறுமையின் காரணமாக தாய்மார்கள் வெளியூர் வேலைக்குச் செல்வதால் சிறுவர்கள் அந்நியரால் பல்வேறு கொடுமைகளை அனுபவிக்கின்றனர். அந்நியரால் மட்டுமன்றி உறவினர்களால் பாதிக்கப்படும் குழந்தைகளே அதிகம் என்பது அதிர்ச்சிக்குரிய விடயம்.

இந்நிலை தொடர்ந்தால் சிறுவர்களின் எதிர்காலம் எப்போதும் கேள்விக்குறியாகவே இருந்து விடும். இதனைத் தடுத்து நிறுத்துவது உலகளாவிய ரீதியில் அனைவரினதும் தலையாய கடமை. பெற்றோர் எப்போதும் தங்களது பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். அவ்வாறின்றி பிள்ளைகள் முன்பாக தாய் தகப்பன் சண்டை போடுவது, தர்க்கித்துக் கொள்வது வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவது, ஒழுங்கீனமாக நடந்து கொள்வது போன்ற இழி செயல்களில் ஈடுபடுவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியவை.

அது மட்டுமல்ல, பிள்ளைகள் முன்பாக மது அருந்துவது, சிகரட் புகைப்பது, சூது விளையாடுவது போன்ற செயற்பாடுகள் பிள்ளைகள் மனதிலுள்ள அச்சத்தை இல்லாதொழித்து அவ்வாறான செயல்கள் சாதாரண விடயமாக எண்ணுவதற்கு வழிவகுக்கும். இதனால் எமது சிறுவர்களின் கள்ளமில்லா உள்ளங்களில் களங்கம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

பிள்ளைகளை வளர்ப்பது என்பது அவ்வளவு சாதாரண காரியம் அல்ல. அது மிகவும் பொறுப்பான விஷயம். சிறுவர்களை அன்புணர்வோடு வழி நடத்த வேண்டும். இது விஷயமாக கடுமையான போக்குகள் இருக்கக் கூடாது. பிள்ளைகள் தங்களுக்கு மரியாதை செய்ய மறுக்கிறார்கள், தங்களது பேச்சை மதிக்கிறார்கள் இல்லை என்பதற்காக அவர்களை மிரட்டுவதோ அடிப்பதோ கூடாது. அவ்வாறான அழுத்தங்களுக்குள்ளாகும் பிள்ளைகள் பிடிவாதக்காரர்களாகவும் முரடர்களாகவும் வளர்க்கின்றனர். அன்பும் புரிதலும் புரிந்துகொள்ள வழிசமைத்தலும் சிறந்த பிரஜையை உருவாக்க உதவும் என்கின்றனர் உளவியலாளர்கள்.

நாம் அன்று சிறுவர்களாக இருந்தோம் . இன்று பெரியவர்கள் ஆனோம் . நாளை முதியவர்கள் ஆவோம். இதுதான் இயற்கையின் நியதி. இதுதான் மனித வாழ்க்கை சுற்று வட்டம் . எனவே இன்றைய காலகட்டத்தில் சிறுவர்களாக உள்ளவர்களை நல்ல வழியில் இட்டுச் செல்வதே நாளை எம் சமுதாயத்திற்கு நல்ல பிரஜைகள் கிடைக்க வழிவகுக்கும். இதனை மனத்திற்கொண்டு வளர்ந்தோர் நாம் இன்றைய சிறுவர்கள் தமது வாழ்வை கொண்டாடவும் நாளைய சமுதாயத்தை ஆளவும் ஏற்றாற்போல் சிறுவர்களை வளர்ப்போம்! இது எமது கடமை! சிறுவரின் உரிமை.

## போராட்டங்களால்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரச உத்தியோகத்தர்கள் நடத்தும் போராட்டங்கள் நியாயமாகவிருந்தால் அவர்களுக்கான நீதியினை வழங்கவேண்டும். அதேபோல சாதாரண மக்கள் பாதிக்காதளவு நாட்டின் செயற்பாடுகளை கொண்டு செல்வதுடன், போராட்டங்களால் மக்கள் பாதிப்படைவதை நிறுத்துவதற்கு உரிய தொழிற்சங்களுடன் சிறந்த தொடர்பினைப் பேணி, பிரச்சினைகள் எழுகின்ற போது, தொழிற்சங்கங்களுடன் பேசி அவற்றினை தீர்ப்பதற்கான வழிகளையே நாட வேண்டும். அதைவிடுத்து போராட்டங்கள் நடத்தும் வரை பார்த்துக்கொண்டிருந்தால் நாட்டில் பாதிப்படையபோவது சாதாரண மக்களே.

இலங்கையில் உள்ள எல்லா மட்டத்தினரையும் திருப்திப்படுத்துவதற்கு பொருட்களின் விலைகளை குறைக்கின்ற போது அவற்றினை தீர்க்கொள்ள முடியுமென பலரதும் கருத்தாகவும் இருக்கின்றன. வாழ்க்கைசுமை அதிகரிப்பதற்கு பொருட்களின் விலையேற்றமே பெரும்பங்கு வகிக்கின்றது. நாட்டில் போட்டிபோட்டு, மக்களிடம் பல்வேறு கருத்துக்களை கூறி அரியணையேறும் ஒவ்வொரு நாட்டின் தலைவர்களும், நாட்டின் சாதாரணமக்களை திருப்திப்படுத்த எண்ண வேண்டும். அதற்காக இலங்கைநாட்டில் பொருட்களின் விலைகளை குறைப்பதன் ஊடாக வாழ்க்கைச்சுமையை குறைக்க முடியும். இதனை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் வெளியிட்டு அவற்றினை நிறைவேற்ற வேண்டும் என்பதே மக்களின் விருப்பும் கூட. நாட்டில் எவ்வாறான போராட்டங்கள் நடைபெற்றாலும் நாட்டில் உள்ள சாதாரண மக்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாத உறுதிப்பாட்டினை எதிர்கால நாட்டின் தலைவர்கள் மக்களுக்கு வழங்க வேண்டும்.





# மீண்டும் நீர்தேக்கத்தில் மறையும் ஸ்ரீ சண்முகநாதர் ஆலயம்

மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்

மவுசாகலை நீர்தேக்கத்தில் தற்போது நீரின் மட்டம் அதிகரித்து வருவதால் முன்னைய மஸ்கெலியா நகரில் இருந்த ஸ்ரீ சண்முகநாதர் ஆலயம் உட்பட நீரில் கட்டிடங்கள் மூழ்கியுள்ளன.

ஸ்ரீ சண்முகநாதர் ஆலயம் மலை வளம், மக்களின் மனவளம் அனைத்தும் ஒன்றிணையப் பெற்று மனம்வீசி புகழ் பரப்பி மஸ்கெலியா நகர் இந்து மக்களின் செழிப்புக்கும் விழிப்புக்கும் அருள்பாலித்து வரும் ஸ்ரீ சண்முகநாதர் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது ஆகும். மஸ்கெலியாவில் உள்ள கிராப்பு தோட்டம் 14.04.1869 இல்; அரசாங்கத்துக்கு சொந்தமானதையடுத்து ஜோன் கிரேம் என்ற வெள்ளை பிரபு அதனை வாங்கி வெள்ளையின நிறுவனத்தின் கீழ் நிர்வாகம் செய்ய வழங்கியிருந்தார். ஆகையால் கிரேம் துரை தோட்டம் என அது அழைக்கப்பட்டது. காலப்போக்கில் கிராப்பு தோட்டம் என நிலையான பெயரை பெற்று இன்றுவரை அப்பெயர் நிலையாக தமிழில் உள்ளது.

175 வருடங்களுக்கு முன்னர் மலையக மக்கள் தென்இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டனர் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு அழைத்து வரப்பட்ட கூலியாட்களை நிர்வகிக்கும் பொறுப்பு பெரிய கங்காணிமார்களிடம் விடப்பட்டிருந்தது. அவ்வாறு மஸ்கெலியா பகுதியில் பெரிய கங்காணியாக வந்தவர்களில் கிராப்பு தோட்டத்தில் இருந்த ம.தெ. செட்டியப்பன் என்ற கங்காணி, சின்ன கங்குவத்தை தோட்டத்தை சேர்ந்த பெரிய பூனாச்சிபிள்ளை கங்காணி, ராணி தோட்டத்தை சேர்ந்த ச.சி. சப்பாணிப்பிள்ளை கங்காணி, லக்கம் தோட்டத்தை சேர்ந்த பூ.பெரியண்ணபிள்ளை கங்காணி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

மக்களின் மன அமைதி, மன நிம்மதி, கட்டுப்பாடு போன்றவற்றிற்காக கடவுள் வழிபாடு அவசியம் பேணப்பட வேண்டும். ஆகையினாலேயே எம்மவர்கள் ஆலயம் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறியுள்ளனர். மஸ்கெலியா நகரில் ஆலயம் ஒன்றை அமைக்க வேண்டும் என மணியார தெவராய செட்டியப்பன் பிள்ளை கங்காணி தலைமையில் மேலே குறிப்பிட்ட கங்காணிகள் இணைந்து ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்தை அமைக்க அந்நாளில் ஏற்பாடு செய்தனர்.

1912ம் ஆண்டில் மஸ்கெலியா கிராப்பு தோட்ட கடை வீதியில் கடைகளை அண்மித்த பகுதியில் ஆலயம் கட்டும் திருப்பணி ம.தெ. செட்டியப்பன் பிள்ளை கங்காணி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிதியினை பொது மக்களிடம் இருந்துபெற ஏனைய கங்காணிமார்கள் ஏற்றுக்கொண்டனர். ஆலயத்தை கட்டியெழுப்பும் நோக்கில் தென் இந்தியாவிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு தனி கருங்கற்களை கொண்டு அழகிய ஆலயம் அமைக்க தொடங்கினர். 1913 ஆம் ஆண்டு ஆலயத்திற்கான காணியை கிராப்பு தோட்ட நிர்வாகி ஹீட் 2 சத வாடகைக்கு வழங்கினார்.

இவ்வாலயத்தை நிர்மாணிக்க தென் இந்தியாவில் புகழ்பெற்ற சிற்பிகள் துறையூர் பிரதேசத்திலிருந்து அழைத்துவரப்பட்டனர்.இவ்வாலய வேலைகள் மிகவும் வேகமாக நடைபெற்று 1917ம் ஆண்டு வைகாசி மாதம் 26ம் திகதி (26.08.1917) அன்று ம.தெ. செட்டியப்பன்பிள்ளை கங்காணி தலைமையல் ஏனைய கங்காணிகள் இணைந்து வெகு சிறப்பாக கும்பாவிமீக்த்தை நிறைவேற்றினர்.

இக்காலகட்டத்தில் அரசாங்கம் நீர் மின்சார உற்பத்திக்காக பல காட்டாறுகளை இணைத்து மதகு ஒன்றை கட்டினர். 1961ம் ஆண்டு திட்டமிட்ட இந்த மதகு அமைப்பதன் மூலம் 98 ஹெக்டோயர் காணி நீரில் மூலழ்கடிக்கும் அபாயம் உருவானது. அதில் மஸ்கெலியா நகர், கங்கேவத்தை நகரின் பல தோட்டங்கள் நீரில் மூழ்கும் அபாயம் தோன்றியது. நீர்த்தேக்கத்தின் நீர் சாமிமலை ஓயா, மறே ஓயா, சியத்தலகங்குல ஓயா, மேலும் சிற்றாறுகள் பலவும் இதில் இணைக்கபட்டன. கடந்த 1949ம் ஆண்டு நீர்த்தேக்க பணிகள் முடிக்கப்பட்டு நீர் நிரப்பும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

ஆக்காலகட்டத்தில் மஸ்கெலியா நகர் ஆலயம் மற்றும் பல தோட்டங்கள், தேயிலை தொழிற்சாலைகள், குடியிருப்புகள் போன்றவைகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டன. இதில் 18.03.1969 ஆலய விக்கிரகங்கள் அகற்றப்பட்டு புதிய நகருக்கு கொண்டு செல்லப்பட்டன. புதிய நகருக்கான இடம் ஓர் மலை முகட்டில் ஒதுக்கப்பட்டதால் மஸ்கெலியா நகரம் இருக்கும் இடம் தெரியாமல் போனது, மவுசாகலை நீர்தேக்கம் அமைக்கப்பட்டதால் பிரதான வீதிகள் பல நீரில் மூழ்கின. அதற்கான புதிய வீதிகள் அமைக்கப்பட்டன. குறிப்பாக அட்டனில் இருந்து மஸ்கெலியா வழியாக சிவனடிபாத மலை சென்ற வீதி, மஸ்கெலியா நகரில் இருந்து நோட்டன் வழியாக செல்லும் கொழும்பு வீதி, மஸ்கெலியா நகரிலிருந்து சாமிமலை செல்லும் பிரதான வீதி போன்றவை நீரில் மூழ்கின.

நீர்தேக்கத்தினுள் மூழ்கியிருந்த சண்முகநாதர் ஆலயம், பௌத்த விகாரை தற்போது சில விமிகளினால் தகர்க்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையினால் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட போதும் முறையான பாதுகாப்பு இல்லாமலேயே காணப்படுகின்றது.

மேலும் புதிய நகரில் 1969 இல் இவ்வாலயத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் தற்காலிக கொட்டகையில் சுவாமி விக்கிரகங்கள் வைக்கப்பட்டு நாள்தோறும் பூஜைகள் இடம்பெற்றன. அக்காலகட்டத்தில் ம.கு.செ.த.செ. சிவலிங்கம்பிள்ளை பரிபாலனசபையை கொண்டு நடாத்தினார். அதன் பின்னர் 1977ம் ஆண்டு புதிய ஆலயம் அமைக்கப்பட்டு அதன் தலைவராக பெ.தி. கருப்பையாப் பிள்ளை தலைமையில் மகாகும்பாபிமீகம் வெகு சிறப்பாக நடந்தேறியது. அவரது காலகட்டத்தில் 1989இலும் 2001இலும் 2011இலும் கும்பாபிமீகங்கள் சிறப்பாக நடைபெற்றன. தற்போது ஆலய பரிபாலனசபை தலைவராக டி.ராஜ், செயலாளராக கே. கிருஸ்ணமூர்த்தி, பொருளாளராக பி. வேலுசாமி அமைப்பாளர்களாக எம்.சேகர், ஏ.ஆர்.சி.டி. பெருமாள், மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான ஏற்பட்டினை மத்தியமாகாண தமிழ் கல்வி இந்து கலாச்சார முன்னாள் அமைச்சர் வீ.புத்திரசிகாமணி மேற்கொண்டார்.

1917ம் ஆண்டு முதல் இவ்வாலயத்தில் பணி புரிந்த குருக்களான ஜெயந்திநாத குருக்கள்,தியாகராஜா குருக்கள் பின்னர் பிரேமகாந்த குருக்கள் அதன் பின்னர்; சிவசங்கர குருகள் ஆகியோர் கடைமை புரிந்துள்ளனர்.மேலும் ஆலய மண்டபத்திற்கான இறுதி கட்டிட பணிக்கு வெள்ளையன் தினேஸ் வேண்டுகோளுக்கு இனங்க முன்னால் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் 70லட்ச ரூபாவும் முன்னால் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கணகராஜ் 45லட்ச ரூபாவும் வழங்கி மண்டப வேலையை பூர்த்தி செய்து அப்போதைய பிரிதி அமைச்சரும் தற்போது பாராளமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம் திறப்பு விழா செய்தமை குறிப்பிடதக்கது.

சுமார் 2 கோடி ரூபா செலவில் இம்மண்டபம் திரு.டி.ராஜிதலைமையில் தற்போதைய ஆலயபரிபாலண சபை மேற்கொண்டது. மேலும் 2016 அல்லது 2017ம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சர் திகாம்பரத்திடம் ஆலய சுற்றுவட்ட பகுதிக்கு கூறையிட நிதி கேட்டபோது அவர் அதற்கான நிதியினை 2019ம் ஆண்டு காலப்பகுதியில் வழங்குவதாகவும் அதற்கான ஏற்பாடுகளை அமைச்சரின் அந்தரங்க செயலாளரும் தேசிய தொழிலாளர் சங்கத்தின் உதவி தலைவருமான கணபதி நகுலேஸ்வரன் முன்னெடுத்து கடந்த மாதம் 50 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீட்டை அமைச்சின் ஊடாக பெற்று தந்து பணிகள் நடந்த வண்ணம் உள்ளது. 2018ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அப்போதைய நிர்வாக சபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாக சபை ஒன்றை ஏற்பாடு செய்து 2020 டிசம்பர் மாதம் வரை 2 வருட காலப்பகுதிக்கு இயங்கும். அதன்பின்னர் மீண்டும் புதிய நிர்வாகம் ஏற்படுத்த மத்திய மாகாண இந்து கலாசார திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி கிருஸ்ணவேணி உத்தரவிட்டுள்ளார்.

---

## நிராகரிக்கப்பட்ட...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி

உலகின் தலைவர்கள், நாட்டின் தலைவர்கள் யாவும் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சோகக் கதைகளை கேட்பதற்கு மாத்திரமின்றி அவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்து, மிகச் சரியான தீர்வை வழங்குவதற்கு காலதாமதமின்றி முன்வரவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களது வேண்டுகோளாகும்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சர்வதேச சமுதாயம் முன்வரவேண்டும். காலம் மிக விரைவாக கழிந்து கொண்டிருக்கிறது. கடந்த காலம் மீண்டும் வரப்போவதில்லை என்பதை உணர்ந்து கடந்த காலங்களில் ஐ. நாவினால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மிக விரைவில் நீதியைப் பெற்றுக் கொடுக்க தமிழ்த் தலைமைகள் உட்பட நல்லாட்சி அரசாங்கமும் சர்வதேசமும் முன்வர வேண்டும் என்பதே தமிழ் மக்களது எதிர்பார்ப்பாக உள்ளது.

---

## சிறுபான்மையினரை...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்கின்றனர். இவ்விடயங்களை மீறக்கூடாது என்பதில் ஒருமித்த கருத்துடன் இருப்பதுடன் இஸ்லாமிய வறையறைகளுக்கு மாற்றமாக நடக்கக்கூடாது என்பதனாலேயே எத்தனையோ கடுமையான தாக்குதல்கள், அழிவுகளை இனவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்படுத்தியிருந்த போதும் அவற்றையெல்லாம் பொறுமை காத்து நாட்டில் இரு சமுகங்களுக்கு இடையில் பிரச்சினைகளும், குழபப்ங்களும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற ஒரே நல்ல நோக்குடன் உச்சக்கட்ட பொறுமையுடனும், அமைதியாகவும் இருந்து இந்த நாட்டின் சட்டத்தையும், ஜனநாயக விழுமியங்களையும் பாதுகாத்து வருகின்றமையை இங்கு பெருமையுடன் கூறலாம்.

என்றாலும் முஸ்லிம்கள் மீதான இவ்வாறான கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை எதிர் காலத்தில் இவர்கள் மேற்கொண்டால் அது இதுவரை காலமும் கையாண்ட பொறுமையையும், அமைதியையும் பாதுகாப்பாளர்களா? என்பதில் சந்தேகம் உள்ளது. காரணம் பொறுமைக்கும், அமைதிக்கும் ஒரு எல்லை உண்டு தொடர்ந்தும் முஸ்லிம் சமுகம் மீதான சிங்கள காடையர்களின் அடாவடிகள் தொடருமானால் அது எதிர் காலத்தில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனலாம்.

முல்லைத்தீவு நீராடிப்பிட்டி விடயம் இந்த நாட்டில் தற்போது எற்பட்டுள்ள அமைதியையும், சமாதானத்தையும் குழப்பும் ஒரு பாரிய திட்டமிட்ட மீறல் சம்பவங்களாகும். இவ்வாறான சம்பவங்களை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஞானசார தேரரின் மேற்படி சண்டித்தனமான செயற்பாடுகளை ஒட்டுமொத்த முஸ்லிம்களும் எதிர்பதுடன் தமது கண்டனங்களையும் தெரிவிக்கின்றனர். இதே போன்று சமாதான விரும்பிகளும் மேற்படிச் செயற்பாடுகள் விடயத்தில் தமது கடுமையான விஷனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நாட்டில் சட்டம், நீதி, பாதுகாப்பு எல்லாம் சகலருக்கும் சமமானதாகும். எந்தவொரு தனித்தரப்பினருக்கும் மட்டும் உரித்தனதல்ல. இவ்வாறான நிலையில் நீதிமன்ற உத்தரவை ஞானசார தேரர் மீறியுள்ளமையும், அதற்கு ஒருசில பொலிஸாரும் உடந்தையாக இருந்துள்ளமையும் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருப்பதுடன், இச்செயற்பாடுகள் வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது எனலாம்.

ஞானசார தேரர் ஒரு சிறைக் கைதியாக இருந்து ஜனாதிபதியின் சொந்த பொது மன்னிப்பின்படி விடுதலையானவர். அவர் முன்பும் நீதிமன்ற உத்தரவுகளை பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் மத்தியில் பகிரங்கமாக கிளித்து எறிந்தவர். ஆனால் அவ்வாறான செயற்பாட்டுக்கு இன்று வரை நீதித்துறையோ அல்லது அரசாங்கமோ எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை என்ற என்ற விடயத்தை சமாதன விரும்பிகளும், சட்டத்தை மதிப்பவர்களும் தமது கடுமையான விஷனத்தைத் தெரிவிக்கின்றனர்.

சாதாரண ஒரு பொது மகன் ஞானசாரர் தேரர் போல் நீதிமன்ற உத்தரவை மீறியிருந்தால் இன்று என்ன நடந்திருக்கும் என்பதனை சிந்திக்க முடியுமா? ஏன் அரசாங்கம் இவ்வாறான பாரபட்சதை காட்டுகின்றது என்பதில் சந்தேகங்களே உள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் நீதி, நியாயங்கள் இந்த நாட்டில் இல்லை என்பதனையே சர்வதேசத்திற்கு காட்டுவதையே கண்டு கொள்ள முடிகின்றது. பெரும்பான்மை இன தேரர் என்ற விடயத்தில் அவருக்கென்று சட்டத்தில் சலுகைள் இருக்கின்றனவா என்ற பலவாறான கேள்விகளை கேட்கின்றனர்.

ஞானசார தேரரின் முல்லைத்தீவு நீராவிப்பிட்டி சண்டித்தனம் இந்த நாட்டில் சட்டத்தரணிகளைக் கூட அவருக்கு எதிராக கிளர்ந்தெழ வைத்தள்ளது. சிங்களவர் என்ற அகங்காரத்தினால் அவர்கள் சட்டத்தரணிகளைக்கூட தாக்கும் அளவிற்கு இன்று நாட்டில் சட்டம் செத்துவிட்டது எனலாம். கொழும்பில் இருந்து முல்லைத்தீவுக்குச் சென்று தனத அடாவடித்தனத்தைக் காட்டும் அளவிற்கு அவருக்க யார் அதிகாரங்களைக் கொடுத்தது என்ற சந்தேகம் இன்று எழுந்துள்ளது. ஞானசார தேரர் இந்தளவுக்கு வளர்வதற்கு உடந்தையானவர் கோத்தாபாய ராஜபக்ஷ என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இன்று கோத்தாபாய ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் ஞானசார தேரரின் அடாவடி மீண்டும் தலைதூக்குவதையே அவதானிக்க முடிகின்றது.

இனவாதிகளின் இவ்வாறான செயற்பாடுகள் விடயத்தில் அரசாங்கம் மக்களின் இவ்வாறான கேள்விகளுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். அரசாங்கத்தின் இயலாமையின் ஒரு அங்கமாகவே இனவாத சக்திகளின் சட்ட விரோத செய்றபாடுகள் இருந்து வருகின்றது. பல்லின சமுகங்கள் வாழும் இந்த நாட்டில் ஒரசிலர் தாம் நினைத்தமாதிரி இந்த நாட்டில் ஆட்டம் ஆட முடியாது என்பதனை இவ்வாறானவர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச தண்டனைகளில் இருந்தே பாடம் கற்க வேண்டும். ஞானசார தேரர் மெற்கொள்ளும் சகல சட்ட விரோத செயற்பாடுகளுக்கும் பொது மன்னிப்புக் கொடுத்தவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பேற்க வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த நாட்டில் சிறுபான்மைச் சமுகங்களையும், அவர்களின் சமயங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் அரசாங்கத்திற்க உரியது. இவ்வாறான பொறுப்புக்கள் இருக்கின்ற நிலையில் ஒரு இனவாத தேரர் சட்ட விரோதமாக ஆட்களைத் திரடடிடீக் கொண்டு இந்த நாட்டில் மூலை முடுக்குகளுக்குள் சென்று சிறுபான்மை மக்ளின் ஜனநாயக உரிமைகளுக்கும், நீதிகளுக்கும் இடையூறு செய்து வன்முறைகளில் ஈடுபடுவதை உடன் நிறுத்தி சம்பந்தப்பட்ட தீவிரவாத சக்திகளை சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்திற்கு வினயமாக கேட்டுக் கொள்கின்றனர்.

---

## இலஞ்ச..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

முன்வைத்திருந்தார்.

### இலங்கை ஆசிரியர் சங்கம் புகார்

வடமாகாணத்தில் கல்வித்துறையில் இடம் பெறும் நிதி, நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் ஆளுநரிடம் முறையிட்டு இரண்டு மாதங்களாகியும் அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவத்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதாகவே இச்சங்கம் சமர்ப்பித்து நீதியான விசாரணைகளை நடாத்த விசாரணைக்குழுவை நியமிக்காத காலதாமதத்தால் ஒரு பாடசாலையில் மிக அவசரமாக போலியான பற்றுச்சீட்டு வழங்கப்படுவதாகவும் ஆளுநருக்கு தெரிவத்தோம் எனவும் அவர் தெரிவித்தார்

மாகாண,தேசிய பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும்போது பெரும் தொகைப்பணம் அதிபர்களால் முறைகேடாக பெறப்படுகிறது. வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்கள் சேர்த்துள்ளனர். இவ்வாறான முறைகேடுகளை வடமாகாணத்தில் தடுக்காமல் நேர்மனப்பான்மை கொண்ட முன்னுதாரணமான கல்வி நிலைக்கு கொண்டுவருவது என்பது ஒருபோதுமே சாத்தியப்படாது என்பதை பொறுப்புடன் கூறுகின்றோம். இனிமேலும் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்சங்க பணிகளை எடுப்போம் எனவும் அச்சங்கம் தெரிவித்திருந்தது. இன்று யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் விடயம் இதனை தெளிவாக காட்டியுள்ளது. இந்துக் கல்லூரி அதிபரின் செயற்பாடுகள் குறித்து பழைய மாணவர் சங்கம் ஆளுநரிடம்,கல்வி அமைச்சரிடம் ஏற்கனவே பல தடவைகள் புகார் அளித்தபோதிலும் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் நிலைமை இந்தளவுக்கு வந்திருக்காது. நாட்டில் புகழ்பூத்த இக்கல்லூரியின் வரலாற்றில் இது ஒரு கறைபடிந்த சம்பவமாகும். அரசியல் செல்வாக்கினால் தன் மீது எவருமே எதுவுமே செய்யமுடியாது என்ற நிலைப்பாட்டில் இந்த அதிபர் செயற்பட்டுள்ளார்..

இந்த சம்பவத்தை தொடர்ந்து ஆளுநர்,24 ஆம் திகதி அவசரமாக மாகாண கல்வி அதிகாரிகளை அழைத்து பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்க்கும்போது நன்கொடைகளை பெற்றுக்கொள்ள முடியாது என்றும், அவ்வாறு பெறுவதானால் அது தொடர்பிலான அனுமதியை முன்கூட்டியே வடமாகாண கல்விஅமைச்சசிடம் இருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும், தெரிவித்துள்ளார். அதேவேளை வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.சுற்றுறிக்கைகளுக்கு அமைவாக பாடசாலைகள் செயற்படவேண்டும்.மாணவர்களை சேர்ப்பதற்கு நன்கொடைகள் வழங்குமாறு கேட்டால்,அது தொடர்பான தகவல்களை ஆளுநர் செயலகத்துக்கு அறியத்தரவேண்டும்.ஆளுநர் செயலகத்தின் ஊடாக இத்தகவல்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும்.இது தொடர்பாக மாகாண கல்விப்பணிப்பாளர்,மற்றும் வலய கல்விப்பணிப்பாளர், அதிபர்கள் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும் எனவும் ஆளுநர் சுரேன் ராகவன் அறிவத்துள்ளார்.

### இரணைமடு குளம் உடைப்பு விசாரணை

கடந்த ஆண்டு வன்னியில் கொட்டிய பெரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள்,வீடு வாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.பெருமளவு விவசாய நிலங்கள ,கால் நடைகள. அழிந்தன. முப்பது வருட கால யுத்தத்தால் அதிக இழப்புக்கள சந்தித்த இந்த மக்கள் இயற்கையின் சீற்றத்தால் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளனர்.இந்த வெள்ளப்பெருக்குக்கு காரணம் இரணைமடுக்குள உடைப்பே என்பது கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்தும் ஆளுநரிடம் பலரும் புகார் தெரிவத்து மகஜர்களும் கையளித்தனர். இக்குளம் புனரமைக்கப்பட்டபோது ஊழல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால்,சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடாத்தப்படவில்லை என் புகார் அளித்தவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது வடமாகாண சபை இயங்குவதில்லை. ஆளுநருக்கே அதிகாரங்கள். ஜனாதிபதியின் பிரதிநிதியாக அவர் பணியாற்றுகிறார். இவ்வாறான ஊழல், இலஞ்சம்,மோசடிகளிக்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுத்து வடமாகாண மக்களுக்கு மேலும் சிறந்த சே வைகளை ஆளுநர் செய்யவேண்டும்.

# குடும்பத்தின் வழிகாட்டி முதியோர்

இன்றைய சூழலில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2050ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடுகளில், குழந்தைகளை விட முதியோர் அதிகளவில் இருப்பர். அதே போல, வளரும் நாடுகளிலும் முதியோரின் எண்ணிக்கை இருமடங்காக உயரும் என ஐ.நா., மதிப்பிட்டுள்ளது. வயதான காலத்தில், இவர்களை நன்றாக கவனிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அக்., 1ம் தேதி, சர்வதேச முதியோர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள், முதியோர்களை மகிழ்விக்கும் விதமாக சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இன்றைய விரைவான உலகில் குடும்ப உறவுகள் என்பது முன்பு இருந்ததை போல இல்லை. பெற்ற பிள்ளைகளால் கவனிக்கப்படமால் கைவிடப்பட்டு, பொருளாதாரத்தாலும் பாதிக்கப்பட்டு, அனாதைகளை போல வாழும் நிலைக்கு முதியோர் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களை பாதுகாக்க ஒவ்வொரு பிள்ளையும் முன்வர வேண்டும் என இத்தினம் வலியுறுத்துகிறது.


### முதியோர் சுமையா

முதியோர் குழந்தைகளுக்கு சமம் என கூறுவார்கள். 50 வயதினை கடந்தவர்கள் முதியோராக கருதப்படுகின்றனர். உடல் மற்றும் மனதளவில் அவர்களின் செயல்பாடுகள் மாறிவிடும். முதியோர்களின் அறிவு மற்றும் வழிகாட்டி இன்றைய தலைமுறையினருக்கு மிகவும் அவசியமானது. அவர்களை சுமையாக கருதாமல், வரமாக கருதுங்கள். குடும்பத்தில் முதியோரை அரவணைத்து செல்லுங்கள். நாமும் எதிர்காலத்தில் முதியோர் ஆவோம் என்பதை நினைவில் நிறுத்தி, அந்த சுயநலத்துக்காவது முதியோர்களை கவனிக்க முன்வர வேண்டும்.

### குறையுமா முதியோர் இல்லம்

பிள்ளைகள் நல்ல வசதியோடு இருந்தும், பெற்றோர்களை தாங்களே பார்த்துக்கொள்ளாமல் முதியோர் இல்லங்களில் சேர்க்கும் கொடுமையும் நம் நாட்டில் தான் நடக்கிறது. யாருடைய பெற்றோராவது முதியோர் இல்லத்தில் இருந்தால், மீண்டும் வீட்டுக்கு அழைத்துவர இத்தினத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அரசும் முதியோருக்கு, பென்சன் உள்ளிட்ட சிறப்பு சலுகைகளை வழங்க வேண்டும்.

## பெற்றெடுத்த உனக்கு.. நாளை...



பாமரரும் ,கிராமத்தாரும்,
பண்பு மாறவில்லை,
மனசு மறக்கவில்லை,
மறந்தும் செய்யவில்லை.

படித்தவரும்,பட்டினவாசியும்,
அவசியமென நினைக்கின்றார்.
பெருமையோடு செய்கின்றார்.

தன் வசதி மட்டும் கருதி,
தாய் தந்தை வயது காட்டி,
தள்ளாடும், தடுமாறும், காலத்தில்
பெற்றோரை,
முதியோர் இல்லங்களில்
அடைகின்றார் .

பணம் மட்டும் கட்டி விட்டால்
பாசம் என்ன ,
கடைச் சரக்கா வாங்கிவிட!

ஏங்குது உள்ளம்,
எதிர்பார்ப்பது ஒரு வார்த்தை.
கொஞ்ச நினைப்பது,
பேரப்பிள்ளைகளை.

உயிர் கொடுத்து,
கல்வி கொடுத்து,
உடனிருந்து உயர்த்தியது,
உன் பெற்றோர்.
உண்மை தெரிந்தும்,
உயர்வு அறியவில்லை.

பெற்றோருக்கு இன்று ,
பெற்றெடுத்த உனக்கு நாளை .
உன் பிள்ளை உடனிருந்து
கவனிக்கிறான் உன்னை.

# சர்வதேச முதியோர் தினமும் முதியோர் உரிமையும்



மனித வாழ்வின் இறுதிப் பகுதியும்இ ஒய்வுப் பகுதியுமாக முதுமைக் காலம் காணப்படுகின்றது. இக் காலப் பகுதியை அடைந்து கொண்ட மனிதர்களை முதியோர் என அழைக்கப்படுகிறது. பொதுவாக முதியோர் என்பவர்களின் வயது எல்லை 60 வருடங்களின் பின்னர் என வரையறை செய்யப்படுகின்றது.

மனிதன் பிறந்து குழந்தையாக சிறுவனாக இளைஞனாக நடுத்தர வயதுடையவனாக எல்லாம் வாழ்ந்து விட்டு கடைசியில் முதியவனாக மாறுகின்றான் இது இயற்கையின் நியதியாகும். இதில் விசேடம் என்ன வென்றால் வாழ்கையின் கடைசிக்கட்டத்தில் முதியவர்களான காணப்பட்டாலும் அவர்களின் நடவடிக்கைகள் மனிதனின் ஆரம்பக்கட்டமான குழந்தை அல்லது சிறுவர்களின் நிலையை அடைகின்றது. இதன் மூலம் சிலர் முதியோர் மீது கோபம் கொள்கின்றனர். இது பிழையான செயற்பாடும் இயற்கைக்கு முரணான நடவடிக்கையுமாகும்

சிறுவர் உரிமைபற்றி பேசுவது போல் முதியோர் உரிமைபற்றி அதிகம் பேசப்படுவதில்லை இதனால் முதியோர் உரிமை பற்றிய அறிவு மக்களிடம் குறைவாககாணப்படுவதை அறிய முடிகின்றது. எனவே முதியோர் உரிமை பற்றிய கட்டாயம் அனைவரும் அறிய வேண்டும்இ பேச வேண்டும். முதியோரின் செயற்பாடுகள் சிறுவர்களின் செயற்பாடுகளுக்கு ஒத்ததாக காணப்படுவதனால் தான் என்னவோ ஜக்கிய நாடுகள் சபை சர்வதேச முதியோர் தினத்தை சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படும் தினமான ஒக்டோபர்- 01ம் திகதி என பிரகடனப் படுத்தியுள்ளது.

சர்வதேச முதியோர் தினம் ஜக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 1990 டிசம்பர் 14ம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு முதல் முதலாக 1991 ஒக்டோபர்-01ம் திகதி கொண்டாடப்பட்டது. 2016ம் ஆண்டு 26 வது சபை சர்வதேச முதியோர் தினம் கொண்டாப்படுகின்றது. சர்வதேச முதியோர் தினத்தினை ஜக்கிய நாடுகள் சபை 26 வருடங்களாக பல தொனிப் பொருளின் அடிப்படையில் கொண்டாடுமாறு உலக மக்களை வேண்டி வருகின்றது. இருந்த போதிலும் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தும் மதங்கள் தோன்றிய காலத்திலிருந்தும் முதியோருக்கான உரிமைகளை வழங்குமாறு மதங்கள் கூறியுள்ளன.

இஸ்லாமிய மதத்தின் இறை தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் சிறியோர் மீதுஅன்புகாட்டாதவனும்இ பெரியோர்(முதியோர்) மீது மரியாதை செலுத்தாதவனும் என்னை சார்ந்தவனல்ல எனவே முதியோர் மீது மரியாதைஇ கௌரவம் காட்டாவிட்டால் அவர் மதத்திலுள்ளவரல்லர் என்பது அதன் பொருளாக கொள்ளப்படும். இதே போன்று இந்து மதத்தின் பகவத்கீதை கூறுகின்றது மனித வாழ்வின் இறுதிக்கட்டமான முதுமைக்காலத்தில் முதியவர்களைப் பாதுகாப்பது தர்மமாகும். மேலும் பௌத்த மதத்தின் சிங்காலோவாத சூத்திரத்தில் பின்வருமாறு கூறுகின்றது. பெற்றோருக்காக (முதியோர்) பிள்ளைகள் செய்ய வேண்டிய நலனோம்பல்களை கட்டாயம் பங்கு கொள்ள வேண்டும் எனக் கூறுகிறது. அதாவது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்குதல், மதத்தை பின்பற்றுவதற்கு சுதந்திரம் வழங்குதல், மரணித்த பின்பும் அவர்களுக்காக நற்கிரிகைகள் செய்தல் போன்றவற்றை குறிப்பிடுகின்றது.

ஆனால் இன்று நடப்பது என்ன? பிள்ளைகள் தமது முதிய பெற்றோர்களை பராமரிக்காமல் முதியோடர் இல்லங்களில் சேர்ந்துவருகின்றனர். இவர்களின் பிள்ளைகளும் இதனை இவர்களுக்கு செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எனவே நாம் எவ்வாறு முதியோர்களுடன் நடந்து கொள்கின்றோமோ அவ்வாறே நாம் முதுமை அடையும் போது மற்றவர்கள் எம்முடன் ;நடந்துகொள்வார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக எமது சமுகத்தில் ஒருகதை சொல்லப்படுகின்றது.

ஒருமுதியவர் இறந்தபோதுஅவரின் பேரப்பிள்ளை ஒரு பீங்கானை (பாத்திரம்) எடுத்து பாதுகாப்பாக வைத்துள்ளது இதனை பார்த்த இறந்தவரின் மகனும் சிறுவனின் தந்தையுமான மனிதர் கேட்டார். ஏன் மகன் இதனை எடுத்து வைத்துள்ளிர் என்று அப்போது அச்சிறுவன் கூறினான் அப்பா நீங்கள் உங்கள் அப்பாவுக்கு உணவு வழங்கிய பாத்திரம் தான் இது அதனைத்தான் நான் உங்களுக்கு உணவு தரப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறினான். இது மிகவும் சிந்தனையூட்டும் கதையாகும். எனவே நாம் முதியவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றோமோ அவ்வாறே நாம் முதியோர்களாகும் போது மற்றவர்களால் நடாத்தப்படுவோம்.

இன்று உலகில் 60 வயதைத்தாண்டிய முதியோர் சுமார் 1.4 பில்லியன் காணப்படுகின்றனர். எனவே இவர்களின் உரிமைகளை அறிவதன் மூலம் அவர்களுக்கான உரிமையையும் கௌரவத்தையும் வழங்க முற்பட வாய்ப்புண்டு மூத்த பிரஜைகளின் உரிமைகளாக சுதந்திரம், பங்கேற்பு, கவனிப்பு, சுயநிறைவு, கௌரவம் என்பவற்றைக் கூறிப்பிட முடியும். சுதந்திரம் எனும் போது உணவு, உடை, உறைவிடம், வேலை, கல்வி, என்பற்றினை அனுபவிக்கும் உரிமைகளைக் குறிக்கும் இவற்றை சமுகப்பாதுகாப்பினூடாக அவர்கள் சுதந்திரமாக பெறமுடியும். இதே போன்று பங்கேற்பு, கூட்டம் கூடுதல், சங்கம் அமைத்தல் என்பவற்றில் பங்குகொள்ளும் உரிமை. கவனிப்பு எனும் போது உடல், உள, உணர்வு, சுகாதார கவனிப்புகளை வேறுபாடின்றி அனுபவிக்க உரிமை. சுயநிறைவு எனும் போது ஆற்றலை வெளிப்படுத்துதல், கல்விகலாச்சார ஆத்மிகவசதிகளை சமுகத்தில் பெற்றுக்கொள்ளும் உரிமை, அதே போன்று கௌரவம் எனும் போது வயது, பால், இன, சமய இயலாமை என்பவற்றை கருத்தில் கொள்ளாது முதியவர்களை கௌரவப்படுத்துதல்.

மேற்படி உரிமைகளின் அவசியத்தை நாம் முதியவர்களை கவனிக்கும் போதும் அவர்களுடன் உரையாடும் போது புரிந்து கொள்ள முடியும். சுதந்திரத்தை அவர்கள் அதிகம் விரும்புவார்கள் ஏனையவர்கள் கட்டுப்பாடுகள் விதிப்பதை அவர்கள் சிறுவர்கள் போன்று வெறுப்பார்கள். அதே போன்று பங்கேற்பது என்பது அவர்களுக்கு மிக அவசியமானதாகும். முதியவர்களை சந்திக்கும் போது அவர்கள் அதிகம் குறைப்படும் விடயமாக இது காணப்படுகின்றது. அவர்கள் கூறுகின்ற வார்த்தையாக நம்மல ஒன்றுக்கும் சேர்க்க மாட்டார்கள் நமது கதையை கேட்கின்றார்கள் இல்லை. என்பதாகும். முதியவர்களுக்கு காசு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை அவர்களின் கதையை சற்று நேரம் நாம் கேட்டுக்கொண்டிருந்தாலே போதும் அது அவர்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சியை வழங்குகின்றது என்பது எனது அனுபவத்தின் உண்மை. எனவே அவர்களின் உரிமையை மதிக்கவும்இ கொடுக்கவும் எமது சிறுவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். அதனை நாம் மேற்கொள்வதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

பழையது தங்கம் போன்றது (Old Is Gold) என ஆங்கிலத்தில் கூறுவார்கள் உண்மையில் இது மிகவும் முக்கியமான கூற்று. அவர்களின் அனுபவங்கள் எமக்கு மிகவும் பிரியோசனமானது ஏன் எனில் அனுபவம் விஞ்ஞானத்தின் தாய் என்பார் (EXPERIENCE IS MOTHER OF SCIENCE) எனவே நாம் அவர்களின் அனுபவத்தை பெறும் போது அது நமக்கும் நன்மை பயக்கும், அவர்களுக்கும் மகிழ்ச்சி கொடுக்கும் அதன் மூலம் முதியவர்கள் தங்களுக்கு கௌரவம், பங்கு பற்றும் உரிமை, ஏனைய உரிமைகள் கிடைக்கப் பெற்றதாக உணர்வார்கள். இதனால் முழு சமுகத்திலும் சந்தோசம் ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

மேலும் மனித உரிமைகள் மேம்பாட்டாளர்கள் முதியோரின் உரிமையில் மிகவும் உணர்வு பூர்வமான ஒரு சிந்தனையை முன் வைத்துள்ளனர் அதாவது 60 வயதை தாண்டிய எமது மானிடரை முதியோர் என அழைப்பது அவர்களின் மனதுக்கு சங்கடத்தை அல்லது விருப்பமின்மையை ஏற்படுத்துமாக இருந்தால் முதியோர் எனும் சொற் பிரயோகத்திற்கு பதிலாக வயது வந்த பெற்றோர்கள் எனக் குறிப்பிடுவது சாலச் சிறந்தது. என கருதுகின்றனர்.

கட்டுரையாளரான நானும் இதனை விரும்பிய போதிலும் பரீட்சியமான சொற் பிரயோகமான முதியோர் என்பதை பாவித்துள்ளேன் ஏனெனில் இக்கட்டுரை இச்செற்பிரயோகத்தின் மூலம் வாசகர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்காக ஆகும்.

எனவே உலகில் நாம் நல்ல மனிதர்களாக வாழ வேண்டுமாக இருந்தால் எமது சிறுவர்கள் பெண்கள் முதியோர் உரிமைகளை வழங்கி நடக்க வேண்டும் முதியோர்களின் செயற்பாடுகளை மதித்தல் அவர்களுக்கு உதவி செய்தல் போன்றவை தர்மமாகும் எனவே இந்த சர்வதேச முதியோர் தினத்தில் முதியோர்களை கௌரவப்படுத்தும் மக்களாக நாம் அனைவரும் செயற்பட திட சங்கற்பம் பூணுவோம் இதற்கு இறைவனின் உதவி கிட்ட பிராத்திப்போம் வாழ்க மனித நேயம்.

# போதும் மகனே போதும்...

தவமிருந்துதான் பெற்றோம்
உன்னை,
தடுமாறி வாழ்கை நடத்தியபோதும்
தனித்தன்மையாய் வளர்த்தோம்,
உன் எச்சில் பட்ட
என் கண்ணங்கள்
இன்னும் குளிருதாடா..!மகனே...
உன் மழலை புன்னகையை
பிச்சை கேட்டு
பல நாட்கள் உன்னிடம்
மண்டியிட்டிருக்கிறேன் ,
என் செல்ல மகனே...,
உன் பால் வாசத்தில்
என் பாசம் உணர்ந்தேன்,
நீ கடித்து காயபடுத்திய
என் கன்னத்து தழும்பை
இன்னமும் முத்தமிடுகிறாள்
உன் அம்மா...!
என் கிழிந்த வேட்டியை
மறைத்து,மடித்து கட்டி
வேட்டி வாங்கும்
பணத்தில் வாங்கியதுதான்
உன் வெள்ளி பாலாடை...!
என் அன்பு மகனே..!
முதல் முறை
நீ பள்ளி செல்லும்போது
உன்னை மருத்துவனாகதான்
பார்த்தேன் இந்த பாவி..,
கல்லூரி செல்லும்போது
கர்வத்தோடு பார்த்தேன்...,
மணக்கோலத்தில் உன்னை
பார்த்தபோதுதான்,
உயிருடன் மோட்சமான
முதல் மனிதனானேன்..,
என் கடமை முடிந்தது
என் அன்பு மகனே...!
ஓர் இரவு,
வீட்டில் படுத்துவிட்டு
விழித்து பார்த்தால்,
நானும் உன் தாயும்
கிடந்தது
''முதியோர் இல்ல'' வாசலில்...,
பேர பிள்ளைகள்
உதைக்க காத்திருந்த
மார்பில்,
நீ உதைத்ததெப்படி..?
என் செல்ல மகனே..!
என் மகன் இப்படி ஆனதெப்படி..?
உன் தாய்
கொடுத்த பால்
விஷமானதெப்படி..?
என் மேல் சிந்திய
உன் எச்சில்
அமிலம் ஆனதெப்படி..?
போதும் மகனே போதும்..!
உயிரை கொல்பவன் மட்டும்
கொலைகாரன் அல்ல...
உணர்வை கொல்பவனும்தான்..,
நீ கொலைகாரன் ஆனதெப்படி...?
நீ செய்ததை
என் உடல் தாங்கும்...
என் உள்ளம் தாங்காது..
நான் தாங்குவேன்
உன் தாய்
தாங்கமாட்டாள்...!
பாலூட்டியவளாயிற்றே...!!!
மகனே..!
வாரம் ஒருமுறை
என் பேரப்பிள்ளைகளை
கூட்டி வா..,
இவர்கள்தான் ''தாத்தா பாட்டி''என்று
அறிமுகம் செய்,
''தாத்தா பாட்டி சாமிகிட்ட போய்
டாங்க'',
என்று கூறி எங்களை
உயிரோடு எரிக்காதே...!
எங்கள் நிலை பார்த்து
உன் பிள்ளைகள்
வளர்ந்தால்தான்,
நீ எங்கள் நிலைக்கு
வராமல் இருப்பாய்..!!!
நீ மிகவும் நல்லவன்
என் செல்ல மகனே..!!!
அனாதையாக எங்களை
விட்டுவிடாமல்,
முதியோர் இல்லத்தில்...
சேர்த்தாயே...!!!
நன்றி மகனே
என் மகன் நல்லவன்...!!!

**- இளையபாரதி**

### இன்றைய...

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

சிறுவர்களுக்கான பல தொண்டு நிறுவனங்கள் பல உதவிகள் செய்தாலும் அவை எல்லோரையும் சென்றடைவதில்லை . வசதி உடைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சின்ன வயதிலே சேமிப்பு கணக்கை ஆரம்பித்து மாத, மாதம் பணத்தை வைப்பில் இடுகின்றனர். அவர்கள் வளர்ந்ததும் அவர்களின் தேவைக்கு பயன்படும்படி பெற்றோர் வைப்பில் இடுகின்றனர். இது ஒரு நல்ல விடயம். ஆனால் எல்லா பெற்றோர்களும் வசதி உடையவர்களா ? இல்லையே .

போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் விற்பனை அல்லது அந் நட வடிக்கைகளில் ஈடு படுவதில் இருந்து விலகியிருப்பதற்கான உரிமை சிறுவர்களுக்கு உண்டு. பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுதல், அல்லது பாலியல் ரீதியாகத் தவறான பயன்களைப் பெறுதல், மற்றும் சட்டவிரோத பாலியல் நடவடிக் கைகளுக்காக தூண்டப்படுதல் ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

தந்தை குடிப்பவராக, சிகரட் பத்துபவரக இருந்தால் அதை வீட்டில் பிள்ளைகளுக்குமுன்னால் குடிப்பதை நிறுத்தவேண்டும் . சிறுவர்களை கூடுதலாக கண்டித்தும் வளர்க்க கூடாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கூடுதலாக ஏசுவது,அடிப்பதை தவிர்த்து நல்ல புத்திமதிகளை கூறி , அன்பாக பிள்ளைகளை வளர்க்க வேண்டும் . சிறுவர்களை பெற்றோர் வேலைகளுக்கு அமர்த்துவதை தவிர்க்கவேண்டும் .

அவர்களை கஷ்டப்பட்டாவது படிக்க வைக்க வேண்டும். சில பெற்றோர் தங்கள் பிழைகளை எவ்வளவு கஷ்டப்பட்டாவது படிக்க வைக்கிறார்கள். எதிர்காலத்தில் தங்கள் பிள்ளைகள் தன சொந்தகாலில் நிக்க வேண்டும். பிறரை நம்பி இருக்க கூடாது .என்று நினைத்து கஷ்டப்பட்டாவது தமது பிள்ளைகளை படிக்க வைப்பார்கள். ஆனால் சில பெற்றோர் பிள்ளைகளை சிறு வயதிலேயே தங்கள் கஷ்டத்தின் நிமித்தம் வேலைக்கு விடுகிறார்கள்.

நாம் பட்ட கஷ்டம் நம்மோடு போகட்டும். பிள்ளைகள் நல்ல நிலைக்கு வரவேண்டுமென பெரும்பாலான பெற்றோர் நினைக்கின்றனர்.அதை புரிந்து கொண்டு பிள்ளைகள் பெற்றோரின் கனவுகளை நனவாக்கவேண்டும்.தம் பிள்ளைகளை உலகம் சான்றோன் என போற்ற வேண்டுமென தான் எல்லா பெற்றோரும் விரும்புவர். சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். சிறுவர்களை கடத்தல், கப்பம் பெறுதல் , சில சட்டவிரோத செயல்களில்சிறுவர்களை ஏடுபடுத்தல் போன்றவற்றை நிறுத்த வேண்டும். இவற்றுக்கு துணை போபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எல்லா நாடுகளிலும் சிறுவர்களுக்கு எதிரான சட்டதிட்டங்கள் இருக்கின்ற போதும் அவை பேரளவில் இருக்கின்றனவே தவிர அவை அமுல்படுத்த படுகின்றனவா? இல்லையே. அதுதான் இவ்வளவு பிரச்சினைகளுக்கும் வழி கோலுகின்றன . இவற்றை தடுக்க வேண்டும் . நல்ல சிறுவர்களை இந்த சமூகத்தில் உருவாக்கி நல்ல பிரைஜைகளாக உருவாக்க வேண்டும் . அப்போது தான் நாட்டில் பல நல்ல பிரைஜைகளை உருவாக்க வேண்டும்.

நாம் அன்று சிறுவர்களாக இருந்தோம். இன்று பெரியவர்கள் ஆனோம். நாளை முதியவர்கள் ஆவோம். இதுதான் இயற்கையின் நியதி. இப்படித்தான் நடக்கும். இதுதான் மனித வாழ்க்கை சுற்று வட்டம். சிறுவர்கள் அனைவருக்கும் சிறுவர்தின வாழ்த்துக்கள்.

# கிழக்கு தந்தி

## மட்டக்களப்பில் கலாச்சார அமைச்சினால் கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கல்



வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அமைச்சின் வழி காட்டலில் உதவி தேவைப்படும் கலைஞர்களுக்கு உதவி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் கலைஞர்களுக்கு உதவித் தொகையினை வழங்கும் நடவடிக்கையினை கலாச்சார அலுவல்கள் திணைக்களம்; தற்போது மேற்கொண்டு வருகின்றது.

அமைச்சர் சஜித் பிரேமதாசவின் ஆலோசனைக்கமைய இந்த உதவித்தொகை வழங்கும் திட்டம் மாவட்ட ரீதியாக திருப்திகரமாக தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறிய கலைஞர்கள் 53 பேருக்கு தலா 10000 ரூபா வீதம் உதவித் தொகைகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் எம்.ஏ.சீ.ஜெய்னுலாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த உதவித் தொகைக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இதன் போது நாட்டுக்கூத்து,கரகாட்டம்,கவிதை,மத்தள வாத்தியம்,எழுத்துத்துறை,உட்பட பல துறைகளில் இம் மாவட்டத்தில் கலைத்துறைக்கு பணியாற்றிய முதுபெரும் கலைஞர்கள் குறித்த நிதித் தொகையினை பெற்றுக் கொண்டனர். ஓட்டமாவடி,வவுணதீவு,ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த வறிய கலைஞர்கள் இந்த உதவித் தொகைகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.வை.தனுசியா,பதவி நிலை உதவியாளர் மொகமட் றிழா,மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் கடமையாற்றும் கலாச்சார உத்தியோகத்தர்கள் கலைஞர்கள் மற்றும் கலைத்துறை குடும்பம் சார்ந்த உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இங்கு அரசாங்க அதிபர் கருத்து வெளியிடுகையில் இன்னும் இம் மாவட்டத்தில் கலைஞர்களை வாழ வைத்துக் கொண்டு இளம் தலைமுறையினருக்கு கலைத்துறையை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் இத்தகைய கலைஞர்களின் செயற்பாடுகளை மனதார பாராட்டுகின்றோம்.எதிர் காலத்தில் இம் மாவட்டத்தில் உள்ள மூத்த கலைஞர்கள் மற்றும் இளைய கலைஞர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் கௌரவிக்கவும் ஏற்பாடுகளை செய்யப்படும் இதனை நோக்காக கொண்டு மாவட்ட கலைஞர்கள் பேரவை அமைக்கப்பட்டுள்ளது.எனக் குறிப்பிட்டார்.

## முல்லைத்தீவு நீராவியடியில் ஏற்பட்டுள்ள பிரச்சனையானது அனைவரும் வெட்கி தலை குனிய வேண்டிய விடயம்

### கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றியம் கண்டனம்



இந்து குருமார் ஒன்றியம் முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய சூழலில் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி இறந்த தேரரின் உடல் தகனம் செய்யப்பட்டமை, அதனைத்தொடர்ந்து அங்கு ஏற்பட்ட அமைதியின்மையை கண்டித்து கிழக்கிழங்கை இந்து குருமார் ஒன்றியம் ஊடக அறிக்கை ஒன்றை மட்டக்களப்பு வீரகத்தி பிள்ளையார் ஆலய முன்றலில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 23ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீராவியடியில் ஏற்பட்டுள்ள பிரச்சனையானது அனைவரும் வெட்கி தலை குனிய வேண்டிய விடயமாகும்.நல்லாட்சி அரசாங்கத்தில் அனைவரும் ஒரே ஒற்றுமையாக வாழவேண்டும். 'இது பௌத்த நாடு'என பிக்குமார் கூறுவது ஏற்புடையதல்ல.

அதுமட்டுமல்லாமல் நீதித்துறையை பிக்குமார் அவமதித்துள்ளார்கள்.தொடர்ந்து இவ்வாறான செயற்பாடானது இடம்பெற்று வருகின்றது.

எனவே இச்செயற்பாட்டை கிழக்கில் வாழுகின்ற இந்துக்கள் சார்பாகவும்,இந்து மத அமைப்புக்கள் சார்பாகவும்,எமது இந்து மத குருமார் ஒன்றியம் சார்பாகவும் எமது நாட்டின் இந்துமத பொக்கிசங்கள் நிறைந்த இடமாக போற்றப்படுகின்ற முல்லைத்தீவு நீரவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் புனிதத்தன்மையை சீர் கெடுத்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

திருகோணமலை கன்னியாவிலும் முல்லைதீவிலும் நடைபெற்ற தகாத சம்பவங்கள் எமது இந்து சமயத்தை தொடர்ச்சியாக அவமதித்த வருகின்ற செயற்பாடுகளாகவே இருந்து வருகின்றது.நாட்டின் நல்லாட்சி என்ற பெயரில் எமது மக்கள் , எமது மதம்,எமது கலை , கலாச்சாரம்,பண்பாடு என்பவற்றில் பாரிய கலங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஒருநாளும் மன்னிக்க முடியாது.எம்மை படைத்த இறைவனும் ஏற்றுக் கொள்ளமாட்டார். இது தெய்வ நிந்தனையும் கூட,எனவே தயவு செய்து எமது இந்துமத அலுவல்கள் அமைச்சர் மற்றும் கிழக்கு மாகாண அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதற்கு தீர்வை பெற்றுத்தர வேண்டுமென்ற கோரிக்கையுடன்,இச்சம்பவத்தை கிழக்குமாகாண இந்து குருமார் ஒன்றியம் சார்பாக வன்மையாக கண்டிக்கிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு சிறுக்கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு



சிறுக்கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்துவைக்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுக்கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி நிகழ்வு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி.நவரூவரஞ்சினி முகுந்தன் தலைமையில் (27.09.2019) நடைபெற்றது.

இங்கு பாவனையாளர் தொடர்பான சட்டதிட்டங்கள் ,நியமங்கள் ,பிரச்சனைகள் ,உரிமைகள் ,பொறுப்புக்கள்,கடமைகள் தொடர்பாக அறிவூட்டல்களை நுகர்வோர் அதிகார சபை கிழக்கு மகாண இணைப்பாளர் சு.கு அன்வர் சதாத் விரிவாக விபரித்தார்.

இதில் வியாபாரிகள் தரமான பொருட்களை நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்க வேண்டும் என்பதையும் எதிர்காலத்தில் உணவகங்களுக்கு உணவின் தரத்தினை மேம்படுத்துவதற்காக நல்ல உற்பத்தி நடைமுறை உத்தரவாத சான்றுதல் வழங்கப்படும் என தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித்திணைக்கள உதவி ஆணையாளர் மு.தனரூபன் வருமான வரி செலுத்தவேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் செலுத்துவதனால் நாட்டிற்கு கிடைக்கும் நன்மைகள் பற்றியும் கருத்துரை வழங்கினார்.

இக்கூட்டத்திற்கு உள்நாட்டு இறைவரித்திணைக்கள உதவி ஆணையாளர்கள் கே.தனரூபன், எம்.சீ அன்வர், மாவட்ட இணைப்பாளர் திருமதி. கீதா சுதாகரன் ,தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அரச திணைக்கள தலைவர்கள் சிறுக்கைத்தொழில் முயற்சியாளர்கள்,பாவனையாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி பொதுஜன பெரமுனை கட்சியுடன் இணைவு

**கனகராசா சரவணன்**



தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியும் அவரின் ஆதரவாளர்கள் 42 பேர் பொதுஜன பெரமுனை கட்சியுடன் மட்டக்களப்பு பாசிக்குடா உல்லாச விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (22) பொதுஜன பெரமுனை கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் .சந்திரகுமாருடன் இணைந்து கொண்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி கருத்து தெரிவிக்கையில் .

இன்று எங்களுடைய பிரதேசத்துக்குள்ளேயே எங்களுடைய பிரதேசம் பறி போகின்றது யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் தமிழ் மக்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒன்றும் செய்யவில்லை.

இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்த என்னை தமிழ் மக்கள் இங்கு வந்து அரசுடன் இணைந்து எமது தமிழ் பிரதேச அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கைக்கு இணங்க இங்கு வந்துள்ளேன்.

இன்று நாங்கள் அரசை எதிர்த்துக் கொண்டிருப்பதால் எமது தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியோ அல்லது வேலை வாய்போ எதுவும் கிடைப்பதில்லை முஸ்லீம் அரசியல்வாதிகள் இன்று எந்த கட்சி ஆட்சி அமைக்கின்றதே அவர்களுடன் சார்ந்து கொண்டு அதனூடாக அதி உச்சகட்ட அபிவிருத்திகளை பெறுகின்றனர்.

எனவே நாங்கள் தொடர்ந்து ஆட்சிக்கு வரும் அரசுடன் இணைந்து செயற்படாமல் விட்டால் எதிர்காலத்தில் தமிழ் மக்களாகிய எங்களுக்கு என ஒரு அங்குல நிலப்பரப்பு கூட இல்லாமல் போகும் அபாயகரமான சூழ்நிலை ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அண்மையில் பசில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன். இதன் முதற்கட்டமாகவே பொதுஜன பெரமுனை கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்காக என்னுடன் எனது ஆதரவாளர்கள் 42 பேருடன் பொதுஜன பெரமுனை மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சந்திரகுமாருடன் ஞாயிற்றுக்கிழமை இரவு பாசிக்குடா உல்லாச விடுதியில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் பொதுஜன பெரமுனை கட்சியில் இணைந்துள்ளோம் என்றார்.

## மட்டக்களப்பில் கொள்ளைக்கோஷ்டி கைது; கைதுப்பாக்கி மற்றும் வீடு உடைக்கும் ஆயதங்கள் மீட்பு

**செ.ஞானச்செல்வன்**



மட்டக்களப்பு நகர் பகுதியில் பல கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய கொள்ளைக்கோஷ்டியினைச் சேர்ந்த 5 பேரை மைக்கிரே ரக கைத்துப்பாக்கி ஒன்றுடன் செவ்வாய்க்கிழமை (24) நள்ளிரவு கைது செய்ததுள்ளதுடன் முச்சக்கரவண்டி ஒன்று மற்றும் கையடக்க தொலைபேசிகள் வீடு உடைக்கும் பொருட்களை மீட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸ் நிர்வாக பொறுப்பதிகாரி பி.எஸ்.டி.பண்டார தெரிவித்தர்.

குறித்த கொள்ளையர்கள் சம்பவதினமான செவ்வாய்க்கிழமை இரவு சத்துருக்கொண்டான் பகுதியில் வீடு ஒன்றை கொள்ளையடிப்பதற்காக முச்சக்கரவண்டியில் சென்றிருந்தனர் இந்த நிலையில் இவர்களை பொதுமக்கள் மடக்கிபிடித்து பொலிஸ் குறிறப் புலனாய்வு பிரிவினரிடம் இவர்களை ஒப்படைத்தனர் .

இதனையடுத்து மாவட்ட பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ். சுமந்த தலைமையிலான குற்ப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டதில் கள்ளியங்காடு டியானத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மைக்கிரே ரக துப்பாக்கினை மீட்டதுடன் 5 கையடக்க தொலைபேசிகள் முச்சக்கரவண்டி ஒன்று வீடுகளை உடைப்பதற்கான சுட்டியல் போன்ற கூரிய ஆயுதங்களை மீட்டனர்.

இதனை தொடர்ந்து குறித்த கைதுப்பாகியை கொள்ளையருக்கு விற்பனை செய்த கல்லடி கடற்கரை வீதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்தனர் இந்த கொள்ளையர்கள் சம்பவதினம் கருவப்பங்கேணி ஊறணி பிரதேசத்தில் நேற்று இரவு கொள்ளையிட திட்டம் தீட்டியுள்ளதாகவும்,பொலிசாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பங்குடாவெளி, கல்லடி, கள்ளியங்காடு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் முன்னாள் பொலிஸ் உத்தியோகததர் மற்றும் ஆயுதக்குழுக்களில் இருந்தவர்கள் எனவும் இவர்கள் களுவாஞ்சிக்குடி, செங்கலடி, மட்டக்களப்பு போன்ற பல பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்கள் எனவும் தெரிவித்த பொலிசார்

நீர்கொழும்பு மற்றும் களுவாஞ்சிக்குடி, செங்கலடி, மட்டக்களப்பு நீதிமன்றங்களில் கொள்ளை தொடர்பான வழக்குகள் இடம்பெற்றுவருவதாகவும் இலர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்கள் காத்தான்குடி மையவாடியில் புதைக்கப்பட்டது

**எஸ்.ஞானச்செல்வன்**
**பிள்ளையாரடி நிருபர்**

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலை குண்டு தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதியான நசார் முகமட் ஆசாத்தின் உடற்பாகங்கள் வெள்ளிக்கிழமை (27) புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆப்பள்ளிவாயல் மையவாடியில் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் புதைக்கப்பட்டது.



குறித்த தற்கொலை குண்டுதாரியின் தலை மற்றும் உடற்பாகங்கள் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது இந்த உடற்பாகங்களை அரச செலவில் புதைக்குமாறு அரசாங்க அதிபருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டது

இதனையடுத்து இதனை மட்டக்களப்பு புதூர் ஆலையடிச்சோலை மயானத்தில் புதைப்பதற்கு முயற்சித்தபோது அங்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் அதனையடுத்து பல்வேறு இடங்களில் புதைக்கப்படவுள்ளதாக அந்தந்த பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததுடன் சில உள்ளூராட்சி மன்றங்கள் மாநகரசபைகள் இதனை தமது பிரதேசத்தில் புதைப்பதற்கு எதிராக தீர்மானங்களையும் எடுத்திருந்தனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் கடந்த மாதம் 26ம் திகதி இந்த உடற்பாகங்கள் புதைக்கப்பட்டது இதனையடுத்து பொதுமக்கள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் அரசில்வாதிகள் இதற்கு எதிராக வீதியில் இறங்கி போராடியதுடன் கல்லடி பாலத்தில் வீதியைமறித்து போராடடம் நடாத்தினர்.

கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைக்கப்பட்ட உடற்பாகங்களை நீதிமன்ற உத்தரவுக்கமைய மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்ட நிலையில் (26) திகதிக்கு முன்னர் இதனை பொருத்தமான இடத்தில் அரசாங்க அதிபர் ஊடாக புதைக்குதாறு நீதவான் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு கட்டளையிட்டார்.

இதற்கமைய குறித்த உடற்பாகங்களை வெள்ளிக்கிழமை (27) புதிய காத்தான்குடி 3ம் குறிச்சியிலுள்ள பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதையடுத்து வைத்தியசாலை பிரேத அறையில் இருந்த உடற்பாகங்களை காத்தான்குடி பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் பெறுப்பேற்று பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் குறித்த மையவாடியில் புதைக்கப்பட்டது

இதனை புதைக்கும் போது இஸ்லாமிய மார்க்க கடமைகள் எதுவும் இடம் பெறவில்லை. இதன் போது பெருமளவிளான பொலிசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டிருந்தனர்.

## வாக்குகளை அளிக்காது புறக்கணிக்கப் போவதாக தெரிவித்து வேலையில்லா பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்!

**மண்டூர் நிருபர்**



வேலையில்லா பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக போராடிவரும் நிலையில் அவர்களுக்கு நியமனம் தொடர்பாக தீர்வு கிடைக்கப் பெறாத நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்குகளை அளிக்காது புறக்கணிக்க போவதாக பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கடந்த (21) (சனிக்கிழமை) வேலையில்லா பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான வேலையில்லா பட்டதாரிகளும் அவர்களுடைய பெற்றோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அரச நியமனம் கோரி கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உண்ணாவிரதம் மற்றும் வீதியோரப் போராட்டங்களை மேற்கொண்டுவந்த போதும் இதுவரைக்கும் தமக்கு ஒழுங்கான நியமனங்கள் கிடைக்கவில்லை.

தொடர்ந்தும் கல்வியை முடித்து பட்டதாரிகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு அந்தந்த ஆண்டு நியமனங்களை வழங்கியிருந்தால் இவ்வாறு வேலையில்லா பட்டதாரிகள் அதிகரித்திருக்க முடியாது.

அரசாங்கம் எமக்கு நியமனங்கள் வழங்காது ஏமாற்றிவருகின்றது எனவே எமக்கு நியமனம் வழங்காவிட்டால் நாங்களும் எமது உறவுகளும் இந்த வருடம் நடைபெறவிருக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காது புறக்கணிக்கவுள்ளோம் என அகில இலங்கை ரீதியாக வேலையில்லா பட்டதாரிகள் தீர்மானம் எடுத்துள்ளோம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வாக்களிப்பு புறக்கணிப்பு மூலம் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்படாது எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

மேலும் இதன் முதற்கட்டமாக தேர்தல் ஆணையகத்திற்கு தபால் அட்டைகளை அனுப்பவுள்ளதாகவும், ஆகவே எமக்கான தீர்வினை உடனடியாக அரசு பெற்றுத்தர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

## இந்து அரச உத்தியோகத்தர்கள் விரதகாலங்கள் வெள்ளிக்கிழமைகளிலும் ஆலயங்களுக்கு சென்று வழிபட்டுவருவதற்கு சலுகை வழங்கப்படவேண்டும்

### இந்து ஜனநாயப் பேரவை தேசிய இணைப்பாளர் க.ரவீந்திரன் கோரிக்கை

**கனகராசா சரவணன்**

இந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய மதத்தை சார்ந்த அரச ஊத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகையான லீவு போன்று இந்து அரச உத்தியோகத்தர்கள் கௌரி விரதம் மற்றும் கந்தசஷ;டி விரதம் அனுஷ்டிக்கின்றபோதும், வெள்ளிக்கிழமைகளில் ஆஷலயங்களுக்கு சென்று வழிபட்டுவருவதற்கு 2 மணித்தியாலயங்கள் லீவு வழங்கப்படவேண்டும் என இந்து ஜனநாயப் பேரவையின் தேசிய இணைப்பாளர் க.ரவீந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு திருச்செந்தூர் முருகன் ஆலைய மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்து ஜனநாயப் பேரவையின்அங்குரார்பணமும் அதன் பின்னர் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் பேரவையின் தேசிய இணைப்பாளர் க.ரவீந்திரன், சு.யோகராஜ், சா.அருள்மொழி ஆகியோர் கலந்து கொண்டபோது இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

ஈழமண்ணிலே பல்வேறுபட்ட இந்துமதம் சார்ந்த அமைப்புக்கள் உள்ளன இருந்தாலும் இந்து மதம் சார்ந்தவர்களுடைய அபிலாடிஷகளை அல்லது தேவைகளை பிரச்சனைகளை கண்டறிந்து அதற்கான கோரிக்கைகளை இதுவரை எந்தவொரு அரசியல்வாதிகளிடமே அல்லது தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களிடம் முன்வைத்ததாக தெரியவில்லை

எனவே இதன் காரணமாக இந்துக்களுடைய பிரச்சனைகளை அல்லது தேவைகளை கோரிக்கையாக அரசியல் வேட்பாளர்கள் அரசியல் தலைவர்களுக்கு முன்வைக்கும் நோக்கத்துடன் இந்த இந்து ஜனநாயப் பேரவையானது ஆரம்பிக்கப்பட்டது.

இந்து ஜனநாயப் பேரவையானது இந்துக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்படவுள்ளது இதன் முன்னோடியாக அங்குரார்பண கூட்டம் மட்டக்களப்பு திருச்செந்தூர் முருகன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்று தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.



இந்த அடிப்படையில் எதிர்லரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் அனைவரிடமும் கோரிக்கைகளை முன்வைக்க இருக்கின்றோம். இந்து மக்கள் செறிவாக வாழுகின்ற அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு மாவட்டத்துக்கு ஒரு கோரிக்கை என்ற அடிப்படையிலும் தேசிய மட்டத்தில் 3 கோரிக்கைகளையும் முன்வைக்க இருக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் 3 மாவட்டங்களுக்கு 3 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன அதில் மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகப்பிரிவில் இருக்கின்ற கோவில்குளம் என்ற பிரதேசத்தில் உலகநாச்சியார் கட்டியொழுப்பிய ஆலையத்தை சகோதர இனத்தவர்கள் ஆக்கிரமித்திருக்கின்றனர். அதற்கான அகழ்வாராச்சி கடந்த ஏப்பிரல் மாதம் நடைபெற்றது அதில் ஆலயம் இருந்ததற்கான தொல்பொருள் சான்றுதல்கள் கண்டுபிடிக்கப்பட்டன

எனவே அந்த அகழ்வாராச்சி தொடர்ந்து இடம்பெறவேண்டும். ஆந்த ஆலய நிலப்பரப்பு அகழ்வாராச்சிக்கு உட்படுத்தப்பட்டு அது இந்துக்களுடைய பூமியாக பிரகடனப்படுத்தப்படவேண்டும் என்பது மட்டக்களப்பு மாவட்டத்துக்கான கோரிக்கை

அதேவேளை இப்போது சர்சைக்குள்ளாகியிருக்கும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவேண்டும் என்பது அம்பாறை மாவட்டத்துக்கான கோரிக்கையாகும்.

திருகோணமலை மூதூர் தேர்தல் தொகுதியில் இந்து மக்கள் செறிவாக வாழுகின்ற இடப்பரம்பலைக் கொண்ட அனைத்து இந்துமக்களும் பயன்படுத்தக் கூடிய ஒரு பிரதேச செயலகம், பிரதேச சபையை உருவாக்குதல் திருகோணமலை மாவட்டத்துக்கான கோரிக்கையாகும்.

அதேவேளை தேசிய ரீதியான கோரிக்கையாக ஏனைய மதத்தை சார்ந்த அரச ஊத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகையான லீவு போன்று இந்து உத்தியோகத்தர்கள் கௌரி விரதம் மற்றும் கந்தசஷ்டி விரதம் அனுஷ;டிக்கின்ற போது அவர்கள் தமது விரதத்தை ஆனுஷ;டிக்க ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு வருவதற்கும் நாள் ஒன்றுக்கு 2 மணித்தியாலங்களும் வெள்ளிக்கிழமைகளில் ஆலையங்களுக்கு சென்று வழிபட்டுவருவதற்கு 2 மணித்தியாலயங்கள் லீவு வேண்டும்.

நாட்டிலுள்ள தாபன விதிக் கோவையில் ஏனைய ஒரு மதத்தினருக்கு அவர்களுடைய மததாபனங்களை பின்பற்றுவதற்கான பல சலுகைககள் வழங்கப்படுகின்றது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் இந்துக்கள் ஆகிய எங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

ஞாயிறுதினங்களில் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை மிக குறைவாக காணப்படுகின்றது அதற்கான காரணமாக அன்றை தினத்தில் தனியார்கல்வி நிலையங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நடாதத்படுவதே ஆகவே இந்த ஞாயிறுதினத்தில் பிரத்தியோக வகுப்பு நடாத்தக் கூடாது என்ற சட்டம் ஒன்றை இயற்றி அமுல்படுத்தப்பட வேண்டும்.

இந்து ஜனநாயப் பேரவையின் தொழில்பாடு இந்துக்களுடைய இருப்பை தக்க வைப்பதற்கும் இந்துக்களுடைய உரிமையை பாதுகாப்பதற்கும் தேவையை நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கைககளை மேற்கொள்வதாகவே அமையும் என்றார்.




## நஞ்சற்ற உணவு உற்பத்தி தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு மகிழூரில்

**அன்புவெளி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மகிழூர் கண்ணகிபுரம் கிராமத்தில் நஞ்சற்ற உணவு உற்பத்தியும் பாவனையும் தொடர்பில் விளக்கமளிக்கும் மாவட்ட விழிப்பூட்டல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



இப்பகுதி விவசாய போதனாசிரியர் என்.லக்ஷ்மன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெட்னம் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வி.பேரின்பராஜா உதவி விவசாய பணிப்பாளர்களான ரீ.மேகராசா திரு.சலீம் பாடவிதான உத்தியோகத்தர் திரு.விவேகானந்தராஜா ஆகியோருடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல விவசாய போதனாசிரியர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள் மற்றும் பெருந்திரளான விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

தற்காலத்தில் பெரும் பிரச்சினையாக இருக்கும் உணவுப் பொருட்களில் நஞ்சுத்தன்மை அதிகரிப்பதை குறைப்பதை நோக்காக கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியும் பாவனையும் எனும் தொனிப்பொருளுடன் விவசாயிகளுக்கு செய்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன. இதில் அசேதன இரசாயனங்களை பயன்படுத்தாது எவ்வாறு ஒருங்கிணைந்த முறையில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம் அதற்காக எவ்வாறான இயற்கையான பீடை நாசினிகள் சேதனப் பசளைகள் கூட்டெரு தயாரிப்பு முறைகள் அவற்றை பயன்படுத்தும் முறைகள் மற்றும் தீவிர நோய் நிலைமைகளில் இரசாயனங்கள் பாவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் உடல் ஆரக்கியத்தை பாதிக்காதவாறு பாதுகாப்பான முறையில் இரசாயனங்களை விசுறும் நடைமுறைகள் இரசாயனப் பாவனையினால் மனிதனுக்கும் சூழலுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என்பவற்றோடு சிறந்த விவசாய நடைமுறைகளை (GAP) எப்படி கையாள்வது அதனால் ஏற்படும் அனுகூலங்கள் மற்றும் மாமரங்களை எவ்வாறு பழக்கப்படுத்தி பயிற்றுவித்தல் எவ்வாறு பசளையிடுதன் என்பன தொடர்பாகவும் செய்முறை ரீதியான பூரண விளக்கங்கள் ஒவ்வொரு விவசாய போதனாசிரியர்களாலும் வழங்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நஞ்சற்றை நாட்டை காப்போம் எனும் தலைப்பில் மகிழூர் கண்ணகிபுரம் விநாயகர் வித்தியாலய மாணவர்களால் நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டு விவசாயிகளுக்கு புரிதல் இலகுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாவிதன்வெளி 7ம் கிராமம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகம்





**அன்புவெளி நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 7ம் கிராமம் அன்புவெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பாற்குடபவனியும் சங்காபிஷேகமும் கடந்த புதன்கிழமை (25) நடைபெற்றது.

செப்டம்பர் மாதம் 11ம் திகதி கும்பாபிஷேக கர்மாரம்பம் ஆரம்பமாகி 12ம் திகதி எண்ணெய் காப்பு சாத்துதலும் 13ம் திகதி மஹாகும்பாபிஷேகமும் 14ம் திகதி முதல் 24ம் திகதி வரை மண்டலாபிஷேக பூசைகளும் நடைபெற்று 25ம் திகதி புதன்கிழமை பாற்குடபவனியும் சங்காபிஷேகமும் கானவினோதர் கிரியாகாலமணி தற்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ திருச்சிற்றம்பலம் குருக்கள் தேவகுமார் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. காலை வேளையில் நாவிதன்வெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் பாற்குடபவனியாக வந்து 1008 சங்குகளில் மூலமூர்த்திக்கான சங்காபிஷேகம் நடைபெற்றது.

மண்டாலாபிஷேக பூசைகளில் தினமும் பஜனை ஆராதனைகளும் சமய சொற்பொழிவுகளும் நடைபெற்றுடன் இவ்வாலயத்தில் முன்னாள் தலைவராக இருந்து ஆலயம் புதுப்பொலிவு பெற அர்ப்பணிப்போடு பணியாற்றிய பி.இராஜேஸ்வரன் அவர்களும் ஆரம்பகாலம் முதல் நிழல் மரங்களை நட்டு தேவார புராணங்களைப் பாடி ஆலயத் தொண்டாற்றி வந்த மூத்த பக்தர் திரு.மார்க்கண்டு ஆகியோரும் ஆலய பரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## நாவிதன்வெளியில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானோருக்கான கௌரவிப்பு

**அன்புவெளி நிருபர்**



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவின் நாவிதன்வெளி 01 கிராம சேவகர் பிரிவிலுள்ள நாவிதன்வெளி 7ம் கிராமம் வீ.சீ கிராமம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இயங்கிவரும் அன்புவெளி சமூக மேம்பாட்டு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்துக்கு தேர்வான மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அன்புவெளி சமூக மேம்பாட்டு ஒன்றியத்தின் செயலாளர் தெ.தேவமலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்துமத மதகுருமார்களான சிவஸ்ரீ சிவபரன் குருக்கள் சிவஸ்ரீ கு.சுபாஸ்கர சர்மா ஆலயத் தலைவர் கு.ஜெயக்குமார் உபதலைவர் கு.விக்னேஸ்வரன் பொருளாளர் க.ரவிச்சந்திரன் ஊடகவியலாளர் செ.துஜியந்தன் ஆசிரியர்களான திருமதி.சுவானந்தி ரூபன் திருமதி.மேகலா அருள்நாயகம் மற்றும் இளைஞர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய ச.மிதுசாயி க.துஷாந் கு.சஜீவன் க.விஜய் கி.கிந்து ந.தர்சினி மற்றும் கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் சிறப்பு சித்தி பெற்ற தே.அசோபிகா ஆகியோரும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அன்புவெளி சமூக மேம்பாட்டு ஒன்றியமானது சமூகத்தின் கல்வி கலை கலாச்சாரம் போன்ற விடயங்களை மேம்படுத்தும் நோக்கில் இலவச பிரத்தியேக வகுப்புக்களையும் பொது வேலைகளையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய மகோற்சவம்

**அன்புவெளி நிருபர்**

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மஹா மகோற்சவப் பெருவிழா இம்மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமானது.

1ம் திகதி இரவு சுவாமி எழுந்தருளப்பண்ணலும் 2ம் திகதி நாட்கால் வெட்டுதலும் 5ம் திகதி கல்யாணக் கால் வெட்டுதலும் 9ம் திகதி பஞ்சபாண்டவர் வனவாசம் செல்லலும் வாள்மாற்றுதலும் 10ம் திகதி அருச்சுனன் பாசுபதமும் அரவானை களப்பலியிடலும் 11ம் திகதி மாலை தீப்பள்ளயம் என விஷேடமாக சிறப்பிக்கப்படும் தீமிதித்தல் நிகழ்வும் இடம்பெற்று 12ம் திகதி சனிக்கிழமை தருமர் முடி சூட்டு வைபவமும் பாற்பள்ளயமும் இடம்பெற்று விழா இனிதே நிறைவு பெறும்.



உற்சவத்தின் 3ம் நாள் வரலாற்று மகிமை சொல்லும் மகாபாரத ஏடு திறத்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

15ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து வருகைதந்த தாதன் எனும் மாமுனியினால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட மகாபாரத ஏடு இங்கு 600 வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இது இவ்வாலயத்தினதும் இப்பிரதேசத்தினதும் தமிழர்களின் வரலாற்றை பேணிப்பாது காக்கும் பொக்கிஷமாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பதினெட்டு நாட்கள் நடக்கும் திருவிழாவில் தொடர்ந்து 15 தினங்கள் மகாபாரதம் படித்து அதற்கு பயன்சொல்லும் நிகழ்வு நடைபெறும்.

கிழக்கில் தமிழர்களின் சரித்திரம் கூறும் ஆலயமாக பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் மற்றுமொரு சிறப்பு இலங்கையில் மிக நீளமான தீக்குழியில் பூமிதித்தல் நடைபெறுவதுடன் வருடாவருடம் மஹாவிஷ்ணுவிற்கான தீக்குழி திரௌபதைக்கான தீக்குழி என மாறி மாறி தீக்குழி வெட்டப்பட்டு தீப்பள்ளய நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்



**பாறுக் ஷிஹான்**

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படாமலிருந்த பகுதிகளிலும் இம்முறை பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று கிழக்கு, அக்கரைப்பற்று மேற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, பொத்துவில், மத்தியமுகாம், தம்பிலுவில், திருக்கோயில்,அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர், மல்வத்தை, கோமாரி, சடேந்தலாவ, இறக்காமம், சவளக்கடை, உகன, ஹிங்குரான, மகாஓயா, பதியத்தலாவ, லகுகல, தெஹியத்துக்கண்டிய, பாணம, பன்னல்ஓயா, மாயாதுன்ன மற்றும் நாமல்தலாவ ஆகிய கமநல சேவை மத்திய நிலையங்களுக்கு உட்பட்ட 145000 மேற்பட்ட ஹெக்டயர் நிலங்களில் இம்முறை மகாபோக நெற்செய்கையில் நெற்செய்கையில் விவசாயிகள் பரவலாக ஈடுபடவுள்ளனர்.

கடந்த காலங்களில் விவசாய அமைச்சு மானியத்திட்டத்தின் கீழ் விதைநெல் உரம் ஆகியவற்றை மானியமாக வழங்கியுள்ளதுடன் விவசாயிகளின் நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இம்மாவட்டத்தில் உள்ள வங்கிக் கிளைகள் அனைத்திலும் காரணமாக கடன் உதவிகள் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலை காரணமாக செய்கை பண்ணப்படாமல் இருந்த காணிகளிலும் நெற்செய்கை செய்யப்பட்டு வருகின்றது.

## நாவிதன்வெளியில் நட்சத்திரா சிறப்பு கிறிக்கட் கிண்ணம்

**அன்புவெளி நிருபர்**



நாவிதன்வெளி நட்சத்திரா விளையாட்டுக் கழகம் நடாத்துகின்ற மாபெரும் மென்பந்து கிறிக்கிட் சுற்றுப்போட்டி அமரர் சா.கிருஷ்ணபிள்ளை அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேப்பையடி பாமடி விளையாட்டு மைதானம் நாவிதன்வெளி பிரதேச செயலக மைதானம் என்பவற்றில் 28ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமானது எதிர்வரும் ஒக்டோபர் 5ம் திகதியும் போட்டிகள் நடைபெறவுள்ளன. அணிக்கு 11 பேர் கொண்ட 8 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட நொக் அவுட் முறையிலான போட்டியில் மட்டு அம்பாறை மாவட்டங்களின் பலம் வாய்ந்த பல அணிகள் மோதிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விளைச்சல் நெல் பெருகி வயல் செய்வோம் வீதி உலா மற்றும் புத்தரிசி விழா



**முள்ளிப்பொத்தானை நிருபர்**

திருகோணமலை மாவட்டத்துக்கு உட்பட்ட கந்தளாய் கமநல நிலையத்துக்கு உட்பட்ட



கந்தளாய் கமநல சேவை நிலையத்தின் கம நிலையத்தின் கம நல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே ஜீ அமவன்ச தலைமையில் நடைபெற்றது

புத்தரிசி விழா (25)கந்தளாய் பத்தினி தேவாலயத்தில் நெல் பெருகி வயல் செய்வோம் எனும் தலைப்பில் நடைபெற்ற. பூஜை வழிபாடும் சமய நிகழ்வில் மாவட்ட கம நல உதவி ஆணையாளர் எஸ் புனிதகுமார் கலந்து சிறப்பித்ததையும் நீர்பாசன வதிவிட திட்ட முகாமையாளர் விவசாயிகள் விவசாய சங்கத்தின் தலைவர்கள் கலந்து சிறப்பித்ததை படத்தில் காணலாம்.




## இந்த யுகத்தில் நாம் செய்யும் மிகப் பெரிய கண்டு பிடிப்பென்றால் பொலித்தீனை இல்லாதொழிப்பதுதான் - வைத்திய அத்தியட்சகர் ஜவாஹிர்



**மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மாயில், எஸ்.எம்.அறூஸ் –**

இன்று உலகை ஆட்டிப்படைக்கின்ற ஒரு சாதனமாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் வகைகள் விளங்குகின்றது. இதன் பாவனைகள் நாளாந்தம் கூடிக்கொண்டே செல்கின்றது. இதை இல்லாமல் செய்வோகமாக இருந்தால் இந்த யுகத்திலேயே நாம் செய்யும் மிகப் பெரிய கண்டுபிடிப்பாகத் தான் இது இருக்கும். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல இந்த உலகத்திலுள்ள அனைத்து விஞ்ஞானிகளினதும் கருத்தாகும் என்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஐ.எம். ஜவாஹிர் தெரிவித்தார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையற்ற நாட்டையும் உலகையும் உருவாக்க நாம் ஒவ்வொருவரும் முன்னின்று செயற்படுவோம் எனும் தொனிப்பொருளில் (25) அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவின் தர முகாமைத்து வைத்தியர் எம்.ஜே.நௌபல், சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் பி.கே.ரவிந்திரன், சிறு பிள்ளை வைத்திய நிபுணர் திமுது சுபேசின்க மற்றும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜேர்மனிய விஞ்ஞானியால் 1898 ஆம் ஆண்டு 'டயச மித்தீன்' என்ற ஒரு பதார்த்தத்தின் மூலம் ஒரு விபத்தாக உருவாக்கப்பட்டு கண்டு பிடிக்கப்பட்டவைதான் இந்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களாகும். இதன் பாவனையை 1935 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் விடப்பட்டது.

இந்த பொலித்தீன் கண்டுபிடிக்கப்பட்டதை ஒரு வரப்பிரசாதமாக மக்கள் நினைத்தனர். இதன் மூலம் பாரிய ஆபத்துக்களை மக்கள் எதிர்நோக்குவார்கள் என்று அவர்களும் நினைக்கவில்லை. அந்த விஞ்ஞானியும் அன்று அறிந்திருக்கவில்லை.

ஒரு விபத்தாக உறுவாக்கப்பட்ட பொலித்தீன் இன்று உலகை ஆட்டிப்படைக்கின்ற ஒரு சாதனமாகவும் இதனை முழுமையாக அழித்தொழிக்க முடியாமலும் உள்னர். இதை எரித்தாலும் முழுமையாக இல்லாமல் செய்யமுடியாது. இதனை எரித்து மண்ணுக்குள் முடிவிடுதனால் மழை நீர் பூமிக்கு கீழ் செல்வதை இது தடுக்கின்றது. அதனாலேயே வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமாக இருக்கின்றது.

இதன் பாவனையும் உருவாக்கமும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்கின்றதே தவிர, இது குறைந்தபாடில்லை. இதனை நாம் பாவிப்பதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் எமக்கு மட்டுமல்ல, எமது பிற்கால சந்ததியினருக்கே மிக மிக அதிகமான பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அதற்கான விழிப்புணர்வை நாம் பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏற்படுத்தவேண்டும்.

இந்தியா - சென்னையில் 95 வீதமான பொலித்தீன் பாவனை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதனை எமது தீவக நாட்டில் முற்றாகத் தடைசெய்வது மிகச் சுலபமான காரியமாகும். அதற்கு அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்குமாக இருந்தால் இந்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனைகளை இல்லாதொழித்துவிடலாம்.

நாங்களாகவே இந்த பொலித்தீன் வேண்டாம், பிளாஸ்டிக் பொருட்கள் வேண்டாம் என்று தடைசெய்ய முன்நிற்போமாக இருந்தால் இதனை முற்று முழுதாக ஒழித்துக்கட்டவும் எமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகவே இது இருக்கும் அதற்கான விழிப்புணர்வு முன்னெடுப்புக்களை இன்றிலிருந்து ஆரம்பிப்போம் என்றார்.

இந்நிகழ்வின்போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை இல்லாதொழிப்போம் எனும் விழிப்புணர்வு பற்றிய இருவேட்டை வைத்திய அத்தியட்சகரிடம் கையளித்து வைக்கப்பட்டதும், அதனை தயாரித்த வைத்தியர் மற்றும் உத்தியோகத்தர்களையும் கௌரவித்து ஞாபகச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுவதற்கு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதல்ல

### கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் த. கோபாலகிருஸ்ணன்

**துறைநீலாவணை நிருபர்**



கிழக்கில் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் களநிலையைக் கருத்தில் கொள்ளும்போது, கிழக்குத் தமிழர்கள் கிழக்கைத் தளமாகக் கொண்ட ஒன்றுதிரண்ட அரசியல் சக்தியாக மேற்கிளம்ப வேண்டிய தேவை எழுந்துள்ளது. இது ஜனநாயக நடைமுறையின் கீழ் ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் மட்டுமே சாத்தியப்படும் என்பதாலேயே கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது என கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் த.கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில்(26) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எந்த அரசியல் கட்சிக்கோ தனிநபருக்கோ ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுவதற்கு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதல்ல. கட்சி, சின்னம், கொடி,அரசியல், கருத்தியல்கள், சித்தாந்தங்கள், கோட்பாடுகள் அனைத்தும் இருப்பது மக்களுக்காகவே. எனவே தனிநபர், கட்சி நலன்களுக்கப்பால் அரசியல் என்பது மக்கள் நலன்களுக்கானது என்பதை கிழக்கு கூட்டமைப்பு வரித்துக் கொண்டுள்ள அரசியலறமாகும்.

அரசியல் கூட்டணியைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்து ஒரு பொதுச்சின்னத்தை பெற்றுக்கொள்ளும் தேர்தல் சட்டவிதிகளுக்கமைய மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஒருபுறமிருக்க அதற்கு வெளியே, கிழக்கின் அரசியல் அரங்கிலே செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற அனைத்துப் பதிவுசெய்யப்பெற்ற, பதிவு செய்யப் பெறாத கட்சிகளையும் பொதுநல அமைப்புகளையும், தனி நபர்களாகச் செயற்படுகின்ற சமூக அரசியல் செயற்பாட்டாளர்களையும் என்று எல்லோரையும் இணைத்துச் செயற்படுகின்ற ஒரு கூட்டுப்பொறிமுறையொன்றில் அவசியமும் உணரப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் இருப்பை தக்கவைத்துப் பேணி அதனை வளர்த்தெடுப்பதற்கு இக்கூட்டுப் பொறிமுறை அவசியமாகின்றது. இக்கூட்டுப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான பிள்ளையார் சுழியே,

யாழ் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அரசியல் முரண்பாடுகளோ கருத்தியல் முரண்பாடுகளோ நட்பு மற்றும் பகை முரண்பாடுகளோ எவையாக இருந்தாலும் அவற்றையெல்லாம் ஒரு புறம் களைந்தொதுக்கிவிட்டு மக்கள் நலன்களுக்காக எல்லோரும் ஒன்றாக பயணிப்போம் என்றார்.

## காரைதீவில் கண்டன பேரணி

**பாறுக் ஷிஹான்**

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் நீதிமன்ற கட்டளையை அவமதிப்பு செய்த பேரினவாத பௌத்த அமைப்புக்கெதிராக அம்பாறை காரைதீவு பிரதேசத்தில் கண்டன பேரணி இடம்பெற்றது .

வெள்ளிக்கிழமை (27) காலை 10 மணியளவில் இந்த போராட்டமானது வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களும் பொதுமக்களாலும் முன்னெடுக்கப்பட்டது.

சட்ட ஆட்சியை உறுதிப்படுத்துக ,அனைத்துவிதமான பாரபட்சங்களை ஒழிக்குக ,சிறுபான்மையினர் மீதான துஷ்பிரயோகங்களை நிறுத்துக போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி கோசங்கள் எழுப்பப்பட்டது.

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை அவமதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நீதிதுறையை அவமதித்த தேரர்களை கைது செய்யகோரியும் இந்து ஆலயங்களின் புனித தன்மையை பாதுகாக்குமாறு தெரிவித்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நீராவியடியில் செத்தது நீதி, நீதிமன்ற தீர்ப்புக்கு கட்டுப்படுங்கள்,சட்ட ஆட்சியை நிலைநிறுத்துங்கள், போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.இதன்போது காரைதீவு சுவாமி விபுலாநந்தர் சதுக்கத்திலிருந்து பேரணியாக காரைதீவு பிரதேச செயலகம் வரை சென்று மீண்டும் சுவாமி விபுலாநந்தர் சதுக்கத்தை வந்தடைந்து அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர் ஏ .எல். இஸ்ஸதீன் அவர்களிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த கண்டன பேரணியில் , வடக்கு கிழக்கு சிவில் அமைப்பினர் , பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## புதிய கட்டிடத்தொகுதி அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்து



**சாய்ந்தமருது நிருபர்**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் ஏற்பாட்டில் நகர திட்டமிடல், நீர் வழங்கல், உயர் கல்வி அமைச்சின் 500 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் கல்முனை மாநகர சபைக்கு அனைத்து நவீன வசதிகளும் கொண்ட புதிய கட்டிடத்தொகுதி அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடபட்டுள்ளது. இந்நிகழ்வு வியாழக்கிழமை (26) மாலை, அமைச்சின் கேப்போர் கூடத்தில் இடம்பெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்களின் முன்னிலையில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், தேசிய கட்டிடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.எம்.இஸ்மாயில் மற்றும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எச்.எம்.நபீல் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் எம்.நித்தியானந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் இணைப்புச் செயலாளர்களான ரஹ்மத் மன்சூர், எம்.நயீமுல்லாஹ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ஏ.ஆர். எம்.ஹபீஸ், கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், இணைப்பாளர் ஏ.சி.சமால்தீன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

சுமார் 70 வருட கால பழைமை வாய்ந்த, தற்போதைய மாநகர சபை கட்டிடம் முழுதாக அகற்றப்பட்டு, அதே இடத்தில் புதிய கட்டிடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. 5,950 சதுர மீற்றர் பரப்பளவில் ஆறு மாடிகளைக் கொண்டதாக இப்புதிய கட்டிடத்தொகுதி அமைக்கப்படவுள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் அடுத்த சில வாரங்களில் ஆரம்பிக்கப்பட்டு, எதிர்வரும் 2021ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இக்கட்டிடத் தொகுதியில் மாநகர சபை நிர்வாக அலுவலகம், முதல்வர் செயலகம், சபா மண்டபம், கேட்போர் கூடம், வாகனத் தரிப்பிடம் மற்றும் பல்வேறு பிரிவுகள் அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கலை இலக்கிய திறந்த மட்ட போட்டி ஒன்பதில் முதலாம் இடம் பெற்று கவிதாயினி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா வரலாற்று சாதனை

**ஹஸ்பர் ஏ ஹலீம்**



மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட கலை இலக்கிய திறந்த மட்டப் போட்டி 2019 இல் மீரிகம செயலகப் பிரிவில் பஸ்யாலையைச் சேர்ந்த கவிதாயினி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகளிலும் பங்குபற்றி ஒன்பது நிகழ்வுகளில் முதலாம் இடம் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 02 இல் பதவி வகிக்கும் இவர் கல்லெலிய அலிகார் முஸ்லிம் மகா வித்தியாலய பிரதி அதிபராகக் கடமையில் உள்ளார். இள வயது முதல் எழுத்துத் துறையில் அதிக ஆர்வம் காட்டி வந்த இவர் 2017 ஆம் ஆண்டு இரண்டும் ஒன்று என்ற தனது முதலாவது கவிதை நூலை வெளியிட்டதன் மூலம் இலக்கிய உலகமெங்கும் பெயர் பதித்தது மட்டுமல்லாமல் புதையல் தேடி என்ற கவிதை நூலை மிக விரைவில் வெளியிடவுமுள்ளார்.

சமூக அவலம், பெண்ணியம், சர்வதேசப் பார்வை என்பன இவரது கவிதைகளில் காணக்கூடியதாக இருப்பதோடு தனது எழுத்தாண்மையினால் குறுகிய காலத்தில் மிகப்பெரிய அளவில் பேசக்கூடிய ஒருவராகவும் மாறியுள்ளார். அவர் பங்குபற்றி வெற்றிபெற்ற போட்டிகளின் விபரம் பின்வருமாறு.

தமிழ் மொழி மூலம்:- கவிதை, பாடலாக்கம் ,நூல் விமர்சனம் சிறு கதை ,சிறுவர் கதை, ஆங்கில மொழி மூலம்:- கவிதை, பாடலாக்கம், நூல் விமர்சனம், சிறுவர் கதை, இம்முடிவுகள் அனைத்தும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## என்னைப்போன்றவர்களுக்கு அரசியல் பயணம் ஒருபோதும் சரிவராது

### அட்டாளைச்சேனை பிரதேச சபையின்உறுப்பினர்

**மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மாயில்**

என்னால் முன்னெடுக்கப்படுகின்ற சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் நான் ஒருபோதும் ஊடகங்களுக்கு வழங்குவதில்லை. ஏனென்றால் நான் கொண்டு வருகின்ற அந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் தடுக்கின்றவர்களாக சில அரசியல்வாதிகள் காணப்படுகின்றார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரும் அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான யு.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஊடகவியலாளர்கள் சந்திப்பு அட்டாளைச்சேனை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் அதன் தலைவர் எஸ்.எம். அறூஸ் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நியாயமான முறையில் எவ்வித பொய், பித்தலாட்டங்களும் இல்லாத முறையில் எனது அரசியல் பயணத்தை அல்லாஹ்வுக்குப் பயந்து பயணித்துச் செல்கின்றேன். இவ்வாறு அரசியல் பயணத்தைக் கொண்டு செல்கின்ற என்னைப் போன்றவர்களுக்கு அரசியல் பயணம் ஒருபோதும் சரிவராது.




மக்கள் பணிக்காகவும், அவர்களின் தேவைகளை தாமதப்படுத்தாமல் மிக விரைவாக பூர்த்தி செய்து கொடுப்பதற்காக எனது காரியாலயத்தை ஒரு நாளைக்கு 16 மணி நேரம் திறந்து வைத்துள்ளேன். என்னக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டும் நான் சேவை செய்யவில்லை. என்னை நாடிவருகின்ற மூவின மக்களுக்கும் நீதி, நியாயமான முறையிலேயே எனது பார்வை செலுத்தப்பட்டு அவர்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் என்னால் இயன்றவரை மிக விரைவாக அதனை நிவர்த்தி செய்து கொடுத்தும் வருகின்றேன்.

அதுமாத்திரமல்லாமல், என்னால் இயலுமான முயற்சிகளைச் செய்து பல நியமனங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளேன். இவ்வாறு பெற்றுக்கொடுத்த நியமனங்களில் இன மத வேறுபாடுகளை நான் பார்க்காமலேயே பெற்றுக்கொடுத்துள்ளேன்.

எந்தவொரு காரியமாக இருந்தாலும் என்னால் செய்து கொடுக்க முடியமாக இருந்தால் அதைச் செய்துகொடுப்பேன். இல்லை என்றால் என்னால் முடியாது என்று அவர்களிடமே கூறிவிடுவேன். அரசியல் வாழ்க்கைக்காக அம்மக்களிடத்தில் பொய்களைக் கூறி அவர்களை ஒருபோதும் அழைந்து தெரிய விடமாட்டேன் என்றார். இந்நிகழ்வின்போது ஊடகவியலாளர்களின் பணிகளை மேம்படுத்துவதற்கான தேவைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அமைப்பாளர் ஆதம்லெப்பையிடம் கையளிக்கப்பட்டதுடன் நுஜா ஒன்றியத்தின் ட சேர்ட்டும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடியாளர் சங்க பிரதிநிதிகள் பிரதியமைச்சரை சந்தித்து பேச்சு

**ஹஸ்பர் ஏ ஹலீம்**



மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலானது இன்று (26) துறை முகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் அவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப்படகு உரிமையாளர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளுக்குமிடையில் கொழும்பில் உள்ள பிரதியமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம் பெற்றது.

கடந்த 18.09.2019 ம் திகதி அன்று ஆழ் கடலுக்கு சென்ற மூன்று மீனவர்களை குறித்த படகுடன் இற்றை வரை கரை திரும்பவில்லை இவர்களை தேடுவதற்கும் ஆவணம் செய்யுமாறும் ,அம்பாறை ஆழ்கடல் மீன்டிடியாளர்கள் தங்களது படகுகளில் புதிய தொழில் நுட்ப இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு அனுமதியினை வழங்குதல் மற்றும் ஒலுவில் துறை முகத்தில் உள்ள குவிக்கப்பட்ட மண்ணை அகற்றி படகுகள் செல்வதற்கான வழியினு பெற்றுத் தருமாறு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மீனவர் சங்க உறுப்பினர்கள் பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் அவர்களிடம் மஹஜர் ஒன்றினையும் கையளித்தார்கள்.




# பௌத்த துறவிகளுக்கு ஒரு சட்டம் சாதாரண பொது மக்களுக்கு ஒரு சட்டமா?

**கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உபதலைவருமான இந்திரகுமார் பிரசன்னா கேள்வி**

**சீலாமுனை நிருபர் துஷாரா**

நீராவியடியில் நீதிமன்றத் தீர்ப்பினையும் மீறி பௌத்த பிக்கு ஒருவரின் உடல் தகனம் செய்யப்பட்டமையானது நீதித்துறைக்கு அவர்கள் விடுத்துள்ள சவால் மாத்திரமல்லாமல் ஒரு கலங்கத்தையும் ஏற்படுத்தும் செயலாகும், இந்த நாட்டில் பௌத்த பிக்குகளும் ஒரு சட்டம், சாதாரண மக்களுக்கு ஒரு சட்டமாகவே இருக்கின்றது. என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உபதலைவருமான இந்திர குமார் பிரசன்னா தெரிவித்தார்.

மண்டூர் கணேசபுரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இணை ஏற்பாட்டில் இடம்பெற்ற தியாகதீபம் திலீபனின் 32 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது போராட்டங்கள் ஆரம்பத்தில் அகிம்சைப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டே பின்னர் ஆயுதப் போராட்டத்திற்கு வந்தது. இருப்பினும் அந்த ஆயுதப் போராட்டத்தினுள்ளும் அகிம்சையைக் காண்பித்தவர் தியாகதீபம் திலிபன் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் எமது அகிம்சைப் போராட்டம் உட்பட எதனையும் சர்வதேசமும் சரி, இலங்கை அரசும் சரி கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. இந்த நாட்டு ஆட்சியாளர்களிடம் எதனையும் நாங்கள் பெறமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றோம். இந்த நாட்டில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது. இது முதலில் மாறவேண்டும்.



அண்மையில் எமது முல்லைத்தீவுப் பிரதேசத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பினையும் மீறி பௌத்தபிக்கு ஒருவரின் சடலம் தகணம் செய்யப்பட்டது. இது மிகவும் பாரிய குற்றச் செயலாகும் என்பதோடு ஒரு மதத்தின் புனிதத்தன்மையைக் கெடுக்கும் செயலாகவுமே பார்க்கப்படுகின்றது.

இதெற்கெல்லாம் முக்கிய கார்த்தாவாக இருந்தவர் ஞானசார தேரர் ஆகும். இதற்கு முன்னரும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திலேயே தண்டனை அனுபவித்து வந்தவர். இவரை விடுவிக்க ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கினார். அவ்வாறு விடுதலை பெற்றவர் மீண்டும் இவ்வாறானதொரு நீதிமன்றத்தின் தீர்ப்பினை அவமதிக்கும் செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பினை மீறி ஒரு தமிழரின் உடலை புதைத்தமைக்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை சிறையில் அடைக்க முடியும் என்றால் இதேபோன்றதோரு நீதிமன்றத் தீர்ப்பினை மீறிச் செயற்பட்ட பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளை இந்த அரசும் நீதித்துறையும் கண்டும் காணாமல் இருக்கப் போகின்றதா? இந்த நாட்டில் பௌத்த துறவிகளுக்கு ஒரு சட்டம் சாதாரண பொது மக்களுக்கு ஒரு சட்டமா? என்ற கேள்விகளை நான் கேட்கின்றேன்.

பௌத்த பிக்குகளின் செயற்பாட்டினால் தற்போது சட்டத்தரணிகள் உட்பட சாதாரண பொது மக்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது. நீராவியடியில் ஒரு சட்டத்தரணி பௌத்தபிக்குகளால் தாக்கப்பட்டதாகவும் கேள்விப்பட்டோம். இவ்வாறான பௌத்த மேலாதிக்கவாதம் தடுக்கப்படல் வேண்டும்.

இந்த நாட்டில் ஆட்சியமைத்த அரச தலைவர்களும் பேரினவாதக் கட்சிகளின் தலைவர்களும் பௌத்த மதத்தினை முறையாகக் கடைப்பிடித்திருப்பார்களானால் ஆயுதப் போராட்டம் ஒன்று ஏற்பட்டிருக்காது என்றார்.

# 732 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் 6130 திட்டங்களுக்கான அபிவிருத்திப் பணிகள்

**சீலாமுனை நிருபர் துஷாரா**



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழுவின் விசேட கூட்டம் நேற்று மாவட்ட இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான ராஜாங்க அமைச்சர் அலிசாகிர் மௌலானா, மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.ஸ்ரீநேசன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்ற, திறன் அபிவிருத்தி, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அங்கீகாரத்தில் இவ்வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு 732 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் 6130 திட்டங்களுக்கான அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றங்கள் பற்றிய ஆராய்வும் அதன் திட்டங்களை பூர்த்திசெய்ய எதிர்நோக்கும் தடைகளுக்கான தீர்வுகளும் இதன்போது முன்மொழிவு செய்யப்பட்டது.

இதன்படி தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் 182 கோடி ரூபாவும், தேசிய நல்லிணக்க அர்சகரும மொழிகள், சமூக முன்னேற்ற மற்றும் இந்து கலாசார விவகார அமைச்சு 14 கோடியே 40 இலட்சம் ரூபாவும் மற்றும் நகரதிட்டமிடல், நீர்வழங்கள் அமைச்சு, மாநகர அபிவிருத்தி அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி, பொதுநிர்வாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, ஜனாதிபதி செயலகம் கிழக்கு மாகாண சபை என்பனவும் இம்மாவட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீட்டை செய்துள்ளன.

இம்மாவட்ட அபிவிருத்தியில் கல்வி, சுகாதாரம், மின்சாரம், குடிநீர், விவசாயம், கால்நடை அபிவிருத்தி, வீடமைப்பு, வீதியமைப்பு, உள்ளக வீதி புனரமைப்பு பணிகளுக்ககே மிகக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் கலந்து கொண்டு மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தின் இணைத் தலைவர்களாக அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருப்பதனை கண்டித்து கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

# அம்பிளாந்துறையில் 1000 பனை விதைகள் நட்டுவைப்பு



**படுவான்கரை நிருபர்**

மரம்தனை வளர்ப்போம் பசுமைதனை உருவாக்கும் தொனிப்பொருளின் கீழ் 1000 பனைவிதைகள் அம்பிளாந்துறைக் கிராமத்தில் நடப்பட்டன.

அம்பிளாந்துறை கடல்கடந்த உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில், ஆற்றாங்கரை ஓரமாக 2கிலோ மீற்றர் தூரத்திற்கு இப்பனைவிதைகள் நடப்பட்டன.

இப்பனைவிதை நடு நிகழ்வில் கிராமசேவை உத்தியோகத்தர் சி.ஜீவிதன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# சமூகத்தை நெறிப்படுத்துகின்ற பொறுப்பு அறநெறி ஆசிரியர்களிடமும் ஆலயங்களிடமும் காணப்பட வேண்டும்

**கிழக்கு மாகாண அறநெறி விழாவில், மட்டு மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான மாணிக்கம் உதயகுமார் தெரிவிப்பு**

**துறைநீலாவணை நிருபர்**

இன்றைய சிறுவர்கள் சுமைகளுக்கும் அழுத்தங்களுக்கும் உட்பட்டு பல்வேறு வகையான சிரமங்களுக்கு மத்தியில், இன்றைய உலகில் வாழ்வதற்காக போராடிக்கொண்டிருக்கின்றனர் என மட்டு மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பூரணத்துவமான ஆளுமைப் பண்புக்கு அடிப்படை அறநெறிக் கல்வியே எனும் மட்டு அம்பாறை மற்றும் கோணமலை மாவட்டத்தை இணைத்த கிழக்கு மாகாண அறநெறி விழா மற்றும் கொடி தினம் என்பன திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கில் கடந்த சனிக்கிழமை (21) இடம்பெற்றபோது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் கலாகீர்த்தி உடுவை எஸ்.தில்லை நடராஜன், மட்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கல்வி, பொருளாதாரம், உலகமயமாக்கல் பிரச்சினைகள், தொழிநுட்பத்தின் எதிர்மறையான விளைவுகள், தொலைக்காட்சி, தொலைபேசியின் தாக்கங்கள், வீட்டு வன்முறைகள், சமூகப் பிரச்சினைகள், பாலியல் வன்கொடுமைகள், போதைக்கு அடிமையாதல் போன்ற பல்வேறு சவால்களுடன் போராடும் சிறார்களை நன்நெறியில் வாழவைக்க வேண்டுமாக இருந்தால் அறநெறிக்கல்வியே சிறந்த பொக்கிஷமாக இருக்க முடியும்.

எமது சிறார்கள் மாத்திரமல்ல உலகத்தில் இருக்கின்ற குறிப்பாக வடகிழக்கிலுள்ள சிறுவர்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டு குடும்ப சுமைகளை தாங்கக்கூடியவர்களாக, பெற்றோரின் பொருளாதார சுமைகளை பார்த்து வளர்ந்தவர்களாக, கல்வியிலே கொடுக்கப்படுகின்ற அழுத்தங்களைத் தாங்கி வடுக்களைச் சுமந்தவர்களாக, வறுமையினால் கல்வியினை தொடர முடியாதவர்களாக தங்களுடைய மதங்களை சுதந்திரமாக பின்பற்ற முடியாதவர்களாக இவ்வாறு பல்வேறு அழுத்தங்களினூடே வாழ்ந்து வரும் இக்காலகட்டத்திலே அறநெறி கல்வி முறைமையின் ஊடாக வாழ்வதற்கான வாழ்வியல் முறையினை கற்றுக்கொடுக்கின்ற கல்வியாக அறநெறிக் கல்வியினை பார்க்க முடியும்.

ஒரு குழந்தை பெற்றுக்கொள்கின்ற கல்வி, எதிர்காலத்தில் பதவிகளை தருமாயின் அக்கல்வி வாழ்க்கைக்கான கல்வியாகவும் பகுத்தாராயும் தன்மையினை பெற்றிருக்குமாயின் அவ்வாறான கல்வி வாழ்வதற்கான கல்வியாகவும் இருக்க முடியும்.

அறநெறியிலே நின்று மனிதர்களாக, அறநெறி பின்பற்றுபவர்களாக, தங்களுடைய பெற்றாரின் சமூகத்தினை, இனத்தினை, பிரதேசத்தினை மதிப்பவர்களாக, தன்னை உணர்ந்து மற்றவர்களையும் உணர்ந்து வாழ்வியல் முறைக்காக தானும் வழிகாட்டி செல்கின்ற முறையாகத்தான் அறநெறிக்கல்வியை நோக்கமுடியும். அதனால்தான் வாழ்க்கைக்கான கல்வியும் வாழ்வதற்கான கல்வியும் வேறுபடுகிறது. ஆகவே மானிடர்களாகிய ஒவ்வொருவரும் இவ்விரு கல்வியினையும் கற்று ஒழுகுபவர்களாக அவசியம் இருக்க வேண்டும்.

எங்களுடைய முனிவர்கள், ரிஷிகள் காட்டிய பாதையில் பின்பற்றி வளர்ந்தபோது மானிடருக்கு தேவையற்ற ஒழுக்கக்கேடுகள் இருந்ததில்லை. முனிவர்கள் மற்றும் ரிஷிகளின் வாழ்க்கை முறையினை மேலைத்தேய நாட்டவர்கள் எங்களிடத்தேயிருந்து பெற்றுக்கொண்டு இன்று அவற்றை எங்களுக்கே கற்பிக்கின்ற ஒரு நிலை காணப்படுகின்றது.

இந்த உலகத்திலே ஆட்கொள்ளப்பட்டிருக்கின்ற தொழிநுட்ப யுகத்திலே மற்றும் வெளி அழுத்தங்களால் எங்களுடைய சிறுவர்கள் பல்வேறு பிரச்சினைகளை அனுபவித்துக்கொண்டு இருக்கின்ற போது, எங்களுடைய பரம்பரை மூதாதையர்களுடைய முன்னைய பழக்கவழக்க வாழ்க்கை நடைமுறைகளை, அறநெறிகளை சொல்லிக்கொடுத்து நல்ல பண்புகளை சிறார்களிடத்தே மீளக்கொண்டுவர முடியுமாக இருந்தால் சிறந்ததொரு சமுதாயத்தை வளர்த்தெடுக்க முடியும்.

புராதன காலங்களிலே கல்வியும் கலையும் ஆலயங்களூடாக வளர்ந்த நிலை மாறிவரும் வேளையில், அவற்றை எழுச்சியுற செய்ய இந்துசமய ஆலயங்கள் ஒவ்வொன்றும் வித்தியாலயங்களாக செயற்படவேண்டும். திணைக்களங்கள் செய்கின்ற பெரும்பான அறநெறி வேலைகளை எதிர்வரும் காலங்களில் ஆலயங்கள் செய்ய முன்வருவதுடன், ஆலயங்களின் பரிபாலன சபையினர் தர்மகர்த்தாக்களாக செயற்பட வேண்டிய தேவையும் உள்ளது.

அறநெறிப் பாடசாலைகள் முறையாக நடத்தப்படுவதனுடன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற எங்களுடைய குழந்தைகளுக்கு புராண இதிகாசங்களிலே இருக்கின்ற விழுமியக் கருத்துக்களை எடுத்துக்காட்டும்போது எங்களுடைய இன, மத பண்பாட்டு ரீதியானவற்றை சிறார்களிடத்தே அறநெறிக் கல்வியின் ஊடாக உருவாக்குவது மிகச்சிறப்பான ஏற்பாடுகளாக கருதிக்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் எதிர்கால சமூகத்தை நெறிப்படுத்தி வளப்படுத்துகின்ற பொறுப்பு அறநெறி ஆசிரியர்களிடமும் ஆலயங்களிடமும் காணப்படுகின்றது என்றார்.

# தமிழ்க் கட்சிகள், தமிழர்களுக்காக ஒற்றுமைப்படுபவர்களாக இருக்க வேண்டும்

**துறைநீலாவணை நிருபர்**

கிழக்கில் தமிழர் சார்ந்து செயற்பட்டு, தமிழ்மக்களை பாதுகாத்து அவர்களுடைய நலன்களை முன்னெடுக்கக்கூடிய கட்சிகள் பொது இணக்கப்பாட்டுக்கு வருவதென்பதை உளமாற வரவேற்கிறேன் என, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பை விரிவுபடுத்தும் வகையில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் பங்கெடுத்த கலந்துரையாடல் கூட்டம், கூட்டமைப்பின் தலைவர் த.கோபாலகிருஸ்ணன் தலைமையில் மட்டு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிழக்கில் செயற்படுகின்ற அனைத்து தமிழ் அரசியற் கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின் ஊடாக ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைய வேண்டிய தேவையினை, தமிழ் மக்கள் இருப்புக்காக கோரி நிற்பதனால் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழர்களுக்காக அர்ப்பணிப்புடன் ஒற்றுமைப்படுபவர்களாக இருக்க வேண்டும்.

பொதுவாக அரசியல் கட்சி என்பது மக்கள் நலனையும் கட்சி நலனையும் சார்ந்து இருக்கும். கிழக்குத்தமிழர் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் போதிய முன்னேற்றம் இருப்பதனால், அடிப்படை கோட்பாடுகளுக்கப்பால் விட்டுக்கொடுத்தல், சகிப்புத் தன்மை என்பன எவ்வேளைகளிலும் ஆரோக்கியமாக பேணப்படாவிட்டாலும் இயன்றவரை கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு இவ் ஒன்றிணைவு விடயத்தில் கவனம் செலுத்தி தாராள மனப்பான்மையுடன் முன்னெடுக்க வேண்டும்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, தமிழர் மகா சபை, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, சமூக அபிவிருத்திக் கட்சி, சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்திச் சங்கம், தேசிய ஜனநாயக மக்கள் அமைப்பு போன்ற கட்சி அமைப்புகள் எந்தவிதமான தயக்கமுமில்லாமல் தமிழ் மக்களின் நலன்கருதி இணக்கத்தை வெளிப்படுத்தியிருப்பது போல, தமிழரசுக்கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் இணக்கத்தை வேண்டி நிற்கிறோம் என்றார்.

# தமிழ் மொழி மூல அதிபர் நியமனங்களை வழங்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிடம் பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் எடுத்துரைப்பு



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

அண்மையில் நடாத்தப்பட்ட அதிபர் சேவை தரம் ரிரிரி க்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத் தேர்விலும் சித்தியடைந்த அனைத்து தமிழ் மொழி மூல தகுதியுடையவர்களுக்கு அதிபர் நியமனங்களை வழங்குமாறு துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசமிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சரிடத்தில் இன்று (25) விடுத்துள்ள கோரிக்கை அடங்கிய மஹஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அதிபர் சேவை ஆட்சேர்ப்பு பிரமாணக்குறிப்பு மூலமாக உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தெரிவான 160 தமிழ் மூலமான அதிபர் நியமனங்களையும் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

இதனால் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் உள்ள அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

கல்வி அமைச்சின் மூலமாக வெளியிடப்பட்ட தமிழ் மொழி மூல அதிபர் நியமனப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய எந்தவித அடிப்படை உரிமைகளும் மீறப்படாத வகையில் நியமனங்களை வழங்குமாறு அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அக்கரைப்பற்றில் சமாதான சகவாழ்வு பாத யாத்திரை

**சியாத்.எம்.இஸ்மாயில்**
**அட்டாளைச்சேனை**

சர்வதேச சமாதான தினத்தினை முன்னிட்டு ‘பன்மைத்துவம் மற்றும் நீதியின் ஆட்சியைப் பலப்படுத்துவதன் மூலம் சமய சகவாழ்வைக் கட்டியெழுப்புவோம்’ எனும் தொனிப் பொருளின் கீழ் சர்வ மத பிரதிநிதிகளை ஒன்றிணைத்து நல்லிணக்க பொறிமுறைகளை கூட்டிணைப்பதற்கான




செயலகத்தின் ஆலோசனைக்கமைவாக தேசிய சமாதான பேரவையின் வழிகாட்டலின் கீழ் அட்டாளைச்சேனை சர்வமத குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதான சகவாழ்வு கவனயீர்ப்பு பாத யாத்திரை அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சர்வ மத குழுவின் தலைவர் ஐ.எம். ஹாசீம் தலைமையில் கவனயீர்ப்பு பேரணி அக்கரைப்பற்று மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பமாகி அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டத்தைஅடைந்தது. இப்பேரணியில் சகல இனத்தவர்களும் பங்குபற்றியதுடன் தமது ஒற்றுமையினை வலியுறுத்தி கோஷங்களையும் எழுப்பினர்.




## வவுனியாவில் 3.5 கிலோ கஞ்சா மீட்பு: இருவர் கைது

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் 3.5 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் வவுனியா, புதிய பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழில் இருந்து மாத்தறை நோக்கிய பயணித்த பேருந்தை வவுனியா, புதிய பேருந்து நிலையம் முன்பாக போதை ஒழிப்பு பிரிவு பொலிசார் சோதனை செய்த போது பயணப் பொதியினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1 கிலோ 702 கிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவரும், பிறிதொரு நபரின் பயணப் பொதியில் இருந்து 1 கிலோ 802 கிராம் கேரளா கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த கஞ்சா பொலிசாரால் மீட்கப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த இரு சந்தேக நபர்களும் பளைப் பகுதியில் இருந்து குறித்த பேருந்தில் ஏறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் பேருந்தில் இருந்து இறங்கிய பெண்ணின் கைப்பையில் பணம் திருடிய பெண் மடக்கி பிடிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா நகரப் பகுதியில் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட பெண் ஒருவரின் கைப் பையில் இருந்து பணம் திருடிய பெண் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பழைய பேருந்து நிலையம் பகுதிக்கு வந்த பேருந்து ஒன்றில் இருந்து தாயும், மகனும் இறங்க முற்பட்ட வேளை, குறித்த பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட பெண்ணின் கைப்பையை திறந்து அதில் இருந்த பணத்தை திருடியுள்ளார்.

இதனையடுத்து குறித்த தாயும், மகனும் அப் பெண்ணை துரத்திச் சென்ற போது அவர் அவசர அவசரமாக சென்று முச்சக்கர வண்டி ஒன்றில் தப்பியோட முயன்றுள்ளார்.

இதனையடுத்து அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இதன்போது அவ்விடத்தில் பொது மக்கள், பொலிசார் வந்ததையடுத்து குறித்த பெண் திருடியதாக கூறப்பட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு மன்னிப்பு கோரினார். இதன்பின் எச்சரிக்கப்பட்டு குறித்த பெண் விடுவிக்கப்பட்டார்.



## வவுனியா குட்செட் வீதியில் மோட்டர் சைக்கிள் - துவிச்சக்கர வண்டி விபத்து: இருவர் படுகாயம்

**வவுனியா நிருபர்**

வவுனியா, குட்செட் வீதியில் குட்செட் வீதியில் மோட்டர் சைக்கிள் - துவிச்சக்கர வண்டி என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, குட்செட் வீதியில் ஆலடிச் சந்தி நோக்கிப் பயணித்த முதியவர் மீது அதே திசையில் வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஆகிய இருவரும் படுகாயமடைந்திருந்தனர்.

இந் நிலையில் அங்கிருந்த பொது மக்கள் 1990 என்ற அவசர நோயாளர் காவு வண்டியிற்கு தொடர்பு கொண்டு அதனூடாக படுகாயமடைந்த இருவரையும் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் ஆக்கத்திறன் போட்டியில் முதலிடம்!





**வவுனியா நிருபர்**

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்களுக்கிடையிலான ஆக்கத் திறன் போட்டிகளை வருடாவருடம் நடத்தி வருகிறது.

கலை மன்றங்களின் அங்கத்துவம் வகிக்கும் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் அவர்களின் திறமைகளை ஊக்குவிப்பதற்கும் ஆக்கத் திறனை வெளிக்கொணரும் சந்தர்ப்பங்களை வழங்கல், திறமைகளைப் பாராட்டுதல் மூலமாக ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு நடத்தி வருகிறது.

அந்த வகையில் 2019 ஆம் ஆண்டிற்கான ஆக்கத்திறன் போட்டிகளில் மாகாண மட்ட போட்டிகள் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி அரங்கில் கடந்த 21.09.2019 22.09.2019 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இப்போட்டிகளில் வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரி திருக்கோவில் அனுசரணையில் இயங்கும் அகிலாண்டேஸ்வரி நுண்கலைக்கல்லூரி மாணவர்கள் பங்கு பற்றி வடமோடி கூத்து - சிறியோர் பிரிவு , வடமோடி கூத்து - பெரியோர் பிரிவு, தென்மோடி கூத்து - சிறியோர் பிரிவு அகியவற்றில் அனைத்து பிரிவுகளிலும் முதலாம் இடத்தை தனதாக்கி கொண்டுள்ளது.

## தபாலகத்தை முற்றுகையிட்ட அதிபர், ஆசிரியர்கள்




**வவுனியா நிருபர்**

நாடாளவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்கள் சுகயீன லீவுப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில் தமது விடுமுறையை அறிவிக்கும் பொருட்டு தந்தி அனுப்புவதற்காக வவுனியா தபாலகத்திற்கு சென்றமையால் அங்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது.

வவுனியா பிரதான தபாலகத்தில் அதிகளவிலான அதிபர், ஆசிரியர்கள் குவிந்தமையால் இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டது. தந்தி சேவையினை விரிவுபடுத்தி அஞ்சல் அலுவலகத்தின் நிலையினை வழமைக்கு கொண்டுவரும் பொருட்டு மேலதிக உத்தியோகத்தர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டு தந்தி அனுப்புவதற்கான சேவைகள் வழங்கப்பட்டன.

## கவிஞர் மாவை வரோதயனின் 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு




தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கவிஞர் மாவை வரோதயனின் 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு 29.09.2019 (ஞாயிற்றுக் கிழமை) அன்று பி.ப. 5 மணியளவில் வெள்ளவத்தை இராமகிருஸ்ண மிசன் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுரையினை சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ. தேவராஜா அவர்கள் ஆற்றவுள்ளார். விசேட நிகழ்வுகளாக கவிஞர் அ.சடாகோபன் அவர்களின் தலைமையில் இன்னமும் வாழ்வேன் என்ற தலைப்பிலான கவியரங்கமும், மு. மயூரன் அவர்களின் தலைமையில் மக்கள் பிரச்சினைகள் ஊடகங்களுக்கு சந்தைப் பொருட்கள் அல்ல என்ற தலைப்பில் விவாத அரங்கும் இடம்பெறவுள்ளன. கவியரங்கில் க. ஜெய்காந், த.வி.ரெஸாங்கன், ஹரி கீர்த்தனா, ரொ. நிரோஜினி ஆகியோரும், விவாத அரங்கில் பா. அஜன், ந. கணஸியாம், அ. திருமருகன், சு. அனுஸன், ஐ. சாரங்கன், சி. சஜிஸ்ணவன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

இந் நிகழ்வின் சிறப்பு அம்சமாக மாவை வரோதயன் 10 ஆவது ஆண்டு நினைவுச் சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நினைவு நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

## பௌத்தமயமாக்கலுக்கு பாராளுமன்றத்தில் ஆதரவு வழங்கிவிட்டு பின்னர் போராடுவதில் பயனில்லை: சிவசக்தி ஆனந்தன் எம்.பி

**வவுனியா நிருபர்**

பௌத்தமயமாக்கலுக்கு பாராளுமன்றத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும் போது அதற்கு ஆதரவு வழங்கிவிட்டு பின்னர் வந்து போராடுவதில் எந்தவித பயனும் இல்லை என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வடக்கிலும், கிழக்கிலும் ஆயிரம் விகாரைகளை அமைப்பதற்கு பல மில்லியன் ரூபாய் பணத்தை ஒதுக்கியுள்ளது. சிறைத் தண்டனை அனுபவித்த ஞானசார தேரர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். யுத்த காலத்தில் பல ஆயிரக்கான போராளிகள், பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்தக் கொலையுடன் சம்மந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியவில்லை. பௌத்த துறவிகளின் அடாவடித் தனத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கு ஒரு படி மேலே சென்று இலங்கையினுடைய நீதி அமைச்சர், பௌத்த பிக்குகளை நீதிமன்ற படிவாசல்களில் ஏற விட முடியாது என்று கூறுகின்றார். அவர்களுக்குரிய கௌரவம் கொடுக்கப்பட வேண்டும் என நீதி அமைச்சர் கூறுகின்றார்.

இந்த நாட்டினுடைய பிரதமர் அவர்கள் வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைப்பதற்கு பல மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கிவிட்டு, ஞானசார தேரரின் நடவடிக்கை தங்களுக்கு வெட்கக்கேடாக இருப்பதாக சொல்கிறார். இந்த நாட்டில் ஆட்சி செய்கின்ற ஜனாதிபதியாக இருக்கலாம் அல்லது பிரதமராக இருக்கலாம் பௌத்த துறவிகளான மதவாதிகளை தூண்டிவிட்டு தான் அரசியல் செய்ய முற்படுகிறார்கள். இதற்கு நாங்கள் பலிக்கடாவாக முடியாது. இந்தச் சம்பவம் ஆனது ஒட்டுமொத்த இந்துக்களுக்கும் ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது. கன்னியா, நீராவியடி, நாவற்குழி என தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல், சிங்களமயமாக்கல் உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது.

பௌத்தமயமாக்கலுக்கும், ஆயிரம் விகாரைகள் கட்டுவதற்கும் அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் அத்தனை தமிழ் கட்சிகளும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிராக கடுமையாக கிளர்ந்தெழவேண்டும். தமிழ் கட்சிகளிடத்தில் ஒற்றுமை, ஐக்கியம் வேண்டும். அதைவிடுத்து இந்த பௌத்தமயமாக்கலுக்கு பாராளுமன்றத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும் போது அதற்கு ஆதரவு வழங்கிவிட்டு பின்னர் வந்து போராடுவதில் எந்தவித பயனும் இல்லை. எனவே, சிங்கள, பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிராக ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## முன்பள்ளி கல்விச் சுற்றுலாவிற்கான நிதியுதவி



**வவுனியா நிருபர்**

வவுனியா திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளி சிறார்களின் கல்விச் சுற்றுலாவிற்கான 15 000/- ரூபா நிதியினை ஜெர்மனைச் சேர்ந்த இராஜசிங்கம் உதயகுமார் அவர்களினால் வழங்கப்பட்டது.

இவ் நிதியுதவியினை புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் வவுனியா நகர சபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் மோகன், புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரும் வவுனியா நகர சபை உறுப்பினருமான சுந்தரலிங்கம் காண்டீபன், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் ஆலோசகர் சதீஸ் ஆகியோரால் முன்பள்ளி அதிபர் மீரா குணசீலன் அவர்களிடம் 25/09/2019 கையளிக்கப்பட்டது.

## வவுனியாவில் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

**வவுனியா நிருபர்**



நீதிமன்றின் தீர்ப்பை அவமதித்தது பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணியில் உயிரிழந்த பௌத்த பிக்குவின் உடலத்தை எரித்தமையை கண்டித்தும் , சட்டதரணிகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டமையை கண்டித்ததும் வவுனியா நீதிமன்றம் முன்பாக (25.09.2019) காலை தமது வாயினை கறுப்பு துணிகளால் கட்டியவாறு சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் தாக்குதல் சம்பவத்திற்கு தமது கடும் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வழக்கு தொடர்பாக குறிப்பிட்ட ஒரு பௌத்த மதகுரு வழக்கு தீர்ப்பு வழங்குவதற்கு முன்னரே வெளியில் நின்று நீதிமன்றம் எந்த தீர்ப்பினை தந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதில்லை தாங்கள் நினைத்ததைத்தான் செய்வோம் என்று நீதிமன்றத்தினை அவமதிக்கும் செயலாக செய்தியினை சொல்லியுள்ளார்.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் மூன்று நாட்களுக்குள் எழுத்துமூலமான வாக்குறுதி ஒன்றினை வழங்கவேண்டும். இதனை கருத்தில் கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை வட மாகாணத்தினை சேர்ந்த சட்டத்தரணிகள் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்து பணிப்புறக்கணிப்பில் சட்டத்தரணிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக சட்டத்தரணிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை பணிப்புறக்கணிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

## வவுனியாவில் தோணிக்கல் பகுதியில் வர்த்தகர் மீது இருவர் தாக்குதல்

**வவுனியா நிருபர்**

வவுனியா தோணிக்கல் பகுதியில் வர்த்தகர் ஒருவர் மீது (24.09.2019) காலை 10.30 இருவர் தாக்குதல் மேற்கொண்டதில் காயமடைந்த வர்த்தகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடோன்றில் வவுனியாவை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது தொழிலுக்கான களஞ்சியசாலை ஒன்றினை நடாத்தி வந்துள்ளார். குறித்த களஞ்சிய சாலை அவரது உதவியாளராக இருந்த நபரின் வீட்டிலேயே அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த களஞ்சியசாலைக்கான வாடகை பணம் கொடுக்கப்படவில்லை என வீட்டின் உரிமையாளர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த வர்த்தகரை

பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் வரவழைத்து விசாரணைகளை மேற்கொண்டு வாடகைப்பணத்தினை செலுத்துமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் வேண்டுகோளிக்கினங்க வர்த்தகர் பணத்தினை செலுத்தியுள்ளார். இந் நிலையில் நேற்றையதினம் களஞ்சியசாலையிலிருந்து அவரது உடமைகளை அகற்றுவதற்காக அவ்விடத்திற்கு சென்ற சமயத்தில் குறித்த வீட்டாருக்கும் வர்த்தகருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் வீட்டு உரிமையாளரின் தாக்குதலுக்கு உள்ளாகிய வர்த்தகர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் 19 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

**வவுனியா நிருபர்**

வவுனியாவைச் சேர்ந்த 19 வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் மேலும் தெரியவருவதாவது,வவுனியா வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்தமை, விலை மற்றும் காலாவதி திகதி பொறிக்கப்படாத நிலையில் பொருட்களை விற்பனை செய்தமை, விலைகள் காட்சிப்படுத்தப்படாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் 19 வர்த்தக நிலையங்களில் இருந்து பொருட்கள் கையகப்படுத்தப்பட்டன.

குறித்த 19 வர்த்தகர்களுக்கு எதிராகவும் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் மேலும் தெரிவித்தனர்.

## வவுனியாவில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் வைத்தியசாலையில் அனுமதி

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் விறகு வெட்ட சென்ற இருவர் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் ஓமந்தை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நவ்வி பால மோட்டை பகுதியில் (24.09.2019) மாலை இடம்பெற்றுள்ளது.

பற்றை ஒன்றுக்குள் மறைந்திருந்த கரடியே இருவரையும் தாக்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவருகிறது.

இதனையடுத்து குறித்த நபர்களும் கரடியின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் வீரையா கலைஞானம் (வயது 42), விஜயகுமார் பிரசாந் (வயது 31) ஆகியோரே காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நீதித்துறையை மீறுவது அரசியல் அமைப்பினையே கேள்விக்குள்ளாக்கும் செயல்

## சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் உதயராசா விசனம்

**வவுனியா நிருபர்**

முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒரு வரலாற்று துன்பியலான நிகழ்வு மாத்திரமல்ல தமிழ் மக்கள் மனங்களில் பாரிய வடுவினை ஏற்படுத்தும் திட்டமிட்ட ஆட்சியாளர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலாகவுமே நோக்க வேண்டி இருக்கிறது என சிறீ ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் கௌரவ உதயராசா அவர்கள் உடகவியலாளரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மதங்கள் மனிதனை நல்வழிப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர வன்முறைக்கு தூண்டுவதாக இருக்ககூடாது. ஆனால் நாட்டில் அண்மைக்காலமாக மதவாதம் தலைதூக்கியுள்ளமை ஆரோக்கியமானதாக எமக்கு தோன்றவில்லை.

சிறுபான்மை மக்கள் மத்தியில் காணப்பட்டு வந்த நீதித்துறை சார்பான கடுகளவு நம்பிக்கையும் நீதிமன்ற இடைக்கால தீர்ப்பு மீறப்பட்டுள்ள நிலையில் தகர்க்கப்பட்டுள்ளது, நல்லாட்சி என்ற பெயரில் சிறுபான்மை சமூகங்களை மதவாதத்தின் பெயரால் ஒடுக்குகின்ற மனநிலையில் இருந்து ஆட்சியில் உள்ள அரசு மாறவேண்டும் இல்லையேல் இலங்கை சிறுபான்மை சமூகத்தின் சுடுகாடாகவே மாறும் அபாயம் காணப்படுவது வருத்தமளிக்கிறது.

இந்நிலையில் வன்னி அபிவிருத்தி அரசியலில் பிரதான பங்காற்றுகின்ற வகையில் எமது கட்சி வடக்கு கிழக்கு தமிழர்களின் மரபுரிமை தாயகம் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமளிக்காது. ஆகவே தமிழ் மக்களின் மரபு வழி சின்னங்களை பாதுகாப்பதற்கு நாம் கட்சி வேறுபாடுகளிற்கு அப்பால் ஒன்றிணைந்து செயற்பட தயாரகவுள்ளதுடன் அதனை வெளிப்படுத்தியும் வந்துள்ளேன்.

நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரத்தில் பௌத்த துறவிகள் தன்னிலை மறந்து செயற்பட்டமை வருத்தமளிப்பதுடன் பௌத்த தர்மத்தின் மீதான அடிப்படை நியமங்களையும் பெறுமானங்களையும் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியான உணர்வையும் தோற்றுவித்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமை தேசம் என்பதை துறவிகள் உணர்ந்து இருந்தும் திட்டமிட்டு தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர் குலைப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை வன்மையாக கண்டிப்பதுடன் மேற்குறித்த வலிந்த செயற்பாடுகளிற்கான எமது எதிர்ப்பினையும் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றோம்.

இலங்கை பாரிய யுத்த வடுக்களில் இருந்து ஒரு தசாப்தத்தை கடந்து மீள் எழுகின்ற சமயத்தில் மீண்டும் இன நல்லிணக்கத்தை குலைத்து அரசியல் இலாபம் ஈட்ட முனைய வேண்டாம் என்று அனைத்து தரப்பினரையும் விரயமாக கேட்டுக்கொள்கின்ற அதேவேளை பிள்ளையார் ஆலய தீர்த்த கேணிக்கு அருகில் மனித உடல்களை எரியூட்டுவதை இந்து தர்மம் அனுமதிக்காததை நீதிமன்றம் உணர்ந்து வழங்கிய இடைக்கால தடை உத்தரவு நீதித்துறையின் நம்பகத்தன்மையை தமிழ் மக்கள் மத்தியில் உணர வைத்து சில மணித்தியாலங்களில் நீதிமன்றின் தீர்ப்பானது மீறப்பட்டுள்ளதுடன் நீராவியடி பிள்ளையார் ஆலயச்சூழலில் உள்ள இந்துக்களின் அடிப்படை சுதந்திரமும் மீறப்பட்டுள்ளது.

ஆகவே தமிழ் மக்களின் இறுதி நம்பிக்கையாகவுள்ள நீதித்துறையின் சுதந்திரத்தையும் நீதியையும் நிலைநாட்ட அரசு முன்வரவேண்டும் என கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வவுனியாவில் மாவட்ட மட்டத்தில் உதைப்பந்தாட்ட போட்டிகள்

**வவுனியா நிருபர்**



வவுனியா மாவட்ட பாடசாலைகள் பங்குபற்றும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைப்பாந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 12 வயது பிரிவு ஆண், பெண்களுக்கான உதைப்பந்தாட்ட போட்டி ஆரம்பமாகியது.

இதில் 25 பாடசாலைகள் பங்குபற்றிய குறித்த போட்டியானது விறுவிறுப்பாக இடம்பெற்றது. இவ் உதைப்பந்தாட்ட போட்டியை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ்.கமலதாசன், சமூக சேவையாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# கல்லூரியை பழைய நிலைக்கு கொண்டு வருவோம்

எம்மண்ணின் மகத்தான சொத்தாக விளங்குகின்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினை எதுவித தளர்வுமின்றிக் காப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர்கள் அனைவரும் கல்லூரியின் எதிர்கால நன்மை கருதி நன்கு சிந்தித்துச் செயற்பட வேண்டும்ம என பழைய மாணவர் சங்க போசகர் செஞ்சொற் செல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

கல்லூரியினை சமூகமாக வழிநடத்துவதற்கு, தேசியப் பாடசாலைக்குப் பொருத்தமான அதிபரை உடன் நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்லூரியின் பெயரால் எவ்விதமான செய்திகளையும், விமர்சனங்களையும் வெளியிடுவதனை நாம் விடுத்து கல்லூரியின் கௌரவத்தைக் காக்க ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அக்கறை காட்ட வேண்டும்.

# வவுனியாவில் தண்ணுமைப் பிரவாகம் இசை நிகழ்வு





**வவுனியா நிருபர்**

நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்களும் வவுனியா தமிழ் சங்கமும் இணைந்து வழங்கும் தண்ணுமைப் பிரவாகம் இசை நிகழ்வு வவுனியா கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது பிரதம விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டிருந்துடன், வவுனியா தமிழ் சங்கம் மற்றும் நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்களால் தண்ணுமை எனப்படும் மிருதங்க கச்சேரி மற்றும் வயலின் இசை நிகழ்வுகளையும் நடாத்தியிருந்தனர்.

தமிழருவி சிவகுமாரண் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக மதல்வர் கலாநிதி மங்களேஸ்வரன், வவுனியா நகரசபை செயலாளர் தயாபரன், வவுனியா கல்வியற் கல்லூரி ஒய்வு நிலை பீடாதிபதி சிதம்பரநாதன், வவுனியா தமிழ் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன், நகரசபை உறுப்பினர்களான சேனாதிராஜா, இராஜலிங்கம் மற்றும் கலைஞர்கள், சிவாச்சாரியர்கள் என பலரும் கலந்த கொண்டிருந்தனர்.

# திருப்பி வெள்ளை வான் வருமா என்ற அச்சம் பல பேர் மத்தியில் இருக்கின்றது: ப.சத்தியலிங்கம்

**வவுனியா நிருபர்**

திருப்பி வெள்ளை வான் வருமா என்ற அச்சம் பல பேர் மத்தியில் இருக்கின்றது என முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் உள்ள இரண்டு பிரதான கட்சிகளில் ஏதோவொரு கட்சி தான் ஜனாதிபதி ஆட்சியை கைப்பற்றும். ஒரு தேசியக் கட்சி தங்களுடைய வேட்பாளரை அறிவிக்காது தங்களுக்குள் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு தேசியக் கட்சி வேட்பாளரை அறிவித்து விட்டது.

அவருடைய பெயரைக் கேட்டாலே எங்களுக்கு எல்லாம் பயமாய் இருந்தது. சிலவேளை அவர் வந்து விட்டால் என்ன நடக்கும் என்ற பயம் பல பேர் மத்தியில் இருக்கிறது. திருப்பி வெள்ளைவான் வருமா அல்லது கிறீஸ் மனிதன் வருவானா என்ற பயமெல்லாம் இருக்கிறது. ஆனபடியால் நவம்பர் 16 ஆம் திகதிக்கு பின் ஒரு நல்ல நிலை ஏற்படுமாக இருந்தால் வெளிநாடுகளில் இருப்பவர்கள் இங்கு முதலீடுகளை செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

# வவுனியா மாவட்ட செயலகத்தில் சிறுவர் திறன் விருத்தி செயலமர்வு

**வவுனியா நிருபர்**



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் திறன் விருத்தி செயலமர்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இச் செயலமர்வு இடம்பெற்றது.

சர்வதேச சிறுவர் தினமானது இம்முறை பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு என்னும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது. அதன் ஒரு கட்டமாக மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யும் முகமாக இச் செயலமர்வு இடம்பெற்றது.

இதில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கிறேட் மிசன் அமைப்பைச் சேர்ந்த சமூக பணியாளர்கள் வளவாளராக கலந்து கொண்டு தமது நாட்டின் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவிப் பிரதேச செயலாளர் கமலதாசன், சிங்கப்பூர் கிறேட் மிசன் சமூக பணியாளர்கள், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி, செட்டிகுளம் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் இளஞ்சிங்கம், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், செட்டிகுளம் மகாவித்தியாலயம் மற்றும் அல் இக்பால் மகாவித்தியால மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியா நெடுங்கேணியில் 8 வயது மாணவி துஸ்பிரயோக முயற்சி: இருவர் கைது

**வவுனியா நிருபர்**

வவுனியா, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 8 வயது மாணவி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டின் கீழ் இருவர் நெடுங்கேணி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி பயிலும் 8 வயது மாணவி ஒருவர் (21.09) பாடசாலையில் மேலதிக வகுப்பு நிறைவடைந்த பின் பெற்றோரின் வருகைக்காக காத்திருந்த போது குறித்த பாடசாலையில் கட்டட நிர்மாண வேலைகளை செய்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் குறித்த சிறுமியை அழைத்து பாலியல் துஸ்பிரயோகம் செய்ய முயற்சித்ததாக தந்தையால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து நெடுக்கேணி பொலிசாரால் இருவர் குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செயள்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நெடுங்கேணி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# சிலாவத்துறையில் கடற்படையால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தேசிய பாதுகாப்பிற்கு அவசியம்

## மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணையில் முகாம் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

**வவுனியா நிருபர்**

முசலி பிரதேசசபைக்குட்பட்ட சிலாபத்துறையில் கடற்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள 28 ஏக்கர் காணி தேசிய பாதுகாப்பிற்கு அவசியமாகையால் விடுவிக்கப்படாது எனவும், அவற்றை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சிலாபத்துறை கடற்படை பொறுப்பதிகாரி வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணையில் தெரிவித்துள்ளார்.

மன்னார், முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறையில் அமைந்துள்ள கடற்படை முகாம் காணியை விடுவிக்குமாறு அப்பகுதி மக்கள் செய்த முறைப்பாடு மீதான விசாரணை வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவில் இடம்பெற்றது. இதன்போதே கடற்படை பொறுப்பதிகாரி இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார், முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை பகுதியை சேர்ந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து புத்தளம், அனுராதபுரம், குருணாகல், கற்பிட்டி போன்ற பிரதேசங்களில் வசித்து வந்தனர். இந்த நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த மக்கள் சிலாவத்துறை பகுதியில் மீள்குடியேற்ற வந்த நிலையில் அவ் மக்களின் நிலங்களை கையகப்படுத்தி கடற்படையினர் பாரிய முகாம் ஒன்றினை அமைத்திருந்தனர்.

தபாலகம், ஆரம்ப சுகாதார நிலையம், பாடசாலை, நூலகம், இந்துக் கோவில், பள்ளிவாசல் உட்பட மக்களின் 28 ஏக்கர் காணிகளை கடற்படை கையகப்படுத்தியிருந்த நிலையில், கடந்த வருடம் தங்கள் பூர்வீக நிலங்களை கடற்படையினர் விடுவித்து அருகில் உள்ள அரச காணிகளில் முகாம்களை அமைக்குமாறு கோரிக்கை விடுத்து சிலாவத்துறை கடற்கரை முகாமுக்கு முன்பாக மக்களால் சாத்வீக போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன் ஒரு பகுதியாக கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் தமது காணிகளை கடற்படை விடுவித்து தருவதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறு கோரி முறைப்பாட்டு மனு ஒன்று கையளிக்கப்பட்ட நிலையில், குறித்த முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய மனித உரிமை ஆணைக்குழு குறித்த காணி விடயம் தொடர்பாக சம்மந்தப்பட்ட முசலி பிரதேச செயலாளார், சிலாவத்துறை கடற்படை பொறுப்பதிகாரி மற்றும் வடமேல் கடற்படை கட்டளை தளபதி முள்ளிக்குளம், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக பிரதிநிதிகளையும் அழைத்து வவுனியா மனித உரிமை ஆணைக்குழு காரியாலயத்தில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.



விசாரணையின் போது குறித்த காணியானது தேசிய பாதுகாப்பிற்கு அவசியமானது என்பதனால் குறித்த காணியை சட்ட ரீதியாக கடற்படைக்கு உரித்தக்குவதற்கான செற்பாடுகள் இடம் பெறுவதாகவும், குறித்த கடற்பகுதியூடாக போதை பொருட்கள் பாரிய அளவு கடத்தப்படுவதாக தெரிவித்த கடற்படை அதிகாரி தேசியபாதுகாப்புக்கு இக்காணிகள் அவசியம் என தெரிவித்தனர். அதே நேரத்தில் பாதிக்கப்பட மக்களுக்கு நஸ்ரஈட்டினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருவதாக பிரதேச செயலகம் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகவும், மெசிடோ நிறுவனம் சார்பாகவும் முன்னிலையான சட்டதரணி அர்ஜூன்,

குறித்த காணிகள் மக்கள் பூர்விகமாக வாழ்தவை என்பதன் அடிப்படையில் விடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்ததுடன், வேறு அரசகாணிகளை கடற்படை பயன்படுத்துமாறு கோரிக்கை விடுத்த போதிலும் கடற்படையினரால் குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இருப்பினும் பாதிக்கப்பட மக்கள் சார்பாக ஆஜாராகிய பிரதிநிதிகள் எக்காரணத்திற்காகவும் தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை கடற்படையினருக்கு வழங்க முடியாது எனவும், காணிகளை பெற்றுகொள்ளும் வரை போராடபோவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரை செய்வதே சிறிலங்காவில் குற்றவியல் நீதியை பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழி: ஐ.நாவில் கஜேந்திரகுமார்

சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரை செய்வதே சிறிலங்காவில் குற்றவியல் நீதியை பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழி என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 42வது கூட்டத் தொடரின் பொது விவாதத்தில் விடயம் 5 ன் கீழ் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் வெளிவந்த அறிக்கைகளுள் இலங்கை மீது பாரதூரமான குற்றச்சாட்டுகளை சுமத்தி வெளிவந்த ஒரு அறிக்கை, ஐநா மனிதஉரிமைகள் பேரவை ஆணையாளரின் சிறிலங்கா மீதான அலுவலக விசாரணை அறிக்கையாகும். சிறீலங்காவில் இழைக்கப்பட்ட மிகப் பாரதூராமான குற்றங்கள் மற்றும் இவை தொடர்பில் நீதிவழங்குதலில் இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையின் ;செயல்ப்பட முடியாத தன்மை போன்றவற்றினால், ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகமானது சிறீலங்காவில் ஒரு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையொன்றை பிரேரித்திருந்தது.

ஆனால், சிறிலங்கா மீதான ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையை தொடர்ந்து நடைபெற்ற ஐநா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்க தீர்மானத்தில், வேண்டுமென்றே கலப்புப் நீதிமன்றம் எனும் பதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

அன்றில் இருந்து ,கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை சிறிலங்கா அரசானது முழுமையாக நிராகரித்;ததோடு மட்டுமல்லாது, சிறிலங்காவின் மிக உச்சநிலை அதிகாரம் மிக்க பொறுப்புகளை வகிக்கும் ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஆகியோர், எந்தவொரு படையினரும், எந்தவொரு நீதிமன்றிலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதை அழுத்தமாக சொல்லியிருக்கிறார்கள்.

இத்தகய கள யதார்த்தத்தை கருத்தில்க் கொண்டு, ஐநா மனித உரிமைகள் பேரவையானது 40 வது கூட்டத்தொடரின்போது, குற்றவியல் நீதியை பெற்றுக் கொள்வதற்காக , இந்த மனித உரிமை பேரவை எனும் அமைப்பையும் தாண்டிச்சென்று சாத்தியமான அனைத்து வழிகளையும் கவனத்தில் எடுக்குமாறு தனது உறுப்புநாடுகளை கேட்டுக்கொண்டது .

இந்த பின்னணியில், யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகளாகிய நிலையில் சிறிலங்காவில் குற்றவியல் நீதியை பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழி, சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரை செய்வது மட்டுமே என இனப்படுகொலைக்கு உள்ளாக்கபட்ட தமிழ் மக்களின் பிரதிகளாக இந்த மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை மிகவும் உறுதியாக கேட்டுக் கொள்கிறோம் எனத்தெரிவித்துள்ளார்.



# மலையக தந்தி

## வீட்டுத்தோட்டம் மற்றும் கமத்தொழில் விவசாயத்துறையின் தேசிய நிகழ்வு!



**இரத்தினபுரி நிருபர்**

வீட்டுத்தோட்டம் மற்றும் கமத்தொழில விவசாயத்துறையின் தேசிய நிகழ்வு (26) காவத்தை புரான விகாரை மண்டபத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது காவத்தை பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட 1403 குடும்பங்களுக்கு பயிர் செய்வதற்கு தேவையான மரகறி, நெல் விதைகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க, ஜனாதிபதி பாராளுமன்ற செயலாளர் மியுறு பாசித உட்பட பெருந்திரலானோர் கலந்து கொண்டனர்.

## ஆசிரியர் தொழிற்சங்க போராட்டத்திற்கு தாங்கள் ஆதரவு வழங்கவில்லை

### தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

**க.கிஷாந்தன்**

சம்பள முரன்பாட்டினை தீர்க்க கோரி நாடாளவிய ரீதியில் ஆசிரியர், அதிபர் சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க போராட்டத்திற்கு தாங்கள் ஆதரவு வழங்கவில்லை என தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்தார்.

அட்டனில் 26.09.2019 அன்று தன்னெழுச்சி இளைஞர் அமைப்பும், தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கமும் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இரண்டு நாள் சுகயீன விடுமுறை போராட்டத்தை தவிர்த்து வழமைப்போல் நாங்கள் பாடசாலை நடவடிக்கையை மேற்கொள்கின்றோம்.

இதற்கான காரணம் நாங்கள் கடந்த ஆறாம் மாதம் ஜனாதிபதியின் இணைப்பு செயலாளருடன் கலந்துரையாடி ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற சம்பள முரண்பாடு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கலந்துரையாடினோம்.

இந்த கலந்துரையாடலின் போது பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வு எட்டப்பட்டது. அத்தோடு, இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்த ஆசிரியர் சங்கங்கள் எங்களுக்கு எந்தவிதமான தெளிவையோ, கலந்துரையாடளுக்கோ அழைப்பு விடுக்கவில்லை.

இந்த போராட்டம் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த காலக்கட்டத்தில் இவ்வாறான போராட்டங்கள் இடம்பெறுவதனால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இதன் காரணமாகவே நாங்கள் போராட்டத்தை தவிர்த்து வழமைப் போல் பாடசாலை நடவடிக்கையை மேற்கொண்டோம் என்றார்.

## அன்பை பரப்புங்கள் என்ற தொனிப்பொருளில் கொட்டகலை நகரில் விழிப்புணர்வு ஊர்வலம்




**க.கிஷாந்தன்**

அன்பை பரப்புங்கள் என்ற தொனிப்பொருளில் கொட்டகலை நகரில் 25.09.2019 அன்று விழிப்புணர்வு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுப்போம் போன்ற சிறுவர் உரிமைகள் தொடர்பான கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

கொட்டகலை புகையிரத கடவைக்கு முன்பாக ஆரம்பமான விழிப்புணர்வு ஊர்வலம் கொட்டகலை பிரதேச சபை வரை முன்னெடுக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பேரணியில் கொட்டகலை பகுதியை சேர்ந்த தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலை மாணவர்கள் 1000 பேர் உள்ளடங்கிய ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், தொண்டர் அமைப்புகள் மற்றும் பொது மக்கள், பத்தனை பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சிறுவர் உரிமை தொடர்பில் கோஷங்கள் எழுப்பிய வண்ணம், சிறுவர்களுக்கு அன்பு காட்டாதவர் எங்களை சார்ந்தவர்கள் அல்ல, உலகின் உன்னத படைப்பு சிறுவர்கள், சிறார்களை ஒருபோதும் சீரழிக்க வேண்டாம், சாதிக்க பிறந்த சிறுவர்களை சோதிக்காதே போன்ற பதாதைகளையும் ஏந்திய வண்ணம் சென்றமையை காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் கூட்டம் ஒன்றும் கொட்டகலை பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடதக்கது.

## தோட்ட அதிகாரிக்கு எதிராக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

**க.கிஷாந்தன்**

அரச பெருந்தோட்ட யாக்கத்தின் கீழ் (ஜனவசம) இயங்கும் நாவலப்பிட்டி கொலப்பத்தனை தோட்டத்தின் தோட்ட அதிகாரிக்கு எதிராக கொலப்பத்தனை, தலப்பத்தனை, கொங்காலை ஆகிய தோட்ட மக்கள் தலவாக்கலை - நாவலப்பிட்டி பிரதான வீதியில் கொலப்பத்தனை சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் 25.09.2019 அன்று காலை ஈடுப்பட்டுள்ளனர்.



குறித்த தோட்டத்தில் பணிபுரிந்த தொழிலாளி ஒருவரை குறித்த அதிகாரி தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டு சுமார் 100ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கோஷங்களை எழுப்பியவாறு. எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய சுலோகங்களை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

குறித்த மக்கள் பயன்படுத்தும் குடிநீரை மேற்படி தோட்ட அதிகாரி பயன்படுத்த முயற்சி செய்த வேளையில் தோட்ட தலைவர் இது தொடர்பில் அதிகாரியிடம் கேட்டபொழுது அவர் தலைவரை தாக்கியதாக தெரிவித்தே குறித்த தோட்ட தொழிலாளர்கள் கடந்த 17 நாட்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுப்பட்ட வந்த நிலையில் 25.09.2019 அன்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தோட்ட நிர்வாகம் கொழுந்து இல்லாத காலத்திலும் 25 கிலோகிராம் தேயிலை கொழுந்து பறிக்கவேண்டும் என கட்டாயப்படுத்துவதாகவும் 25 கிலோவிற்கு குறைவாக பறித்தால் அரை நாள் சம்பளம் வழங்குவதாகவும் இதனால் தாம் வருமான ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தோட்ட நிர்வாகம் தேயிலை செடிகளை முறையாக பாதுகாக்காமல் காடாக்கியுள்ளதாகவும் இத்தோட்ட மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். அத்தோடு, தேயிலை மலையினை முறையாக பராமரிக்காமல் தோட்ட நிர்வாகம் கைவிட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக மலையக அரசியல் வாதிகள் மற்றும் தொழிற்சங்க அதிகாரிகளிடம் முறைபாடுகள் செய்தபோதிலும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் ஆர்பாட்டகாரர்கள் தமக்கு தீர்வு கிடைக்கும் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்படவுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

## 87 ஆண்டுகளாக ஜொலிக்கும் புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி

மலையக காந்தி என அழைக்கப்படும் அமரர் இராஜலிங்கம் அவர்களின் முயற்சியால் புஸ்ஸல்லாவ வகுகவ்பிட்டிய பிரதேசத்தில் பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கபட்ட பசுபதி பாடசாலை கால போக்கில் சரஸ்வதி வித்தியாலயமாக 1932.09.25 பெயர் மாற்றம் பெற்று 87 வருடங்கள் ஆகின்றன



இக் காலப்பகுதியில் இந்த பாடசாலையை வைபவ ரீதியாக திறந்து வைக்க இலங்கைக்கு இந்தியாவின் உயர்ஸ்தானிகராக இருந்த ஸ்ரீமத் மேனன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டார் இவருடன் இவரது மனைவியான திருமதி மேனன் சரஸ்வதி அவர்களும் கலந்துக்கொண்டார்.

அன்றய தினம் திருமதி மேனன் சரஸ்வதியின் பிறந்த தினமாகும் இவருக்கு ஏதாவது பரிசு அளிக்க வேண்டும் என்ற நோக்கில் பசுபதி வித்திலாயமாக இருந்த பாடசாலை சரஸ்வதி வித்திலாயமாக மாற்றி திருமதி மேனன் சரஸ்வதிக்கு பரிசளித்தார் அமரர் இராஜலிங்கம் அவர்கள்

அன்று முதல்‘சரஸ்வதி வித்திலாயம்’ என்ற பெயர் பாடசாலைக்கு சூட்டப்பட்டுள்ளது.

இதன் பயனாகவே தற்போது இந்தியாவின் 9.5 மில்லியன் ரூபா செலவில் பாடசாலை அபிவிருத்தி செய்யபடுகின்றது.

எங்கள் பாடசாலையின் திறப்பு விழாவிற்கு வருகை தந்த திரு ஸ்ரீமத் மேனன் திருமதி மேனன் சரஸ்வதி அவர்களின் பேரனே இந்தியாவின் முன்னால் பாதுகாப்பு செயலாளர் மேனன் அவர்கள். இவர் தனது பாட்டியின் பெயரில் பாடசாலை இருப்பதை அடிக்கடி எமது பாடசாலைக்கு வருகை தந்து பார்வையிட்டு சென்றுள்ளார்.

இந்த விடயத்தை அதிபர் உட்பட பாடசாலையின் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் கண்டியில் உதவி உயர் ஸ்தானிகராக இருந்த ஏ.நடராஜன் அவர்கள் ஊடாக மேலும் உதவிகள் கேட்டு விண்ணபித்து இருந்தனர். அதன் பயனாக இந்த அபிவிருத்திகள் வந்துள்ளமை குறிப்பிடதக்கது

இந்த அபிவிருத்திகளை எமது பாடசலைக்கு பெற்றுக் கொடுத்த முன்னால் கல்வி இராஜாங்க அமைச்சரும் தற்போதைய விசேட பிராந்தியங்கள் அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி வே.இராதாகிருஸ்ணன் அவர்களின் சேவை பாராட்டதக்க ஒன்றாகும்.

## நல்லாட்சி அரசாங்கம் ஏனைய அமைச்சுக்களை விட கல்வி அமைச்சுக்கே அதிமான நிதியினை ஒதுக்கியுள்ளது

### அமைச்சர் வி.ராதாகிருஸணன் புகழாரம்

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

நான் கல்வி ராஜங்க அமைச்சராக இருந்த காலத்தில் எந்ததெந்த பாடசாலைக்கு நிதி ஒதுக்குகிறேன் என்று எவரும் கேட்கவில்லை.

ஹட்டன் கல்வி வலயத்தில் ஹைலன்ஸ் டிக்கோயா.ஹொளி ரோசரி,புலூம்பீல்ட் உட்பட பல பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறேன் ரணில் விக்கிரசிங்கவின் அரசாங்கத்தில் தான் ஏனைய அமைச்சுக்களைவிட அபரீதமான அளவு நிதியினை ஒதுக்கிய அரசாங்கம்.

இந்த மூன்றாண்டு காலப்பகுதியில் பாடசாலைகளுக்கு அடிபடை வசதிகளை பூர்த்தி செய்து கொடுத்துள்ளோம்,ஆசிரியர் நியமனங்களை பெற்றுக்கொடுத்துள்ளதுடன் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ,உட்பட பல நியமனங்களையும்,ஸ்மாட் வகுப்பறைகள் என பல அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



மலையகத்தில் மாத்திரம் கணிதம் விஞ்ஞானம் கற்கக்கூடிய 20 பாடசாலைகள் தரமுயத்தப்பட்டுள்ளன.

இது மலையகத்திற்கு மட்டு மன்று வடகிழக்கு மாகாணங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விசேட பிராந்திங்களுக்கான அபிவிருத்தி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான கலாநிதி வி;.ராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா ஆரம்பிரிவில் சுமார் 1.65 மில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்ட பாடசாலை கட்டடம் நேற்று (23) திகதி அமைச்சர் வி.ராதாகிருஸணன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எழு வகுப்பறைகளையும் ஒரு கேட்போர் கூடத்தினையும் கொண்டு அமைக்கப்பட்ட மேற்படி கட்டடம் சகல வசதிகளையும் கொண்டுள்ளன.

இந்நிகழ்வின் போது அமைச்சர் ராதாகிருஸணன் அவர்களால் பல்லூடகக் கருவி ஒன்றும் பாடசாலை அதிபருக்கு கையளிக்கப்பட்டதுடன் மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் திருமதி எஸ்வெலிங்டன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு ஹட்டன் கல்வி பணிமனையின் உதவிக்கல்விக் பணிப்பாளர்கள்,அதிபர்கள் முன்னாள் கல்விப்பணிப்பாளர்கள் உட்பட் அதிபர்கள் ஆசிரி;யர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## பாதை சீரில்லை என புகார்

**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட சாமிமலை மின்னா தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதி சுமார் 2கிலோ மீட்டர் தூரத்தை செப்பணிட பல தடவைகள் அடிகல் நாட்டப்பட்டு இதுவரை செப்பணிடபடவில்லை. அவ்வீதியை செப்பணிட 2.8 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு பல மாதங்களும், பல வருடங்களுமாகி செப்பணிடும் பணி மந்த கதியில் நடப்பதால் மக்கள் பெரும் துயரத்துக்கு உள்ளாகி வருவதாக அத்தோட்ட மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கடந்த பல மாதங்களாகியும் சுமார் 200 மீட்டர் தூரத்தையே செப்பணிட்டுள்ளமையும் இதற்கு நிதி ஒதுக்கி ஒரே தடவையில் வீதி செப்பணிட தேவையான பொருட்களை கொண்டுவராமல் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வந்து வீதியை முறையாக செப்பணிடாமல் பணத்தை சூரையாட எத்தனிப்பதாக தோட்ட மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய கொந்தரத்து காரரை தவிர்த்து புதிய கொந்தரத்து காரர் ஒருவரிடம் வழங்கினால் இந்த வீதியை 3 வாரங்களில் செப்பணிட முடியும் என அவர்கள் மேலும் கூறினார்கள். மேலும் நிதி ஒதுக்கிய அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதுடன் கடந்த 5 ஆண்டு காலத்தில் இரு தடவைகள் அடிகல் நாட்டி பணியை சிறப்பாக செய்யாமல் மக்களை அசௌகரியத்திற்குள்ளாக்குவதுடன் ஒரு சிலர் இவ்வீதி செப்பணிட வந்த பணத்தை இடைதரகர்கள் மூலம் மோசடிசெய்வதாக மக்கள் அமைச்சின் கவணத்திற்கு கொண்டுவருவதுடன் இவ்வீதியை முறையாக செப்பணிட்டு மக்களின் பாவணைக்கு உகந்தவகையில் சீர் செய்து தருமாறு அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

## பெரிய காளான்கள் கண்டுபிடிப்பு




**மஸ்கெலியா நிருபர்**

நல்ல தண்ணி பொலிஸ் பிரிவிக்கு உட்பட்ட லக்சபான தோட்டத்தில் பணிக்கு சென்ற தொழிலாளர்கள் பணியை ஆரம்பித்து சிறிது தூரம் பணி செய்து கொண்டு சென்ற வேளையில் அங்கு காளன்கள் இருப்பதை கண்டுள்ளனர்.

அந்த காளன்கள் சுமார் 2 கிலோ வீதம் 2ம் ஏனைய காளன்கள் 10க்கு மேற்பட்டவையை கண்டுள்ளனர். நீண்ட காலத்தின் பின்னர் இவ்வாறான காளன்கள் கிடைத்தமை அத்தொழிலாளர்களுக்கு சந்தோசமாக இருந்ததுடன் கடந்த சில வாரங்களாக காலநிலை மாற்றத்தின் பின்னர் 26ம், 27ம் திகதிகள் காலை வேலையில் சற்று உஷ்ணத்துடன் இருந்ததால் அப்பகுதியில் சாய்ந்து கிடந்த வாகை மரத்திலேயே இந்த காளன்கள் காணப்பட்டன என தொழிலாளர்கள் அவற்றை அவர்கள் பகிர்ந்து கொண்டு சமைக்க எடுத்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

## வெளிவாரிக் கற்கைநெறி மாணவர்கள் பாதிப்பு

**இரா.யோகேசன்**
**கினிகத்தேனை நிருபர்**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைகழக கல்வி சாரா ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணி பகிஷ்கரிப்பு காரணமாக அனைத்து பல்கலைகழகத்தின் வெளிவாரி பட்டபடிப்புகளின் அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்ததன் காரணத்தினால் தங்களுடைய அனைத்து செயற்பாடுகளும் கேள்வி குறியாக உள்ளதாக வெளிவாரி கற்கைகள் மாணவர்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

நாட்டிலுள்ள தமிழ் மொழி மூலமாக கிழக்கு பல்கலைகழகம்,யாழ்பல்கலைகழகம்,பேராதனை பல்கழலைகழகம்,தென்கிழக்கு பல்கலைகழகம் ஆகியவற்றில் மாணவர்கள் வெளிவாரி கற்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இருந்த போதும் அண்மை காலமாக தொடர்ந்து 15வது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் பணி பகிஷ்கரிப்பு காரணமாக இடம்பெற விருந்த கருத்தரங்குகள்,பரீட்சைகள்,வெளியிடப்படவிருந்த பரீட்சை பெறுபேறுகள்,பட்டமளிப்பு விழா ஆகிய அனைத்து விடயங்களும் காலவரையரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெளிவாரி மாணவர்களின் அனைத்து விடயங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளவிருந்த அனைத்து செயற்பாடுகளுக்கும் தடைப்பட்டுள்ளதால் தாம் பல்வேறு வகையில் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளதாக கவலையும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பணி பகிஸ்கரிப்புக்குரிய காரணங்களுக்கான கோரிக்கைகளை நிறைவு செய்வதனூடாகவே தம்முடைய வெளிவாரி கற்கைகள் விடயங்கள் காலதாமதமின்றி தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என கருத்து தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் பல்கலைகழகத்தின் கல்வி சாரா ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணி பகிஷ்கரிப்பினால் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தாம் தொடர்ந்து முகம் கொடுத்து வருகின்ற விடயங்களை அரசாங்கம் கருத்திற்கொண்டு பணி பகிஷ்கரிப்பை தொடர்ச்சியாக முன்னெடுக்காத வகையில் சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை உயர்கல்வி அமைச்சும் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட வெளிவாரி கற்கைகள் மாணவர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# மகன் வருகிறான்!

அன்று இரவு, தூக்கமே வரவில்லை. கோபமும், இயலாமையும், பாக்கியநாதனை தூங்க விடாமல் செய்தது.

வயலுக்கு வேலி போட்டு இரண்டு நாள் கூட ஆகவில்லை. வேலியை பிடுங்கி போட்டிருந்தனர். முத்தரசன் மகன்களின் வேலை, இது. ஊரில், அவர்களின் கொட்டம் தான், கொடி கட்டி பறக்கிறது.

'போக்கிரிப் பசங்க, யாருக்கும் கட்டுப்பட மாட்டாங்க...' என, ஒதுங்கி கொண்டனர், ஊர்க்காரர்கள்.

முன்பு இருந்த தெம்பு, இப்போது இல்லை, பாக்கியநாதனுக்கு. வயது, 70ஐ தொடுகிறது. உடம்பில் பலவீனம் ஒட்டிக் கொண்டிருந்தது. அதனால், ஓங்கி சத்தம் போடக் கூட யோசிக்க



வேண்டியிருந்தது.

ஒரு முறை, அப்படி குரல் கொடுக்கப் போய், சண்டைக்கு வந்து விட்டனர், முத்தரசனின் மகன்கள். நடுக்கம் வந்து, பின் வாங்கி விட்டார்.

'நீங்க எதுக்கு, இவங்களோடு மல்லுகட்டிகிட்டு... சென்னையில் இருக்கிற, மகன், ராஜனை வரவழைங்க... அவன் வந்தா தான், சரிப்பட்டு வருவானுங்க... இல்லைன்னா, இப்படி தான் உன்னை சீண்டிகிட்டே இருப்பானுங்க,' என்றார், பக்கத்து வீட்டு, ராமசாமி.

சென்னையில், கன்டெய்னர் லாரி டிரைவராக இருக்கிறான், ராஜன். வெளி மாநில பயணம் போனால், வீடு திரும்ப, ஒரு வாரம் அல்லது 10 நாள் ஆகும். நேரம் கிடைப்பது அரிது. திருவிழா, விசேஷங்களுக்கு கூட வர முடியாமல், மனைவி, குழந்தைகளை அனுப்பி வைத்தான்.

ராஜன், ஊருக்கு வரும் போது, பவ்யமாகி, 'நாங்களா, சீண்டுகிறோமா... நீங்க வேற, அவருக்கும், வயலுக்கும், நாங்க தானே பாதுகாப்பு கொடுத்துகிட்டு இருக்கோம்... நாங்க இல்லைன்னா, இங்கே தனியா வாழ்ந்துட முடியுமா அப்பாவால...' என்பர்.

'அவங்க சொல்றதும், சரியாத் தான் இருக்கு... வரப்புன்னு இருந்தா, கொஞ்சம் முன்ன பின்ன தள்ளி நடவு போடறது தான்... பெரிசு பண்ணாம அனுசரிச்சு போயேன் பா...' என்பான்.

அவன் தலை மறைந்ததும், கொக்கரிப்பர்.

'மாத செலவுக்கு பணம் அனுப்புகிறான். சாப்பாட்டுக்கு, கை செலவுக்கு குறை இல்லை. ஆனால், இந்த பாவிப் பசங்க நிம்மதியா இருக்க விடுறதில்லையே... பழைய தெம்பும், ஆரோக்கியமும் இருந்தால், இவன்களை ஒற்றைக் கையால் தூக்கி பந்தாடி விடலாம்; ரெண்டு அடி கொடுத்து மிரட்டலாம்.

'இப்போது, அந்த தைரியமும், வலுவும், மகன், ராஜனுக்கு இருக்கிறது. அவன், ஒரு குரல் கொடுத்தால் அதிரும். எதிரில் வர அஞ்சுவர்...' என, நினைத்துக் கொண்டார்.

ஒருமுறை, மகனை பார்க்க, சென்னைக்கு போனபோது,'அந்த முத்தரசன் மகன்கள், பிரச்னை பண்றாங்க... நீ ஊர்ல இருந்த வரைக்கும், ஒடுங்கி இருந்தானுங்க... உனக்கு வேலை கிடைச்சு, சென்னைக்கு வந்த பின், ஊர் பக்கம் நீ வர்றதே இல்லை...

'வந்தாலும், உடனே புறப்படறே... பிரச்னையை கேட்டு, அவங்களை கண்டிச்சு, ஒரு வார்த்தை சொல்லி, நிலத்துக்கு ஒரு வேலி கட்டிக் கொடுத்துட்டு வந்தா போதும்..'. என்றார்.

'வருகிறேன்...' என்ற ராஜன், இதுவரை வரவில்லை.

'ஏன் மாமா... அங்கே தனியா இருந்து அவதிப்படறீங்க... இங்கே வந்துடுங்களேன்... பேரக் குழந்தைகளை, பார்த்துகிட்டிருந்தாலே நேரம் போகுமே...' என்று, மருமகளும் வற்புறுத்தினாள்.

ஆனால், அவரோ, 'கிராமத்தில் இருந்து பழகி போச்சு... மாடு, கன்னு, வயல்வெளின்னு வாழ்க்கை பிணைஞ்சு கிடக்கு... தினமும் யாருடனாவது பேசியபடி, காலாற நடந்து கொண்டிருந்தால், பொழுது போகுது... ஒரு வேளை சோறு வடிச்சுகிட்டு, மூணு வேளைக்கு வச்சு சாப்பிட்டுக்குவேன்... திண்ணையில உருண்டு கிடப்பேன்...

'இங்கே, அறைக்குள்ள இருக்க முடியலைம்மா... ரெண்டு நாள் இருந்தாலே, சிறை மாதிரி இருக்கு...'டிவி' பார்க்கிற பழக்கமும் இல்லை... இப்படியே இருந்துட்டு போயிடறனே... ஒரு குறையும் இல்லை... அந்த வயல்காரங்க தான் தொல்லை பண்ணிகிட்டிருக்காங்க. ராஜன்... ஊருக்கு வந்து, அவங்களை அதட்டி, கையோடு ஒரு வேலி கட்டி கொடுத்துட்டா நல்லது...' என்றார்.

ஒவ்வொரு முறை, பிரச்னை வரும்போதும், 'இருங்கடா... ராஜா வருவான், அவன்கிட்ட பேசுங்க... வந்து, உங்களை என்ன செய்யறான் பாருங்க...' என்று, அவர்களை, ஒரு பயத்திலேயே வைத்திருந்தார்.

ஆனால், ஒவ்வொரு முறையும் அவர், சென்னைக்கு சென்று தனியாக திரும்பி வருவதாலும், ஆண்டுக்கணக்கில் ராஜா, ஊர் பக்கம் வராததாலும், முத்தரசனின் மகன்களுக்கு தைரியம் துளிர் விட்டது.

'என்ன செய்தாலும், மகன் வரப் போவதில்லை. இந்த கிழம், இனி, கேட்க ஆள் இல்லாத அனாதை..' என்று மிரட்ட ஆரம்பித்தனர்.

சென்னையிலிருந்து திரும்பிய பாக்கியநாதனிடம், 'என்ன... இந்த முறையும், பையன் வரலையா... வந்தா மட்டும் பயந்துடுவோமா... அந்த நிலத்துல, கால் பங்கு எங்களோடது... எங்க வேணும்னாலும் பேசிக்க...' என்றனர்.

சோர்ந்து போனார்.

முன்பு இருந்த தைரியம் கூட இப்போது இல்லை. நிலத்தின் பக்கமும் போகவில்லை, பாக்கியநாதன்.

'இப்படியே இருந்தால், அவங்க கொஞ்சம் கொஞ்சமா, ஆக்கிரமிப்பு பண்ணிடுவான்க... என்ன தான் சொல்றான் உன் மகன்...' என்றார், ராமசாமி.

'வரணும்ன்னு தான் நினைக்கறான், முடியலை... பணம் மட்டும் கொடுக்கிறான்,'என்றார்.

'அதை மட்டும் வச்சுகிட்டு என்ன பண்றது... இங்க உள்ள பிரச்னையை, வந்து சரி செய்துட்டு போனால் தானே, உன்னால் நிம்மதியாக இருக்க முடியும்... ஒரு நாள் வந்து போக முடியாதபடிக்கு, அப்படி என்ன, ஐ.ஏ.எஸ்., உத்யோகம்...

'நீ செத்து போனாலும், இப்படி தான் பாரா முகமா இருப்பானா... அப்ப வந்தால், காரியம் முடியற, 10 நாள் வரைக்குமாவது ஊரில் தங்கி தானே ஆகணும்... அப்படின்னு நினைச்சுகிட்டாவது வரக் கூடாதா,' என்று, மகன் ராஜனை திட்டினார்.

சங்கடமாக இருந்தது. மகனின் அலட்சியப் போக்கு, மன உளைச்சலை கொடுக்க, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் சோர்ந்தார்.

தன்னை, கை கழுவிட்டானோ என்று கவலை கூட வந்தது. சாப்பாடு கூட சரிவர இறங்கவில்லை.

ஒருநாள் திண்ணையில் சுருண்டு கிடந்த, பாக்கியநாதனிடம், 'உன் பையன் வரான்யா' என்று, ராமசாமி கூறினார்.

கிண்டல் செய்கிறாரோ என்று நினைத்து, சந்தேகமாக எட்டிப் பார்த்தார்.

தொலைவில், பஸ்சை விட்டு இறங்கி, வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான், ராஜன்.

கம்பீர நடையும், கைவீசி அவன் வந்த தோரணையை பார்த்த நொடியில், அவருக்குள் தெம்பு ஊற்றாக பிரவகித்தது. நிமிர்ந்து நின்றவர், கண்களில் பிரகாசம்.

'இப்ப வாங்கடா... சல்லைப் பசங்களா... குள்ள நரி மாதிரி ஒளிஞ்சு ஒளிஞ்சு சீண்டிகிட்டிருந்தீங்களே... சிங்கம் மாதிரி வர்றான்... பதில் சொல்லுங்கடா டேய்,' என்று உரக்க கத்தினார், பாக்கியநாதன்.

அந்த குரலை கேட்டவர்கள், திகைத்து போயினர்.

'மகனைப் பார்த்ததும், இந்த கிழவனுக்கு தான் எத்தனை தைரியம்...' என்று ஆச்சரியப்பட்டனர்.

முத்தரசன் வகையறாக்கள் கூட, கொஞ்சம் அரண்டு போயினர்.

இருப்பினும், 'வழக்கம் போல, ஒரு சமாதான மாநாடு நடத்தி விட்டு போகப் போகிறான். அதுவரை பணிவு காட்டினால் போதும்...' என்று, கொஞ்சம் அலட்சியமாக இருந்தனர்.

ஆனால், இந்த முறை, புயலாக சீறினான், ராஜன்.

'என்னடா நினைச்சுகிட்டிருக்கீங்க மனசுல... கேட்க ஆள் இல்லைன்னு நினைச்சீங்களா... என்ன பார்க்கும்போது ஒரு பேச்சு, நான் வராத போது, ஒரு பேச்சா... வாங்க, உங்க நிலம் எது வரைக்கும்ன்னு சொல்லுங்க... சரியா இருந்தால், தலை வணங்கி சலாம் பண்றேன்...

'அப்படியில்லாமல், எங்க நிலத்துல, விளையாடினது உறுதி ஆச்சுன்னா, தலை கீழா கட்டி தொங்க விட்டு, தோலை உரிச்சு, மிளகாய் தடவிடுவேன்... வாங்கடா வாங்க,' என்றான், ராஜன்.

பெட்டிப் பாம்பாக அடங்கிப் போயினர்; தலை காட்டவில்லை.

இரண்டு நாள் ஊரில் இருந்து, நிலத்தை அளந்து, கம்பி வேலி போட்டான்.

'இனிமே, இந்த மாதிரி பிரச்னை செய்தீங்கன்னா, லாரிய எடுத்து வந்து, ஒட்டுமொத்தமா ஏத்தி, நசுக்கிட்டு போயிடுவேன்... ஜாக்கிரதை,' என்று, முத்தரசன் மகன்களை எச்சரித்தான்.

'நகரத்துல முதியோர் இல்லத்துல இருக்கும் பெற்றோரும், கிராமத்தில் தனியாக வாழும் பெற்றோரும், ஏறக்குறைய சமம் தான். மாசம்தோறும் பணம் கொடுத்துட்டா மட்டும் போதாது... அடிக்கடி வந்து பார்த்துக்கணும்... அது தான் முக்கியம், அது தான் அவர்களுக்கு தெம்பு...

'அவனுங்க கொடுத்த தொல்லையில, அப்பா நிலை குலைஞ்சு கிடந்தார்... கோடி ரூபாய் கொடுத்தாலும், அவர் மன வேதனை போகாது... திண்ணையில சுருண்டு கிடந்தவர், உன்னை பார்த்ததும், கிண்ணுன்னு துள்ளி குதிச்சு, 'வாங்கடா... ஒரு கை பார்க்கறே...'ன்னு நிமிர்ந்தார் பாரு... அதானே முக்கியம்... அடிக்கடி வந்துட்டு போப்பா,' என்றார், ராமசாமி.

தலையாட்டியபடியே நடந்தான், ராஜன்.

மனம் நிறைய உற்சாகத்துடன், மகனை வழியனுப்ப சென்றார், பாக்கியநாதன்.

**எஸ். ராஜசிம்மன்**

# கொலு

'என்ன பண்ணுவீங்களோ, ஏது பண்ணுவீங்களோ தெரியாது... இந்த வருஷம், நம்மாத்துல, கொலு வெச்சே ஆகணும்,' என்று கண்டிப்புடன் கூறிய அலமேலுவை, ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

அலமேலு, என் மனைவி. செல்லமாய், அம்முலு என்றழைப்பேன்.

கல்யாணமாகி, 25 ஆண்டுகளில், எங்கள் வீட்டில், கொலு வைத்ததே இல்லை. திடுதிப்பென்று, 'இந்த வருஷம், நம்மாத்துல, கொலு வைத்தே ஆக வேண்டும்...'என்று, அம்முலு சொன்னதும், எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

'என்ன... தமாஷ் பண்றியா?'

'தமாஷ் எல்லாம் இல்லை... கண்டிப்பா, கொலு வெக்கணும்... வெக்கறோம்,' என்றாள்.

'வெறுமனே பொம்மைகளை அடுக்கி வெக்கறதும், எடுத்து வெக்கறதும், கொலு இல்லேம்மா... அதுக்குன்னு சில விதிமுறைகள், சம்பிரதாய, சடங்குகள் இருக்கு,' என்றேன்.

'எல்லாம் எனக்கும் தெரியும்!'என, கொலு வைக்கும் முறை மற்றும் வாங்க வேண்டியது குறித்து அம்முலு பட்டியலிட, பிரமித்தேன்.

'அது சரி, கொலு வெக்கணும்னா, பொம்மைங்க வேணும்... அதை வெக்க படிக்கட்டு வேணும்... அப்புறம், நீ ஏதோ பட்டியல் போட்டியே, அதெல்லாம் வாங்க, முக்கியமா பணம் வேணும்... தெரியுமில்லே,’’ என்றேன்.

நான் சொன்னதை கேட்டு சிரித்த அம்முலு, 'கொலு வெக்கணும்ங்கற திட்டத்தை உங்களாண்ட பிரஸ்தாபிக்கறதுக்கு காரணமே, பணம் தாண்ணா... என் அளவில் முடியற காரியமா இருந்தா, உங்க கிட்ட சொல்லியே இருக்க மாட்டேன்' என்றாள்.

'போச்சு... அரசாங்கம் அறிவித்திருக்கும், 60 நாள், 'போனஸ்' தொகைக்கு, ஏதோ உலை வைக்கப் போகிறாள்...' என்பது மட்டும் தெளிவாக புரிந்தது.

நவராத்திரிக்கு, 15 நாட்களுக்கு முன் பரபரப்பாகி விடுவாள், அம்மா.

ராமர் பட்டாபிஷேகம், கிருஷ்ணனும், கோபியரும், தசாவதாரம், அஷ்டலட்சுமியர், அர்த்தநாரீஸ்வரர், முருகர், நடராஜர், விநாயகர், துர்கா - லட்சுமி- - சரஸ்வதி...

பேண்ட் வாத்திய கோஷ்டி, தெப்பக் குளம், குரங்கு பொம்மைகள், விவேகானந்தர், புத்தர், காந்தி, பூங்கா, கோபுரம் மற்றும் ரயில், கார், பஸ் என்று, அம்மாவின் கை வண்ணத்தில், ஒவ்வொரு படியும் கலை நயத்தோடு மிளிரும்.

கடந்த, 1939ல், தலை தீபாவளிக்கு, பட்டு புடவை எடுக்க, காஞ்சிபுரம் சென்றிருந்த போது, புடவையோடு, வரதரையும் வாங்கி வந்திருந்தாள்.

அப்பாவும் சாமானியமானவர் அல்ல. காலை, 6:00 மணிக்கே குளித்து, மடியுடன் ஆரம்பிக்கும் பூஜை முடிந்து, தீபாராதனை காட்ட, 9:00 மணியாகி விடும்.

நவராத்திரி நேரத்தில், தேர்வு விடுமுறை இருப்பதால், சமாளிக்க முடிந்தது. சாதாரண நாட்களானால், பட்டினியோடு தான் செல்ல நேரிடும்.

விதம் விதமான சித்ரான்னங்கள் நிவேதனம் செய்யப்பட்டாலும், ஒன்பது நாட்களிலும், காலை உணவாக, உப்பு போட்டு வேக வைத்த சேனைக்கிழங்கு மட்டும் தான் உண்பார், அப்பா. இரவில் இரண்டு, மலை வாழைப் பழமும், ஒரு டம்ளர் பாலும்.

விஜயதசமி அன்று தான், அப்பாவின் விரதம் பூர்த்தியாகும். அன்று, வடை, பாயசத்துடன் விருந்து.

மாலை வேளை, அம்மாவின் ராஜ்ஜியம். அம்மாவின் தோழிகளும், குழந்தைகளுமாய் வீடே திணறிப் போகும். தோழிகளின் வீட்டுக்கும் விஜயம் செய்வாள், அம்மா.

இந்த ஆண்டு நவராத்திரியின் ஒரு வாரத்துக்கு முன், சுகவீனமானாள், அம்மா.

பரிசோதித்த டாக்டர், ராமகிருஷ்ண ராவ்,'அம்மாவுக்கு, டைப்பாய்டு... ஓய்வெடுக்க வேண்டும்...' என்று, 15 நாட்களுக்கு மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுத்து, ஆகார விபரங்களையும் பட்டியலிட்டு, கிலியூட்டினார்.

'நவராத்திரிங்கறது, பெண்டுகள் கொண்டாடுற விசேஷம். ஆத்துல நான் இல்லை. அதனால, இந்த வருஷம், நம்மாத்துல, கொலு வைக்க வேண்டாம். பொழைச்சு கிடந்தா, அடுத்த வருஷம் வெச்சுக்கலாம்...' என்று, கிளி பிள்ளைக்கு சொல்வது போல், திரும்ப திரும்ப, அப்பாவிடம் சொல்லி, என்னையும் அழைத்து, தாத்தா வீட்டுக்கு ரயிலேறினாள், அம்மா.

அம்மாவை அலட்சியப்படுத்தி, வீட்டில் கொலு வைத்தார், அப்பா.

டாக்டர் சொன்ன மாதிரி, டைப்பாய்டு, 15 நாட்களுக்கு நீடித்திருந்தால், அப்பா, கொலு வைத்த விஷயம், அம்மாவுக்கு தெரிந்திருக்காது. 10 நாளிலேயே சரியாகி, புறப்பட்டு விட்டாள்.

ஸ்டேஷனுக்கு வந்திருந்த அப்பா, அம்மாவையும், என்னையும் அழைத்துச் சென்றது, ஒரு புது வீட்டுக்கு. வீட்டில் சாமான்கள் தாறுமாறாக சிதறிக் கிடந்தன; கூடவே பொம்மைகளும்.



'என்னண்ணா இது... நான் தான் கொலு வெக்க வேண்டாம்ன்னு, படிச்சுப் படிச்சு சொல்லிட்டு போனேனே... ஏன் வெச்சேள்... ஏன் கலைச்சேள்...' என்றாள், ஆவேசமாக.

'மனசு கேக்கலேடி... ஒரு வருஷம் முடங்கினா, தொடர்ந்து மூணு வருஷம் முடங்கும்ன்னு சொல்லுவா... அதான் அப்படி முடங்க வேணாமேன்னு வெச்சேன்...' என்றார்.

'சரி... வெச்சது வெச்சேள், அதை ஏன் முடியறதுக்கு முன் கலைச்சேள்?'

'நாம குடியிருந்த விட்டு உரிமையாளர், கோபாலய்யருக்கு, அவசரமா, 100 ரூபா தேவைன்னு கேட்டான். கொலுவை வெச்சுட்டு, யாராவது கடன் கொடுப்பாளா... இல்லைன்னேன்... உடனே, 'வீட்டை காலி பண்ணு'ன்னான்... பண்ணிட்டேன்...' என்றார், அப்பா.

'ஏண்ணா... விஜயதசமி முடிஞ்சு, காலி பண்றேன்னு சொல்ல வேண்டியதுதானே?'

'சொன்னேண்டி... அந்த மனுஷன் கேட்டாத் தானே... கன்னா பின்னான்னு கத்தி, ரகளை ஆகி, தெருவுல கூட்டம் வேடிக்கை பார்க்க ஆரம்பிச்சிடுத்து...

'அப்பத்தான் மஹாதேவய்யர், 'நம்மாத்துல, ஒரு போர்ஷன் காலியா இருக்கு... சாமான் செட்டை எடுத்துண்டு வாரும்... ரெண்டு மாசம் வீடு காலியா கெடந்தாத்தான், கோபாலய்யருக்கு புத்தி வரும்'ன்னு, சொல்லி கூப்பிட்டார். வந்துட்டேன்...' என்றார் அப்பா, அப்பாவியாக.

வீடு மாறுவது ஒன்றும் புதிதில்லை. அக்ரஹாரத்திலுள்ள, 30 வீடுகளில், ஏறக்குறைய, 20 வீடுகளிலாவது மாறி மாறி குடியிருந்து இருப்பாள், அம்மா; இந்த முறை, அப்பா.

வீடு மாறியதில், அம்மாவுக்கு வருத்தமில்லை. ஆனால், கொலு வைத்து, அதை பாதியில் கலைத்ததைத்தான் சகித்துக் கொள்ள முடியவில்லை.

பிடிவாதத்தில், அம்மாவும் - அப்பாவும், ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல.

படித்து படித்து சொல்லியும் கேட்காமல், அப்பா, கொலு வைத்து, முடிவதற்கு முன் கலைத்தார் அல்லவா... அதனால், இனி, வீட்டில் கொலுவே வைப்பதில்லை என்று முடிவெடுத்தார், அம்மா. அவர் உயிரோடு இருந்த வரை, அந்த முடிவை மறுபரிசீலனை செய்யவேயில்லை.

அப்பாவும் சாமானியர் அல்ல. கொலு வைத்தாலென்ன, வைக்காவிட்டால் என்ன என்று, நவராத்திரி ஒன்பது நாட்களும், விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லி, தொடர்ந்து விரதத்தை கடைப்பிடித்து வந்தார். அந்த விஷப்பரீட்சையில் நான் இறங்கியதில்லை.

அதன் பின், வீட்டில் கொலு வைக்கவே இல்லை. கொலு வைத்திருந்த தன் ஞாபகமாக, 1 அடி உயரமிருந்த, இரண்டு மரப்பாச்சி பொம்மைகளை தவிர, மற்ற பொம்மைகளை, வீட்டுக்கு வரும் குழந்தைகளுக்கு கொடுத்து, ஒரே வருஷத்தில் காலி செய்தாள், அம்மா.

அந்த பொக்கிஷம், அம்முலுவின் கண்களில் பட்டதன் விளைவே, கொலு வைத்தே ஆக வேண்டுமென்ற ஆசை.

விளையாட்டு போல, 50 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. கல்யாணம் முடிந்து, 25 ஆண்டுகளாக தோன்றாத ஆசை, அம்முலுவுக்கு, 26ம் ஆண்டில் தோன்றியுள்ளது ஆச்சர்யம் தான்.

அம்முலுவும் பிடிவாதத்தில், அவளது மாமியாரை மாதிரி தான். கொலு வைக்க வேண்டுமென்று முடிவெடுத்து விட்டால், கண்டிப்பாக வைத்தே தீருவாள்.

'சரி... அம்முலு, நான் என்ன செய்யணும் சொல்லு?' என்றேன்.

'மயிலாப்பூர் கிரி டிரேடர்ஸ்ல, கழட்டி மாட்டுறா மாதிரி, கொலு படிக்கட்டுகள் இருக்குண்ணா... கொலு முடிஞ்சதும் கழட்டி, அலமாரியா உபயோகப் படுத்திக்கலாம்... 8,500 ரூபாயாம்,' என்றாள்.

'ம்... அப்புறம்?'

'பரிசு பொருட்கள், ஜாக்கெட் துணி, மஞ்சள்- குங்குமம், -சீப்பு, -கண்ணாடி காம்போ பேக், பன்னீர் பாட்டில் எல்லாம் சேர்த்து மொத்தம், 3,000 ரூபாய் ஆகும்ண்ணா.'

'ம்... அப்புறம்?'

'அப்புறம் என்ன அப்புறம், விழுப்புரம். இங்கே, என்ன கதையா சொல்லிக்கிட்டிருக்கேன்?' சீறினாள்.

'ப்ச்... நான் அப்படி சொன்னேனா... பட்ஜெட்டைத் தானே கேட்டுண்டிருக்கேன்... மேலே சொல்லு,' என்றேன்.

'தேங்காய், பூ, பழம், வெத்தலை பாக்கு; சுண்டலுக்கு, நவ தானியம்; நைவேத்திய பிரசாதம் பண்ண, மளிகை சாமான்; ஆயுத பூஜைக்கு, அவல், பொரி, கடலை, நாட்டு சக்கரை, ஆப்பிள், சாத்துக்குடி இதெல்லாம், 3,000 ரூபாய்க்குள்ள முடிச்சுக்கறேண்ணா,'என்றாள்.

'ஓ.கே., மீதி, 2,408 ரூபா இருக்கு... இதை போக்குவரத்து செலவுக்கு வெச்சிக்க,' என்றேன்.

'என்னண்ணா... கிண்டலா?'

'கிண்டல் இல்லேம்மா... சீரியஸாத்தான் சொன்னேன்... 'போனஸ்' தொகை, 16 ஆயிரத்து, 908 ரூபாய். அதுல நீ சொன்ன கணக்கு போக, மீதி, 2,408 ரூபா இருந்தது. அதைத்தான் போக்குவரத்து செலவுக்கு வெச்சுக்கோன்னேன். இவ்வளவு சமானை எல்லாம் வாங்கிண்டு பஸ்லயா வருவே... ஆட்டோவிலோ,'கால் டாக்சி'லயோ தானே வருவே?'

'போனஸ்' தொகையில், 12 ஆயிரத்துக்கு, 'ஆண்ட்ராய்ட்'மொபைல் போன் வாங்க இருந்தேன். அம்முலுவின், கொலு, கான்செப்ட்டால், என் ஆசை அம்பேலானது.

'ரொம்ப சந்தோஷம்ண்ணா... இந்த வருஷம், நம் ஆத்துல, கொலு வெச்சு, பத்திரிகைகாரர்களிடம் காட்டி, பரிசு வாங்கணும்ண்ணா,' என்றாள்.

'ஓ... அப்படி ஒரு ஐடியா வேற இருக்கோ... அது சரி, எல்லாம் சொன்னியே, கொலு வெக்க முக்கியமானதை பத்தி, இதுவரை மூச்சு விடலியே... அதுக்கு எவ்வளவு, 'எஸ்டிமேட்' போட்டு வெச்சிருக்கே?' என்றேன்.

'எது... பொம்மைங்க தானே'

'ஆமாம், சரியா சொல்லிட்டே... பொம்மைகளுக்கு என்ன பண்ண போறே?'

'டேய்... சுந்தர், இங்கே வா... நாம வாங்கி வெச்சிருக்குற, பொம்மைகளை எல்லாம் உங்கப்பாவுக்கு காட்டுடா,' என்று, மகனுக்கு உத்தரவிட்டாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம், அவனது அறையில், கட்டிலுக்குக் கீழே வைத்திருந்த அட்டைப் பெட்டிகளை எடுத்து வந்து காட்டினான், சுந்தர்.

அத்தனையும் பொம்மைகள், மெருகு குலையாமல் பளபளத்துக் கொண்டிருந்தன. அடுக்கி வைத்தால், ஆறேழு படிகளை நிரப்பும் போலிருந்தது.

'ஏண்டி... இவ்வளவு பொம்மைகளை எங்கே, எப்போ, எப்படி வாங்குனே?' என்று கேட்டேன்.

'போன வருஷம், நவராத்திரி முடிஞ்சு, கபாலீஸ்வரர் கோவிலுக்கு போயிருந்தோமா, அங்கே, பொம்மை கடையை மூடிண்டிருந்தா...'விக்காம இருந்த மொத்தத்தையும் வாங்கிக்கறோம்'ன்னு சொன்னோம்... 8,000 ரூபா கேட்டான்... 'என்னிடம், 5,000 தான் இருக்கு'ன்னான், சுந்தர்.

'அவனும், 'சரி... கொடு'ன்னு வாங்கிண்டு, அழகா, 'பேக்' பண்ணி, மாட்டு வண்டியில ஏத்தி, ஆத்துல எறக்கிட்டு போயிட்டான்... நீங்க கொடுக்குற பாக்கெட் மணியை அனாவசியமா செலவு பண்ணாம, சேர்த்து வெச்சிருந்த காசுல, சுந்தர்தாண்ணா பொம்மைகளை வாங்குனான்,' என்றாள், அலமேலு.

'சபாஷ்... ஒரு வருஷமா, 'பிளான்'பண்ணி இருக்கீங்க,' என்றேன்.

'ஆமாம்ண்ணா,'என்றாள், அலமேலு.

27 ஆம் பக்கம் பார்க்க....

# காதோடு... காதாக...

முன்னணி நடிகை ஒருவருக்கு விரைவில் டும்டும்டும் நடக்க போகிறது என்று சினிமா வட்டாரங்களில் பேசிக்கொள்கிறார்கள். கடந்த சில வருடங்களுக்கு முன் சினிமா உலகில் அறிமுகம் ஆனார் அந்த நடிகை. முதல் படமே பல மொழிகளில் ஹிட் அடித்து பெரிய வைரல் ஆனது. இதன் மூலம் தென் இந்தியாவில் பெரிய அளவில் பிரபலம் ஆனவர், அதன்பின் காணாமல் போனார். ஆம் திடீர் என்று சினிமா எதிலும் நடிக்காமல் வெளிநாடு பறந்து போனார். வெளிநாட்டிற்கு படிப்பு தொடர்பாக சென்றவர், மீண்டும் சில மாதங்களில் திரும்பி வந்து சினிமாவில் நடிக்க தொடங்கினார். வரிசையாக நிறைய படங்களில் நடித்தவர் தெலுங்கு படங்களில் கவனம் செலுத்தினார். தமிழ் பெண்ணாக இருந்தாலும் கூட கவனமாக தமிழ் படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்தார். மலையாள மற்றும் தெலுங்கு படங்களில் இவர் முன்னணி நடிகையாக வலம் வர தொடங்கினார். அங்கு ரசிகர்களும் இவருக்கு அதிகம் ஆனார்கள். இதன் பின் இவர் இரண்டு தமிழ் படங்களில் அடுத்தடுத்து நடித்தார். இரண்டு படமும் மிக மோசமாக தோல்வி அடைந்தது. ஆனால் இரண்டிலும் இவரின் நடிப்பு பெரிய வைரலானது. ஒரு பாடலும் பெரிய ஹிட் அடித்தது. இந்த நிலையில் இவருக்கு விரைவில் திருமணம் நடக்க போவதாக செய்திகள் வெளியாகி வருகிறது. ஆம் இந்த நடிகைக்கு வீட்டில் தீவிரமாக திருமணம் குறித்து பேசி வருகிறார்களாம். தெலுங்கு நடிகர் அல்லது மருத்துவர் ஒருவரை இவர் திருமணம் செய்து கொள்வார் என்று கூறுகிறார்கள்.

★★★★★

தொடர்ந்து படங்களில் நடிக்க முன்னணி நடிகைக்கு காதல் கணவர் முக்கியமான இரண்டு கண்டிசன்களைப் போட்டுள்ளாராம். படங்களில் ஆகட்டும், பொது நிகழ்ச்சிகளுக்கு ஆகட்டும் தாராளமாக உடை அணிந்து வருபவர் அந்த பிரபல நடிகை. சுற்றுலா செல்லும் இடங்களில் இருந்தும்கூட தனது கவர்ச்சிப் படங்களைப் பதிவேற்ற அவர் மறப்பதில்லை. குடும்பமாக போகும் போது கூடவா இப்படி டிரெஸ் போடுவார் என ரசிகர்களே அவரை திட்டிய சம்பவங்களும் உண்டு. ஆனால் அதைப் பற்றியெல்லாம் நடிகை கவலைப் படுவதேயில்லை. எப்போதும் தனக்கு பிடித்த மாதிரி தான் ஆடை அணிந்து வருகிறார். திருமணத்திற்குப் பிறகும் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை நடிகை. தொடர்ந்து கவர்ச்சியாக உடை அணிவதோடு, சமீபகாலமாக தனது படங்களிலும் நாயகர்களுடன் நெருக்கமாக நடித்து வருகிறார். இதனாலேயே திருமணத்திற்குப் பிறகும் அவருக்கு பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. வேறெந்த நடிகைக்கும் கிடைக்காத சிறப்பாக இதனை பெருமையாக கருதி வருகிறார் நடிகை. ஆனால், இந்த விவகாரத்தில் நடிகையின் காதல் கணவருக்கு கொஞ்சம் வருத்தம் தானாம். மனைவி இப்படி குடும்பப் பெயரைக் கெடுக்கும் வகையில் கவர்ச்சியாக உடை அணிவதை அவர் விரும்பவில்லையாம். எனவே, நடிகைக்கு அவர் முக்கியமான இரண்டு கண்டிசன்களைப் போட்டுள்ளாராம். அதாவது, இனி பொது இடங்களுக்காகட்டும், படங்களில் ஆகட்டும் ஓவர் கவர்ச்சியான உடைகள் கூடாது என்பது தான் அது. அப்படி இந்த கண்டிசன்களுக்கு ஒத்துக் கொண்டால் மட்டுமே மேற்கொண்டு படங்களில் நடிக்கலாம். இல்லையென்றால் நடிப்பிற்கு பை பை சொல்லிவிட வேண்டியது தான் என கறாராக கூறி விட்டாராம். நடிகையும் தொடர்ந்து நடிக்கும் ஆசையில் கணவரின் இந்த கண்டிசன்களுக்கு ஓகே சொல்லி விட்டாராம். எனவே இனி குடும்பப்பாங்கான வேடங்களில் தான் நடிகை நடிப்பார் எனக் கூறப்படுகிறது. அதோடு பொது நிகழ்ச்சிகளுக்கும் அடக்கஒடுக்கமாக ஆடை அணிந்து வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★

தமிழின் முன்னணி ஹீரோ ஒருவர் இந்தி படங்களை ரீமேக் செய்து அதில் நடிக்க ஆர்வம் தெரிவித்து வருகிறார் என்று கூறுகிறார்கள். கோலிவுட் சினிமாவில் கடந்த 10 வருடங்களில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது. மசாலா படங்களின் எண்ணிக்கை குறைந்து, அதிக அளவில் நல்ல கதை கொண்ட படங்கள் வெளியாகி வருகிறது. அதிலும் நிறைய வித்தியாசமான கதை அம்சங்கள் கொண்ட படங்கள் இப்போதெல்லாம் அதிகமாக தமிழில் வெளியாகி வரவேற்பை பெற்று வருகிறது. இந்த நிலையில் தமிழில் வெளியாகும் ஹிட் படங்களை பிற மொழியில் மொழி பெயர்த்து வருகிறார்கள். தமிழில் வெளியாகும் படங்கள் அதிகமாக கன்னடா மற்றும் இந்தியில் மொழி பெயர்ப்பாகி வருகிறது. அதிலும் நல்ல கதை கொண்ட படங்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்த நிலையில்தான் தமிழில் பிரபல ஹீரோ ஒருவர் சமீபத்தில் ரீமேக் படம் ஒன்றில் நடித்தார். இந்தியில் ஹிட் அடித்த ரீமேக் படத்தை பிரபல இயக்குனரை வைத்து அந்த நடிகர் வெளியிட்டார். இந்த படம் பெரிய அளவில் ஹிட் அடித்தது. விமர்சன ரீதியாகவும் அவருக்கு பெரிய வரவேற்பை பெற்றுத் தந்தது. அந்த ஹீரோவிற்கு இந்த படம் பெரிய பிரேக்காக இருந்தது. பல்வேறு தரப்பில் இருந்து இந்த படம் பண்ணியதற்காக அவருக்கு பாராட்டுக்கள் குவிந்தது. இதனால் அவரைப்போலவே இன்னொரு பெரிய ஹீரோவும் ரீமேக் படங்களில் நடிக்க முடிவு செய்து இருக்கிறார் என்கிறார்கள். இந்தியில் ஹிட் அடித்த ஆக்சன் படம் ஒன்றை ரீமேக் செய்ய அவர் திட்டமிட்டு இருக்கிறாராம். இதற்காக இயக்குனரை தேடி வருகிறார் என்கிறார்கள். ஆனால் இயக்குனர்கள் யாரும் ரீமேக் கதையை படமாக எடுக்க முன் வரவில்லையாம். என்னிடம் நல்ல கதை இருக்கிறது அதையே பண்ணலாம் என்று இயக்குனர்கள் ஹீரோவை நச்சரித்து வருகிறார்களாம். அதே சமயம் பண்ணினால் ரீமேக் படம்தான் பண்ணுவேன் என்று அந்த ஹீரோ ஒற்றைக்காலில் நிற்கிறார் என்கிறார்கள்.

## சமந்தா சொன்ன இரகசியம்



நடிகர் நாக சைதன்யாவை திருமணம் செய்த பிறகும் கவர்ச்சியாக நடிப்பதில் குறைவைக்கவில்லை சமந்தா. குழந்தை பெற்றுக் கொள்ளப்போவது எப்போது என்று கேட்டால்தான் சரியாக பதில் சொல்லாமல் கம்பி நீட்டிவிடுகிறார். சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் படுக்கை அறை ரகசியத்தை பகிர்ந்துகொண்டிருக்கிறார் சமந்தா.

'படுக்கை அறையில் நாக சைதன்யாவுடன் உங்களது கெமிஸ்ட்ரி எப்படி?' என்று சமந்தாவிடம் கேட்டபோது தயக்கம் இன்றி பதில் அளித்தார். நாக சைதன்யாவுக்கு ஒரு முதல் மனைவி இருக்கிறார். நான் எப்போது நெருங்கினாலும் அந்த மனைவி குறுக்கே வந்துவிடுவார். அவரது முதல் மனைவி தலையணைதான். எங்கள் இருவருக்கும் இடையில் தலையணைதான் தடங்களாக இருக்கும்.

நான் சைதன்யாவுக்கு முத்தமிட நெருங்கினாலும் எங்கள் இருவருக்கும் இடையில் தலையணை இருக்கும். இப்போதைக்கு இதுபோதும் என்று நினைக்கிறேன். எதிர்பார்த்ததைவிட கொஞ்சம் அதிகமாகவே படுக்கை அறை ரகசியத்தை சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன் என்றபடி எஸ்ஸானார் சமந்தா.



## தர்பாரில் நடிக்க மறுப்பு



தர்பார் படத்தில் ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பை இந்துஜா மறுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது. முருகதாஸ் இயக்கத்தில் ரஜினிகாந்த், நயன்தாரா, யோகிபாபு உள்பட பலர் நடிக்கும் படம் தர்பார். இதில் மும்பையில் போலீஸ் அதிகாரி வேடத்தில் ரஜினி நடிக்கிறார். இந்த படத்தில் வரும் ஒரு கேரக்டருக்காக இந்துஜாவிடம் நடிக்க கேட்டிருக்கிறார்கள்.

பிகில் படத்தில் விஜய்யுடன் நடித்து வருவதால் கால்ஷீட் தேதிகளை தர்பாருக்கு ஒதுக்க முடியாமல் தவித்துள்ளார் இந்துஜா. பிறகு தர்பார் வாய்ப்பை ஏற்க முடியாத நிலையில் நடிக்க மறுத்துவிட்டாராம். இதையடுத்து அந்த கேரக்டரில் நிவேதா தாமஸ் நடிப்பதாக கூறப்படுகிறது.



## சிபிராஜ் ஜோடியாக நந்திதா

சிபிராஜ், நாசர், சம்பத் நடிக்கும் பெயரிடப்படாத படத்தை பிரதீப் கிருஷ்ணமூர்த்தி இயக்குகிறார். இவர் விஜய் ஆண்டனி நடித்த சைத்தான், சிபிராஜ் நடித்த சத்யா ஆகிய படங்களை இயக்கியவர். சிபிராஜ் ஜோடியாக நந்திதா ஸ்வேதா ஒப்பந்தமாகியுள்ளார்.

சைமன் கே.கிங் இசை அமைக்கிறார். ஜான் மகேந்திரன் வசனம் எழுதுகிறார். சஸ்பென்ஸ் திரில்லர் கதை கொண்ட இப்படத்தின் ஷூட்டிங் நவம்பர் மாதம் தொடங்குகிறது.



## மகிழ் திருமேனி இயக்கத்தில் மேகா



மகிழ் திருமேனி இயக்கும் படத்தில் உதயநிதி ஸ்டாலின், மேகா ஆகாஷ் நடிக்கிறார்கள். அருண் விஜய் நடித்த தடம் படத்தை கடைசியாக இயக்கி இருந்தார் மகிழ் திருமேனி. அவர் அடுத்து இயக்கும் படத்தில் உதயநிதி ஸ்டாலின் நடிக்கிறார்.

படத்தின் ஸ்கிரிப்ட் வேலைகள் நடந்து வருகிறது. இதில் உதயநிதிக்கு ஜோடியாக மேகா ஆகாஷ் நடிக்க உள்ளார். ஆக்‌ஷன் திரில்லர் கதையாக இந்த படம் உருவாக இருக்கிறது.

## கார்த்தி படத்திற்கு எதிர்ப்பு



பாக்யராஜ் கண்ணன் இயக்கத்தில், கார்த்தி நடிப்பில் உருவாகி வரும் படம் 'சுல்தான்'. இந்தப் படத்தின் படப்பிடிப்பு திண்டுக்கல் மலைக்கோட்டையில் நடைபெற்று வருகிறது. முன்னதாக இந்த மலைக்கோட்டையில் சிவனடியார்கள் கிரிவலம் வந்தனர். ஆனால் சமீபத்தில் இதற்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில் கிரிவலம் செல்ல அனுமதி இல்லாத போது படப்பிடிப்பிற்கு மட்டும் எப்படி அனுமதி வழங்கப்பட்டது என்று இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, பாஜக, சிவசேனா உள்ளிட்ட கட்சியினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து படப்பிடிப்பு நிறுத்தப்பட்டு, மலைக்கோட்டையில் இருந்து பட குழுவினர் வெளியேற்றப்பட்டனர். இதன் காரணமாக படப்பிடிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்நலையில் படத்தின் தயாரிப்பு நிறுவனம் இதற்கு கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் இந்த படம் திப்பு சுல்தான் கதை பின்னணியை கொண்டு உருவாகும் படமோ அல்லது திப்பு சுல்தான் வரலாற்றை சொல்லும் படமோ இல்லை என்று தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், சமீப காலங்களாக சுய விளம்பரம் நோக்கில் திரைப்படங்களை தனி நபர்களும், சில அமைப்புகளும் தாக்குவது அதிகரித்து வருகிறது. ஒரு திரைப்படம் எதை காண்பிக்க கூடாதென்பதை உறுதி செய்ய தணிக்கைகுழு உள்ளது. இது தவிர்த்து என்ன காண்பிக்க வேண்டும் என்பதை முடிவும் செய்யும் அந்த திரைப்படத்தின் படைப்பாளிக்கே உள்ளது.

இது நம் நாட்டின் சட்டம் நமக்கு அளிக்கும் சுதந்திரமும், பாதுகாப்பும் ஆகும். ஆகவே எந்தவொரு அமைப்போ, தனி நபரோ படைப்பாளிகளின் சுதந்திரத்தை பாதிக்கும் செயல்களில் ஈடுபடுவதை வன்மையாக கண்டிக்கிறோம். மேலும் வரலாற்று தலைவர்களுக்கும், தேசிய தலைவர்களுக்கும் சாதி மத அடையாளங்கள் பூசி அவர்களின் வாழ்வையும் நமது வரலாற்றையும் கொச்சைபடுத்தும் செயல்களுக்கும் எங்களின் கண்டனத்தை பதிவு செய்து கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளது.

## தண்ணீருக்கடியில் சுகப்பிரசவம்



பில்லா 2 படத்தில் அஜீத்துடன் நடித்தவர் புருனா அப்துல்லா. கடந்த மே மாதம் இவர் ஒரு அறிவிப்பு வெளியிட்டு அதிர்ச்சி தந்தார். தனது நீண்ட நாள் பாய்ஃபிரண்ட் அலன் பிரசேவை மணந்துகொண்டதுடன், 5 மாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் தெரிவித்தார். கர்ப்பிணி கோலத்திலேயே கணவனை கைப்பிடித்த புருனா மற்றொரு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறார். தண்ணீருக்கு அடியில்தான் தனது பிரசவம் நடக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அதற்கு டாக்டர்கள் சம்மதித்தனர்.

சில தினங்களுக்கு முன் தண்ணீருக்கு அடியில் தனது குழந்தையை பெற்றெடுத்தார். தண்ணீருக்கு அடியில் குழந்தை பெற்றீர்களா... என்று கேட்டு பலரும் ஆச்சர்யம் அடைந்தனர். இதுபற்றி புருனா கூறியதாவது: எனது குழந்தை சனிக்கிழமை பிறக்க வேண்டும். பிரசவ நேரம் 4 மணி நேரத்துக்குள் முடிய வேண்டும். நீச்சல் குளத்தில் தண்ணீருக்கு அடியில் குழந்தை பிறப்பு நடக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

ஏனென்றால் பிறக்கும் குழந்தை மருந்துகளின் பாதிப்பு இல்லாமலிருக்க வேண்டும் என்று எண்ணினேன். நான் விரும்பிய எல்லாமே எனக்கு கிடைத்தது. மேலும் வலியில்லாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணினேன். ஆனால் அது அவ்வளவு எளிதாக இல்லை. பிரசவ தினத்தன்று நீச்சல் குளத்தில் வெதுவெதுப்பான நீர் நிரப்பப்பட்டது. திட்டமிட்டபடி தண்ணீருக்கு அடியில் எனது மகள் பிறந்தாள். எனது கணவர், டாக்டர் மற்றும் என் அம்மா அருகில் இருந்தனர்.

இதுவொரு மேஜிக் தருணம்போன்று இருந்தது. இதெல்லாம் நடந்து முடிந்தபிறகு ஒரேவொரு எண்ணம்தான் எனக்கு இருந்தது. அன்புடன் கூடிய அப்பழுக்கற்ற மகிழ்ச்சி வேண்டும் என எண்ணினேன் அந்த எண்ணமே எனக்கிருந்த வலிகளை காணாமல் செய்துவிட்டது. ஒரு நிமிடத்தில் நான் சகஜ நிலைக்கு வந்துவிட்டேன். என் மகள் அழகாக இருக்கிறாள். இனி அவள்தான் எனக்கு எல்லாம். இத்தகைய தருணத்தில் என்னை நான் ஒரு சூப்பர் ஹீரோயினாக எண்ணுகிறேன்.

## மகளுக்காக உருகும் துல்கர் சல்மான்

பிஸியான நடிப்பில் இருக்கும் துல்கர் சல்மான் தனது மனைவி குழந்தைகளை மிஸ் செய்வதாக கூறியுள்ளார். தற்போது தமிழ், மலையாளம் மற்றும் இந்தி என தொடர்ச்சியாக படங்களில் நடித்து வருவதால் தன்னுடைய 2 வயது பெண் குழந்தை, மனைவியுடன் நேரத்தை செலவிட முடிவதில்லை. தனது மனைவி குழந்தைகளுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு அவர்கள் மேல் இருக்கும் அன்பையும், காதலையும் வெளிப்படுத்தியுள்ளார். மலையாள திரையுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவரும் நடிகர் மம்முட்டியின் மகனுமான துல்கர் சல்மான் இப்போது படு பிஸியாக இருக்கிறார்.

தமிழ், தெலுங்கு மட்டுமின்றி இப்பொழுது ஹிந்தி திரைப்படங்களிலும் கலக்கி வருகிறார். 2011ஆம் ஆண்டில் வெளியான செகண்ட் ஷோ எனும் மலையாள திரைப்படம் மூலம் தென்னிந்திய திரையுலகிற்குள் அறிமுகமானவர். தமிழ் சினிமாவில் வாயை மூடி பேசவும் படம் மூலம் அறிமுகமானார். பிறகு ஓ காதல் கண்மணியே, நடிகையர் திலகம் போன்ற படங்களின் மூலம் மிகவும் பிரபலமானவர். துல்கர் சல்மான் அமல் சூஃபியா எனும் கட்டிடக் கலை நிபுணரை கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் தேதியன்று மணந்தார். தற்போது, அந்த தம்பதியினருக்கு மர்யம் எனும் பெண் குழந்தை உள்ளது. தன் 2 வயது பெண் குழந்தை மற்றும் அவரது மனைவியை மிகவும் மிஸ் செய்வதாகவும் அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு அவர்கள் மேல் இருக்கும் அன்பையும், காதலையும் வெளிப்படுத்தியுள்ளார்.



# ஒரு செல்பி!

செல்போனில் ஃபிரன்ட் கேமரா வந்த நாள் முதல் செல்பி மோகம் பெருகிவிட்டது. சில சமயம் இது நட்சத்திரங்களுக்கு சங்கடங்களை ஏற்படுத்துகிறது. ஆனால் இன்னும் பலருக்கு செல்பி எடுக்கும் கலை தெரியவில்லை. நடிகை நயன்தாரா, காதலன் விக்னேஷ்சிவனுடன் விதவிதமாக செல்பி படங்கள் எடுத்து பகிர்கிறார். தமிழ், தெலுங்கு படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வந்த நயன்தாரா நீண்ட நாட்களுக்கு பிறகு லவ் ஆக்ஷன் டிராமா என்ற மலையாள படத்தில் நடித்திருக்கிறார்.

அப்படம் திரைக்கு வந்து வரவேற்பை பெற்றுள்ளது. நிவின் பாலி ஹீரோவாக நடித்துள்ளார். நட்பு வட்டாரமாக இணைந்த படக்குழுவினர் சீனியரான நயன்தாராவிடம் சற்று தள்ளி நின்றே பேசினர். ஆனால் அவர்களுடன் சகஜமாக பழகி தன்னையும் இளவட்ட பட்டாளத்துடன் இணைத்துக்கொண்டார் நயன்தாரா.

அவருடன் பட குழுவினர் செல்பி எடுத்தனர். நிவின்பாலி செல்பி எடுக்க மற்ற 4 பேரும் இப்படியும் அப்படியுமாக விலகி நின்றனர். உடனே நயன்தாரா, ஒரு செல்பி எடுக்கத் தெரியுதா? என்றபடி நால்வரையும் வரிசையாக நிறுத்தி செல்பி எடுக்க தோதாக நிற்க வைத்தார். நயன்தாரா செல்பி எடுக்க கற்றுத் தந்த வீடியோ டிடில் வெளியாகி உள்ளது.

# அரசியல் பேசி எங்களை மாட்டி விடுகிறார் புலம்பும் தயாரிப்பாளர்கள்



நடிகர் விஜய்யின் அரசியல் பேச்சுக்கள் மற்றும் நிலைப்பாடுகள் காரணமாக முன்னணி தயாரிப்பாளர் ஒருவர் அவர் மீது கோபத்தில் இருப்பதாக தகவல்கள் வருகிறது. சென்னை: நடிகர் விஜய்யின் அரசியல் பேச்சுக்கள் மற்றும் நிலைப்பாடுகள் காரணமாக முன்னணி தயாரிப்பாளர் ஒருவர் அவர் மீது கோபத்தில் இருப்பதாக தகவல்கள் வருகிறது. நடிகர் விஜய் நடிக்கும் பிகில் படத்தின் இசை வெளியீட்டு விழா கடந்த வாரம் நடந்தது. இதில் நடிகர் விஜய் அரசியல் பேசியது பெரிய வைரல் ஆனது. இந்த நிலையில் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவிற்கு அனுமதி வழங்கியதற்காக சென்னையில் உள்ள சாய்ராம் கல்லூரிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. பிகில் விழாவிற்கு ஏன் அனுமதி வழங்கப்பட்டது என்று கேள்வி கேட்கப்பட்டு உள்ளது.

இதேபோல் இதற்கு முன் மெர்சல், தெறி, சர்க்கார் பட விழாக்களிலும் விஜய் அரசியல் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அந்த படங்களுக்கு பெரிய சிக்கல் வந்தது. முக்கியமாக மெர்சல் மற்றும் சர்க்கார் படங்களுக்கு பெரிய அளவில் பிரச்சனை வந்தது.

இதனால் சில முக்கிய தயாரிப்பாளர்கள் அவர் மீது கோபத்தில் இருப்பதாக செய்திகள் வந்துள்ளது. ஆம், விஜய் அவர் விருப்பப்படி அரசியல் பேசிவிட்டு சென்றுவிடுகிறார். ஆனால் சில கட்சியை சேர்ந்தவர்கள் எங்கள் மீது அழுத்தம் கொடுக்கிறார்கள். எங்களுக்கு அரசியல் கட்சிகளிடம் இருந்து அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

இதனால் எங்கள் படத்தின் வசூலும் பாதிக்கப்படுகிறது, என்று சில தயாரிப்பாளர் கூறி உள்ளனர். மேலும் விஜய் அடுத்த படத்தை தனது குடும்பத்தை சேர்ந்த ஒருவரை வைத்து தயாரிக்கிறார். அந்த படத்தின் விழாவில் எல்லாம் விஜய் கண்டிப்பாக அரசியல் பேச மாட்டார் என்றும் அவர் கூறி இருக்கிறார்.

விஜய் இப்படி தொடர்ந்து அரசியல் பேசுவதால், படம் வெளியாவதில் சிக்கல் ஏற்படுகிறது என்றும் அவர் கூறி உள்ளனர். விஜய் கடைசியாக பிகில் மேடையில் பேசிய போதும் சில அரசியல் கருத்துக்களை சொன்னார். சர்ச்சையை கருத்தில் கொண்டு இந்த காட்சிகள் ஒளிரப்பின் போது கட் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



விஷ்ணு விஷால், ரெஜினா நடிப்பில் சிலுக்கு வார்பட்டி சிங்கம் படத்தை இயக்கியவர் செல்லா அய்யாவு. முழுநீள காமெடி கதை படமாக இது உருவாகி இருந்தது. அவர் இயக்கும் அடுத்த படத்தில் மீண்டும் விஷ்ணு விஷால் நடிக்கிறார்.

விஷ்ணுவுக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார். பேமிலி என்டர்டெயினர் ஜானரில் இந்த படம் உருவாக இருக்கிறது. படத்தின் தலைப்பு, மற்ற விவரங்கள் இன்னும் முடிவாகவில்லை. ஜனவரியில் இதன் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது.

# கமல் படத்தில் வடிவேலு



வடிவேலுவின் காமெடி பஞ்ச்களை மீம்ஸ்களாக நெட்டிஸன்கள் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அவர் நடிப்பிலிருந்து சுமார் 2 வருடமாக ஒதுங்கியிருக்கிறார். கடைசியாக விஜய்யுடன் மெர்சல் படத்தில் 2017ம் ஆண்டு நடித்த வடிவேலு, அதன்பிறகு இம்சை அரசன் 23ம் புலிகேசி படத்தின் 2ம் பாகத்தில் நடிக்கவிருந்தார். ஆனால் பட தரப்பினருடன் ஏற்பட்ட பிரச்னை காரணமாக நடிக்காமல் விலகினார்.

இந்த பஞ்சாயத்து தயாரிப்பாளர் சங்கத்தில் பேசப்பட்டு வருகிறது. மீண்டும் அவர் அந்த படத்தில் நடிப்பதாக தெரியவில்லை என்றே கூறப்படுகிறது.

வடிவேலுக்கு புதிய படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்த வண்ணமிருந்தாலும் அவர் எதையும் ஏற்காமல் அமைதிகாத்து வருகிறார். அடுத்த ஆண்டு பேப் மாமா என்ற படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருப்பதாக சில மாதங்களுக்கு முன் ஒரு தகவல் வெளியானது.

இதற்கிடையில் கமல்ஹாசன் இயக்கி நடிக்கும் தலைவன் இருக்கிறான் புதிய படத்தில் முக்கிய வேடமொன்றில் வடிவேலு நடிக்கவிருப்பதாக கோலிவுட்டில் பேச்சு எழுந்துள்ளது. தற்போது ஷங்கர் இயக்கத்தில் இந்தியன் 2ம் பாகத்தில் கமல் நடித்து வருகிறார். அப்படம் முடிந்த பிறகு தலைவன் இருக்கிறான் படததை கமல் இயக்கி நடிக்கவுள்ளாராம்.

## பெண் பொலிஸாரின் பிரச்சினையை பேசும் படம்



அமைதிப்படை 2, கங்காரு ஆகிய படங்களின் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி, மிக மிக அவசரம் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். பெண் போலீஸ் வேடத்தில் ஸ்ரீபிரியங்கா மற்றும் ஹரீஷ் குமார், சீமான் நடித்துள்ளனர். இயக்குனர் ஜெகன்நாத் கதை எழுதியுள்ளார்.


பாலபரணி ஒளிப்பதிவு செய்ய, இஷான் தேவ் இசை அமைத்துள்ளார். பெண் போலீசார் சந்திக்கும் பிரச்னைகளை சொல்லும் இப்படம், வரும் அக்டோபர் 11ம் தேதி ரிலீசாகிறது.



# தமன்னாவுக்கு திருமணம்?

மும்பையை சேர்ந்த தொழிலதிபருடன் தமன்னாவுக்கு திருமணம் என தகவல் பரவியுள்ளது. விஷால் ஜோடியாக ஆக்ஷன் படத்தில் நடித்து வருகிறார். குயின் இந்தி படத்தின் தெலுங்கு ரீமேக்கிலும் நடித்து வருகிறார். சிரஞ்சீவியின் சைரா நரசிம்மா ரெட்டி படத்திலும் நடித்துள்ளார். மேலும் 2 படங்களில் நடிக்க அவர் கதை கேட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் திருமண செய்தி குறித்து கேட்டபோது, நடிப்பிலிருந்து நான் ஒதுங்கிவிடவில்லை. ஆனால் சிலர் தேவையில்லாத வதந்திகளை கிளப்புகிறார்கள். திருமணம் செய்துகொள்ளும் மனநிலைக்கு நான் வரவில்லை. என்னை பற்றி வரும் திருமண செய்தி வெறும் வதந்திதான் என்றார் தமன்னா.





# கொலிவூட்டில் ஜி.வி.


ஹொலிவுட் ஒரு காலத்தில் எட்டாக்கனியாக இருந்தது. ஆனாலும் ரஜினிகாந்த் பிளட்ஸ்டோன் படம் மூலம் ஹாலிவுட் படத்தில் நடித்தார். கடந்த ஆண்டு, தி எக்ஸ்டார்டினரி ஜர்னி ஆப் தி ஃபகிர் ஹாலிவுட் படத்தில் நடித்தார் தனுஷ். பாரதி ராஜாவால் அறிமுகப்படுத்தப்பட்ட நடிகர் நெப்போலியன் தற்போது குடும்பத்துடன் அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டார். நேரம் கிடைக்கும்போது தமிழ் படத்தில் நடிக்கிறார். அதேநேரம் ஹாலிவுட் படத்திலும் கால் பதித்திருக்கிறார்.

கிறிஸ்த்மஸ் கூப்பன் படம் மூலம் ஹாலிவுட் படத்தில் அறிமுகமாகிறார் நெப்போலியன். இப்படத்தை டெல் கணேசன் தயாரிக்கிறார். அவரது தயாரிப்பில் உருவாகும் ஹாலிவுட் புதிய படத்தில் தற்போது நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறார் இசை அமைப்பாளரும். நடிகருமான ஜி.வி.பிரகாஷ் குமார். ரிக்கி புர்செல் இயக்குகிறார். பிராண்டன் டி. ஜாக்ஸன் உள்ளிட்ட பிரபல நடிகர்கள் நடிக்க உள்ளனர்.



தனது கனவுப் படமான பொன்னியின் செல்வன் பட ஷூட்டிங்கை டிசம்பரில் துவங்க இருக்கிறார் மணிரத்னம். அமிதாப் பச்சன், விக்ரம், ஜெயம் ரவி, கார்த்தி, ஐஸ்வர்யா ராய், கீர்த்தி சுரேஷ், பார்த்திபன், மோகன்பாபு உள்பட பலர் நடிக்கிறார்கள். இந்த படத்தை 2 பாகமாக உருவாக்க மணிரத்னம் திட்டமிட்டுள்ளாராம். படத்தின் ஸ்கிரிப்ட் உருவாக்கும் பணி தற்போது இறுதிகட்டத்தை எட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே படத்துக்கான லொகேஷன் தேர்விலும் படக்குழு மும்முரமாக உள்ளது. தாய்லாந்து காடுகளில் முதல் கட்ட படப்பிடிப்பை நடத்த திட்டமிட்டுள்ளனர். ஐதராபாத் ராமோஜிராவ் ஸ்டுடியோவில் படத்துக்கு பிரமாண்ட செட் போடவும் வேலைகள் ஜரூராக நடக்கிறது.



# உண்மைக் கதையான ஒற்றைப் பனைமரம்

கமர்ஷியல் படங்களுக்கு மத்தியில் வித்தியாசமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஈழத்தில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு ஒற்றைப் பனைமரம் படம் உருவாகியிருக்கிறது. இதில் புதியவன் ராசையா, நவயுகா, அஜாதிகா, பெருமாள் காசி, மாணிக்கம் ஜெகன், தனுவன் முக்கிய வேடங்களில் நடித்திருக்கின்றனர். புதியவன் ராசையா இயக்கியிருக்கும் இப்படத்தின் ஒளிப்பதிவை மகிந்த அபேசிங்க செய்திருக்கிறார்.

அஷ்வமித்ரா இசை. எஸ்.தணிகைவேல் தயாரித்திருக்கிறார். இவர், நேற்று இன்று, இரவும் பகலும் வரும், போக்கிரி மன்னன் ஆகிய படங்களை வெளியிட்டிருக்கிறார். 40 சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்ற, ஒற்றைப் பனை மரம் சிறந்த நடிகர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசை என 17 விருதுகளை வென்று வந்திருக்கிறது.

# விஜய் சேதுபதியை சீண்டிய காப்பான் படம்

காப்பான் படத்தில் நடிகர் விஜய் சேதுபதி கலாய்க்கப்பட்டு இருப்பது பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. நடிகர் சூர்யா நடித்த காப்பான் படம் வெளியாகி தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. முதலில் மோசமான விமர்சனங்களை பெற்ற காப்பான் படம் தற்போது கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

ஆனால் வசூல் ரீதியாக காப்பான் படம் இன்னும் பெரிய பிரேக் பெறவில்லை. குறைந்தது இன்னும் ஒரு வாரம் ஓடினால்தான் படத்தில் போட்ட காசை எடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த படத்தில் முக்கியமான வேடத்தில் நடிகர் மோகன்லால் நடித்து இருக்கிறார். அதேபோல் ஆர்யா, சமுத்திரக்கனி, சாயிஷா ஆகிய பிரபலங்களும் படத்தில் முக்கிய ரோலில் நடித்து இருக்கிறார்கள். நடிகர் சூர்யா இதில் பிரதமருக்கு பாதுகாவலராக நடித்து உள்ளார்.


இந்த நிலையில் இந்த படத்தில் வரும் காட்சிதான் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதில் சமுத்திரக்கனியின் மனைவி பாத்திரம் புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டு இருப்பார். அதில் விஜய் சேதுபதி புகைப்படம் இருக்கும்.

இந்த புகைப்படத்தை பார்த்து சமுத்திரக்கனி, இவன் வேற.. சும்மா இருக்க மாட்டான்.. எப்ப பாரு பொண்ணுங்க நெஞ்சுல ஏறி உட்கார்ந்துக்குவான் என்று குறிப்பிட்டு இருப்பார். விஜய் சேதுபதியை காமெடியாக கிண்டல் செய்யும் விதமாக இந்த காட்சி அமைந்து இருக்கும்.

இந்த நிலையில் விஜய் சேதுபதியை கிண்டல் செய்துவிட்டார்கள். அவரை அவமானப்படுத்திவிட்டார்கள் என்று அவரின் ரசிகர்கள் கொந்தளித்துள்ளனர். இந்த காட்சி பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. காப்பான் படத்திற்கு முன் கே வி ஆனந்த் விஜய் சேதுபதியை வைத்து கவண் படம் இயக்கினார்.

பொதுவாக கே.வி.ஆனந்த் தன்னுடைய படத்தில், தனக்கு முந்தைய படத்தின் ஹீரோவை கிண்டல் செய்வது வழக்கம். கோ படத்தில், அயன் சூர்யாவை அவர் கிண்டல் செய்திருப்பார். அப்படித்தான் இதிலும் கே வி ஆனந்த் விஜய் சேதுபதியை கிண்டல் செய்துள்ளார் என்கிறார்கள்.

# ராம்போ: லாஸ்ட் பிளட்



அட்ரியன் கிரன்பெர்க் இயக்கத்தில் சில்வெஸ்டர் ஸ்டாலொன், பஸ் வேகா, செர்ஜியோ பெரிஸ்-மென்செடா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியிருக்கும் படம் 'ராம்போ: லாஸ்ட் பிளட்'. 1982ல் ஆரம்பித்த ராம்போ சீரிஸ்களின் ஐந்தாம் பாகம். 2008ல் பர்மா பிரச்னைகளைக் கடந்து பதினோரு வருடங்களுக்குப் பிறகு ஜான் ராம்போ அமைதியான வாழ்க்கை வாழ்கிறார். உடன் தோழி மரியா பெல்ட்ரென் மற்றும் அவரின் பேத்தி கேப்ரியல் சகிதமாக தனது தந்தையின் குதிரைப் பண்ணையை பார்த்துக்கொண்டு வாழ்கை சுமூகமாக போகிறது.

இதற்கிடையில் கேப்ரியலின் தந்தை யாரென கண்டுபிடித்துவிட்டதாகவும் அவர் மெக்ஸிகோவில் இருப்பதாகவும் அவரது தோழி கூற யாருக்கும் தெரியாமல் கேப்ரியல் மெக்ஸிகோ செல்கிறார். அங்கே என்னையும் அம்மாவையும் ஏன் விட்டுச் சென்றீர்கள் என்றக் கேள்விக்கு அப்பாவிடம் நீங்கள் எனக்குத் தேவையில்லை எனவே விட்டுவிட்டேன் என்னும் பதில் கிடைக்கிறது. மனமுடையும் கேப்ரியல் உள்ளூர் பார் ஒன்றில் குடிக்கிறார். அங்கே பெண்களைக் கடத்தி விற்கும் கூட்டத்தாரால் மது ஏற்றப்பட்டு கடத்தப்படுகிறார் கேப்ரியல்.

பெண்ணைக் காணாத நிலையில் ஜான் ராம்போ தேடி வருகிறார். கேப்ரியல் காப்பாற்றப்பட்டாரா, அநியாயக் கும்பல் என்ன ஆனது என்பது மீதிக் கதை. ராம்போ' சீரிஸ்களின் ரசிகர்களுக்கு ஏற்ப படம் முழுக்க வில் அம்புகள், ரத்தம் தெறிக்கும் ஆக்ஷன் காட்சிகள், சலனமே இல்லாமல் கயவர்களை பந்தாடும் சில்வெஸ்டர் ஸ்டாலோன் என படத்தில் நிறைய நாஸ்டால்ஜியா மொமென்ட்கள். வயசானாலும் தல கெத்துடோய் என பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

அதற்கேற்ப வில்லனை கதவில் செருகி இதயத்தையே கிழித்து எடுத்துக் காண்பிப்பது, தலையை ரோட்டில் உருட்டி விட்டுச் செல்வது என அதிர்ச்சி வைத்தியம் தருகிறார். கேப்ரியலாக வரும் யெவ்ட்டே மோன்ரியல் மகாநதி சங்கீதாவை ஞாபகப் படுத்துகிறார். ஐயம் சோ சாரி என சொல்லும் காட்சிகள் மனதைக் கனமாக்கும்.

வீடு தேடி சென்று வில்லன்களை பந்தாடுவது, மொத்த கும்பலையும் வரவழைத்து பொறி அமைப்பது படத்திற்கு பிளஸ். சில காட்சிகளில் ஆர்ட் டைரக்டரின் வேலை பளிச் என தெரிகிறது. பிராண்டன் கால்வினின் ஒளிப்பதிவும், பிரயன் டெயிலரின் பின்னணி இசையும் அருமை. மொத்தத்தில் ராம்போ ரசிகர்களுக்கு ராம்போ லாஸ்ட் பிளட் ரசனையாக இருக்கும். பொதுவான மக்களின் பார்வையில் சாதாரண பழிவாங்கல் கதையாக கடந்து செல்லும்.

குறிப்பு: படம் முடிந்து காண்பிக்கப்படும் ராம்போ சீரிஸ்களின் காட்சித் தொகுப்பு அருமையான நாஸ்டால்ஜியாவாக இக்கால இளசுகளுக்குப் பழைய சீரிஸ்களைப் பார்க்கத் தூண்டும்.



# பழங்களை எப்படி சாப்பிட வேண்டும்?

பழ வகைகளில் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்திருந்தாலும், அவைகளை சாப்பிடுவதற்கு சில வரைமுறைகள் இருக்கின்றன. விரும்பிய நேரமெல்லாம் பழங்களை சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிட்டால் முழு பலன் கிடைக்காது. எந்தந்த நேரத்தில் எந்தந்த பழங்களை சாப்பிட வேண்டும் என்பது பற்றி பார்ப்போம்.

காலையில் வெறும் வயிற்றில் பழங்கள் சாப்பிடுவது நல்லது. அந்த சமயத்தில் செரிமான செயல்பாடு சீராக இயங்கும். பழங்களில் உள்ள அனைத்து சத்துக்களை யும் உறிஞ்சு எடுத்துக்கொள்ள உடல் ஒத்துழைக்கும்.

காலை உணவை சாப்பிடுவதற்கு முன்பாக அன்னாசி, முலாம் பழம், வாழை, திராட்சை, பெர்ரி, பேரிக்காய், மாங்காய், பப்பாளி, ஆப்பிள் போன்ற பழங்களை சாப்பிடலாம்.

மதிய உணவு சாப்பிடுவதற்கு முன்பாக பழங்களை சாப்பிடுவது எடை குறைப்புக்கு வழிவகுக்கும். எளிதாக செரிமானம் நடைபெறவும் உதவி புரியும். முலாம் பழம், அன்னாசி, மாதுளை, ஆப்பிள், மாம்பழம், பெர்ரி வகை பழங்களை அப்போது சாப்பிடலாம். மதிய சாப்பாட்டுக்கு 30 நிமிடங்களுக்கு முன்பு பழங்கள் சாப்பிட வேண்டும் என்பது அவசியம்.

வேலைக்கு செல்வதற்கு முன்பும், வேலை முடிந்த பின்பும் பழங்கள் சாப்பிடுவது நல்லது. அது சோர்வின்றி உடல் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு பக்கபலமாக இருக்கும். நார்ச்சத்து நிறைந்த பழங்களை தேர்ந்தெடுத்து சாப்பிட வேண்டும்.

இரவு சாப்பாட்டுக்கு முன்பு பழங்கள் சாப்பிடுவது நல்லது. அதிலிருக்கும் குறைந்த கலோரி மற்றும் நார்ச்சத்துக்கள் பசியின் வீரியத்தை குறைக்கும்.

சாப்பிடுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்போ, சாப்பிட்ட உடனேயோ, தூங்க செல்வதற்கு முன்போ பழங்கள் சாப்பிடக்கூடாது, அப்படி சாப்பிட்டால் செரிமானத்தில் பிரச்சினைகள் ஏற்படும். பழங்களில் இருக்கும் அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் முழுமையாக உடலுக்கு கிடைக்காது.

உணவுடன் சேர்த்து பழங்களை ஒருபோதும் சாப்பிடக்கூடாது. ஏனெனில் அப்படி செய்வது செரிமானத்தை தாமதப்படுத்திவிடும்.

அந்தந்த பருவகாலங்களில் விளையும் பழங்கள் உடலுக்கு ஏற்றது.

சிறுநீரக நோய் பாதிப்புக்கு ஆளானவர்கள் பொட்டாசியம் அளவு குறைவாக உள்ள பப்பாளி, ஆப்பிள், பேரிக்காய், கொய்யா போன்ற பழங்களை சாப்பிடலாம். அதுவும் டாக்டரின் ஆலோசனை பெற்றே சாப்பிட வேண்டும்.

# உடலுக்கு ஏற்ற நீர்

லவங்கப்பட்டை, பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. சமையலிலும் தவிர்க்கமுடியாத பொருளாக பயன்படு'கிறது. இனிப்பு மற்றும் கார வகை உணவுகள், பலகாரங்களிலும் சேர்க்கப்படுகிறது. லவங்கப்பட்டையை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று பார்ப்போம்.

லவங்கப்பட்டையை வெதுவெப்பான நீரில் ஊற வையுங்கள். அந்த நீரை தொடர்ந்து பருகி வருவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யலாம். மேலும் சுவாச கோளாறுகள், இதய நோய் சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்தும் தற்காத்துக்கொள்ளலாம்.

பெண்கள் மாதவிடாய் காலங்களில் சூடான நீரில் லவங்கப்பட்டை தூளை கலந்து பருகிவரலாம். தினமும் ஒரு கப் லவங்கப்பட்டை நீர் பருகுவது மாதவிடாய் சமயத்தில் ஏற்படும் வலிகளை குறைக்க உதவும்.

உடல் பருமன் பிரச்சினையால் அவதிப்படுபவர்களுக்கும் லவங்கப்பட்டை நீர் நிவாரணம் அளிக்கும். அதனுடன் தேன் சேர்த்து பருகலாம். அதிக பசி உணர்வை கட்டுப்படுத்தும். அதன்மூலம் உடல் எடை இழப்புக்கு வழிவகை செய்யும்.

மூட்டு வலி மற்றும் கீல்வாத பாதிப்புக்கு ஆளாகுபவர்களும் லவங்கப்பட்டை நீரை பருகி வரலாம். அதிகப்படியான வலியைக் குறைக்கவும், ரத்த ஓட்டத்தை அதிகரிக்க செய்யவும் துணை புரியும். கீல்வாத பாதிப்புகளை கட்டுப்படுத்தும்.

ரத்தத்தில் சர்க்கரையின் அளவை சீராக தக்கவைத்துக்கொள்வதற்கு லவங்கபட்டை நீரை பருகி வரலாம். எனினும் நீரிழிவு நோய் பாதிப்புக்கு ஆளானவர்கள் டாக்டர்களின் ஆலோசனை பெற்று, அதன் பிறகு லவங்கப்பட்டை நீரை பருகுவது நல்லது.

மூளையின் சீரான இயக்கத்திற்கு லவங்கபட்டை நீர் உறுதுணை புரியும். மறதி நோய் உள்ளவர்களுக்கு இது நல்ல மருந்து.



இந்த நீரை பருகினால் புற்றுநோயில் இருந்தும் தற்காத்துக்கொள்ளலாம். லவங்கப்பட்டையில் உள்ளடங்கி இருக்கும் ஆன்டி-கார்சிஜினோஜெனிக் சேர்மம் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது. அதனால் தினமும் லவங்கப்பட்டை நீர் பருகி வருவது நல்லது.

# சூட்டுக் கொப்புளத்துக்கு கைவைத்தியம்

நாட்பட்ட நோய் பாதிப்பு அல்லது சில குறிப்பிட்ட நோய் பாதிப்புகள் உடலில் ஏற்படும்போது, உடலின் பல்வேறு பகுதிகளில் கொப்பளங்கள் உண்டாகிறது. இவை மிகவும் வலி நிறைந்ததாக கருதப்படுகிறது. கொப்பளங்களைப் போக்க பல எளிய தீர்வுகள் இருந்தாலும், அவை உடலில் ஏற்படத் தொடங்கும்போதே அதற்கான சிகிச்சையை பின்பற்றி அவற்றைப் போக்குவது நல்லது.

சருமத்தில் உண்டாகும் சீழ் நிறைந்த தடிப்புகள் கொப்பளங்கள் ஆகும். பொதுவாக இவை சிவப்பு நிறத்தில் தோன்றும். பாதிக்கப்பட்ட பகுதி பொதுவாக வலி நிறைந்து காணப்படும். அவ்வப்போது சீழ் வடிதலும் இருக்கும். இவை தொற்று பாதிப்பால் உண்டாவதால் உடலின் மற்ற இடங்களுக்கு பரவும் வாய்ப்பு உள்ளது மற்றும் சிறிய அளவில் இருந்து பெரிய அளவாக வளரவும் வாய்ப்புகள் உள்ளது.




பொதுவாக உடலில் முடி அதிகம் இருக்கும் இடங்களில் கொப்பளங்கள் தோன்றலாம். கொப்பளங்கள் உருவாவது மற்றும் தொற்றுவதில் இருந்து எப்படி தடுப்பது கொப்பளங்கள் உருவாவதை கணிக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் சருமம் தடிக்கும் வரை கொப்பளம் உருவாவதை நாம் அறிந்து கொள்ள முடியாது. அப்படி தடிப்புகள் உண்டான இடங்களை கிள்ளவோ, சொரியவோ, கீறவோ கூடாது என்பது முக்கியமாக அறிவுறுத்தப்படுகிறது.

வலியுடன் கூடிய சரும தடிப்புகள் இருந்தால் நாளடைவில் அது கட்டியாக உருவாகலாம். ஆகவே அந்த இடத்தில் வெந்நீர் ஒத்தடம் தருவதால் வலி குறைந்து சீழ் கட்டாமல் இருக்கும் வாய்ப்புகள் உண்டு. வெதுவெதுப்பான துணியால் ஒத்தடம் தருவதால், சீழ் கட்டியாக மாறாமல், எளிதில் தடிப்பு கரைந்து விடலாம்.

கொப்பளங்கள் உள்ளவர்கள் பயன்படுத்தும் துண்டு அல்லது ஆடைகளை மற்றவர் பயன்படுத்துவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். முன்கூட்டியே கட்டிகள் கண்டறியப்பட்டால், இறுக்கமாக ஆடை அணிவதை தவிர்க்க வேண்டும்.

# வெறும் வயிற்றில் எலுமிச்சம்பழம் குடிக்கலாமா?



வெறும் வயிற்றில் எலுமிச்சம் பழச்சாறு குடிப்பது சரியா? தவறா? இயற்கையாகவே அமிலத்தன்மை வாய்ந்த எலுமிச்சம்பழச் சாறை காலையில் வெறும் வயிற்றில் குடிப்பதால் ஏராளமான உடல்நலக்குறைபாடு ஏற்பட காரணமாய் அமைந்திடும்.

டையை குறைக்க என்று ஆரம்பித்தாலே நமக்கு வரும் பெரும்பாலான ஃப்ரீ அட்வைஸ்களில் ஒன்று காலையில் எழுந்ததும் எலுமிச்சம்பழச் சாறு கலந்த நீரை அருந்துங்கள். எலுமிச்சம் பழம் இயற்கையாகவே அமிலத்தன்மை வாய்ந்தது. அதனை காலையில் எழுந்ததுமே வெறும் வயிற்றில் குடிப்பதால் ஏராளமான உடல்நலக்குறைபாடு ஏற்பட காரணமாய் அமைந்திடும்.

எலுமிச்சம்பழத்தில் உள்ள சிட்ரிக் ஆசிட் பற்களின் எனாமலை பதம் பார்க்கும். தொடர்ந்து குடிப்பதால் பற்கள் சென்சிட்டிவாகி சூடான அல்லது குளிர்ந்த உணவுகளை உட்கொள்ளும் போது பற்கூச்சம் ஏற்படும். இது போன்ற ஜூஸ்களை குடிக்கும் போது ஸ்ட்ரா உதவியுடன் குடியுங்கள். நீண்ட நேரம் ஜூஸை வாயில் வைத்திருப்பதை தவிர்த்திடுங்கள்.

வெறும்வயிற்றில் எலுமிச்சம்பழச்சாறு குடிப்பதனால் நெஞ்செரிச்சல் ஏற்படும். அதையே தொடரும் பட்சத்தில் வலி ஏற்படவும் வாய்ப்புண்டு.

காரமான அல்லது மசாலா உணவுகளை உட்கொண்டால் ஏற்படும் அஜீரணம் போன்றே ஆசிட் நிறைந்த எலுமிச்சம் பழச்சாற்றை வெறும் வயிற்றில் குடித்தால் ஏற்படும். எச்ண்ஞுணு ணிதுண்ணிணீடச்ஞ்னுச்டு ஞானுனூடு தது ஞீடிண்ணிஞுஞீனுஞு (எஉகீஈ) எனப்படும் இந்த குறைபாடால் வாந்தி, நெஞ்செரிச்சல்,குமட்டல் போன்றவை ஏற்படும்.

சிலர் எடையை குறைக்க காலையில் எழுந்ததுமே லிட்டர் கணக்கில் எலுமிச்சம் பழச்சாறு கலந்த தண்ணீரை குடிப்பார்கள்.இது மிகவும் தவறான ஒன்று, ஆரம்பத்தில் எடை குறைப்பது போன்ற மாயை ஏற்பட்டாலும் பின்னாட்களில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இதனை குடிப்பதனால் வயிற்றில் அசிடிட்டி லெவல் கூடுகிறது. இதனால் உணவுகள் ஜீரணமாவதில் தாமதம் ஏற்படும்.

எலுமிச்சம்பழத்தில் விட்டமின் -சி நிறைந்திருக்கிறது. இதனை குடிப்பதால் சிறுநீர் அதிகம் வெளியேறும். அதாவது நம் உடலிலுள்ள சோடியம் சத்துக்களை வேகமாக நீக்கிடும். இதனால் டிஹைட்ரேஷன் ஏற்ப்பட்டு மயக்கம் ஏற்படவும் வாய்ப்புண்டு. தொடர்ந்து மரணம் நிகழவும் வாய்ப்புகள் அதிகம்.

எலுமிச்சம்பழத்தில் இருக்கும் ஆக்ஸலேட்ஸ் இயற்கையாக நமது உடலில் இருக்கும். அது மேலும் மேலும் அதிகரிகப்பதால் அது உடல்நலத்தை பாதிக்கும்.

காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் நார்மலான நீரை அருந்துங்கள். குளிர்ந்த நீரையோ அல்லது சூடான நீரையோ அருந்தாமல் உங்களூம் டெம்ப்பரேச்சரில் இருக்கும் நீரை அருந்துவதே சிறந்தது.

உங்களது உணவுப்பழக்கத்தில் எலுமிச்சம்பழத்தை சேர்த்தாக வேண்டும் என்கிறவர்கள். உணவுக்குப் பிறகான ஜூஸாக அதனைப் பருகலாம்.

எலுமிச்சம் பழச்சாறு குடிப்பதனால் ஏராளமான நன்மைகள் உண்டுதான் என்றாலும் காலையில் வெறும் வயிற்றில் குடிப்பது உடல்நலத்திற்கு கேடானது. அதனால், எடையை குறைக்கிறேன் என்று ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

# குட்டித்தூக்கம் உடம்புக்கு நல்லது!

மதிய வேளையில் சிறிது குட்டித் தூக்கம் போட்டு வேலைத்திறனை அதிகரித்துக்கொள்வதுடன், மனஅழுத்தத்தையும் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

நீங்கள் பகலில் சற்று நேரம் குட்டித்தூக்கம் போடும் பழக்கம் உள்ளவரா? நண்பகல் வேளையில் சிறிது நேரம் கண் அயர்வது உடம்புக்கு நல்லது என்று ஜெர்மனி ஆராய்ச்சியாளர்கள் இருவர் கண்டறிந்து கூறியுள்ளனர். ஜெர்மனியின் மாக்ஸ்பிளாங்க் உளவியல் அமைப்பைச் சேர்ந்த ஜூர்கன் சுல்லே, ஸ்காட் காம்பெல் ஆகிய இருவரும் மதிய தூக்கம் பற்றிக் கூறுகையில், குட்டித் தூக்கம் நல்லது என்பதுடன், திறமையாக வேலை செய்யவும் உதவுகிறது என்று தெரிவித்துள்ளனர். அந்த விஞ்ஞானிகள் இதுபற்றி விரிவாக நடத்திய ஆய்வின் பலனாக அவர்களுக்கு ஐரோப்பிய தூக்க ஆராய்ச்சி சங்கத்தின் டபிள் ஆர் ஹெஸ் நினைவுப்பரிசு கிடைத்துள்ளது. அந்த இரு ஆராய்ச்சியாளர்களும் பாதாள அறையில் பலரைத் தூங்கச் செய்து பல ஆண்டுகாலம் ஆய்வு நடத்தினர். பொதுவாக, ஓய்வுக் கட்டத்தில் மனித உடல் வெப்பநிலையானது சற்றுக் குறைகிறது. நண்பகல் வாக்கில் உடல் வெப்பநிலை குறைவதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர். வேறு விதமாகச் சொல்வது என்றால், மனித உடலின் இயல்பான அமைப்பானது நண்பகல் உணவு வேளையில் சற்று நேரத்துக்குத் தானாக ஓய்வுக்குத் தயார் நிலையை அடைகிறது என்பது அவர்களின் கருத்து.



# நீண்டநேரம் அமர்ந்திருந்து வேலைபார்ப்பவரா நீங்கள்?

அதிக நேரம் அமர்ந்து, அலட்டிக்கொள்ளாமல் வேலை பார்ப்பவர்களின் பின்புறத்தில் கொழுப்பு சேர்கிறது, அது தசை திசுக்களுக்கு உள்ளும் ஊடுருவுகிறது.

அலுவலகத்தில் நீண்ட நேரம் இருக்கையில் அமர்ந்து பணிபுரிவது நமது ஆசனப் பகுதியைப் பாதிக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.'டெஸ்க் டெர்ரீர்' எனப்படும் இந்த பாதிப்பு, சில சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. இஸ்ரேலின் டெல் அவிவ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டார்கள்.

அவர்கள், அதிக நேரம் இருக்கையில் அசையாமல் அமர்ந்து வேலை பார்ப்பவர்களின் பின்புறத்தை ஸ்கேன் செய்தார்கள். அப்போது, அவர்களின் ஆசனப் பகுதி தசைகள் சுருங்கியும், சேதமடைந்தும் இருப்பது தெரியவந்தது. அதிக நேரம் அமர்ந்து, அலட்டிக்கொள்ளாமல் வேலை பார்ப்பவர்களின் பின்புறத்தில் கொழுப்பு சேர்கிறது, அது தசை திசுக்களுக்கு உள்ளும் ஊடுருவுகிறது.

இதுதொடர்பாக நுபீல்டு ஆரோக்கிய மையத்தின் பிசியாலஜி துறைத் தலைவர் கிறிஸ் ஜோன்ஸ் கூறுகையில், ஒருவர் நாள் முழுவதும் இருக்கையில் அமர்ந்திருந்தால், அவருடைய இடுப்பின் முன்புறத் தசைகள் அளவுக்கு அதிகமாகச் செயல்படும். அந்த தசைகள் இறுக்கமாகவும் ஆகின்றன.

அதன் விளைவாக, குறிப்பிட்ட நபர்களின் பின்புறத்தில் அந்த வடிவத்தைக் கொடுக்கும் மூன்று முக்கியத் தசைகளான குளூட்டியஸ் மாக்சிமஸ், குளூட்டியஸ் மீடியஸ், குளூட்டியஸ் மினிமஸ் ஆகியவை பாதிக்கப்படுகின்றன என்கிறார்.

ஆண்களுக்குப் பெரும்பாலும் இடுப்பைச் சுற்றி கொழுப்புச் சேர்கிறது என்றால், பெண்களுக்குப் பெரும்பாலும் பின்புறத்தில் கொழுப்பு திரள்கிறது என்றும் கூறுகிறார் ஜோன்ஸ்.


# வெரிக்கோஸ் வெயின் என்ன பாதிப்பு ஏற்படும்?

வெரிகோஸ் வெயின் என்பது உடலில் எங்கு வேண்டுமானாலும் ஏற்படும் பாதிப்பு என்றாலும் அதிகமாக தொடைப் பகுதிக்குக் கீழேயும், ஆடு தசையிலும் அதிகம் காணப்படும்.

பொதுவில் arleries, Veins இவற்றினை ரத்த நாளங்கள் என்றும் nerve என்பதனை நரம்பு என்றும் குறிப்பிடுவோம். ஆனால் Varicose Venis என்பதனை உரையாடல் வழக்கத்தில் நரம்பு முடிச்சு என்றும் சுருள் சிரை நரம்பு என்றும் குறிப்பிடுகின்றனர். Arteries என்பதற்கும் Veins என்பதற்குமான வித்தியாசத்தினை முதலில் பார்ப்போம்.

இதனை புரிந்து கொண்டால் Varicose Vein பாதிப்பினைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும். வெரிகோஸ் வெயின் என்பது உடலில் எங்கு வேண்டுமானாலும் ஏற்படும் பாதிப்பு என்றாலும் அதிகமாக தொடைப் பகுதிக்குக் கீழேயும், ஆடு தசையிலும் அதிகம் காணப்படும். இவை விரிந்த ரத்த நாளங்கள். சற்று வீங்கி, நிறம் மாறி, சுருண்டு இருக்கும். ஸ்பைடர் வெயின் எனும் ஒருவகை பிரிவும் இதில் உண்டு. எட்டுகால் பூச்சி போல் இவை தோற்ற மளிக்கும். சருமத்தின் கீழே காணப்படும் இந்த வெரிகோஸ் வெயின் பாதிப்பு சிலருக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் கூட இருக்கலாம்.

ஆனால் பலருக்கு



★ அதிக வலி

★ எரிச்சல், வீக்கம், சதை பிடிப்பு ஆகியவை இருக்கும்.

★ அதிக நேரம் உட்கார்ந்தாலோ, அதிக நேரம் நின்றாலோ வலி கூடும்.

★ பாதிப்புடைய இடத்தினைச் சுற்றி அரிப்பு

★ பாதிப்புள்ள ரத்த குழாய்களிலிருந்து ரத்த கசிவு

★ புண்

★ ஊதா, நீலம், சிகப்பு, கறுப்பு போன்ற நிறமாற்றங்கள் ஆகிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

வெயின்ஸ் என்ற ரத்த குழாய்கள் ரத்தத்தினை உடலின் மற்ற பகுதியிலிருந்து இதயத்திற்கு கொண்டு செல்கின்றது என்பதனைப் பார்த்தோம்.

ஆகவே இவை ஈர்ப்பு விசைக்கு எதிராக வேலை செய்ய வேண்டி உள்ளது. தசைகளின் சுருக்கம் குழாய்களின் எலாஸ்டிக் சுவர்களும் ரத்தத்தினை இருதயம் நோக்கி அனுப்புகின்றன. இதிலுள்ள வால்வு ரத்தம் கீழே வராமல் தடுக்கின்றது.

இந்த வால்வு செயலிழக்கும் பொழுதும், நாளங்களின் சுவர் பலவீனப்படும் பொழுதும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மேலும் இந்த பாதிப்பிற்கு காரணமாக

★ முதுமை - இதனால் ரத்த நாளங்கள் வலுவிழக்கும். இதனால் ரத்தம் நாளங்களில் தேங்கி வீங்கி விடும்.

★ கர்ப்பம் - கர்ப்ப காலத்தில் கால்களிலிருந்து இடுப்பிற்கு வரும் ரத்தத்தின் வேகம், அளவு குறையும் வாய்ப்பு அதிகமாவதால் கால்களில் வீங்கிய ரத்த குழாய்கள் இருக்கும். ஹார்மோன் மாறுபாடுகளும் காரணமாக இருக்கலாம். பேறு காலத்திற்குப் பிறகு 12 மாதங்களில் சகஜ நிலை ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம்.

★ பரம்பரை காரணமாக பாதிப்பு ஏற்பட கூடுதல் வாய்ப்புகள் உண்டு.

★ அதிக எடை கால்களில் அதிக அழுத்தத்தினை ஏற்படுத்துவதால் பாதிப்பு ஏற்படும்.

# இது நடந்தால் இனி மீம்களே இருக்காது!




'Distracted Boyfriend' மீமின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பெயர் புதிதாக இருக்கலாம். ஆனால், இந்த மீம் டெம்ப்ளேட்டை நிச்சயம் எங்கேனும் பார்த்திருப்பீர்கள். இதுதான் அந்த டெம்ப்ளேட்.

ஸ்பெயினைச் சேர்ந்த அன்டோனியோ கில்லம் என்ற புகைப்படக்கலைஞர் 2015-ல் எடுத்த போட்டோதான் இது. இரண்டு வருடங்களுக்கு முன் திடீரென சோஷியல் மீடியாக்களில் வைரலான டெம்ப்ளேட்களில் ஒன்று. உலகம் முழுவதும் வைரலான புகைப்படம் என்றால், இந்தப் புகைப்படத்தை எடுத்தவர் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கவேண்டும்? ஆனால், கில்லம்க்கு அந்தளவு மகிழ்ச்சியெல்லாம் இல்லை. அதற்குக் காரணம், இது காப்புரிமை பெற்ற போட்டோ. இதை ஒருவர் பயன்படுத்த வேண்டுமென்றால் முறையாக, பணம் செலுத்தி அனுமதி பெறவேண்டும். கில்லம், ஏற்கெனவே நிறைய இணையதளங்களுக்கு இப்படி புகைப்படங்களை விற்றுள்ளார். ஒவ்வொரு வருடமும் கில்லமின் புகைப்படங்களில் அதிகம் விற்பனையாகும் புகைப்படம் ஒன்றின் சராசரி விற்பனை எண்ணிக்கை 5,000-6,000. ஆனால், இந்த 'Distracted Boyfriend' புகைப்படம் ஒரு வருடத்தில் எவ்வளவு விற்றுள்ளது தெரியுமா? 700. உலகளவில் எல்லா சோஷியல் மீடியாக்களிலும் நின்று விளையாடிய இந்தப் புகைப்படத்தால், கில்லம்க்கு பெரிய வருமானம் ஒன்றும் வந்துவிடவில்லை. சொல்லப்போனால் மற்ற சாதாரண புகைப்படங்களை விடவும் குறைவான வருமானம்தான் வந்திருக்கிறது.

கில்லம் சோகமாக இருக்கக்காரணம் இதுதான். இன்று உலகெங்கும் இந்தப் புகைப்படம் பயன்படுத்தப்பட்டாலும், அது அவருக்குப் பொருளாதார ரீதியில் பெரிய லாபம் ஒன்றையும் தந்துவிடவில்லை. வேண்டுமெனில், இப்படி ஒரு வைரலான புகைப்படத்தை எடுத்தது தான்தான் என மகிழ்ச்சியாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், அதையும் மறுக்கிறார் கில்லம். ''அது என்னுடைய படம் என்பதால் மட்டுமே அது வைரலாகவில்லை; அதனை முதன்முதலில் பயன்படுத்திய நபர் அதை அழகிய குறியீடாக மாற்றுகிறார். அது அனைவருக்கும் பிடித்துப்போகவே வைரலாகியிருக்கிறது. அவ்வளவுதான்'' என்கிறார் அவர். இந்தக் கதையில் நாம் கவனிக்கவேண்டியது இரண்டு விஷயத்தை. முதலாவது, அந்தப் புகைப்படத்தை மீமாக மாற்றியவர் யாருமே கில்லம்க்கு பணம் கொடுக்கவில்லை; யாருமே அதனை வணிகரீதியாகப் பயன்படுத்தவில்லை என்பதால் அதற்கான தேவையும் வரவில்லை. இரண்டாவது, எல்லோருமே கில்லமின் புகைப்படத்தையே பயன்படுத்தினாலும் அதனால் அவருக்கு எவ்வித லாபமும் இல்லை. காரணம், அனைவருமே அதை ஃபேஸ்புக்கிலோ, ட்விட்டரிலோதான் பயன்படுத்துகின்றனர். இதில் யார் பக்கம் நியாயம்? இரண்டுபேர் பக்கமும் தானே? ஆனால், ''கில்லம் சொல்வதுதான் சரி; அவருக்கான பணத்தை அனைவரும் கொடுங்கள்'' என்றால் அது சரியா? அதைத்தான் தற்போது செய்திருக்கிறது ஐரோப்பிய யூனியன்.

### இணையம் முதல் கருத்து சுதந்திரம் வரை

கொஞ்சம் விரிவாகவே பார்ப்போம். அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பாவில் ஏற்கெனவே சில சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவை எதுவுமே காலத்திற்கு ஏற்றார்போல இல்லை. குறிப்பாக இணைய யுகத்தில் காப்புரிமை தொடர்பான பிரச்னைகள் அதிகளவில் எழுந்துவரும் இந்தச் சமயத்தில் அதற்கான சட்டங்கள் இல்லை என்பது, ஐரோப்பிய யூனியனில் இருக்கும் ஊடகங்களுக்குப் பலவீனமாக இருந்தது. இதைச் சரிசெய்யும் வகையில் 2016-ம் ஆண்டு புதிய சட்டம் ஒன்றிற்கான வரைவைத் தயார் செய்தது ஐரோப்பா. அதுதான் தற்போது உலகெங்கும் விவாதங்களைக் கிளப்பியிருக்கும் Copyright Directive. இதற்குக் கடந்த 12-ம் தேதி ஒப்புதலும் கிடைத்துவிட்டது. இந்த முடிவுக்கு எதிராக உலகெங்கும் இருந்து ஆதரவாகவும், எதிராகவும் குரல்கள் எழுகின்றன. இந்தப் புதிய விதிமுறைகளில் இரண்டே இரண்டு அம்சங்கள்தான் விவாதிக்கப்படவேண்டிய விஷயம். அவைதான் இணையத்தில் இருப்பவர்களின் கருத்துரிமைக்கு சவால் விடுக்கின்றன. ஒன்று, பிரிவு 11. மற்றொன்று, பிரிவு 13. இந்த இரண்டின் கதையையும் தெரிந்துகொண்டால்தான், இதன் அபாயத்தையும் உணரமுடியும்.

### பிரிவு 11

செய்தி நிறுவனங்கள்தான் இந்தப் பிரிவின் மையம். 20 ஆண்டுகள் முன்புவரைக்கும் ஊடக உலகம் எப்படி இருந்தது என யோசித்துப்பாருங்கள்; செய்தித்தாள்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள். இவை மூன்று தளங்களில் மட்டும்தான் அவை இயங்கும். அதன்பின்பு இணையதளங்கள் வேகமாகப் புகழ்பெறத் தொடங்கின. தொடர்ந்து மொபைல் போன்களின் வரவு அதிகரித்ததால் ஆப்ஸ் தற்போது அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டன. இதற்கேற்ப ஊடகங்களும் தங்களை எல்லா தளங்களிலும் தங்களை நிலைநிறுத்திக்கொண்டுள்ளன. ஒன்று செய்திகளைத் தெரிந்துகொள்ள செய்தித்தாளோ, தொலைக்காட்சியோதான் வேண்டுமென்பதில்லை. ஃபேஸ்புக்கோ, கூகுளோ, யூ-டியூபோ மட்டும் போதும். இவை அனைத்திலும் நமக்கான செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், செய்தி நிறுவனங்களுக்கு முன்பு இருந்ததைப் போலவே வருமானம் கிடைக்கிறதா? இல்லை.

கடந்த பத்து ஆண்டுகளில் கூகுள், ஃபேஸ்புக் போன்றவற்றின் பாதிப்பு செய்தி நிறுவனங்களில் அதிகளவில் இருக்கிறது. பெரும்பாலான செய்தி இணையதளங்களின் டிராஃபிக் இங்கிருந்துதான் வருகிறது. அதேசமயம் சமூக வலைதளங்களலாயே செய்திகளை, நேரடியாக இணையதளங்களுக்குள் வந்து படிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்கிறது. இதேபோல இந்தப் பிரச்னைக்கு வேறொரு பரிணாமமும் இருக்கிறது. சிரியாவில் ராணுவ தாக்குதல்கள் நடக்கும் இடத்தில் இருந்துகொண்டு ஒரு செய்தியாளர் ஒரு வீடியோவை எடுக்கிறார் என வைத்துக்கொள்வோம். அந்த வீடியோ ஃபேஸ்புக்கில் வெளியாகி வைரலாகிறது. இதன்மூலம் ஃபேஸ்புக்கில் பயனாளர்களின் ஷேர்ஸ், லைக்ஸ் எல்லாம் அதிகரிக்கும்; ஆனால், அந்த செய்தி நிறுவனத்திற்குப் பெரியளவில் எந்தப் பயனும் இருக்காது. இப்படி செய்தியாளர்கள் உலகெங்கும் இருந்துகொண்டு சேகரிக்கும் தகவல்களை வைத்து, ஃபேஸ்புக், கூகுள் மட்டும் கல்லா கட்டுவது சரியா எனக் கேட்கின்றன ஐரோப்பிய ஊடங்கங்கள். இவர்களுக்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த பிரிவு 11.

இதன்படி கூகுளோ, ஃபேஸ்புக்கோ, ட்விட்டரோ ஒரு செய்தி நிறுவனத்தின் லிங்க்கை அல்லது செய்தியைப் பயன்படுத்துகிறது எனில், அதற்கு அந்த நிறுவனத்திற்குப் பணம் செலுத்தவேண்டும். உதாரணம், கூகுள் நியூஸ். இது அக்ரிகேட்டர் சர்வீஸ். இதில் வெவ்வேறு இணையதளங்களின் செய்திகளை ஒரே இடத்தில் சுருக்கமாகப் பார்க்க முடியும். இப்போது இது இலவசம்தான். ஆனால், வருங்காலத்தில் இதற்காக கூகுள், செய்தி நிறுவனங்களுக்குப் பணம் கொடுக்கவேண்டும். ஆனால், இதற்கு கூகுள் சம்மதிக்காது. அதற்கு கூகுள் சொல்லும் காரணம், ''எங்களுடைய சேவை மூலமாக செய்தி நிறுவனங்கள்தான் பயனடைகின்றன. அவர்களுக்கு நாங்கள் இனியும் உதவத் தயாராக இருக்கிறோம். பிறகு எதற்குப் பணம் கொடுக்கவேண்டும்'' என்கிறது. இதற்கு முன்பே இப்படிப்பட்ட சட்டங்கள், பெல்ஜியம், ஜெர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அமல்படுத்தப்பட்டு தோல்வியையே தழுவியது. கூகுள் நியூஸ் மூலம் அந்நிறுவனங்களுக்கு வந்த டிராஃபிக் குறைந்ததுதான் காரணம். ஆனால், அதேபோல தற்போது நடக்காது என்கின்றன ஐரோப்பிய ஊடகங்கள். இதன்மூலம் செய்தி நிறுவனங்களுக்கு நன்மைதான் என்றாலும், மக்களுக்கு சில தீமைகளும் இருக்கின்றன. செய்திகளுக்குப் பணம் செலுத்தவேண்டும் என்பதால் கூகுள், ஃபேஸ்புக் போன்றவை இவற்றைத் தவிர்த்துவிடலாம். பிற அக்ரிகேட்டர்களும் இதேபோல தங்கள் சேவையை நிறுத்தவேண்டிய சூழல் ஏற்படலாம். இதன்மூலம் போலிச் செய்திகள் அதிகளவில் பரவவே வாய்ப்பு அதிகம். மேலும், இந்த முடிவு செய்தி நிறுவனங்களுக்கே பின்விளைவுகளையும் ஏற்படுத்தலாம். சரி, இனி அடுத்து பிரிவு 13.

### மீம்களுக்கு பூட்டு!

இதற்கு முன்புவரைக்கும் ஃபேஸ்புக்கில் ஒரு வீடியோவை அல்லது புகைப்படத்தை பதிவேற்றுகிறோம் என்றால் அதன் காப்புரிமைக்கு நாம்தான் பொறுப்பு. ஃபேஸ்புக் பொறுப்பாகாது. ஒருவேளை நாம் ஏதேனும் நிறுவனத்தின் காப்புரிமையை மீறியிருந்தால் மட்டும் ஃபேஸ்புக் தலையிட்டு, நம் போட்டோவை அக்கவுன்ட்டில் இருந்து நீக்கும். ஆனால், இந்தப் புதிய விதிமுறையின்படி (ஐரோப்பிய யூனியனில் மட்டும்) நாம் வேறொரு நிறுவனத்தின் காப்புரிமை பெற்ற போட்டோவை உரிய அனுமதியின்றி ஃபேஸ்புக்கில் பதிவிட்டால், அதற்கு ஃபேஸ்புக்தான் பொறுப்பு. இது ஃபேஸ்புக்கிற்கு மட்டுமல்ல; எல்லா இணையதளங்களுக்கும் பொருந்தும். இதிலிருந்து தப்பிக்க ஐரோப்பிய யூனியன் சொல்லும் வழி, ஃபில்டர். அதாவது, ஒருவர் புகைப்படம் ஒன்றை ஃபேஸ்புக்கில் பதிவேற்றும்போதே அதைக் கண்டறிந்து தடுக்கவேண்டும்.




அதற்கான தொழில்நுட்பத்தை அனைத்து நிறுவனங்களும் பயன்படுத்தவேண்டும்.

இதனை Upload Filter எனக் குறிப்பிடுகின்றனர் விமர்சகர்கள். சென்சார் செய்வதை விடவும் மோசமான ஒரு முடிவு என்கின்றனர் எதிர்ப்பாளர்கள். இதனைச் சின்ன உதாரணம் மூலம் பார்ப்போம். வீடியோ மீம்ஸ் உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். சமீபத்தில் வெளிவந்த செக்கச்சிவந்த வானம் படத்தின் ட்ரெயிலரை எடுத்துக்கொண்டு, அதைக் கொஞ்சம் Te-xt சேர்த்து எடிட் செய்து யூடியூபில் பதிவேற்றுகிறோம் என வைத்துக்கொள்வோம். அது வெறும் Spoof, வீடியோ மீம் என்பது நமக்குத் தெரியும். ஆனால், யூடியூபின் ஃபில்டருக்குத் தெரியாது. ஏற்கெனவே வந்த ட்ரெய்லரோடு முழுமையாக ஒத்துப்போகிறது எனச்சொல்லி வீடியோவை மொத்தமாக நிறுத்திவிடும். இதேபோல, அந்த ட்ரெய்லரை வைத்து ஒரு மீம் போட்டு அதை ட்விட்டரில் அப்லோடு செய்தால், ட்விட்டரின் ஃபில்டர் இது ட்ரெய்லரில் இருக்கும் ஒரு ஃபிரேம் என நினைத்து அதைத் தடுத்துவிடும். பின்னர், அது வெறும் மீம்தான் என்பதை விளக்கமாக எடுத்துச்சொல்லி வேண்டுமானால் அதை ஷேர் செய்யமுடியும். இதேபோல பரோடி வீடியோக்கள், GiF, Spoof என எல்லாமே இந்த ஃபில்டரால் அடிபட்டுப் போய்விடும். இது இதோடு நிற்கவில்லை. இன்னும் இருக்கிறது.

ஏதேனும் ஒரு இடத்தில் சாலை மறியல் நடக்கிறது. அதை ஒருவர் புகைப்படம் எடுக்கையில், அந்தக் கூட்டத்தில் இருக்கும் ஒருவரின் டிசைன் தெளிவாகத் தெரிந்துவிடுகிறது. அது காப்புரிமை பெற்ற டிசைன். அப்படியெனில், அந்தப் போட்டோவை இணையத்தில் போட ஃபேஸ்புக் ஃபில்டர் அனுமதிக்காது. மொபைலில் பனோரமா மோடில் போட்டோ எடுக்கும்போது, காப்புரிமை பெற்ற ஏதேனும் சுற்றுலாத்தலங்களின் கட்டடங்கள் அதில் வந்துவிட்டால் அதையும் நாம் எங்கேயும் பயன்படுத்தமுடியாது. இப்படி பிரிவு 11 மற்றும் 13-ல் நிறைய அம்சங்கள், காப்பிரைட் என்ற பெயரால் தற்போது நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கும் இணையத்தையே மொத்தமாகச் சிதைக்கும் வகையில் இருப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர் டெக்கீஸ்.


### தொடர்ச்சியான எதிர்ப்புகள்

கடந்த இரண்டு வருடங்களாகவே டெக் நிறுவனங்கள் இதனை எதிர்த்து வருகின்றன. இது மட்டும் சட்டமானால் சின்ன சின்ன நிறுவனங்கள் நிச்சயம் பாதிக்கப்படும் என்கின்றன அவை. தற்போது ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அனுமதி மட்டுமே பெற்றுள்ள இந்த விதிமுறைகள், 2019, ஜனவரியில்தான் சட்டமாகும் வாய்ப்புண்டு. அதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகள் கழித்துதான் அமலுக்கு வரும். அதற்குள்ளாகவே இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்பதுதான் பெரும்பாலானோரின் கருத்து. ஒருபக்கம் இதன்மூலம் தனி இசையமைப்பாளர்கள், புகைப்படக்கலைஞர்கள் போன்றவர்களுக்கு நன்மைதான். அதை வரவேற்கலாம்; ஆனால், மறுபக்கம் மீம், வீடியோ, GiF என இணையத்தின் மொத்த கிரியேட்டிவிட்டியையும் கெடுப்பது சரியல்ல. குறிப்பாக விக்கிப்பீடியா, Github போன்ற தளங்கள் பயனாளர்களின் படைப்புகளை வைத்து இயங்கும் தளங்கள். இவை இதனால் அதிகளவில் பாதிக்கப்படலாம். பிரிவு 11-ன்படி விக்கிபீடியாவில் எந்த செய்தி நிறுவனங்களின் குறிப்புகளையும் அனுமதியின்றி பயன்படுத்தக்கூடாது என்றால் என்ன ஆகும் யோசித்துப் பாருங்கள். இதை விரிவாக விளக்கி விக்கிப்பீடியாவின் தலைவர் ஜிம்மி வேல்ஸ், இன்டர்நெட்டின் தந்தை எனப்படும் டிம் பெர்னர்ஸ் லீ போன்ற நிபுணர்கள் ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்றத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கடந்த ஜூலை மாதம் 3 மற்றும் 4-ம் தேதிகளில் இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பிரிட்டனின் விக்கிபீடியா பக்கங்கள் நிறுத்தப்பட்டன. பிற தன்னார்வலர்கள் #SaveTheInternet, #SaveTheMeme போன்ற ஹேஷ்டேக்குகளில் சமூக வலைதளங்களில் தங்கள் எதிர்ப்புகளைப் பதிவுசெய்தனர். தற்போது இதற்கு அனுமதி கிடைத்துள்ள நிலையில், இன்னும் தொடர்ந்து தங்கள் எதிர்ப்புகளைப் பதிவு செய்து வருகின்றனர். மேலே நீங்கள் பார்த்த மீமும் இதற்குத்தான். சரி... இவ்வளவு எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஏன் ஐரோப்பிய யூனியன் இதைச் செய்கிறது? இரண்டு காரணங்களை முன்வைக்கின்றனர் விமர்சகர்கள். முதலாவது, சில பெருநிறுவனங்கள் அரசியல்வாதிகள் பின்னிருந்து அவர்களை இயக்குகின்றன. இரண்டாவது, இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு இணையம் எப்படி இயங்குகிறது, இதனால் என்ன தீமைகள் ஏற்படும் போன்றவை தெரிவதில்லை. எனவேதான் சில மாதங்களுக்கு முன்னர் GDPR விதிகளுக்காகப் பாராட்டு வாங்கிய ஐரோப்பிய யூனியன், தற்போது இதற்காகக் குட்டு வாங்கிக் கொண்டிருக்கிறது என்கிறார்கள் அவர்கள். எனவே இதில் திருத்தங்கள் மேற்கொள்வதுதான் ஒரேவழி.

இல்லையெனில், எல்லா நடைமுறைகளையும் தாண்டி, இது முழு சட்டமாக அமலுக்கு வர எப்படியும் மூன்று ஆண்டுகளாவது ஆகும். ஐரோப்பிய மீம் கிரியேட்டர்களின் வசந்தகாலம் அதுவரை மட்டும்தான்!

## ஆண்ட்ராய்டு 10 இயங்குதளத்துடன் வெளியாகும் முதல் ஸ்மார்ட்போன்



ஒன்பிளஸ் 7 மற்றும் ஒன்பிளஸ் 7 ப்ரோ ஸ்மார்ட்போன்களுக்கு ஆண்ட்ராய்டு 10 ஸ்டேபில் அப்டேட் கடந்த வாரம் முதல் வழங்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில், ஒன்பிளஸ் நிறுவனத்தின் புதிய ஒன்பிளஸ் 7டி ஸ்மார்ட்போன் ஆண்ட்ராய்டு 10 இயங்குதளத்துடன் வெளியாகும் என அந்நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஆண்ட்ராய்டு 10 இயங்குதளத்துடன் வெளியாகும் முதல் ஸ்மார்ட்போன் என்ற பெருமையை ஒன்பிளஸ் 7டி பெற இருக்கிறது. ஒன்பிளஸ் 7டி ஸ்மார்ட் போனில் ஆண்ட்ராய்டு 10 இயங்குதளத்துடன் கூகுளின் முதன்மை செயலிகள் மற்றும் சேவைகள் உள்ளிட்டவை பிரீ-இன்ஸ்டால் செய்யப்படுகிறது.

கடந்த வாரம் ஹூவாய் நிறுவனம் தனது மேட் 10 சீரிஸ் ஸ்மார்ட் போன்களை ஆண்ட்ராய்டு 10 மற்றும் EMUI 10 தளத்துடன் வெளியிட்டது. எனினும், இதில் கூகுள் சேவைகள் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்ட்ராய்டு 10 இயங்குதளத்துடன் கிடைக்கும் புதிய அம்சங்களை பார்ப்போம்:

பிரைவசி கண்ட்ரோல்: பிரைவசி செட்டிங்களை மிக எளிமையாக ஒற்றை இடத்தில் மாற்றியமைக்க முடியும். இதனால் பயனர்கள் தங்களின் டேட்டா எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதை தீர்மானிக்க முடியும்.

லொகேஷன் கண்ட்ரோல்: உங்களின் லொகேஷன் செயலிகளுடன் எப்போது பகிரப்படுகிறது என்பதை தீர்மானிக்க முடியும். இதற்கு எல்லா நேரமும், பயன்பாட்டில் இருக்கும் போது மட்டும் அல்லது எப்போதும் வேண்டாம் என மூன்று ஆப்ஷன்கள் வழங்கப்படுகின்றன. பயனர்கள் இதில் ஒன்றை தேர்வு செய்து கொள்ளலாம்.

ஸ்மார்ட் ரிப்ளை: குறுந்தகவல்களுக்கு நீங்கள் அனுப்ப நினைக்கும் பதில்கள் பரிந்துரைக்கப்படும். இதில் வெளியே உணவகம் செல்ல நண்பர் அழைக்கும் போது, குறிப்பிட்ட இடத்திற்கு செல்ல கூகுள் மேப்ஸ் செயலியில் இருந்து வழியை அறிந்து கொள்ள முடியும்.

ஜெஸ்ட்யூர் நேவிகேஷன்: ஜெஸ்ட்யூர்களை கொண்டு நேவிகேஷன் சேவையை வேகமாக இயக்க முடியும். இதன் மூலம் அம்சங்களை திரையை தொடாமலேயே இயக்கலாம்.

டார்க் தீம்: இந்த அம்சம் கொண்டு ஸ்மார்ட் போன் பேட்டரி தீர்ந்து போகும் சமயத்தில் அதனை சிறிது நேரத்திற்கு பேக்கப் வழங்கும் வகையில் சேமிக்க முடியும்.

## இனி வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ்களை ஃபேஸ்புக் ஸ்டோரியாக வைக்கலாம்

வாட்ஸ்அப் செயலியில் பயனர்கள் வைக்கும் ஸ்டேட்டஸ்களை ஃபேஸ்புக் ஸ்டோரிக்களில் பகிர்ந்து கொள்ளும் வசதி வழங்கப்படுகிறது. முன்னதாக பீட்டா பதிப்பில் சோதனை செய்யப்பட்டு வந்த அம்சம் தற்சமயம் அனைத்து பயனர்களுக்கும் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

புதிய அம்சம் ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் வழங்கப்படுகிறது. வரும் நாட்களில் இந்த அம்சம் அனைவருக்கும் வழங்கப்படும் என வாட்ஸ்அப் வலைப்பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் அப்டேட்களை ஃபேஸ்புக் ஸ்டோரிக்களில் வைத்துக் கொள்ள Share to Facebook Story எனும் பட்டன் வழங்கப்படுகிறது. இது வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் டேப் அருகிலேயே காணப்படுகிறது. புதிய அம்சத்திற்கு முழுமையான என்க்ரிப்ஷன் பொருந்தாது என கூறப்படுகிறது.

ஸ்டேட்டஸ் அப்டேட்களை மற்ற செயலிகளுடன் பகிர்ந்து கொள்ளும் போது அவை முழுமையான என்க்ரிப்ஷன் மூலம் பாதுகாக்கப்படாது. ஸ்டேட்டஸ் அப்டேட் வைக்கும் போது, வாட்ஸ்அப் அக்கவுண்ட் விவரங்களை ஃபேஸ்புக் மற்றும் இதர செயலிகளுடன் பகிர்ந்து கொள்ளாது என வாட்ஸ்அப் செய்தி தொடர்பாளர் தெரிவித்திருக்கிறார்.

வாட்ஸ்அப் ஆண்ட்ராய்டு 2.19.258 மற்றும் ஐபோனிற்கான வாட்ஸ்அப் 2.19.92 பதிப்புகளில் புதிய வசதி வழங்கப்படுகிறது.

## கொலு...

23 ஆம் பக்கத் தொடர்ச்சி

பீரோவிலிருந்து, 'போனஸ்' பணத்தை, அம்முலுவிடம் கொடுத்து,'குட்... ஜமாய்ங்க... ஆல் தி பெஸ்ட்,'என்று ஆசீர்வதித்தேன்.

என் ஐந்தாவது வயதில், கொலுவுக்கு மூன்று நாட்களுக்கு முன், 'டைபாய்டு' வந்த அம்மாவும், நானும், தாத்தா வீட்டுக்கு போனோம். இப்போது, அம்முலு மற்றும் கொலுவை பார்த்து பரவசமடைய முடியாதபடி, அலுவலகத்திலிருந்து, ஒரு பயிற்சிக்காக, மைசூர் அனுப்பி வைக்கப்பட்டேன்.

பயிற்சி முடிந்து, ஆயுத பூஜைக்கு முதல் நாள், வீடு திரும்பியபோது, ஹாலில், கொலு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அம்முலு மற்றும் சுந்தரின் முகம் களை இழந்து, பேயறைந்தது போல காணப்பட்டது.

காபி கலந்து எடுத்து வந்த அம்முலுவிடம், 'என்னம்மா... ஏன்,'டல்'லா இருக்கீங்க... எல்லாம் நல்லபடியா, நினைச்சா மாதிரி நடந்ததில்லே?' என்றேன்.

'எங்கே நடந்தது... எல்லாம் வேஸ்ட்... பத்திரிகைக்காரங்களை தவிர, யாரும் வரலைண்ணா... எல்லாரையும், பாழாய் போன, 'டிவி' தொடரில் முடக்கிப் போட்டுடுத்துண்ணா,' என்றாள், கண்ணீர் தளும்ப.

'சரி... சரி... இந்த பாழாய் போன மெகா தொடர்கள், காலை வேளையில கொண்டாடுற, தீபாவளி, பொங்கலையே விடுறதில்லை. சாயந்தரத்துல கொண்டாடுற நவராத்திரியையா விட்டு வைக்கும்,'என்றேன், எரிச்சலோடு.

'அம்மா... கொலு போட்டி பிரிவில் இருந்து பேசறாங்க,' என்று சொல்லி, மொபைல் போனை அம்முலுவிடம் கொடுத்தான், சுந்தர்.

'நம்மாத்து கொலுவுக்கு பரிசு கிடைச்சிருக்காம்ண்ணா... நாளை மறுநாள், விழாவாம்... குடும்பத்தோடு வந்து கலந்துக்கணுமாம்... அழைப்பிதழ் அனுப்பறாளாம்,' என்றாள்.

'அப்பாடா... இப்பத்தான், 'ரிலாக்ஸ்'ஆச்சு...'டிவி' தொடர்களால் கலாசார சீரழிவு ஒரு பக்கம் நடந்தாலும், அதை நிவர்த்திக்கும் விதமா, வாசகர்களை உற்சாகப்படுத்தி இருக்குல்ல... அதுவரைக்கும் சந்தோஷம்,' என்றேன்.

சிறு சேமிப்பு, தன் குடும்பத்திற்கு ஒரு சந்தோஷத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளதை நினைத்து, சுந்தர் சிரித்தான்; கூடவே, அம்முலுவுடன், நானும் சிரித்தேன்!

**எஸ். ராமசுப்ரமணியன்**




## படுக்கும் முன் செய்யக்கூடாத விடயங்கள்

சில பெண்கள் இரவில் படுக்கும் போது முடியை விரித்துப் போட்டு, அதன் மேல் தூங்குவார்கள். இப்படி முடியின் மீது நாம் தூங்கினால், உராய்வின் காரணமாக மயிர்கால்கள் வலிமையிழந்து, அதனால் பல்வேறு முடி சம்பந்தமான பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரும்.

★ இரவில் படுக்கும் முன் ஆல்கஹால் அருந்துவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். ஒருவேளை அப்படி ஆல்கஹால் அருந்தி படுத்தால், இரவில் தன்னைத் தானே பழுது பார்த்துக் கொள்ளும் சரும செல்களின் செயல்பாட்டில் இடையூறு ஏற்படும். எனவே அழகாகத் திகழ வேண்டுமெனில் இப்பழக்கத்தைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

★சிலர் தூங்கும் போது குப்புற படுப்பார்கள். அப்படி குப்புறப் படுத்தால், சருமம் பாதிக்கப்பட்டு, அதிகப்படியான அழுத்தத்தின் காரணமாக மார்பகங்கள் வடிவிழந்து தொங்க ஆரம்பித்து, சுருக்கங்களைப் பெறும். எனவே நேராகவோ அல்லது இடது பக்கம் திரும்பியோ படுக்க பழகுங்கள்.

★சிலருக்கு எப்போதும் ஏசியிலேயே இருக்க வேண்டும். இப்படி எந்நேரமும் ஏசியிலேயே இருந்தால், சரும செல்கள் தான் அதிகமாக பாதிக்கப்படும். அது மட்டுமின்றி, எப்போதும் ஏசியில் இருப்போருக்கு சருமத்தில் உள்ள எண்ணெய் பசை முற்றிலும் வெளியேற்றப்பட்டு, சரும வறட்சி அதிகரித்து, சருமமானது முதுமைத் தோற்றத்தைப் பெறக்கூடும்.

★ எந்நேரமும் மொபைலைப் பார்த்தவாறு இருந்தால் அதனால் கண்கள் பொலிவிழந்து, கருவளையங்களுடன் தான் காணப்படும். மேலும் இரவில் போனில் மொக்கைப் போட நன்றாகத் தான் இருக்கும். ஆனால் போனின் திரை தான் பாக்டீரியாக்கள் அதிகம் இருப்பதால், அதனை முகத்தின் அருகே வைக்கும் போது, பருக்கள் அதிகம் வரும். இவ்வளவு பிரச்சனைகளை தவிர்க்க வேண்டுமெனில், நள்ளிரவு சாட்டிங்கை முதலில் நிறுத்துங்கள்.

★ அழகாக இருக்க வேண்டுமென்று விரும்பினால், வாரம் ஒருமுறையாவது தலையணை உறையை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால், அதில் சேர்ந்துள்ள அழுக்குகளின் மூலமே முகத்தில் பருக்கள் மற்றும் தலையில் பொடுகு வர ஆரம்பித்து விடும்.



# பெற்றோர்

## குழந்தைகள் முன்னால் செய்யக்கூடாதவை



பெற்றோர் தான் குழந்தைகளின் முதல் காதல், தோழமை, ஆசிரியர், வழிகாட்டி எல்லாமே. எனவே, ஒவ்வொரு அப்பா, அம்மாவும், தங்களது குழந்தைக்கு நல்லதோர் உதாரணமாக இருக்க வேண்டுமே தவிர. தவறான எடுத்துக்காட்டாக இருக்க கூடாது. எனவே, குழந்தைகள் முன்பு என்ன செய்ய வேண்டும், செய்ய கூடாது என பெற்றோர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

நீங்கள் குழந்தைகள் முன்னே மற்றவரை அடிப்பது. இது, குழந்தைகளின் மனதினுள் வன்முறை எண்ணத்தை வளர்த்துவிடும். எனவே இத்தகைய தவறை குழந்தைகள் முன்னால் செய்யாதீர்கள். குழந்தைகள் முன் அசிங்கமாக திட்டிக்கொள்ள வேண்டாம். இந்த செயல் குழந்தையின் மனதினுள் ஏதோ சாதாரண வார்த்தைகள் பதிவது போல பதிய ஆரம்பித்துவிடும். வளர வளர குழந்தைகளும் அந்த வார்த்தைகளை பயன்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள்.

குழந்தைகள் பேசுவதை கவனியுங்கள். அவர்கள் பேசுவதை வைத்து மட்டுமே அவர்கள் என்ன மனநிலையில் இருக்கிறார்கள் என அறிய முடியும். இல்லையேல், அவர்கள் தாங்கள் தனிமையில் இருப்பதாய் உணர தொடங்கி, மனதளவில் பெரிதாக பாதிக்கப்படுவார்கள்.

குழந்தைகள் ஏதாவது கருத்து கூறும் போது, பெரியமனுஷன் மாறி பேசாதே.. என்று ஒதுக்காமல் காதுக் கொடுத்து கேளுங்கள். அவர்கள் கூறும் கருத்து தவறாக இருந்தால், அது ஏன் தவறு, அதனால் பயன் ஏதுமில்லை என அவர்களுக்கு புரியும் வகையில் எடுத்துக் கூறுங்கள்.

மற்றவர் மத்தியில் குறைக்கூற வேண்டாம் மற்றவர்கள் முன்னிலையில் உங்கள் குழந்தையை குறைக் கூறாதீர்கள். இது, அவர்களை மனதளவில் பெரியதாய் பாதிக்கும். மற்றும், அவர்களுக்குள்ளே தங்களுக்கு திறமை ஏதும் இல்லை என்ற எண்ணம் அதிகரிக்க இது பெரிய காரணமாகிவிடும்.

## சருமத்துக்கு பொருத்தமான க்ரீமை தேர்வு செய்வது எப்படி?

தோலுக்கு பொருத்தமாக இந்த இரவு கிரீமை தேர்வு செய்தல் மிக முக்கியமானது ஆகும். கீழே ஒரு சில குறிப்புகள் உள்ளன நீங்கள் ஒரு இரவு கிரீம் தேர்ந்தெடுக்கும் போது கிரீம் மிகவும் அடர்த்தியாக இல்லாமால் இருப்பதை உறுதி செய்யுங்கள். ஒரு தடித்த இரவு கிரீம் உங்கள் தோலின் துளைகளை திணற வைக்கிறது.

இதனால் உங்கள் தோல் மூச்சு விடுவதற்கு கடினமாகிறது. நீங்கள் ஒரு இரவு கிரீம் தேர்வு செய்யும் போதெல்லாம் அது அதிக வாசனை இல்லாமலும் மற்றும் ஒவ்வாமை குறைவானதாக



இருப்பதையும் உறுதி செய்யுங்கள். எப்படி இதை உபயோகப் படுத்துவது? நீங்கள் விரும்பும் வழியில் உங்கள் இரவு கிரீமை அப்பிளை செய்ய வேண்டாம். அது ஒரு பயனுள்ள தாக்கம் இல்லாமல் இருக்கலாம். கீழே உங்கள் முகத்தில் இரவு கிரீமை அப்பிளை செய்வதற்கான செயல்முறை எப்படி என்பதை பார்ப்போம்.

நீங்கள் உங்கள் இரவு கிரீமை அப்பிளை செய்வதற்கு முன் உங்கள் முகத்தை கழுவ வேண்டும். கிரீமை ஒரு நாணயத்தின் அளவு எடுத்து. உங்கள் முகம் மீது அதை துடைக்கவும். உங்கள் தோலில் கிரீமை மேல்நோக்கி வட்ட திசையில் மசாஜ் செய்யவும். உங்கள் கண் இமைகளுக்கு இரவு கிரீமை போட வேண்டாம். நீங்கள் வீட்டிலேயே உங்கள் இரவு கிரீமை செய்ய முடியும். நீங்கள் அரை ஆப்பிள் எடுத்து. அதன் தண்டை நீக்கி மசித்து கொள்ளவும்.

பின்னர் ஆலிவ் எண்ணெய் 1 கப்பில் எடுத்துக் கொண்டு இந்த கலவையை நன்றாக கலக்கவும். ஒரு கிண்ணத்தில் இந்த கலவையை ஊற்றி. ஒரு இரட்டை கொதிகலனில் அதை வைத்து அது சூடாக மாறும் வரை கலவையை வெப்பத்தில் வைத்து கலவை சூடான பிறகு கொதிகலனில் இருந்து எடுத்து அதை

## இளநரைக்கு தீர்வு இதோ!

தற்போதைய தலைமுறையினருக்கு வெள்ளை முடி இளம் வயதிலேயே வந்துவிடுகிறது. இதற்கு சுற்றுச்சுழல், உணவுப் பழக்கவழக்கங்கள், மன அழுத்தம், பரம்பரை போன்றவை முக்கிய காரணங்களாக இருந்தாலும், முடிக்கு போதிய பராமரிப்பு கொடுக்காததுமே முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும் பலரும் வெள்ளை முடியை மறைக்க பல்வேறு ஹேர் டைகளை வாங்கி பயன்படுத்துகின்றனர்.

ஆனால் அதனால் வெள்ளை முடி தற்காலிகமாக மறையுமே தவிர போகாது அப்படியே இருக்கும். அதுமட்டுமின்றி, வெள்ளை முடியை மறைக்க கண்ட கண்ட பொருட்களை வாங்கி முடிக்கு தடவுவதால், பல்வேறு அலர்ஜிகளும் ஏற்படுகின்றன. ஆகவே இவற்றையெல்லாம் தவிர்க்க, இயற்கை முறையில் வெள்ளை முடியை எப்படி கருமையாக்குவது என்று யோசியுங்கள். வெள்ளை முடியை இயற்கை முறையில் எப்படி கருமையாக்குவது என்று பார்க்கலாம்.

★ தேங்காய் எண்ணெயில் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, அதனை தலை முடியில் தடவி நன்கு மசாஜ் செய்து, ஊற வைத்து அலச வேண்டும். இதனால் நரைமுடி மறைய ஆரம்பிக்கும்.

★ மருதாணி பொடியைக் கொண்டு முடியைப் பராமரித்தால், முடி அதன் இயற்கை நிறத்தைப் பெறுவதோடு பட்டுப் போன்று மென்மையாகவும் இருக்கும்.

★ நெல்லிக்காயை வெட்டி, வெயிலில் உலர்த்தி, பின் அதனை எண்ணெயில் போட்டு, அந்த எண்ணெயை சூடேற்றி, ஸ்கால்ப்பில் படும்படி நன்கு மசாஜ் செய்து வந்தால், வெள்ளை முடி மறைவதை நன்கு காணலாம்.

★ கறிவேப்பிலை மோர் சேர்த்து அரைத்து பேஸ்ட் செய்து, அததனை தலையில் தடவி 1/2 மணிநேரம் ஊற வத்து, பின் குளிக்க வேண்டும். இப்படி வாரம் 2 முறை செய்து வந்தால், முடியில் நல்ல மாற்றத்தைக் காண முடியும்.

★ வெந்தயத்தை அரைத்து பேஸ்ட் செய்து, தலைக்கு தடவி ஊற வைத்தோ அல்லது அதனை இரவில் படுக்கும் போது நீரில் ஊற வைத்து, மறுநாள் காலையில் அந்நீரைக் கொண்டு கூந்தலை அலசியோ வந்தால், நரை முடி மறையும்.

★ 1 கப் ப்ளாக் டீயில் 1 டீஸ்பூன் உப்பு சேர்த்து கலந்து, அதனைக் கொண்டு ஸ்கால்ப்பை நன்கு மசாஜ் செய்து, ஊற வைத்து அலச வேண்டும். இப்படி வாரம் 2-3 முறை செய்து வந்தால், வெள்ளை முடியை விரைவில் போக்கலாம்.

## ஃபேஸ் மாஸ்க் போடும் முன் கவனிக்க வேண்டியவை...



முகம், துளியும் இளமை மாறாமல் இருப்பதற்காகத்தான் என்பதை உணர்ந்து உங்கள் சருமத்திற்கு ஏற்ற ஃபேஸ் மாஸ்க்குகளை தேர்ந்தெடுப்பது அவசியம். அதனால் இந்த பேஸ்மாஸ்க் போடும்போது மிகுந்த கவனம் தேவை.

★ மாஸ்க்குகளை உபயோகிக்கும்முன் முகத்தை நன்கு கழுவி கொள்ள வேண்டும்.

★ மாஸ்க்கை முகத்தில் சரியாக ஒரேமாதிரி தடவி கொள்ளவேண்டும். உதடுகள், கண்கள் இவற்றை விட்டுவிடவேண்டும்

★ மாஸ்க்கை குறைந்தபட்சம் அரை மணி நேரம் வைத்திருக்க வேண்டும். மாஸ்க்கை எடுக்க நிறைய தண்ணீரை உபயோகிக்கவும். கடைகளில் கிடைக்கும் மாஸ்க்குகள் உரித்து எடுக்கும் வகையை சேர்ந்தவை.

★ களிமண் ஒரு சிறந்த மாஸ்க் ஆகும். ஏனென்றால் அது சருமத்தின் உள் இருக்கும் அழுக்கையும், மாசுகளையும் உறிஞ்சி விடும். தவிர களிமண்ணில் சருமத்திற்கு தேவையான தாது பொருட்கள் உள்ளன.

★ மாஸ்க்குகள் சருமத்திலிருந்து அழுக்குகளை நீக்குகின்றன.

★ மாஸ்க்குகள் உபயோகிக்கும் முன் நீராவியால் முகத்தை சுத்தம் செய்து கொள்வது நல்லது. இதனால் சரும துவாரங்கள் விரிந்து அழுக்குகள் வெளியேறும். நீராவிக்கு வெறும் தண்ணீர் மட்டும் உபயோகிக்காமல் மூலிகை கஷாயங்களை சேர்த்து கொண்டால் இன்னும் நல்லது.

★ மாஸ்க் போட்டவர்கள் பேசக்கூடாது.

★ சரும நோய் உள்ளவர்கள் மாஸ்க் உபயோகிக்க கூடாது.

## பற்களை வெண்மையாக்கும் புதினா

பற்களை ஒரு நாளைக்கு இரண்டு முறை துலக்குவது ஈறுகளுக்கு நல்லது. மேலும் பற்களும் சொத்தையாகாமல் பாதுகாக்கப்படும். பற்களை பாதுகாக்க சில டிப்ஸ்...



★ பல் துலக்கி வாயை கொப்பளித்ததும், புதினா பேஸ்ட்டை பற்களில் தடவி 2 நிமிடம் பிரஷ் செய்து, பின் நீரால் வாயைக் கொப்பளிக்கவும், பின் மீண்டும் சிறிது புதினா பேஸ்ட்டை விரலில் எடுத்து, பற்களில் தேய்ப்பதோடு, 3 நிமிடம் ஈறுகளை மசாஜ் செய்து, வாயை நீரில் கொப்பளிக்கவும். இதனால் வாய் துர்நாற்றம் நீங்குவதோடு, ஈறுகளில் இரத்த கசிவு ஏற்படுவதும் தடுக்கப்படும்.

★ சுத்தமான மற்றும் கெட்டியான தேங்காய் எண்ணெயை பற்களில் தடவி பிரஷ் செய்து, 2 நிமிடம் கழித்து, உப்பு கலந்த நீரில் வாயைக் கொப்பளிக்கவும். இப்படி செய்வதன் மூலம், பற்களில் உள்ள கறைகள் நீங்குவதோடு, பற்களில் உள்ள சொத்தையும் நீங்கும்.

★ வேப்பிலை பொடி 1 டேபிள் ஸ்பூன் வேப்பிலை பொடியில், சிறிது தண்ணீர் சேர்த்து பேஸ்ட் செய்து, பற்களில் தடவி பிரஷ் செய்து வர, வாய் துர்நாற்றம், பல் வலி போன்றவை நீங்கும். குறிப்பாக இந்த முறையை கைவிரலால் பிரஷ் செய்வது நல்லது.

★ ஹைட்ரஜன் பெராக்ஸைடு ஹைட்ரஜன் பெராக்ஸைடில், பேக்கிங் சோடா மற்றும் கல் உப்பு சேர்த்து கலந்து, மாதம் ஒருமுறை பற்களைத் துலக்கி வந்தால், பற்களில் படிந்துள்ள மஞ்சள் கறைகள் வேகமாக அகலும்.

## சந்தேகங்களும் தீர்வுகளும்

**★ ஹோட்டலில் சுடுவதுபோல் கல்தோசை சுடுவது எப்படி?**

பச்சரிசியையும், உளுந்தையும் மூன்றுக்கு ஒன்று என்கிற விகிதத்தில் போட்டு ஒன்றாகவே 2 மணி நேரம் ஊற வைத்து நைஸாக அரைத்துக் கொள்ளவும். தோசைக்கல்லில் மாவை ஊற்றிய பிறகு எண்ணெயை விட்டு தோசையைத் திருப்பிப் போட்டதும் லேசாக தோசையின் மீது தண்ணீர் தெளித்து, உடனே மறுபடியும் திருப்பிப் போட்டு கல்லிலிருந்து எடுத்துவிடவும்.

**★ இட்லி 'புஸ்புஸ் என்று, அதேசமயம் சாஃப்ட்டாக வர என்ன செய்ய வேண்டும்?**

உளுந்து அரைக்கும்போது அவ்வப்போது கொஞ்சம் கொஞ்ச மாக நீர் ஊற்றி பொங்க பொங்க அரைக்க வேண்டும். ஒரு டேபிள்ஸ்பூன் ஊற வைத்த வெந்தயம், 2 டீஸ்பூன் பெருங்காயத்தூள் சேர்த்து அரைத்தஂல்... இட்லி சூப்பராக வரும்.

**★ அப்பம் மிருதுவாக வர, என்ன வழி?**

புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி தலா ஒரு ஆழாக்கு, ஒரு கைப்பிடி உளுந்து, ஒரு டீஸ்பூன் வெந்தயம் சேர்த்து ஊற வைத்து... அரைக்கும்போது தேங்காய் துருவல் ஒரு கப், வெந்த சாதம் ஒரு கரண்டி சேர்த்து அரைத்து சுட்டால்... அப்பம் சூப்பரப்பு!

**★ சப்பாத்தி சுடுவதற்கும், தோசை சுடுவதற்கும் தனித்தனி தோசைக்கல்லை பயன்படுத்த வேண்டுமா?**

ஆம்... அவ்வாறு செய்வது நல்லது. அதிக கனமுள்ள கல்லை தோசைக்கும், கன மில்லாத மெலிதான கல்லை சப்பாத்திக்கும் உபயோகிக்க வேண்டும்..

**★ பூரி உப்பி வர... ...**

மாவு பிசையும்போது கோதுமை மாவுடன் ஒரு டேபிள்ஸ்பூன் மக்காச்சோள மாவும், அரை டேபிள்ஸ்பூன் ரவையும், அரை டீஸ்பூன் சர்க்கரையும் சேர்த்துக் கலக்கி, அந்த மாவை பூரியாக செய்தால்... உப்பலான பூரி சமர்த்தாக உங்கள் தட்டில் 'ஹாய் சொல்லும்

**★ பிள்ளைகளை பசலைக் கீரை சாப்பிட வைப்பது எப்படி?**

வதக்கிய பசலைக் கீரையுடன் சிறிது பச்சை மிளகாய் சேர்த்து அரைத்து சப்பாத்தி மாவோடு சேர்த்துப் பிசைந்து சப்பாத்தியாக சுட்டு, சாஸ் உடன் பரிமாறினால்.. தட்டு 'சட்டென்று காலியாகிவிடும்.

**★ வடை மாவு சரியான பதத்தில் இருக்கிறதா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?**

அரைத்த மாவை கொஞ்சம் கிள்ளி, ஒரு கிண்ணத்திலுள்ள தண்ணீரில் போடவும். மாவு தண்ணீரில் மிதந்தால்... சரியான பதம். மிகவும் தண்ணீராக அரைத் திருந்தால் மாவு பிரிந்து தண்ணீரில் கலந்துவிடும். கெட்டியாக அரைத் திருந்தால்... தண்ணீரில் மூழ்கி விடும்!

**★ தயிர் கெட்டியாக கிடைக்க, வழி என்ன?**

பாலை சுண்டக் காய்ச்சுங்கள். ஆறவிடும் போது... வெதுவெதுப்பான சூட்டுக்கு வந்ததும், ஒரு துளி மோர்விட்டு, 4, 5 முறை நன்கு ஆற்றி (காபிக்கு ஆற்றுவதுபோல) மண் சட்டியில் தோய்க்க... நல்ல கெட்டித் தயிர் கிடைக்கும்.




### சுண்டைக்காய்-மரவள்ளிகிழங்கு குழம்பு

**என்னென்ன தேவை?**

வேகவைத்து தோலுரித்த மரவள்ளிக்கிழங்கு - 1 கப்,
பச்சை சுண்டைக்காய் - 100 கிராம்,
புளி - எலுமிச்சை அளவு,
நல்லெண்ணெய் - 2 டீஸ்பூன்,
கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை- தாளிக்க,
பூண்டு - 10 பல்,
வெங்காயம் - 2,
தக்காளி -1,
உப்பு - தேவைக்கேற்ப,
குழம்பு மிளகாய்தூள்- 2 டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

மரவள்ளிக்கிழங்கை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு, கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை தாளிக்கவும். நறுக்கிய பூண்டு, வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்கவும். பிறகு சுண்டைக்காயை சேர்த்து வதக்கி, மரவள்ளிக்கிழங்கு துண்டுகளையும் சேர்த்து வதக்கவும். குழம்பு மிளகாய் தூள் சேர்த்து, புளிக்கரைசல் விட்டு, உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும். கடைசியாக சிறிது நல்லெண்ணெய் விட்டு இறக்கவும்.

# வெட்டத் தெரிந்த வாள்

அந்த ஆற்றின் நீர் தெளிவாக இருந்தது. நீரோட்டம் அவ்வளவு வேகமாக இல்லை. அதனுள் நின்றுகொண்டிருந்தார் முராமஸா. அவர் கையில் ஒரு வாள். பல நாட்கள் தூங்காமல் பார்த்துப் பார்த்துச் செதுக்கிய கூர்மையான முனை கொண்ட வாள். வாளின் முனை தரையை நோக்கிப் பாயுமாறு நீரினுள் போட்டார் முராமஸா.

அது 'ஸ்ஸ்ஸ்ஸூக்...' எனக் காற்றைக் கிழிக்கும் சத்தத்துடன், நீரைத் துளைத்துக்கொண்டு, இடைப்பட்ட இலைகளை எல்லாம் சரசரவெனக் கிழித்துக்கொண்டு, எதிர் வந்த மீன்களை எல்லாம் மளமளவெனத் துண்டாக்கியபடி ஆற்றின் அடித்தரையில் குத்தி நின்றது. ரத்தம் நீரினுள் பரவ முராமஸாவின் முகத்தில் பெருமிதம்.

அவருக்கு அருகில் மஸாமுனே நின்று கொண்டிருந்தார். அவர் கையிலும் ஒரு வாள் இருந்தது. பல நாட்கள் உழைப்பில் அவரே செதுக்கிய அந்த அழகான வாளை, நீரினுள் இட்டார். அது காற்றை மென்மையாகத் தழுவியபடியும்,



நீரின் ஓட்டத்தைப் பாதிக்காதபடியும் தன்மையாக இறங்கியது. இலைகள் வாளின் கூர்மையால் கிழிந்தன. ஆனாலும் அடுத்த விநாடியே ஒட்டிக் கொண்டன. வாள், மீன்களை எந்த விதத்திலும் பாதிக்காமல் ஆற்றின் தரையைச் சென்றடைந்தது. மஸாமுனேவின் முகத்தில் சாந்தமான புன்னகை.

யாருடைய வாள் சிறந்தது என்ற போட்டிதான் அங்கே நடந்து முடிந்தது. முடிவை அறிவிக்கும் பொறுப்பு ஒரு துறவியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்தத் துறவி முடிவைச் சொன்னார். 'முராமஸாவின் வாள் ரத்த வெறி பிடித்தது. எதை வெட்டுகிறோம், யாரை வெட்டுகிறோம் என்று பிரித்து உணரத் தெரியாத தீய வாள்.

அது ஒரு பட்டாம்பூச்சியைக்கூட எதிரியின் தலையைப் போல வெட்டிவிடும். மஸாமுனேவின் வாளுக்கு எதை வெட்ட வேண்டும், யாரை வெட்ட வேண்டும் என்ற புரிதல் இருக்கிறது. அப்பாவி உயிர்களை எந்த விதத்திலும் பாதிக்காத அற்புதமான வாள், மஸாமுனேவினுடையதே!' என்றார் துறவி.

மஸாமுனே பதிமூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். ஜப்பானின் சரித்திரத்திலேயே சாமுராய்களுக்கான வாளை உருவாக்குவதில் மிகச் சிறந்தவர் என்ற பெயர் இவருக்கு உண்டு. முராமஸா, அவரது சீடர்தான். குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த போட்டியில் குருவே வென்றார்.

ஏனென்றால் மஸாமுனே தயாரித்த வாள்கள் எதிரிகளிடத்தில் வீரத்துடனும், மற்ற உயிர்களிடத்தில் அன்புடனும் நடந்துகொண்டன. ஹோஞ்ஜோ, ஃப்யூடோ, முஸாஷி, ஹோச்சோ, கோடேகிரி எல்லாம் மஸாமுனே தயாரித்த சரித்திரப் புகழ்பெற்ற சாமுராய் வாள்கள். இவை ஒவ்வொன்றும் பல போர்க்களங்களைக் கண்டவை. அவற்றில் மஸாமுனே, தன் பெயரையும் பொறித்திருந்தார்.

இவற்றில் மிக முக்கியமான வாள், ஹோஞ்ஜோ. ஜப்பானில் இதுவரை தயாரிக்கப்பட்ட வாள்களிலேயே மிகவும் நேர்த்தியுடன் அழகாகவும் வலிமையானதாகவும் உருவாக்கப்பட்ட வாள் என்ற பெருமை இதற்கு உண்டு. இரும்பை உருக்கி, இஷ்டம்போல வளைக்கும் தொழில்நுட்பம் எல்லாம் அதிகம் வளராத அந்தக் காலத்தில், மஸாமுனே இப்படி ஓர் அருமையான வாளைத் தயாரித்தது பேரதிசயமாகக் கருதப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜப்பானிய ராஜ்ஜியம் ஒன்றின் தளபதியாக இருந்த ஹோஞ்ஜோ என்பவர், போரில் எதிரி வீரரான உமானோசுகேவின் வாளால் தாக்கப்பட்டார். அந்த வாள் ஹோஞ்ஜோவின் வலிமையான தலைக்கவசத்தை இரண்டாகப் பிளந்தது. அந்த வாளின் வலிமையைக் கண்டு அதிசயித்த ஹோஞ்ஜோ, பிறகு சுதாரித்துக் கொண்டு எதிரியை அழித்தார்.

அந்த வாளைத் தனக்கான போர்ப் பரிசாக எடுத்துக் கொண்டார். அந்த வாள், மஸாமுனேவால் தயாரிக்கப்பட்டது. பல போர்க்களங்களைக் கண்ட பிறகும் கூர்மை குறையாமல் மின்னியது. அந்த வாளுக்கு 'ஹோஞ்ஜோ மஸாமுனே'என்ற பெயரே நிலைத்துவிட்டது.


அந்த வாள் ஹோஞ்ஜோவால் 13 பெரிய தங்கக் காசுகளுக்கு இன்னொருவரிடம் விற்கப்பட்டது. அடுத்தடுத்து மற்றவர்களிடமும் கைமாறியது. இருபதாம் நூற்றாண்டில், டோகுகவா குடும்பத்தினரிடம் அந்த வாள் இருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த லிமாஸா என்பவர், வாளின் உரிமையாளராக இருந்தார்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில், ஜப்பான் சரணடைந்த பின், அமெரிக்க வீரர்கள் அங்கிருந்து ஏகப்பட்ட செல்வங்களைத் தங்களுக்கான போர்ப் பரிசாக எடுத்துக் கொண்டனர். அதில் சாமுராய் வாள்களும் நிறைய உண்டு. லிமாஸா தன்னிடமிருந்த ஹோஞ்ஜோ மஸாமுனே உள்ளிட்ட பல வாள்களை அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். அந்த வாள்கள் செர்ஜண்ட் கோல்டி பைமோர் என்ற அமெரிக்கரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஜப்பானியத் தரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்கத் தரப்பில் அப்படி ஒரு வீரர் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டதற்கான பதிவே இல்லை.

இப்போது ஹோஞ்ஜோ மஸாமுனே வாள் அமெரிக்காவில் எங்கு இருக்கிறது, எப்படி இருக்கிறது என்பதற்கான எந்தத் தகவலும் இல்லை. அமெரிக்க வீரர்கள் பலர் தாங்கள் கைப்பற்றிய வாள்களை உருக்கி, கோப்பைகளாகவும் பதக்கங்களாகவும் செய்து கொண்டார்கள். சுமார் 700 வருட வரலாறு கொண்ட ஜப்பானின் அரிய பொக்கிஷமான ஹோஞ்ஜோ மஸாமுனே வாளும் அப்படி உருக்கப்பட்டு மாற்றப்பட்டிருக்கலாம். ஆனால், அது யாரிடம் எந்த வடிவத்தில் இருக்கிறது என்பதை இதுவரை கண்டறிய முடியவில்லை.

இப்போதைக்கு ஜப்பானிய கார்ட்டூன் கேரக்டர்கள் மட்டும் மஸாமுனேவின் வாள்களை வீரத்துடன் சுழற்றிக் கொண்டிருக்கின்றன.

# வடை காய்க்கும் மரம்!



பச்சைமலைக் காட்டில் வசித்த குரங்கும் முயலும் நல்ல நண்பர்களாக இருந்தன. முயல் நல்ல உழைப்பாளி. ஆனால் குரங்கு சோம்பேறி.

அது எப்போதும் வேறு யாராவது உழைத்துக் கொண்டுவந்த உணவைத் திருடித் தின்றுவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும். அதுக்கு உலக அறிவும் மிகக் குறைவு.

குரங்கின் சோம்பேறித்தனம் முயலுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் அது நண்பனின் மீது அதிக அன்பு வைத்திருந்ததால் வெறுப்புக் காட்டியதில்லை. தான் தேடிக் கொண்டு வந்த கிழங்குகளைக் குரங்குக்குக் கொடுக்கும்.

ஒருநாள் அந்தச் சோம்பேறி குரங்கு காட்டிலிருந்து வெளியேறி அருகிலுள்ள கிராமத்துக்குச் சென்றது. அங்கே ஒரு பாட்டி தன் வீட்டுக்கு முன்பு வடை சுட்டு விற்றுக்கொண்டிருந்தார்.

குரங்கு அந்தப் பாட்டிக்குத் தெரியாமல் ஒரு வடையைத் எடுத்து தின்றது. வடை சுவையாக இருந்ததால், ஒரு யோசனை வந்தது.

இந்த வடையை மண்ணில் நட்டு வைத்தால் அதிலிருந்து முளைக்கும் மரத்தில் நிறைய வடைகள் காய்க்கும்! நாம் தினமும் இந்தக் கிராமத்துக்கு நடந்து வந்து, வடையைச் சாப்பிட வேண்டிய அவசியம் இருக்காதே என்று நினைத்தது குரங்கு.

மீண்டும் பாட்டிக்குத் தெரியாமல் ஒரு வடையைத் எடுத்துக் கொண்டு, காட்டுக்கு ஓடியது. தான் குடியிருக்கும் மரத்தின் அருகிலேயே மண்ணைத் தோண்டி, அந்த வடையை நட்டு வைத்தது. குட்டைக்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்து ஊற்றியது.

தினமும் அந்தக் குரங்கு வடையைப் புதைத்து வைத்த இடத்தில் தண்ணீர் ஊற்றிச் சென்றது.

'நண்பா, என்ன ஆளே மாறிவிட்டாய். முன்பெல்லாம் எப்போதும் உறங்கிக் கொண்டிருப்பாய். சில நாட்களாக இந்த இடத்தில் தண்ணீர் கெரண்டு வந்து ஊற்றுகிறாய். என்ன காரணம்?' என்று குரங்கிடம் கேட்டது முயல்.

குரங்குக்கு முயலிடம் உண்மையைச் சொல்ல விருப்பம் இல்லை. 'ஒன்றுமில்லை நண்பா. பொழுது போகவில்லை. இங்கிருக்கும் எறும்புகளுக்குக் குடிக்கத் தண்ணீர் தருகிறேன்' என்று பொய் செரன்னது குரங்கு. முயலும் பதில் ஏதும் சொல்லாமல் சென்றுவிட்டது.

நாட்கள் கழிந்தன. வடையை நட்டு வைத்த இடத்தில் ஒரு செடி முளைத்தது. அதைக் கண்டதும் குரங்குக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'ஆஹா! வடை முளைத்துவிட்டது. இன்னும் கொஞ்ச நாட்களில் பெரிய மரமாக வளர்ந்து, வடை காய்க்கத் தொடங்கிவிடும். நான் தினமும் வடைகளைத் தின்றுவிட்டு ஜாலியாகப் படுத்து உறங்கலாம்' என்று நினைத்தது குரங்கு. வடை உண்ணும் ஆர்வத்தில் தினமும் அந்தச் செடிக்குத் தண்ணீர் ஊற்றியது. கூடவே எந்த விலங்கும் அந்தச் செடியைச் சேதம் செய்துவிடாதபடி பாதுகாத்தது.

செடி பெரிதாக வளர்ந்து மரமாக மாறியது. பூக்கள் தோன்றின.

'கொத்துக் கொத்தாகப் பூத்துக் கிடக்கும் இந்தப் பூக்கள் எல்லாம் வடைகளாகக் காய்க்கத் தொடங்கினால் நூற்றுக்கணக்கில் வடைகள் காய்க்குமே! நான் தினமும் வயிறு நிறைய வடைகள் சாப்பிடலாமே' என்று நினைத்து மகிழ்ச்சியில் குதித்தது குரங்கு.

பூக்கள் காய்க்கத் தொடங்கின. பச்சை நிறத்தில் கிடந்த காய்களைப் பார்த்த குரங்குக்குச் சந்தேகம் வந்தது. 'இதைப் பார்த்தால் வடை போலத் தெரியவில்லையே. எதற்கும் இன்னும் சில நாட்கள் பொறுத்துப் பார்ப்போம்' என்று நினைத்தது அது.

நாட்கள் கழிந்தன. அந்த மரத்தில் பெரிதாகப் பருக்கத் தொடங்கிய காய்களைப் பார்த்ததும் அவை வடை அல்ல, மாங்காய் என்று புரிந்தது.

என்ன இது? நான் வடையை நட்டு வைத்து தினமும் தண்ணீர் ஊற்றி வளர்த்தேன். வடை மரத்துக்குப் பதிலாக மாமரம் முளைத்திருக்கிறதே?' என்று நினைத்த குரங்கு வருத்தத்தோடு அமர்ந்துவிட்டது.

முயல் அங்கே வந்தது.

'என்ன நண்பா! வருத்தத்தோடு அமர்ந்திருக்கிறாய்? என்ன காரணம்?'

'நண்பா, இந்த இடத்தில் ஒரு வடையை நட்டு வைத்து தினமும் தண்ணீர் ஊற்றினேன். ஆனால் வடை மரத்துக்குப் பதிலாக மாமரம் முளைத்திருக்கிறது!' என்று வருத்தத்தோடு சொன்னது குரங்கு.

விழுந்து விழுந்து சிரித்தது முயல்.

'நண்பா, அன்று நீ வடையை நட்டு வைப்பதை நானும் பார்த்தேன். வடை முளைக்குமா? நீ வடையை நட்டு வைத்ததற்கு உன் சோம்பலும் முட்டாள்த்தனமும்தான் காரணம். வேக வைத்த விதைகூட முளைக்காது. வடை எப்படி முளைக்கும்? குறைந்த உழைப்பில் தினமும் சுவையான வடையைச் சாப்பிடலாம் என்று நினைத்தாய். நீ வடையை நட்டு வைத்த இடத்தில் நான் மாங்கொட்டையை நட்டு வைத்தேன்.

அதை அறியாத நீ தினமும் தண்ணீர் ஊற்றினாய். இன்று அது மரமாகிவிட்டது. சீக்கிரமே மாம்பழங்கள் கிடைக்கும். சுவையான மாம்பழங்களை நீயும் உண்ணலாம். பிறருக்கும் கொடுக்கலாம். இனியாவது சோம்பலின்றி உழைத்துச் சாப்பிடு' என்று சொன்னது முயல்.

'நண்பா, என் சோம்பலையும் அறியாமையையும் நீக்கிவிட்டாய். இன்று முதல் நான் உழைத்து உண்பேன். மற்றவர்களுக்கும் உதவுவேன்' என்றது குரங்கு.




## விலங்கு கடத்தலுக்கு உதவும் பேஸ்புக்

அழியும் நிலையில் உள்ள விலங்குகள், 'பேஸ்புக்'மூலம் விற்பனை செய்யப்படுவது, அண்மையில் அம்பலமாகி உள்ளது. உலக காட்டுயிர் கடத்தலை கண்காணிக்கும், 'டிராபிக்' என்ற அமைப்பு, தாய்லாந்தில் நடத்திய விசாரணையில், இந்த அதிர்ச்சி தகவல் தெரிய வந்துள்ளது.

பேஸ்புக்கில் கணக்கு வைத்திருப்பவர் அனுமதித்தால் மட்டுமே, வெளிநபர் பங்கு பெறும் குழு வசதி உள்ளது.

இதை பயன்படுத்தி, உலகெங்கிலுமுள்ள, 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர், அழியும் ஆபத்தில் உள்ள விலங்குகளை உயிருடனோ, பாடம் செய்தோ சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்து வருகின்றனர் என, 'டிராபிக்' அமைப்பு கண்டறிந்து உள்ளது.

தாய்லாந்தை பொருத்தவரை, அந்நாட்டின் வனப் பகுதிகளில் உள்ள அருகிவரும் விலங்குகளையும், பிற நாட்டின் அரிய விலங்குகளையும், பேஸ்புக் மூலம் அநியாயமாக கடத்தல் கும்பல்கள் விற்பனை செய்து வருகின்றன.

'தடை செய்யப்பட்ட விலங்குகளை விற்பதற்கு, தமது தளம் அனுமதிப்பதில்லை' என, பேஸ்புக் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இருந்தாலும், கடத்தல் பேர்வழிகளையும், விலங்குகளை வாங்கும் வெறியர்களையும் பேஸ்புக் எளிதில் இணைத்து விடுவதால், இந்த கொடூர வியாபாரம் வேகமாக வளர்ந்து வருகிறது.

## தாவரங்களின் தப்பிக்கும் உத்தி



செடிகள், தங்களுக்கு ஆபத்து வருவதை உணர்ந்தால், அதை சில வாசனைகள் மூலம் வெளிப்படுத்துகின்றன என்பதை, ஆய்வுகள் உறுதி செய்து உள்ளன.

இதை விவசாயிகள் பயன்படுத்தி, தங்கள் பயிர்களை பூச்சிகளிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியுமா?

முடியும் என்கின்றனர், அமெரிக்காவில் உள்ள, டிலாவர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

ஒரு சோதனை களத்தில், சோளம் பயிரிட்டு, அந்த பயிர்களின் சில பகுதிகளில், சோளத்தை அறுவடை செய்யும் போது வரும் வாடை கொண்ட வேதிப் பொருட்களை, விஞ்ஞானிகள் தெளித்தனர்.

வேறு சில இடங்களில் வேறு வாடை கொண்ட திரவத்தை தெளித்தனர். எதிர் பார்த்த படியே, சிறிது நேரத்தில், சோளம் அறுவடை செய்யும் போது வரும் வாடை உள்ள பயிர்கள் மீது, பறவைகள் வந்து அதிக முறை கொத்த ஆரம்பித்தன.

அறுவடை வாடை இல்லாத பயிர்கள் மீதும் சில பறவைகள் கொத்தின என்றாலும், அறுவடை வாடை உள்ள பயிர்கள் மீது ஏழு முறை அதிகமாக பறவைகள் கொத்தின.

அதாவது, செடிகள் வெளியிடும் வாடை, பறவைகளை ஈர்க்க, அவை வந்து பார்க்கும்போது புழுக்கள், பூச்சிகள் ஏதும் இருந்தால் அவற்றை கொத்தி தின்றுவிடும். இதனால், பயிர்கள் பாதுகாக்கப்படும்.

இந்த உத்தியை விவசாயிகள் பயன்படுத்தினால், பூச்சி மருந்துகளை தெளிப்பதற்குப் பதில், பயிர்களே ஆபத்தில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள வெளியிடும் வாசனை வேதிப் பொருட்களை தெளிக்கலாம் என, டிலாவர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர்.

## கண்டுபிடியுங்கள்



கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. ஆப்பிரிக்காவின் நான்காவது பெரிய நாடு. எகிப்துக்கும் துனிஷியாவுக்கும் இடையில் இருக்கிறது.
2. இந்த நாட்டின் பெரும்பாலான பகுதி பாலைவனமாக இருக்கிறது.
3. பெட்ரோல் வளம் கொண்ட நாடு.
4. திரிபோலி இதன் தலைநகரம். மிகப் பெரிய நகரமும் இதுதான்.
5. மழை குறைவாக இருப்பதால், பாலைவனச் சோலைகளில் மட்டுமே குறைவாக விவசாயம் நடைபெறுகிறது.
6. கழுதைப்புலி, சிறு மான், தங்க நிற ஓநாய் போன்ற வெகு சில விலங்குகளே இங்கே இருக்கின்றன.
7. 1965-ம் ஆண்டிலிருந்து இங்கே ரயில் சேவை இல்லை. இப்போது அதற்கான முயற்சியில் ஈடுபட்டுவருகிறது.
8. இந்த நாட்டின் மக்கள் தொகை மிகவும் குறைவு. 10% பகுதிகளில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர்.
9. மன்னராட்சியைத் தூக்கி எறிந்த ராணுவத் தளபதி முகம்மது கடாஃபி, 42 ஆண்டுகள் இந்த நாட்டை ஆட்சி செய்தார்.
10. இதன் தேசியப் பறவை அரேபியக் கழுகு.

**லிபியா**

## அசைவத்தால் விரயமாகும் நீர்

ஐரோப்பியர்கள் அதிகமாக தண்ணீரை பயன்படுத்துவதாகச் சொல்கிறது ஐரோப்பிய ஆணைய ஆய்வு மையம். சராசரியாக, ஒரு நாளைக்கு, ஒரு நபருக்கு 3,000 முதல் 4,000 லிட்டர் வரை செலவாகிறது. அதுவும் குடிநீர்! குளிர் பகுதியில் இவ்வளவு தேவைப்படுமா?

இல்லை. இந்த நீரில் பெரும்பகுதி ஐரோப்பியர்களின் அசைவ உணவுகளை சமைப்பதற்கே போகிறது. உதாரணமாக, பிரிட்டனில் 2,757 லிட்டரும், பிரான்சில் 3,861 லிட்டரும் இறைச்சி சமைக்கப் போய்விடுகிறது.

அண்மையில், அசைவம், சைவம் இரண்டையும் சமைக்க தண்ணீர் எவ்வளவு செலவாகிறது என, ஐரோப்பிய மையம் ஆய்வு செய்தது.

அதன்படி, சத்தான சைவ உணவுகளை சமைக்க, அசைவ உணவுகளுக்கு ஆவதைவிட, 35 முதல், 55 சதவீதம் குறைவான குடிநீரே செலவாகிறது என்பது தெரியவந்துள்ளது.

குடிநீர் உலகப் பொதுச்சொத்தாகி வரும் நிலையில், இந்த ஐரோப்பியர்களை வன்மையாக கண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

## இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகள் நன்மை தரும். ஈடுபடும் கரும காரியங்கள் சிரமமின்றி ஜெயமளிக்கும். செய்தொழில் விருத்தி, மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளை கூட்டு வாணிபத்தை தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளை பெருக்கலாம்.




இவ்வாரம் செய்யும் தொழிலால் உயர்வு, விருத்தி , இலாபம் சேமிப்புக் கிட்டும். வங்கி வசதிகள் , மன நிறைவைத் தரும். வெளிநாட்டு நிதி வரவுகள் , நற்செய்திகள் நன்மையளிக்கும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப ஆதாய முன்னேற்றம் அடைவர். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் திரம்பட நடைபெறும்.




மாதுரு பாவத்தில் ரவியுடன் புதன் ஆட்சி உச்சம் பெறுவதும் புத்தி புத்திரஸ்தானத்தில் குருவுடன் , வெள்ளி ஆட்சி பெறுவதும் யோகமாகும். மாதா நலம், கல்வி விருத்தி, புத்திரர் உதவி அனுகூலம் கிட்டும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமண பேச்சுக்களும் நிகழ்வுகள் இடம்பெறும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் கொள்வர். பெண்கள் மாணவர் சௌபாக்கிய யோகம் அடைவர்.




விவேக பாவத்தில் ரவியுடன் புதன் ஆட்சி, உச்சம் பெறுவதால் புத்திச்சாரியம் மிகும். விவேக கூடும். எக்கருமமும் நிதானத்துடன் செயல்பட முடியும். மாதா ஸ்தானத்தில் குரு சுக்கிர சஞ்சாரத்தால் மாதா நலம், கல்வி விருத்தி ,குடும்ப சேமம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு, பதவி ஏற்றம் இடமாற்றம் முதலியவற்றுக்கு உயர் அதகாரிகளால் சிபாரிசுகள் ஏற்படும். விவசாயிகள் தம் முதலுக்கேற்ற ஆதாயம் கொள்வர்.




தன பாவத்தில் ரவியுடன் புதன் ஆட்சி உச்சயோக அடைவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் சுகம் உண்டாகும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு , வங்கி வசதிகள் மனநிறைவைக் கொடுக்கும். புருஷன் , மனைவி ஐக்கியம் , அந்நியோன்யம் புத்திரர்களுடன் அன்பு, பாசம் ஏற்படும். குடும்பப் பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர் உதவி அனுகூலமுடன் நன்கு நடைபெறும்.




ஜென்ம ராசியில் ரவி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாகும். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின் வைத்திய செலவை உண்டாக்கும். செய்யும் தொழில் விருத்தி, ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயம் பெறும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைப் பழுவும் மேலதிக வேலையும் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் வேலைப்பளு குறையும். வியாபாரிகளை அனுசரித்து நடந்தால் வேலைப்பழு குறையும்.




ஜென்மத்து வியாழ தோஷமுடன் ஜென்ம வெள்ளியும் நடைபெறுவதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மையுண்டு. ஜீவன கர்ம பாவத்தில் உச்ச குஜன் நோக்குவதால் தொழில் உயர்வு, மேன்மை , நிதி வசதிகள் , வங்கியிருப்புக்கள் உண்டாகும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, அதிகாரம் கொள்வர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நன்மை தரும். பழைய கடன் யாவும் வசூலாகும். விவசாயிகளுக்கு அரச மானியம் வந்து சேரும்.




விரய வியாழ , வெள்ளி தோஷமுடன் ஏழரைச் சனி கடைக்கூறு தோஷமும் நடைபெறுவதால் இவ்வாரம் கிரக தோஷ நிவர்த்தி செய்வது நல்லது. வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் உத்வேகம் கொண்டு ஏற்றம் அடைவர். வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கொள்முதல்களையும் தொடங்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் அவசியம்.




இவ்வாரம் ஜென்மச்சனி, அஷ்டமத்து ராகு (கேது) தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தல் வேண்டும். செய்தொழில் விருத்தியுண்டு. உத்தியோக பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகளின் அரச மானியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும். ஆசிரியர், மாணவர் பெற்றோர் உறவு சீராகவே இருக்கும்.




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை வாகன குடும்பம் அபிவிருத்தி பெறும். செய்யும் தொழிலால் இலாபம் சேமிப்பு ஏற்படும். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முயற்சிகேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். விவசாயிகளுக்கு அரச மானியம் வந்து சேரும். பெண்கள், மாணவர் இவ்வாரம் சௌபாக்கிய யோகமடைவர். மாணவர் கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் பெறுவர்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் சிரமமின்றி நிறைவேறும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, அதிகாரமும் கொள்வர். வியாபாரிகள், விவசாயிகள் தம் முதலுக்கேற்ப இலாப முன்னேற்றம் காண்பர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நடைபெறும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.




இவ்வாரம் சப்தம் , அஷ்ட ஸ்தானங்களில் சுபர் சஞ்சரிப்பதால் களத்திர சுகம், இல்லறம் நன்கு அமையும். புருஷன், மனைவி அந்நியோன்யம் நிகழும். பிள்ளைகளுடன் அன்பு, பாசம் நிலவும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். பெண்கள், மாணவர் சௌபாக்கிய யோகமடைவர்.

## துயரம் தீர்க்கும் துர்க்கை வழிபாடு



**மா**சி மாதத்தில் சிவனுக்கு உகந்த 'சிவராத்திரி' வருவது போல், புரட்டாசி மாதம் அம்பிகையைக் கொண்டாட உகந்தநாள் 'நவராத்திரி' வருகின்றது. 'நவம்' என்றால் 'ஒன்பது' என்று பொருள். 'ராத்திரி' என்றால் 'இரவு' என்று பொருள். ஒன்பது இரவுகள் விரதம் இருந்து அம்பிகையை வழிபட்டு வந்தால், பொன் - பொருள் குவியும் என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் இந்த மாதம் புரட்டாசியில் நவராத்திரி தொடங்கினாலும், புரட்டாசி 31 -ந் தேதி (17.10.2018) அன்று துர்க்காஷ்டமி வருகின்றது.

ஐப்பசி முதல் நாள் தான் சரஸ்வதி பூஜையும், அடுத்த நாள் விஜயதசமியும் வருகின்றது. இந்த நாட்களில் முப்பெரும் தேவியை வழிபட்டால் ஒப்பற்ற பலன்கள் நமக்குக் கிடைக்கும். இந்த நவராத்திரி நாட்களில் கொலு வைத்து வழிபடுவது வழக்கம். கொலுவில் இடம்பெறும் பொம்மைகள் எல்லாம் ஒவ்வொரு உண்மைகளைச் சொல்லும் விதத்தில் அலங்கரித்து வைத்து, அதற்கு மேலே நடுநாயகமாக ஒவ்வொரு நாளும் அம்பிகையை ஒன்பது வடிவங்களில் அலங்கரித்து விழா கொண்டாடுவது வழக்கம். வீட்டில் கொலு வைத்துக் கொண்டாடுவதன் மூலம், விருந்தினரை உபசரிக்கும் குணம் நமக்கு வருகிறது. வழிபடுவதன் மூலம் வளர்ச்சியும் ஏற்படுகிறது.

கல்வியா? செல்வமா? வீரமா? ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா? என்று கவியரசு கண்ணதாசன் எழுதியிருக்கிறார். ஒருவர் வாழ்க்கையில் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் இருந்தால் தான், கல்வியால் ஈட்டிய செல்வத்தை காப்பாற்றி வைத்துக் கொண்டு, வாழ்க்கை நடத்த இயலும். எனவே தான் 'வீரம்' தரும் துர்க்கை அம்மனை முதல் மூன்று நாட்களும், 'செல்வம்' தரும் லட்சுமிதேவியை அடுத்த மூன்று தினங்களும், 'கல்வி' தரும் சரஸ்வதியை அடுத்த மூன்று நாட்களும் முறையாக பூஜை செய்து வழிபட்டால் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் ஏராளமாக நடைபெறத் தொடங்கும்.

தேவியின் அருள் கிடைக்க, தேவர்கள் கடும் தவம் செய்தனர். இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளின் பேரருளையும் பெற முயற்சி எடுத்தனர். தேவர்கள் உடலை அசைக்காமல் தவம் செய்த நாட்களில், எல்லா பொருட்களும் அசையாமல் இருந்தன. அதன் நினைவாக நாம் கொலு வைத்துக் கொண்டாடுகிறோம். அசையாத பொம்மைகள் மூலம் அசைந்து வரும் வாழ்க்கை உண்மைகளை உலகிற்கு உணர்த்துவதே இந்த நவராத்திரி விழாவாகும்.

ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் மூல காரணமாக விளங்கும் தெய்வங்களான, சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோரின் துணைவியர்களான துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி ஆகிய தெய்வங்களை வழிபட்டால் தடை, தாமதங்கள் அகலும். தனவரவும் கூடும். வாழ்க்கையில் வெற்றி வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கும். அந்த அடிப்படையில் உருவானது தான் நவராத்திரி விழா.


கொலு படிகள் ஐந்து, ஏழு, ஒன்பது என்று ஒற்றைப் படையில் அமைக்க வேண்டும். படிக்கட்டுக்களில் வெள்ளை அல்லது மஞ்சள் துணிகளை விரிக்க வேண்டும். முதல் படிக்கட்டில் கலசத்தை வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அம்பிகையை ஒவ்வொரு விதத்தில் அலங்காரங்கள் செய்து நவரத்தின மாலைகள் மற்றும் மலர் மாலைகள் சூட்டி அலங்காரம் செய்து வழிபட வேண்டும்.

நைவேத்தியப் பொருட்களாக வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், சுண்டல், கடலை, பொரி, தேங்காய், பழம் வைக்க வேண்டும். வீட்டிற்கு வருபவர்களுக்கு குங்குமம், புஷ்பம் மற்றும் நைவேத்தியப் பொருட்கள், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை வழங்கி அன்போடு வருபவர்களை உபசரிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அம்பிகையின் பாடல்களை ஒவ்வொரு ராகத்தில் பாடி அம்பிகையைக் குளிர்விக்க வேண்டும். ஆலயத்திற்குச் சென்றும் நாம் அன்றாடம் அம்பிகையை வழிபட்டு வர வேண்டும்.

கொலு வைக்கும் பொழுது முதல் படியில் ஓரறிவு கொண்ட உயிரினங்களான புல், செடி, கொடி, தாவர வகைகளை வைக்க வேண்டும். இரண்டாவது படியில் இரண்டு அறிவு கொண்ட உயிரினங்களான நத்தை, சிப்பி, சங்கு போன்றவற்றை இடம்பெறச் செய்யவேண்டும். மூன்றாவது படியில் மூன்றறிவு கொண்ட எறும்பு, கரையான் பொம்மைகளை வைக்கவேண்டும். நான்காவது படியில் நான்குஅறிவு கொண்ட உயிரினங்களான நண்டு, வண்டு போன்ற ஜீவராசிகளின் பொம்மைகளையும், ஐந்தாவது படியில் ஐந்தறிவு கொண்ட விலங்குகள் மற்றும் பறவைகளின் பொம்மைகளையும், ஆறாவது படியில் ஆறறிவு கொண்ட மனித பொம்மைகள் மற்றும் நாட்டிற்காக உழைத்த தலைவர்களின் பொம்மைகளையும் இடம் பெறச் செய்ய வேண்டும்.

ஏழாவது படியில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மகான்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். எட்டாவது படியில் தேவர்களின் உருவங்கள், சிறு தெய்வங்கள், நவக்கிரகங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். ஒன்பதாவது படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகைளையும், அவர் களின் துணைவிகளான சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை ஆகியோரது உருவங்களையும் வைக்க வேண்டும். இதற்கெல்லாம் நடுநாயகமாக கொலு பீடத்தில் விநாயகப் பெருமானையும், ஆதிபராசக்தியையும் வைத்து வழிபட வேண்டும்.

துர்க்காஷ்டமி அன்று துயரங்கள் விலக நாம் துர்க்கையை வழிபடுவது அவசியமாகும். வலது கை, இடது கை நீங்கலாக, நம்பிக்கை என்ற 'கை' நமக்குத் தேவை. அந்த நம்பிக்கையை துர்க்கை மீது வைத்து வழிபடுவதற்கு உகந்த நாள் தான் துர்க்காஷ்டமி. செம்பருத்தி, செவ்வரளி மாலை சூட்டி, சிவப்பு நிற வஸ்திரம் அணிவித்து விரதம் இருந்து வழிபட்டு வருவது நல்லது.




## எந்த நிலையிலும் இறைவனை மறக்க வேண்டாம்

**ஒ**ருசிலருக்கு எப்போதும் அவசரம். எல்லாவற்றிலும் அவசரம். பொருள் சம்பாதிப்பதில் அவசரம். வாழ்வாதாரங்களையும் வசதி வாய்ப்புகளையும் உருவாக்குவதில் அவசரம். பதவிகளைப் பெறுவதில் அவசரம். வணக்க வழிபாடுகளிலும்கூட அவசரம். அவ்வளவு ஏன் இறைவனிடம் வேண்டும் பிரார்த்தனையிலும் அவசரப்படுகின்றான் மனிதன். ஆம், கேட்டவை அனைத்தும் உடனே கிடைத்துவிட வேண்டும், அனைத்தையும் உடனே இறைவன் அங்கீகரித்துவிட வேண்டும் என்று அவசரப்படுகின்றான் மனிதன்.

மனிதன் பெரிதும் அவசரக்காரனாக இருக்கின்றான் (17:11) என்ற திருக்குர் ஆனின் கூற்று எவ்வளவு உண்மை என்பதைச் சிலருடைய செயல்களில் இருந்து புரிந்துகொள்ளலாம்.

ஒரு சிலர் தொழுகையைக்கூட அவசர அவசரமாகத் தொழுகின்றனர். ஏன் இந்த அவசரம்? உணவுத் துகள்களைக் கோழி கொத்துவதைப் போன்று அவசர அவசரமாக குனிந்து நிமிர்ந்துவிட்டு பள்ளிவாசலை விட்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடிவிடுகின்றனர். யாரைத் திருப்திப்படுத்த இந்தத் தொழுகை?, யாரை ஏமாற்ற இந்தத் தொழுகை?

'நிதானமே பிரதானம்' என்பது பொதுவிதி. அவசரம் சைத்தானுடைய பண்பு. எதில் அவசரப்பட வேண்டும், எதில் அவசரப்படக்கூடாது என்று யோசித்து செயல்படுவதே புத்திசாலித்தனம். நல்ல விஷயங்களில் அவசரப்படுவதை இஸ்லாம் ஊக்குவிக்கிறது. அதேநேரம் தீய விஷயங்களில் அவசரப்படுவதை இஸ்லாம் கண்டிக்கிறது.

மனிதனோ தலைகீழாக இருக்கின்றான். நல்லவற்றில் நத்தை போன்று மெதுவாகவும், அல்லாதவற்றில் எலியைப் போன்று அவசரமாகவும் செயல்படுகின்றான்.

'படிமுறை விதி' என்பது பிரபஞ்சத்தின் மாறாத நியதிகளில் ஒன்றாகும். கருவில் மனிதனின் உருவாக்கம் ஒரே இரவில் நடப்பதில்லை. பத்து மாதம் என்ற படிமுறையில் தான் அமைந்துள்ளது. இந்த உலகத்தையும் இறைவன் படிமுறை அமைப்பிலேயே படைத்துள்ளான். வானம் பூமியை ஆறு நாட்களில் படைத்துள்ளதாக இறைவன் குறிப்பிடுகின்றான்.

'ஆகுக' என்ற ஒற்றைச்சொல் மூலம் அனைத்தையும் படைக்க சக்தி பெற்ற ஆண்டவன் எதற்கு ஆறு நாட்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்? அவசரமின்மையே காரணம்.

இஸ்லாமியச் சட்ட விதிகளான; ஹலால் (அனுமதிக்கப்பட்டவை), ஹராம் (தடை செய்யப்பட்டவை), வணக்க வழிபாடுகள் அனைத்தும் படிமுறை அமைப்பிலேயே சட்ட முறைமையாக்கப்பட்டன எனும் உண்மையை திருக்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

உதாரணமாக, நோன்பு குறித்து பேசிய ஆரம்ப வசனம் இப்படிக் கூறுகிறது: நோன்பு நோற்க சக்தி பெற்றிருப்பவர்கள் (நோற்காமல் விட்டுவிட்டால் அவர்கள்) மீது 'பித்யா' (பரி காரம்) கடமையாகின்றது. அது (ஒரு நோன்புக்குரிய பரிகாரம்) ஓர் ஏழைக்கு உணவளிப்பதாகும். ஆனால் எவரேனும் விரும்பி அதிக நன்மை செய்தால், அது அவருக்கே சிறந்ததாகும் (2:184)

இதற்குப்பின்னரே நோன்பு கடமையாக்கப்பட்டுவிட்டது எனும் பின்வரும் வசனம் இறங்கியது: எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம் மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும். (2:185)

கடமைகள் இவ்வாறு படிமுறை ஒழுங்கில் விதிக்கப்பட்டதுபோன்று, தடை செய்யப்பட்டவையும் படிமுறை ஒழுங்கிலேயே விதிக்கப்பட்டன. மதுபானத் தடைச்சட்டம் இதற்கு சிறந்த உதாரணமாகும். மதுபானத்தைத் தடை செய்யும் வசனங்கள் குர்ஆனில் மூன்று கட்டங்களாக இறங்கியுள்ளன. மூன்றாம் கட்டமாக இறங்கிய பின்வரும் வசனமே 'மதுவை நெருங்க வேண்டாம்' என்று அறிவித்தது.

மது மற்றும் சூதாட்டத்தின் வாயிலாக உங்களுக்கிடையில் பகைமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தி அல்லாஹ்வை நினைவுகூர்வதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவே சைத்தான் விரும்புகிறான். இதற்குப் பிறகாவது நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வீர்களா? (திருக்குர்ஆன் 5:91)

## நிலைத்திருத்தல் தரும் ஆசீர்வாதம்



'உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; மானிட மகனுடைய (இயேசுவின்) சதையை உண்டு அவருடைய ரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்'என்கிறது யோவான் 6:53.

படிக்கும் போது ஒரு அதிர்ச்சியை உருவாக்கும் வாசகம் இது. ஆனால், ஆழமான ஆன்மிக அர்த்தங்களைக் கொண்டது.

நான் விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவு என்றார் இயேசு. யூதர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் யோசேப்பின் மகனாகிய இயேசு அல்லவா? இவருடைய தாயும் தந்தையும் நமக்குத் தெரியாதவர்களா? என அவர்கள் முணுமுணுத்தனர்.

'தன்னுடைய உடலை எப்படி இவர் உண்ணத் தரமுடியும்? இதென்ன போதனை...' என இயேசுவுக்கு எதிராக அவர்கள் சிந்தித்தார்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டு சட்டங்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்கள்.

'ரத்தம் என்பது உயிர், அதை யாரும் சாப்பிடக் கூடாது' என்பதை விவிலியம் சொல்கிறது. 'ரத்தத்தைப் பருகக்கூடாதெனில் எப்படி இயேசுவின் ரத்தத்தைப் பருகுவது? இவர் எப்படி இதைச் சொல்லலாம்' என அவர்கள் சிந்தித்தனர்.

பாவத்தைக் கழுவத்தான் ரத்தம் பயன்பட்டு வந்தது. ஆனால் அது உணவாக உட்கொள்ளக் கூடியது அல்ல. இறைவனின் சமூகத்தில் சிந்தப்பட வேண்டியது மட்டுமே என்பதே வழக்கம்.

இப்போது அது, எனது ரத்தத்தைக் குடியுங்கள் என மாறுகிறது. அதன் பொருள் என்ன? விலங்கின் ரத்தம் நம்மை பாவத்திலிருந்து கழுவியது எனும் நிலை, இன்று இயேசுவின் ரத்தம் பாவத்தைக் கழுவியதுடன் மீட்பும் கொடுத்தது என மாறியது.

அவர் பலியாகப் படைத்த ரத்தம்... அவரது சொந்த ரத்தமே (எபி 9:12) என்கிறது விவிலியம். இது நித்திய மீட்பு. இந்த ரத்தத்தின் வழியாக நாம் கடவுளின் மீட்பில் இணைகிறோம்.

அது நாம் என்றென்றைக்கும் பிழைக்கும்படியான ரத்தமாய் மாறுகிறது. இந்த ரத்தம், தொலைவில் இருந்த நம்மை அருகில் கொண்டு சேர்க்கிறது. அது நம்மை இயேசுவோடு இணைக்கிறது.

ஆலயத்தில் திருவிருந்தில் பங்கு பெறும் முன் நாம் தாழ்மையின் செபத்தைச் சொல்கிறோம். அதன் பொருள், நாம் இறைவனை விட்டுத் தொலைவில் இருக்கிறோம், இப்போது இறைவனுக்கு சமீபமாய் வருகிறோம் என்பது தான்.

நாம் திருச்சபையில் சேர்வதன் அடையாளம் திருமுழுக்கு. சுயமாய் இறைவனோடு இணைவதன் அடையாளம் திரு விருந்து.

இயேசுவின் ரத்தம் நம்மை இறைவனின் அருகில் கொண்டு வருவதுடன், அவரில் நிலைத்திருக்கவும் செய்கிறது.

# இலங்கையில் சிறுவர் உரிமையும் சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்

அறிமுகம்

### 1.1 மனித உரிமை

இயல்பான சுதந்திரத்தோடு வாழவும், தான் இசைந்து வாழும் சமுதாயத்திற்கான கடமைகளை முழுமையாகச் செய்ய மனிதன் முற்படும் வேளைகளில் விளையும் உரிமைகள் மறுக்கப்படும் போதோ, அல்லது அளிக்கப்பட்டு வந்த உரிமைகள் தடை செய்யப்பட்டாலோ மனித சமுதாயம் அப்படிப்பட்ட நிலைமைகளில் பொறுத்துக் கொள்வதில்லை. இதனால் தனது சமுதாயத்தின் மேல் கேள்விகளைத் தொடுத்தான். அத்தகைய உரிமைகள் மனித உரிமை எனப்படும்.

**ஒக்டோபர் 01ஆந் திகதி சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

### 1.2 சிறுவர் உரிமை

சிறுவர்கள் மனிதப் பிறவிகள் என்ற வகையில், மனித உரிமைகள் அனைத்தும் சிறுவர்களுக்கும் உரித்தானதாகும். சிறுவர் உரிமைகளிலிருந்தே மனித உரிமைகள் தோற்றம் பெற்றுள்ளன. சிறுவர் உரிமைகள் என்றால் சிறுவர்களுக்கு சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு அவசியமான நிபந்தனைகளே சிறுவர் உரிமைகளாகும். அதாவது சமூகத்தில் சிறுவர்களுக்கு உரித்தாக வேண்டிய வரப்பிரசாதங்கள் சிறுவர் உரிமைகளாகும். பிரத்தியேகமான முறையில் சிறுவர்களுக்கேயுரியவை என்று சர்வதேச ரீதியாக ஐக்கிய நாடுகள் தாபனத்தால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் சிறுவர் உரிமைகளாகும்.

உலகில் வாழ்கின்ற மக்களில் 1%3 பகுதியினர் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர். உலகலாவிய ரீதியில் நோக்கின், சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், உரிமை மீறல்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. சிறுவர்களுக்கு எதிராக துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்புணர்ச்சி, சிறுவர் தொழிலும் வேலைப்பளுவும், சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களில் இணைத்துக் கொள்ளுதல், கடத்துதல் மோசடிகள், உள ரீதியான பாதிபுள்ளாக்குதல் என பல்வேறு வடிவங்களில் மிகக் கொடூரமான சம்பவங்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இத்தகைய நிலைமையில் இரண்டாம் உலகப் போரின் பின்னணியுடன் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தது.

சிறுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடு சபையினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களில்



நன்றி: யுனிசெவ் கோப்புப்படம்

1989 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனம் ஒக்டோபர் முதலாம் திகதியை பிரகடனப்படுத்தியுள்ளமை, யூன் மாதம் 12ஆம் திகதியை சிறுவர் தொழிலாளர்களுக்கெதிரான தினமாக பிரகடனப்படுத்தியுள்ளமையும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன்

**தொகுப்பு : அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்**

முக்கியத்துவத்தை உணர்ந்து ஐ.நா சபை செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக எழுத்துருவில் பல்வேறு பிரகடனங்களும் சட்டங்களும், காப்பீடுகளும் ஆவணப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அன்றாடம் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களின் போக்கு அதிகரித்து வருகின்றன.

உலகின் எல்லாப்பாகங்களிலும் இருபது கோடிக்கு (200 மில்லியன்) அதிகமான சிறுவர்கள் வேலை செய்து வருகின்றனர். இதில் பலர் முழுநாள் உழைப்பிலும் ஈடுபட்டிருப்பது அறியவந்துள்ளது. இதனால் அவர்களுக்கு போதுமான கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம், உடல்நலம், அடிப்படை சுதந்திரம் ஆகியவை இழக்க நேரிட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தளவில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரச கூட்டமைப்பில் பல்வேறு காப்பீடுகள் காணப்படுகின்ற அதேவேளை தேசிய சர்வதேச சிவில் அமைப்புக்களும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களாக கொலைச் சம்பவங்கள், கடத்தல்கள், சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள், பிள்ளைத் தாய் பிரச்சினை போன்றவை அதிகரித்துள்ளமை அவதானிக்க முடிகின்றது. 2009 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ள அதேநேரம் மலையகப் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களும் கடந்த காலங்களில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. நகர்ப்புறங்களில் வாழும் செல்வந்தர்களின் பிள்ளைகள் தனிப்பட்ட குரோதங்களுக்காகவும், பணத்திற்காகவும் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர்.

### 1.3 சிறுவர் உறுப்புரைகள்

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை இலங்கை அரசானது 1991 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தியது. இந்தச் சமவாயம் சிறுவர்கள் சிறப்பான மதிப்புக்குரியவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டு அவர்கள் பெறவேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை வரை முறைப்படுத்துகின்றது. இச்சமவாயத்தில் 54 உறுப்புரைகள் காணப்படுகின்றன. இதில் முக்கியமான 42 உறுப்புரைகளின் சாராம்சம் பின்வருமாறு.

உறுப்புரை 01:- சிறுவர் பற்றிய வரைவிலக்கணம்

18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியர் ஆகக் கணிக்கப்படுவர். அவர் இந்த சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.

உறுப்புரை 02:- பாகுபாடு காட்டாமை

எல்லா உரிமைகளும் வயது, பால், ஆற்றல், நிறம், இனம், மொழி அல்லது சமயம் என்பன எவ்வாறிருப்பினும் எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் உரியன. சிறுவர்களை எல்லா வகையான பாகுபாடுகளிலிருந்து காப்பதும் அவர்களின் உரிமைகளைப் பரப்ப ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையாகும்

உறுப்புரை 03:- சிறுவரின் உயரிய நலன்கள்

சிறுவர் தொடர்பான சகல நடவடிக்கைகளும் முடிவுகளும் அவர்களின் உயரிய நலன்களை உயரிய நலன்களை முழுமையாக கருத்தில் கொள்ள வேண்டும்.

உறுப்புரை 04:- சமவாயத்தை நடைமுறைப்படுத்துதல்

சமவாயத்தில் அடங்கியுள்ள உரிமைகளை நிதர்சனமாக்குவதற்கு அரசாங்கம் தன்னாலான அனைத்தையும் செய்தல் வேண்டும்.

உறுப்புரை 05:- பெற்றோரின் வழிநடத்துதலும் குழந்தையின் வளர்ச்சியும்

குழந்தைக்கு அதன் பரினாம வளர்ச்சிக்கு இசைவான முறையில் வழிகாட்டும் பொறுப்பு பெற்றோருக்கும், குடும்பவட்டத்தை சேர்ந்தவர்களுக்கும் உண்டென்பதை அரசாங்கம் மதித்தல் வேண்டும்.

உறுப்புரை 06:- உய்வும் மேம்பாடும்

ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர்வாழும் உரிமை பிறப்போடு கூடியதொன் றென்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் உய்வையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசாங்கத்தினுடையதாகும்.

உறுப்புரை 07:- பெயரும் நாட்டினமும்

ஒவ்வொரு குழந்தைக்கும் பிறந்ததும் ஒரு பெயரைப் பெறும் உரிமையுடையதாகும். அத்துடன் ஒரு நாட்டினத்தைச் சார்வதற்கும் தன் பெற்றோர் இன்னாரென்று அறிவதற்கும் அவர்களாற் பராமரிக்கப்படுவதற்கும் அது உரிமையுடையதாகும்.

உறுப்புரை 08:- தனித்துவத்தைப் பேணல்

குழந்தையின் தனித்துவ அடையாளத்தைப் பேணுவதும், அவசியம் ஏற்பட்டால் அதன் அடிப்படை அம்சங்களை மீள நிலைநாட்டுவதும், அரசின் கடமையாகும். இதில் குழந்தையின் பெயர், இனம், குடும்பபந்தங்கள் என்பன அடங்கும்

உறுப்புரை 09:- பெற்றோரைப் பிரிதல்

(இம்சை, புறக்கணிப்பு முதலியன காரணமாக) குழந்தையின் நலனுக்கு அவசியம் என்று கருதப்பட்டாலன்றி, மற்றும்படி தன் பெற்றோருடன் வாழும் உரிமை குழந்தைக்கு உண்டு. தாய் அல்லது தந்தையரிடமிருந்து பிரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இவருடனும் உறவைப் பேணும் உரிமை பிள்ளைக்கு உண்டு.

உறுப்புரை 10:- குடும்பம் மீளச்சேருதல்

குடும்பத்தவர்களுடைய மீண்டும் சேர்ந்து கொள்ள பொருட்டோ, பெற்றோர் பிள்ளை உறவைப் பேணும் பொருட்டோ, வேறு ஒரு நாட்டை விட்டு வெளியேறித் தமது நாட்டினுள் நுழையும் உரிமை பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் உண்டு.

**அடுத்தவாரம் தொடரும்**

# மாணவர்களின் கல்வியில் ஆசிரியர் வகிபாகத்தின் பங்களிப்பு

பொதுக் கல்வியை வழங்குவதில் ஆசிரியரின் வகிபாகமானது முக்கியத்துவமுடையதாக உள்ளது பிள்ளைகள் கற்பது ஏன் என்ற வினாவுக்கான விடை காலத்துக்குக் காலம் மாறுபாடுடையதாக விளங்குவதால் அம் மாற்றத்துக்கேற்ற வகையில் ஆசிரியரின் வகிபாகமும் மாற்றமடைகின்றது. காலத்துக்குக் காலம் ஆசிரியரின் நடிபங்கிலேற்பட்ட மாற்றத்தினை விளங்கிக் கொள்வதற்காக 3வு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. அவை பின்வருமாறு:

1. கடத்தல் வகிபாகம்
2. கொடுக்கல் வாங்கல் வகிபாகம்
3. நிலைமாற்ற வகிபாகம்

### கடத்தல் வகிபாகம் (Transmission Role)

இங்கு ஆசிரியரும் கற்பித்தலும் முக்கியப்படுத்தப்பட்டதாக அமைந்திருக்கும்.இக் கடத்தல் வகிபாகத்தின் மூலம் இறுதியில் அடைய எதிர்பார்க்கப்படுவது குறிக்கோளாகக் கொள்ளப்படும். கடத்தல் வகிபாகத்தில் விரிவுரைமுறையில் கற்பிப்பது பிரதானமாகக் கொள்ளப்படும். இங்கு ஆசிரியர் நிறைந்த அறிவுடையவராகவும் அந்த அறிவை மாணவர்களிடம் கடத்துபவராகவும் விளங்குவார்.இவ்வாறு அறிவைக் கடத்தும் ஆசிரியர் இடைநடுவே வகுப்பிலிருந்து வெளியேறுவாரானால் கற்றல் செயன்முறை தடைக்குள்ளாகும். கடத்தல் வகிபாகத்தில் ஆசிரியர் கூற மாணவர் செவிமடுப்போராகவே இருப்பர். இங்கு ஒருவழித் தொடர்பாடலே நிலவும். வுணீனாக்களை வினவித் தெளிவினைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. வகுப்பறையானது மரபு ரீதியானதாகவே அமைந்திருக்கும். இங்கு ஆசிரியரினால் திட்டமிடப்படும் பாடவிடயங்களானது 40 நிமிடப் பாடங்களாக வரையறுக்கப்பட்டிருக்கும். ஆசிரியரின் தர உள்ளீட்டுப் பயன்பாடானது குறைவானதாகவே இருக்கும். கணிப்பீட்டுக்கான வாய்ப்புக் கிடைப்பதில்லை. இவ் வகிபாகமானது ஆசிரியரை முதன்மைப் படுத்துவதாகவும் கற்றலைவிடக் கற்பித்தலை மேன்மைப்படுத்துவதாகவும் அமைந்திருக்கும் அதேவேளை மாணவரின் தனிப்பட்ட மற்றும் சமூகத்திறன்களை விருத்தி செய்வதில் போதிய பங்களிப்புச் செய்வதில்லை

கடத்தல் வகிபாக ஆசிரியரின் இயல்புகள்

1 ஆசிரியர் மைய வகிபாகம்

2 ஆசிரியர் அதிகாரம்மிக்கவராகச.; செயற்படுவார்

3 ஆசிரியரோர் உரைகாரராக விளங்குவார்

4 கரும்பலகையும் வெண்;கட்டியுமே தர உள்ளீடாக இருக்கும்

5 மாணவர்கள் செவிமடுப்போராக இருப்பர்



### கொடுக்கல்வாங்கல் வகிபாகம் (Transaction Role)

ஆசிரியர்- கற்பித்தல், மாணவன் - கற்றல் ஆகிய விடயங்களை வலியுறுத்துவதாக அமையும் ஆசிரியர் வகிபாகம் கொடுக்கல் வாங்கல் வகிபாகமாகும் . இந்த வகிபாகத்தின் இறுதிப் பெறுபேறு குறிக்கோளாகும் .சம்பாசனைக்கும் உரையாடலுக்கும் சந்தர்ப்பமளிப்பதாகவும் வகுப்பறையில் இருவழித் தொடர்புகள் நிகழ்வதற்கு வாய்ப்பளிப்பதோடு சிறிது நேரத்தின் பின் மாணவர்கள் பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடலில் ஈடுபடவும் சந்தர்ப்பம் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தில் ஆசிரியர் வசதி செய்து கொடுப்பவராக விளங்குகிறார். வினாக்களை வினாவி விடைகளைப் பெற்று பாடங்களை முன்னோக்கி நகர்த்துவார். இச்சந்தர்ப்பத்தின் இடைநடுவே ஆசிரியர் வகுப்பறையில் இருந்து வெளியேறுவாரானால் வகுப்பறைச் செயன்முறைகள் தடைப்படும். ஆசிரியர் வினவும் வினாவுக்கு விடையளிப்பதன் மூலம் மாணவர்கள் தொழிற்படுவோராய் விளங்குவர். தெளிவற்ற விடயங்களை ஆசிரியரிடம் வினவித் தெளிவு பெறும் வாய்ப்பு மாணவனுக்குக் கிடைப்பதால் வகுப்பறையில் ஓரளவு சனநாயகத்தன்மை காணப்படும். இவ்வகிபாகமானது தூண்டிகளின் துணையுடன் செயற்படுவதாயுள்ளது. வினாக்கள், பிரச்சினைகள், புதிர்கள், படங்கள் என்பவற்றினூடாக மாணவர்களிடையே மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான செயலொழுங்குகள் காணப்படும். இங்கு ஆசிரியர் மாணவர்களுடன் நெருங்கித் தொடர்பு கொள்வதால் மாணவர்கள் அடைந்துள்ள நிலையினை இனங்கண்டு அறிந்ததிலிருந்து அறியாததற்கும் எளிமையானதில் இருந்து சிக்கலானதிற்கும் நகர்த்தக் கூடிய செயலொழுங்கை மேற் கொள்ள முடியும்.

கொடுக்கல் வகிபாக ஆசிரியரின் இயல்புகள்

★ கற்றலும் கற்பித்தலும் ஏககாலத்தில் நிகழும்

★ கொடுக்கல் வாங்கலாக ஆரம்பிக்கும் பாடம் பின்னர் உரையாடலாக மாறும்

★ கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது வளப்பயன்பாடு வரையறுக்கப்பட்டதாகும்

★ மாணவரது துலங்கலுக்கேற்ப ஒருவித கணிப்பீடு நிகழும்

★ மாணவர்கள் ஒவ்வொருவரையும் நோக்கி விணாக்கள் வினவப்படும்

### நிலைமாற்ற வகிபாகம் (Transformation Role)

பூகோளமயமாக்கலின் காரணமாக நாம் இன்று எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய வகையில் பாடசாலைக் கல்வியினை வழங்குவதற்குச் சிறப்பான வகிபாகமாக நிலைமாறு வகிபாகம் விளங்குகின்றது. ஆசிரியருக்குப் பதிலாக மாணவனையும் கற்பித்தலுக்குப் பதிலாகக் கற்றலையும் வலியுறுத்துவதாக இது அமைந்திருக்கும். நிலைமாற்ற வகிபாகத்தின் இறுதிப் பேறாக விளங்குவது தேர்ச்சிமட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள தேர்ச்;சிகளை அடைவதாகும். இதனூடாக மாணவர்களின் சுயதிறன் விருத்தி செய்யப்படும். இங்கு செயற்பாட்டினை மேற்கொள்வதற்கான நேரம் நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக அமைந்திருக்கும். இங்கு ஆசிரியரின் பணியாக விளங்குவது மாணவர்கள் அறிவைத்தேடி நகர்ந்து செல்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். ஆசிரியரானவர் ஓர் வளவாளராகச் செயற்படுவதோடு கற்பதற்கான சுதந்திரத்தினை ஏற்படுத்திக் கொடுப்பவராகவும் விளங்குகின்றார். பாட ஆரம்பத்தின் போது கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தில் பாடத்தினை ஆரம்பித்து பாட முடிவின் போது கடத்தல் வகி பாகத்தினூடாக அதனை நிறைவு செய்து கொள்ளும் நிலையுமுள்ளது. இங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்குத் தேவையான தர உள்ளீடுகளின் பயன்பாடு மிகவும் உயர்வானதாகவும் காணப்படும். ஆசிரியர் வகுப்பறையின் உள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொள்ளலவசியமாகும். நிலைமாற்ற வகிபாகத்தில் கற்றல் கற்பித்தலின் போது கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

### நிலைமாற்ற வகிபாக ஆசிரியரின் இயல்புகள்

★ ஆசிரியர் போதிய ஆயத்தத்துடன் வகுப்பறைக்குள் நுழைவார்

★ மாணவர்கள் கூட்டாகச் செயற்படுவதற்கான வாய்ப்புண்டு

★ மாணவர் சிறு குழுக்களாகத் தேடலில் ஈடுபடுவர்.

★ ஆசிரியர் குரலை விட மாணவர் குரல் ஓங்கி ஒலிக்கும்

★ கற்றல், கற்பித்தல் இகணிப்பீடு இமதிப்பீடு அனைத்தும் ஒரே களத்திலேயே நிகழும்

கணிப்பீடும் மதிப்பீடும்

மாணவரது முன்னேற்றம் தொடர்பாகவும் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பாகவும் தொடர்ச்சியான தகவல் சேகரிக்கும் முறையாகக் கணிப்பீடு விளங்குகின்றது. மாணவனை இனங்கானல் வழிப்படுத்துதல் பின்னூட்டல் வழங்குதல் ஆய்வுகளை மேற்கொள்ளல் என்பன கணிப்பீட்டுச் செயன்முறையினூடாக முன்னெடுக்கப்படுகின்றன. மாணவர்களை தாழ்வாகக் கருதி அடையாளப்படுத்தலும் வரிசைப்படுத்தலும் கணிப்பீட்டின் நோக்கங்களாகக் கொள்ளப்படுவதில்லை. கணிப்பீடானது மாணவர்களிடையே நேர்மாற்றத்தினை ஏற்படுத்துவதோடு பன்முக ஆற்றலையும் வளரச் செய்வதாக விளங்குமோர் சாதனமாக நோக்கப்பட வேண்டுமேயன்றி கணிப்பீடு கணிப்பீட்டுக்காகவல்ல என்பது உணரப்பட வேண்டும். கணிப்பீட்டின் போது நடைபெறுவது யாதெனில் நபர் ஒருவர் தொடர்பில் தனித்துத் தீர்மானம் எடுத்தலாகும் இங்கு கற்றலுக்கு நுழைந்த சந்தர்ப்பத்துக்கும் பின்னுள்ள சந்தர்ப்பத்துக்கும் இடையிலான முன்னேற்ற நிலையை நோக்குதலாகும். ஏதிர்பார்க்கப்படும் முடிவூப் பெறுபேறுகளின்பால் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியரினால் நடாத்தப்படும் விசேடமான பரிசீலனையே கணிப்பீடாகும். மாணவர்களுடன் தினமும் உறவாடி அவர்களது கற்றல் இயலுமைகளையூம் இயலாமைகளையூம் இனங்கண்டு எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தை நோக்கி நகர்த்துவதும் சமநிலை ஆளுமையையும் விருத்திசெய்யும் செயலொழுங்காக கணிப்பீடுள்ளது.

மதிப்பீடு பாடமொன்றின் இறுதியில் மேற்கொள்ளப்படும் அளவீடாகும். இங்கு மதிப்பீட்டினூடாக நடைபெறுவது யாதெனில் ஏனையோருடன் ஒப்பிடுகையில் நபரொருவர் அக்குழுவினரிடையே வகிக்கும் இடத்தினைத் தீர்மானித்தலாகும். பின்னூட்டலுக்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல் நிர்வாகரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கும் கணிப்பீடு உதவும். மதிப்பீடானது கல்வி இலக்குகளுடன் தொடர்புடைய மாணவனின் ஆற்றல்களைப் பொருத்தமான கருவி மூலம் சோதனையிட்டு பெறப்படும் மதிப்பெண்ணின் அடிப்படையில் அவர்களின் ஆற்றலின் தரத்தினை நிர்ணயிக்கும் செயற்பாடாகும். கடத்தல்இ கொடுக்கல் இவாங்கல் வகிபாகங்களில் ஈடுபடும் ஆசிரியர் பாட இறுதியிலேயே மதிப்பீட்டினை மேற்கொள்வார். ஆனால் நிலைமாற்ற வகிபாகத்தில் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயன் முறையின் போதே கணிப்பீட்டினையூம் மதிப்பீட்டினையூம் மேற்கொள்ள முடியும். ஒரு ஆசிரியரின் வகிபாக செயற்பாடானது மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அறிவு, திறன், மனப்பாங்கு விடயங்களின் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும்.

**வி.பிரசாந்தன் B.Ed. (Hons), M.Ed.**
**தலவாக்கலை**

# மனிதனுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் சுற்றுலாக்கள்

ஆர்.நடராஜன்


கல்விச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, வியாபார சுற்றுலா, சுற்றுசூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, கலாச்சார சுற்றுலா என பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பெருமை, அடையாளம், தனித்தன்மை உள்ளது. சுற்றுலா மூலம் மனித குலத்தை மேம்படுத்தும் வகையில், செப்டம்பர் 27ம் தேதியை உலக சுற்றுலா தினமாக 1970ம் ஆண்டில் ஐ.நா. சபை அங்கீகரித்து அறிவித்தது.

அன்று முதல் சுற்றுலா தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. துருக்கியில் நடந்த 12வது மாநாட்டிலும், சீனாவின் பீஜிங்கில் நடந்த 15வது மாநாட்டிலும் இந்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டு உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது.

சுற்றுலா செல்ல விரும்பாத மனிதர்கள் யாரும் உலகில் இருக்க முடியாது. சுற்றுலா மனிதனுக்கு பல்வேறு உலகங்களை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, பல்வேறு கலாச்சாரங்களை கற்றுக் கொள்ள வழிவகுக்கிறது. பல்வேறு இடங்களை காண்பதால் மனிதன் மனதில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. ஒரு இடத்தில் வசிப்பவர்கள், புதிய இடங்களை காண செல்வது என்றால் மகிழ்ச்சி தானே. மலைகள், நீர் வீழ்ச்சி, தீவுகள், உலக அதிசயங்கள், கட்டடங்கள், கேளிக்கை பூங்காக்கள், கடற்கரை என உலகில் பல்வேறு வகையான சுற்றுலா இடங்கள் உள்ளன.

பழங்காலம் முதலே தீர்த்த யாத்திரை என்ற பெயரில் புனித யாத்திரைகள் செல்வது இருந்துள்ளது. இமயம் தொடங்கி குமரி வரை கடல், மலை, நதி, கோயில் போன்றவற்றை பார்ப்பதற்காக கோடிக்கணக்கான மக்கள் இந்தியா முழுவதும் சுற்றி வந்துள்ளனர். உலகம் முழுவதும் இன்றைக்கு சுற்றுலா தொழிலில் மட்டும் 2 கோடியே 31 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா மூலமாகவே பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு தொழில்கள் வளர்ந்து வந்துள்ளன. நம் நாடு உள்பட பல நாடுகளில் உணவு தொழில் செழித்து வளர சுற்றுலா துறையும் ஒரு காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

சுற்றுலாத்துறையில் ஈடுபாடு கொண்ட உலகின் 51 நாடுகள் சுற்றுலா அமைப்புக்களின் சர்வதேச சம்மேளனத்தின் (ஐக்நிஒகூநிஒ) 1925 இல் இணைந்து கொண்டன. பின்னர் இந்த அமைப்பு, ஐ.நா.வின் கீழ் இயங்கும் ஓர் அதிகாரபூர்வமான அமைப்பாக உலகச் சுற்றுலா நிறுவனத்தை (நிகூநிஒ) தாபித்துக் கொண்டது. இத்தாபனத்தை அமைப்பதற்கான யாப்பு 1970 செப்டெம்பர் 27ஆம் திகதி மெக்ஸிக்கோ நகரில் கூடிய (ஐக்நிஒகூநிஒ) நிருவாகக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.









1979இல் ஸ்பெயினில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா நிறுவனத்தின் மூன்றாவது பொது அவைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உலகெங்கும் எடுத்துக்காட்டவும் சுற்றுலா எப்படி மக்களின் சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டவும் இந்நாள் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. இந்நாளில் உலகின் பல்வேறு இடங்களில், பல்வகை கொண்டாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக சுற்றுலா நாளின் பிரதான கருப்பொருள் சுற்றுலா மூலம் பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச புரிந்துணர்வு, சமாதானம், சுபீட்சம் என்பவற்றை அடைதலும், எவ்வித பாகுபாடுமின்றி சகலரும் மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் அனுபவிக்கவும், மதிக்கவும் உதவுதலும் இவற்றினூடாக சுற்றாடலைப் பாதுகாத்தலும், தொழில்வாய்ப்பை உருவாக்குதலும் ஆகும்.

அக்டோபர், 1997இல் துருக்கியில் நடந்த உலக சுற்றுலா நிறுவனத்தின் கூட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு நாடு இந்நிகழ்வை நடத்த அழைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. 2003இல் பீக்கிங்கில் இடம்பெற்ற கூட்டத்தில் பின்வரும் ஒழுங்கு முறையில் இந்நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது: இதற்கமைய 2006 இல் ஐரோப்பாவிலும், 2007இல் இலங்கையிலும், 2008இல் அமெரிக்காவிலும் கொண்டாடப்பட்டன. 2009இல் ஆபிரிக்காவில் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2007இல் இலங்கையில் இந்நாள் கொண்டாடப்பட்டது. இதன் கருப்பொருள்: சுற்றுலாக் கதவுகள் பெண்களுக்குத் திறக்கப்பட்டுள்ளன **(Tourism Opens Doors for Women).** என்பதாகும்.

சுற்றுலா என்பதைத் வரைவிலக்கணப்படி நோக்கின் தமது வழமையான இருப்பிடங்களை விட்டு வேற்று இடங்களைக் கண்டுகளிக்க பயணிப்பதே என்று பொருள் கொள்ளலாம். போக்குவரத்தும் தொடர்புத்துறையும் மேம்பட்டுவரும் இக்காலத்தில் சுற்றுலா துறையும் மேற்குறிப்பிட்ட துறைகளுடன் இணைந்த வகையில் வளர்ச்சி கண்டு வருகின்றது. குறிப்பாக வசதிபடைத்த மேற்குநாட்டினரும், ஜப்பானியரும் அதிகமாக சுற்றுலா செல்கின்றனர் என்றும் சிறந்த சுற்றுலா இடங்கள் நல்ல வருவாயை ஈட்டித்தருகின்றன என்றும் புள்ளி விபரத்தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றது.

வரலாற்று ரீதியாக இத்துறை பற்றி ஆராயும் போது போக்குவரத்து, தொலைதொடர்பு. விருந்தோம்பல் துறைகள் போன்றன பழங்காலத்தில் விரிவு பெற்று இருக்கவில்லை. இதனால் பெரும் பான்மையானோர் தாம் பிறந்த கிராமங்களிலேயே தமது வாழ்க்கையைக் கழித்தனர். குடியேற்றவாதக் கொள்கை தலை தூக்கியதும் படைவீரர்கள், வணிகர்கள், சமய நோக்குடையோரும் தம்மிடத்தை விட்டு பிற இடங்களுக்கு செல்லக்கூடிய நிலை பெற்றனர்.

வணிக விருந்தோம்பல் விரிவு பெற முன்னர் உணவுக்காவும், உறையுளுக்கும் சென்ற இடம் குடியாளர்களையே பயணிகள் தங்கி இருந்தார்கள். வீடுகளில் திண்ணைகள் இருந்தன. வீடுகளுக்கு வரும் பயணிகளுக்கு உணவளித்து இடமளிப்பது பண்பாக இருந்தது. குறிப்பாக சமயப் பெரியார்களுக்கு உணவளிப்பது சிறந்த பேறாக கருதப்பட்டது. செல்வந்தர்கள் மடங்களை கட்டி, அங்கு வழிப்போக்கர்களுக்கு உணவும் தற்காலிக தங்குமிடமும் தந்துதவினர். இந்த மடங்கள் பலவற்றில் சாதி அமைப்பு பேணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நவீன காலத்தில் சுற்றுலாப்பயணிகளை கவருவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே நேரம் நாடு கடந்து வரும் சுற்றுலாப்பயணிகளை கவருவதற்காக வேண்டி பல்வேறு ஹோட்டல் தங்குமிட வசதிகள் உணவு, பான வகைகள் இத்தியாதி ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இயற்கை வனப்பு, காடுகள், வனாந்திரம், வன ஜீவராசிகள், பறவைகள், கடற்கரைகள், சுண்ணக்கற்பாறைகள் (**Corals**), பளிங்குப் பாறைகள் (**Crystala**) மலைத்தொடர், நீர்வீழ்ச்சி, மாணிக்கம், தோட்டங்கள், பூஞ்சோலைகள், அழிபாடுகள் (**Ruins**) என்பன பிரதான சுற்றுலாச் சொத்துக்கள் ஆகும்.

சுற்றுலாவுக்கு, இரண்டு அம்சங்கள் முக்கியமானவை: ஒன்று நேரம் மற்றையது பணம் என்று பசுபிக் ஏசிய பிரயாண சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து தீவிர சேவையின் பின்னர் இளைப்பாறிய லக்ஷ்மன் ரத்தனபால கூறினார். நேரம் உள்ளவர்களிடம் பணம் இல்லை. பணம் உள்ளவர்களிடம் நேரம் இல்லை என்று அவர் விளக்கி கூறினார். மிகச் சிலரிடமே இரண்டும் உண்டு. ஆனால், உயர்மட்ட செல்வத்தை அடையும் அநேகமான நாடுகளிலேயே இந்த இரண்டும் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

உலக சுற்றுலா பயணிகளின் தொகை 2010 ஆம் ஆண்டளவில் ஒரு பில்லியனுக்கு மேலாகவும் 2020 ஆம் ஆண்டளவில் 1.56 பில்லியனாகவும் அதிகரிக்குமென மட்றிட்டில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள ஐக்கியநாடுகள் உலக சுற்றுலா நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இந்த மீட்சி குறிப்பாக, உலகிலேயே மிக வேகமாக வளர்ந்துவரும் சுற்றுலா பிராந்தியமென வர்ணிக்கப்படும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சாத்தியமாகுமென நம்பப்படுகிறது. பிராந்திய சுற்றுலாத்துறையும் புதியதொரு நடுத்தர வகுப்பின் எழுச்சியும் இந்தத்துறையை ஊக்குவிக்கின்றன.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அநேகமானோர் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். இந்த புதிய செல்வந்தர்கள் இயல்பாகவே விடுமுறையில் வெளிநாடு செல்வோருடன் இணைந்து கொள்கிறார்கள். இவ்வாறாக பிரயாணம் ஒரு விரிவடையும் அம்சமாக இருக்கிறது. இந்த அம்சம் ஒரு பழக்கமாகத் தோன்றி பின்னர் நடுத்தர வர்க்கத்தினரின் ஒரு வாழ்க்கைப் பாணியாக வளர்ச்சி அடைகிறது.

கடந்தவருட உலகளாவிய பொருளாதார நெருக்கடி சுற்றுலாத் துறையை பாதிக்கிறது என்று சியோல் சுற்றுலா நிறுவனம் ஜூன் மாத ஆரம்பத்தில் தென் கொரியாவில் நடத்திய மூன்று நாள் சர்வதேச சுற்றுலா மகாநாட்டில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர். 2010 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் இரண்டு புதிய ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா களிப்பிடங்கள், புதிய இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை நடத்துதல் ஆகியவற்றுடன் மேலும் பல முயற்சிகளை மேற்கொண்டு பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளை நடத்த இருப்பதாக சிங்கப்பூர் சுற்றுலா சபையின் உதவிப் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார். மலேசியா, சுற்றுலா என்ற பெயரில் தான் தங்கியுள்ளது என்று அந்நாட்டு சுற்றுலாத் துறையின் சர்வதேச சந்தைப் படுத்தல் பிரிவின் பணிப்பாளர் சோங் யோக் ஹார் தெரிவித்திருந்தார்.

வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு நாடுகளுக்கு சீன, ஜப்பான் சுற்றுலாப் பயணிகள் உலக பிரயாணத்துறையை மாற்றியமைத்து விட்டனர். கடந்த 15 வருட காலத்தில், எங்குமே புதிய மத்திய வகுப்பினர் தோன்றி உலக பிரயாண முறைமையை மாற்றியமைத்துவிட்டார்கள்.

நவீன இந்தியாவில் மத்திய வகுப்பினர் தொகை 300 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மொத்த சனத்தொகையிலும் பார்க்க இது அதிகமானது. ஆனால், சீனாவின் மத்திய வகுப்பினர் தொகை இதிலும் அதிகமானது.

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகள் அதிக வளங்களைப் பெறுவதால் பிராந்தியத்திற்குள்ளான பிரயாணங்கள் தொடர்ந்தும் விருத்தியடையும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. பொதுவாக உலக நாடுகளின் சுற்றுலாத்துறையின் ஆசியாவுக்குள் பிரயாணங்கள் அதிகரிக்கலாம் என்பதும் பொதுவான எதிர்பார்க்கையாகும்.

மூன்றாம் உலக நாடுகளில் சுற்றுலா பெரும் வருவாய் ஈட்டித்தரும் துறையாகப் நோக்கப்பட்டாலும் பல கேடுகளையும் செலவுகளையும் கொண்டுள்ளதையும் அவதானித்தல் வேண்டும். எனவே சுற்றுலாத்துறை வருமானத்தை ஈட்டித் தரும் அதேவேளை சுற்றாடலுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமைகிறது. சுற்றுலாவுக்கு அடிப்படையானது சுற்றாடலாகும். திட்டமில்லாத, கட்டுப்பாடில்லாத சுற்றுலா, சுற்றாடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குநாட்டினரை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஈர்ப்பதற்காக அவர்களுக்கு தேவையான உயர் வசதி படைத்த வலயங்களை மூன்றாம் உலக நாட்டு அதிகார வணிக வர்க்கத்தினர் பெரும் செலவில் கட்டுகின்றனர். இவ்வாறன கட்டடங்கள் அத்தியவசிய கட்டமைப்பு மற்றும் சேவைகளை புறம் தள்ளியும் கட்டப்படுகின்றன. இத்தகைய வலயங்கள் நாட்டுக்குள்ளே இருக்கும் ஏற்றதாழ்வை பெரிதாக்குகின்றன. சுற்றுலாத்துறையால் கிடைக்கும் வருவாயும் பொது மேம்பாட்டிற்கு செல்லாமல் அதிகார வட்டத்திற்கே போய் சேருவதாகவும் விமர்சகர்கள் சாடுகின்றனர்.

ஹோட்டல் கழிவுகள், நீர்மாசமடைதல், சட்டவிரோத குடிசைகளும், விடுதிகளும், சுண்ணக்கற்பாறை அகழ்வு போன்றன சுற்றாடலைப் பாதிக்கின்றன. இதைவிட மறைமுகமாக சுற்றுலாத்துறையுடன் சங்கமித்துள்ள பாலியல் சுற்றுலா, கடற்கரைச் சிறுவர்கள், போதைவஸ்து பாவனையும் கடத்தலும், அந்நியரின் அரைநிர்வாணப்பவனி, கசினோ சூதாட்டம் என்பன பௌதீகச் சுற்றாடலை மட்டுமன்றி பண்பாட்டுச் சூழலையும் சீரழிக்கின்றன. இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பாலியல் சுரண்டலில் ஈடுபடுவதற்காவும் பல வெளிநாட்டு பயணிகள் வருகின்றார்கள். ஏழைச் சிறுவர்கள், பெண்கள் என பலர் இவ்வாறு இழிவான முறையில் சுரண்டப்படுகின்றார்கள். மேற்குநாடுகள் இவற்றைக் கட்டுப்படுத்துவதில்லை. இவை குறித்து அரச கட்டுப்பாடுகளும், சமூக விழிப்புணர்வும் அவசியமாகும்.

இக்கால கட்டத்தில் மனிதன் நிலவுக்கே சுற்றுலா செல்ல துணிந்து விட்டான். ஆகாய விமானங்களை அண்ணாந்து பார்த்து நாம் வியந்த காலம் இன்று மாறி விட்டது. அதே வானத்தில் விமானத்துக்குப் பதிலாகப் பயணிகளை சுமந்து செல்லும் ராக்கெட்டுக்களைக் காணும் காலம் வந்து விட்டது. இது வரை ஆராய்ச்சியாளர்களை மட்டுமே விண்ணுக்குச் சுமந்து சென்ற ராக்கெட்டுகள் சுற்றுலாப் பயணிகளைச் சுமந்து செல்லத் தயாராகி வருகின்றது. தற்போது விமான நிலையங்கள் சாதாரணமாகி விட்டாற் போல் அடுத்த தலைமுறையில் விண்ணுலா நிலையங்களும் சாதாரணமாகி விடக்கூடும். இந்த திட்டத்தினை ஸ்பேஸ் போர்ட் அமெரிக்கா என்று பெயரிட்டுள்ளனர். முதலில் இந்த திட்டத்தைப் பற்றிக் கேள்விப்படுபவர்களுக்கு ஏதோ விண்வெளித் திரைப்படக் கதை கேட்டாற் போல் தான் இருக்கும். ஆனால் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அமெரிக்காவின் **(Federal)** பெடரல் ஏவியேஷன் அத்தாரிட்டி (ஏப்.ஏ.ஏ) இந்த ஸ்பெஸ்போர்ட் அமெரிக்காவுக்கு நீயூ மெக்சிகோவில் அனுமதி உலகின் முதல் பயணிகள் விண்வெளி ஓடம் நிறுத்தப்பட்டிருக்கும். விண்வெளிப் பயணம் செல்ல ஒரு பயணிக்குத் தேவைப்படும் நூறு மில்லியன் டொலர்களை முன்கட்டணமாக வசூலிக்க திட்டமிட்டு இருக்கிறார்கள். கனவுப் பயணம் செல்ல விரும்பும் பயணிகளிடம் இப்போதே முன் பதிவு செய்து முன்தொகை வாங்கத் திட்டமிட்டுள்ளது இந்நிறுவனம்.

உலகில் மனித வரலாற்றில் இதுவரை மிகச் சிலரே சென்றுள்ள சாதாரண மனிதர்களின் கற்பனைக்கும் எட்டாத இந்த புதிய அனுபவம் தரும் பயணத்துக்கு போட்டி நிலவுகிறது. எதிர் காலத்தில் விண்வெளிக்கான சுற்றுலா தினம் என்றொரு தினம் கொண்டாடப்பட்டாலும் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.